padippakam

# யாவும் கற்பனை அல்ல



வி. ஜீவகுமாரன்



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

யாவும் கற்பனை அல்ல

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# யாவும் கற்பனை அல்ல

வி. ஜீவகுமாரன்

32/9 ஆற்காடு சாலை சென்னை 24
தமிழ்நாடு இந்தியா

படிப்பகம்

padippakam

# Yaavum Katpanai Alla

(Fiction)

By

**V. Jeevakumaran ©**

**Illustration : Vinoth Kamaraj (BFA)**

**First Edition**
April 2008

Mithra : 165

ISBN : 81 - 89748 - 52 -1

Publication Editor

**Espo**

Mithra Books are Published by

**Dr. Pon Anura**

Pages : 248

Price : I

Printed & Published by

**Mithra Arts & Creations Pvt Ltd.,**

32/9 Arcot Road/ Kodambakkam,
Chennai - 600 024.
Ph : 2372 3182, 2473 5314
www.mithra.co.in

படிப்பகம்

padippakam

# யாவும் கற்பனை அல்ல

வி. ஜீவகுமாரன்

பாகம் : ஒன்று

**கவிதையான சிறுகதைகளும்**
**சிறுகதையான கவிதைகளும்**

படிப்பகம்

padippakam

# அணிந்துரை

ஈழத்து எழுத்து இன்று உலகம் அளாவியதாகப் பரிணமித்துள்ளமை அதன் பல்வேறு பரிமாணங்களுக்கு வித்திட்டுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

நாடோடிகளாக மனிதன் வாழ்ந்த காலத்தில் ஓரிடம் விட்டு இன்னோர் இடம் போக வேண்டிய கட்டாயத்தில் இருந்தான். அது உணவுக்காகவும், உயிர் பாதுகாப்புக்காகவும் மற்றும் தட்ப வெப்ப புவியியல் சூழலியல் காரணங்களுக்காகவும். இடையில் ஆற்றோரம் உறைவிடமமைத்து தொழில்கள் பல செய்தும், குடும்பங்கள் குட்டிகளாகி பண்பாடு கொண்ட ஒரு வாழ்வை அமைத்துக் கொண்டான்.

பின்னர் அரசுகள் வந்தன. அதிகாரம் வந்தது. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. மனிதன் சுய பாதுகாப்புத் தேடி இடம் பெயரத் தொடங்கினான். ஆடிப்பாடி கதை சொல்லி, கதைபேசி, ஆற அமர ஆற்றங்கரையில் வீற்றிருந்த வாழ்வு அலைக்கழிவிற்குள்ளாக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமைகள் இன்றைய நவீன உலகிலும் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. அரசியல் ரீதியான போர்கள் மனிதனின் இடம்பெயர்வுக்கு முக்கிய காரணமாகி உள்ளது. இதனை விட வெள்ளம், எரிமலை, பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி போன்ற காரணங்களினால் இடப்பெயர்வு வாழ்வு கிரமமான ஒன்றாக மாறிவிட்டது.

ஆயினும் இனங்களுக்கிடையேயான முரண்பாடு, இனக்கலவரம் மற்றும் அரசியல் அதிகாரத்துக்கான உரிமைப் போர் இடப்பெயர்வைப் புலப்பெயர்வாக்கி விடும் நிலைமை காணப்படுகிறது.

இந்தியப் புலப்பெயர்வுகள், பாலஸ்தீனப் போர் காரணமான புலப்பெயர்வு, 1ம், 2ம், உலகப் போர்களின் காரணமாக ஏற்பட்ட புலப்பெயர்வுகள் எல்லாம் ஒரு மனித குழுமத்தை புதியதொரு



படிப்பகம்

padippakam

இடத்திற்குக் குடிபெயர வைத்துவிட்டன. இதே நிலைமை ஈழத்துத் தமிழ் மக்களுக்கும் நேர்ந்தமை காலத்தின் கட்டாயமாகிவிட்டது. பாதுகாப்புத் தேடியும், உழைப்பை நோக்கியும் ஈழத்துத் தமிழர்கள் மேற்குலகமெல்லாம் புலம் பெயர்ந்து வாழத்தொடங்கி இன்று கால் நூற்றாண்டு கடந்து விட்டது.

எண்பதுகளுக்கு முன்பாக வெளிநாடு சென்றவர்கள் தொழில்சார் படிப்புகளையும் வளங்களையும் தேடிச் சென்றனர். இதனால் அவர்களின் வாழ்வுலகம் பல்வகைத் தன்மையின் பாற்பட்டதல்ல. அரசியல் தாக்கம் அங்கு கிடையாது.

ஆனால் எண்பதுகளின் பிற்பாடு அகதி வாழ்வு தேடிப் புறப்பட்டவர்கள் பல்வேறு தொழில்களைச் செய்ய வேண்டியிருந்தது. இதனால் வந்த மன அழுத்தம், வேலை செய்யும் இடங்களில் ஏற்படக் கூடிய இன, நிற பேதங்களின் தாக்கம், ஊரை விட்டுப் பிரிந்த துயர், அரசியல் தாக்கத்தினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதுகாப்பின்மை, மனத்தாக்கம் என்பன புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களின் பாடு பொருட்களாயின. புதிய சில எழுத்தாளர்களும் தோன்றுவதற்கு புலப்பெயர்வு வாழ்வின் சிக்கல்கள் காரணமாகின.

பொ.கருணாகரமூர்த்தி, பார்த்தீபன், இராஜேஸ்வரி பாலசுப்பிரம ணியம், கி.பி. அரவிந்தன், வ.ச.ஜ.ஜெயபாலன், சேரன் போன்ற பல எழுத்தாளர்கள் புலப்பெயர்வு வாழ்வு குறித்தும் எழுதத் தலைப்பட்டனர். 1994இல் வெளிவந்த 'பனியும் பனையும்' பல்வேறு புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியாக வெளியிடப்பபட்டுள்ளது, இவர்களுடன் மாத்தனை சோமு, மா.வை. நித்தியானந்தன், லெ. முருகபூபதி, அருண் விஜயராணி, சந்திரிகா, ரஞ்சன், யாழ் பாஸ்கர், யோசன், ரதி, ச.வாசுதேவன் போன்றவர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்தும்; எம்.அருட்குமரன், இராஸ்ரீ. பாலசுப்ரமணியம், சார்ள்ஸ், செல்வ மதீந்திரன், ஆதவன், கரவை தாசன், முல்லையூரான், சந்திராதேவி, தேவகி இராமநாதன், கலாமோகன், கலைச்செல்வன், சுகன், புவனன், கருணாகரமூர்த்தி, ஸ்ரீரங்கன், சுசீந்திரன், தேவா, ஜீவமுரளி ஆகியோர் ஐரோப்பாவிலிருந்தும்; அளவெட்டி சிறீஸ்கந்தராசா, ஆனந் பிரசாந், அ.கந்தசாமி, ம.ந.கிரிதரன், சக்கரவர்த்தி, க.நவம், நிலா, குகதாசன்,



படிப்பகம்

padippakam

பவான், என்.கே. மகாலிங்கம், ஜோர்ஜ் குருவேல் ஆகியோரும் 'பனியும் பனையும்' தொகுதியில் எழுதியுள்ளார்கள்.

பல எழுத்தாளர்கள் தனித் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்கள். இவர்களை விட அ.ரவி, நிலக்கிளி பாலமனோகரன், எஸ்.பொன்னுத்துரை, நட்சத்திரன் செவ்விந்தியன், ரேணுகா தனஸ்கந்தா, ஆழியாள் (மதுபாஷினி) போன்ற பல எழுத்தாளர்கள் தங்கள் ஈழத்து அனுபவங்களையும் புலர்ப்பெயர்வு வாழ்வு அனுபவங்களையும் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் சிலர் புதிய மொழிகளைப் பயின்று இரு வழிகளிலும் தங்கள் இலக்கியப் பதிவுகளை மேற்கொள்கின்றனர். இத்தோடு கிழக்கும் மேற்கும், இன்னுமொரு காலடி (199), யுகம் மாறும் (1999), கண்ணில் தெரியுது வானம் (2001) போன்ற பத்மநாதஐயரின் தொகுதிகளிலும் புலம்பெயர் வாழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் 'யாவும் கற்பனை அல்ல' என்கின்ற இந்த எழுத்துத் தொகுதியை எழுதி வெளியிடும் விஸ்வலிங்கம் ஜீவகுமாரன் தனது மண்மீதான உறவையும் தனது டென்மார்க் வாழ்வியல் அனுபவங்களையும் இங்கு பதிவு செய்ய விழைகின்றார்.

ஜீவா என நாம் அழைக்கும் வி.ஜீவகுமாரன் எழுபதுகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றவர். அவரது கல்வி, பேச்சு மற்றும் நாடகக் கலைச் சிறப்புக்களை நேரடியாகக் கண்டு அனுபவித்திருந்தேன்.

கவிதை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார் என்று அறிந்திருந்தேன்.

பின்னர் எழுபதுகளின் இறுதியில் யாழ் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா பயிற்சி நெறியில் இருவரும் நுழைந்திருந்தோம். எங்களுடன் ரேணுகா தனஸ்கந்தாவும், அந்தத் துறையில் படித்துக்கொண்டிருந்தார். ஆங்கில இலக்கியம் பற்றி விவாதிக்கும்போது சமாந்தரமான தமிழிலக்கியப் பதிவுகளை ஜீவா எமக்குச் சொல்லுவார்.

ஜீவன் கல்வி நிலையத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் தான் எழுதி



படிப்பகம்

padippakam

இயக்கிய 'மனிதன்' எனும் நாடகம் பற்றியும் எம்முடன் விவாதிப்பார். காந்தியின் தத்துவம் பேசிய ஒருவர் வேலிச் சண்டையொன்றில் எதிராளியால் நையப்புடைக்கப்படும்போது காந்தியின் படமும் மிதிபடுவதை தான் காட்சிப்படுத்திய விதத்தை அவர் கூறும் போது அவரது நாடக உணர்வினை உணரக்கூடியதாக இருந்தது.

இடையில் பல வருடங்கள் ஓடிவிட்டன.

எங்கள் சக மாணவியும் எழுத்தாளருமாகிய ரேணுகா தனஸ்கந்தாவும் அவுஸ்திரேலியாவிலிருந்து இத்தொகுதிக்கு முன்னுரை வழங்குவது மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். 1986 இல் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு தொகுத்த 'சொல்லாத சேதிகள்' நூலில் ரேணுகாவின் கவிதை இடம்பெற்ற மகிழ்ச்சி, இன்று அவரும் பல்வேறு இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதையிட்டு இரட்டிப்பாகின்றது.

இனி நாம் ஜீவாவின் கதைகளுக்கு வருவோம். 'யாவும் கற்பனையே' என்ற தலைப்பில் இருபது புனைகதைத் துண்டுகளையும்' காலங்களும் கருத்தோட்டங்களும்' என்கின்ற ஒரு நீண்ட கதைத் துண்டையும் (பல்வேறு சிறு தலைப்புகளில்) ஜீவா தனது வாழ்வனுபவத்தைப் பதிவு செய்ய பயன்படுத்துகின்றார்.

நான் இவற்றைப் புனைகதைத் துண்டுகளென்றும் நீண்ட ஒரு கருத்துத் தொடர் என்றும் சொல்வதற்கு ஒரு காரணமுண்டு. பெரும் பாலான கதைகள் சிறுகதைகள் வடிவில் இருந்தாலும் சில புதுக்கவிதை நடையில் சம்பவக் கோர்வைகளாகக் காணப்படுகின்றது - 'பிரக்ஞை', 'வாகரை வீதியில்', 'அம்மா வலிக்குது', 'கிராமத்து வீடும் என் முதல் காதலியும்', 'அந்திமத்தில் ஓர் ஆசை' ஆகியவற்றைச் சொல்லலாம். நீண்ட கருத்து தொடர் துண்டான 'காலங்களும் கருத்தோட்டங்களும்' அந்தத் தலைப்புப் போலவே உரையாடல்களாகவும் அதன் மீதான கருத்துக்கள் ஒரு கவிதை நடையிலும் வடிக்கப்பட்டுள்ளது.

இதனூடு ஒரு கதையல்ல, பல கதைகள் ஓடினாலும் ஈழத்து மக்களின் குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, மற்றும் புலம்பெயர்வு வாழ்வு எல்லாம் கேள்விக் குறியுடனும் தவிப்புடனும் பதிவு செய்ப்படுகின்றன.

மு.தளையசிங்கம் அவர்களின் மெய்யுள் என்கின்ற இலக்கிய வடிவம்



படிப்பகம்

padippakam

தான் இன்று நினைவுக்கு வருகின்றது. அவரது போர்ப்பறை பல்வேறு இலக்கிய வடிவங்களின் சங்கமமாகக் குறிக்கப்படுகின்றது. இதே போல 'ஷோபா சக்தி எழுதிய 'கொரில்லா', 'ம்', வேலைக்காரிகளின் புத்தகம், 'தேசத்துரோகி' என்பன முறையே நாவல்கள், விமர்சனம், சிறுகதை என்கின்ற வடிவங்களுள் அடக்கப்பட்டாலும் ஷோபாசக்தியின் எழுத்தின் வீச்சு இந்த வடிவக் கட்டுக்குள் நேர்த்தியாக நிற்கும் போலத் தெரிய வில்லை. (கருத்து ரீதியான தெளிவின்மைகள் ஆங்காங்கே காணப்படுவது விமர்சனத்திற்குரியது.)

இந்தப் பின்னணியில்தான் ஜீவாவின் எழுத்துக்களையும் நாம் பார்க்க வேண்டியதிருக்கின்றது.

ஜீவாவிடம் வாழ்வு பற்றிய தேடலும் வேகமும் காணப்படுவது போல வீடு, குடும்பம், சமூகம், தேசம் என்கின்ற பல்வேறு தளங்களிலும் அவரது மனித உணர்வு, பிணக்குகள், மனக் காயங்கள், ஆதங்கங்கள், மன ஆவேசங்கள், ஏக்கங்கள், தவிப்புகள், புதிய பண்பாட்டுச் சூழலின் இக்கட்டுகள் என்பனவும் அவரோடு இரண்டறக் கலந்திருக்கின்றன. இது அவரது எழுத்துக்களினூடாக மேற்கிளம்புகின்றன.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது ஜீவாவின் நகையுணர்வு அவரது எழுத்தாற்றலுக்கு ஊட்டம் கொடுக்கிறது. அதே வேளையில் வாழ்வு மீதான ஆழமான பிடிப்பு அதன் பல்வேறு சிக்கல்களைப் புதிய கோணங்களில் பார்க்க வைக்கின்றது. அதுவே அவரது எழுத்து நடைக்கான காரணியாகவும் அமைந்து விடுகின்றது. ஒரு பத்தித் தொடர் போலக் காணப்படும் 'காலங்களும் கருத்தோட்டங்களும்' சம்பவக் கோர்வைகளாக ஒரு புதிய பரிமாணத்தை எட்டுகிறது. ஆயினும் அவ்வப்போது சமூகம் மீதான அவரது விமர்சனம் எள்ளலாக வெளிப்படும் அதே வேளை தத்துவ வீச்சுக்களான வசனங்களாகவும, வாழ்க்கைப் பிரகடனங்களாகவும் வந்து விழுகின்றன.

"உன் கொள்ளிக் கட்டையால்
உன் தலையைச் சொறிந்து கொண்டது போதும்"
"உன் பன்னீர்க் குடத்தை இன்று உடைத்துவிடு"
"அடுத்தொரு தரப்படுத்தல்



படிப்பகம்

padippakam

ஐரோப்பாவில் என்றால் - அது

எம் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தான்"

இவ்வாறு தன் மன அவசங்களை எழுத்துகளாக வடித்து தன் சக மனிதர்களுடன் பரிமாறுவதற்காக நூல் வடிவில் வெளியிடும் என் நண்பன் ஜீவாவுக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இலக்கிய நட்பாக முகிழ்ந்த எம் உறவு ஓர் எழுத்தாளனாக ஆகியுள்ள நண்பனின் எழுத்துக்களுக்கு அணிந்துரை எழுதும் ஒரு விமர்சகனாகத் தொடருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அணிந்துரையை எழுதும் வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

ஜீவாவின் மறைந்த தந்தையாரையும் டென்மார்க்கில் வாழும் அம்மாவையும் அண்ணனையும் மற்றும் குடும்பத்தினரையும் இக் கட்டத்தில் நினைவுகொள்ளாமல் இருக்க முடியவில்லை.

நன்றி.

கந்தையா ஸ்ரீகணேசன்

*தலைவர்*
*ஆங்கிலமொழி கற்பித்தல்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*வவுனியா வளாகம், இலங்கை*



படிப்பகம்

padippakam

# வாழ்த்துரை

நண்பர் ஜீவாவை எனக்கு இருபத்தி ஐந்து ஆண்டுகளாகத் தெரியும் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகின்றேன். டென்மார்க்கில் எமது கால்களைப் பதித்துக்கொள்ள ஆரம்பித்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமாகியவர்களில் ஜீவா ஒருவர்தான் இலக்கியம் சம்பந்தமான சங்கதிகளைப் பகிர்ந்துகொள்ளவும், புலம்பெயர் வாழ்வின் பிரச்சனைகளையிட்டு யதார்த்தமாக, கனதியாகக் கலந்துரையாடக் கிடைத்தார்.

கவிஞனாக, கட்டுரையாளனாக, சிறுகதை எழுத்தாளனாக, நாடகத் தயாரிப்பாளராக, நாவலாசிரியனாக, சஞ்சிகை ஆசிரியராக அவரை நான் பல்துறை விற்பன்னராகக் கண்டு மகிழ்ந்துள்ளேன். இந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் அவர் பல துறைகளிலும் அடைந்துள்ள வளர்ச்சியும், வெற்றியும் இங்கே வாழ் இளஞ்சந்ததியினர்க்கு ஒரு முன்னுதாரணம்.

நான் அவரையிட்டுச் சொல்வதைவிட இந்த நூலில் நீங்கள் படிக்கவிருக்கும் படைப்புக்களே அவரையிட்டு உங்களுடன் பேசும். அவற்றை வாசிக்கும் உங்களை அவை யோசிக்கவைக்கும். சிந்தனையைக் கிளறுவதும், தூண்டுவதும், செயற்படவைப்பதும் சிறந்த எழுத்தின் குணாதிசயங்கள். அத்தகைய படைப்புக்களை ஆக்கிய ஜீவாவுக்கு எனது அன்பான வாழ்த்துக்களை இங்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசுகியைப் போன்ற மனைவி வாய்த்ததன் காரணமாகத்தான் வள்ளுவன் வான்புகழ் கொண்டான் என நான் எண்ணுவதுண்டு. அந்த வகையில் ஜீவாவுக்கு ஒரு கலா. எனவே, அவருடைய வாழ்க்கைத் துணைவியும், தோழியுமாகிய கலாவையும் இங்கு வாழ்த்த விழைகின்றேன்.

இந்த நூலைத் தொடர்ந்து அவர் மேலும் பல படைப்புக்களை எமக்குத் தரவேண்டும் என வேண்டுகின்றேன்.

நிலக்கிளி அ. பாலமனோகரன்

*டென்மார்க்*



படிப்பகம்

padippakam

# முன்னுரை

சமகால இலக்கிய வளர்ச்சிக்கு வி. ஜீவகுமாரனின் இலக்கியப் படைப்புகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றன என்றால் மிகையாகாது.

அவரது கதை மாந்தர்கள் பிறந்த நாட்டிலும், பிறந்த நாட்டு நினைவுகளுடன் புலம்பெயர் நாட்டிலும் வாழ்ந்து, குடும்பக் கடமைகள், உணர்வுச் சிக்கல்கள், அன்னியமாக்கல், தனி மனிதர்களாக தனிமைப்படுத்தப்படுதல், நிறைவேறாத தாபங்கள் முதலிய உணர்ச்சிகளால் அல்லல்படுவார்கள்.

இவரது மொழிவளம் எழுத்துகளுக்கு மெருகூட்டுகிறது.

இவரது கதைகள், கவிதைகளில் பக்கச்சார்மையின்றி பிரச்சனைகளுக்கான வேர்களைச் சாடும் நேர்மை தென்படுகிறது. இவரது படைப்புகள் பாரம்பரிய விழுமியங்களை விமர்சிப்பதாயும், புலம் பெயர்ந்த நாட்டில் நிகழ்கால வாழ்க்கைப் பாதையை அலசுகின்றனவாகவும் அமைந்திருக்கின்றன.

### புதுப் பொம்மைகள்

தாய், சகோதரங்களின் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் புலம் பெயர்ந்து வாழும் ஓர் இளைஞனிடம், "ஏன் என்னைக் கட்டினியள்?" என்ற கேள்வி முன்வைக்கப்படுகிறது.

கதையின் கருவான பாரம்பரிய திருமண பந்தக் கோட்பாடுகள் சமகால இலக்கியங்களில் பல தடவைகள் அலசப்பட்ட கருத்தாயினும் இங்கு கதை சொல்லப்பட்ட விதம் மிகவும் பாராட்டத்தக்கது.

கதையை மிகவும் இயல்பாக நகர்த்துவதுடன் பொருத்தமான உருவகங்கள் மூலம் கதாநாயகனின் மனவோட்டங்களை ஜீவா சித்தரிக்கின்றார். இவ்வுருவகங்கள் D.H. Lawrence லாவகமாகக் கையாளும் உருவக உத்தியை ஒத்தவை.

ஆங்காங்கே பாரம்பரிய தமிழ்ச் சமுதாய இறுக்கமான வாழ்க்கை வரைமுறைகளைச் சாடுகின்றார் ஆசிரியர். அத்துடன் நிகழ்கால அவலங்களையும் கண்முன்னே நிறுத்துகின்றார்.



படிப்பகம்

padippakam

"மக்கள் துப்பாக்கிகளுக்கும், பதுங்கு குழிகளுக்கும் மத்தியில் நாளை என்பதில் எந்த நம்பிக்கைகளும் அற்று இன்றைய பொழுது மட்டும் இழவற்ற பொழுதாக இருக்கவேண்டும் என்ற பிரார்த்தனைகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்" என்ற இடத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

அடுத்த சந்ததியாவது சுயசிந்தனையுடன் ஜனனிக்க வேண்டும் என்ற ஆசிரியரின் பெருவிருப்புடன் கதை முடிவடைகிறது.

**அம்மா வலிக்குது**

சராசரி யாழ்ப்பாண ஆண்பிள்ளைகள் படும் வேதனைகளை நேரடியாக வாசகர்களுடன் உரையாடுகின்றார் ஆசிரியர்.

"பாவம் அதுகள்!

தொப்புள் கொடியை அறுத்து நுகத்தடியில் கட்டாதீர்கள்!!"

எங்கோ வலிக்கின்றது.

**நனவோடை**

புலம் பெயர்ந்த வாழ்வின் யதார்த்தங்கள் "எங்கே என் நாடு?" என்ற ஆற்றாமையால் வில்லாக வளைகிறது.

அந்நிய நாடுகளில் ஏற்படும் போலி உறவுகளின் முகத்திரை கிழிக்கப்படுகிறது. மனம் பிறந்த நாட்டு இரத்த உறவைத் தேடுகிறது - நினைத்துக் கலங்குகின்றது. மனித போலிகளின் உறவு, தனிமனித அன்னியத்துவத்தைக் கருவாகக் கொண்ட இச்சிறுகதை T.S.Eliot இன் Pryfrock என்ற கவிதையை நினைப்பூட்டுகிறது.

**பிரக்ஞை**

இரவும் பகலும் போல் அனைத்து உள்ளுணர்வுகளுடன் நினைவுலகையும் கனவுலகையும் நகர்த்தும் மாந்தரின் மனவோட்டத்தை மிகவும் துல்லியமாகவும், நிதர்சனமாகவும் சித்தரிக்கிறது.

கறுத்த ஆடு, சின்னத் தங்கம் போன்ற உருவகங்கள் நிஜங்களைக் கண்முன் நிறுத்துகின்றன.

கவிதை எழுதப்பட்ட பாணியும் ஆசிரியரின் நோக்கத்தை வெளிப்படுத்தக் கையாண்ட யுத்தியும் புதுமையானது. பாராட்டத்தக்க புதுக்கவிதை இது.



படிப்பகம்

padippakam

**எங்கே போனீர்கள்**

"கோயில் வீதிகளில்

என்னுடன் கிட்டியடித்த

என்னருமைத் தோழர்களே

எங்கே போனீர்கள்?"

டென்மார்க்கில் வாழும் தனது நண்பனுக்கு இலங்கையில் இருந்து விடுவிக்கப்பட்ட கேள்விக்கு ஆசிரியர் தேடும் பதில்தான் இந்தச் சிறுகதை. தமிழ்மொழியை மண்வாசனையுடன் லாவகமாகக் கையாண்டுள்ளார்.

"தனது தேவைகளை ஈடுகட்ட முடியாத பொருளாதாரத் தேவைகளின் அவசரங்கள், அவனால் ஏற்கவும் முடியாத, மறுக்கவும் முடியாத, மேலாக அவனுக்கே புரியாத கண்ணாமூச்சி அரசியல்கள். . . அகதி என்ற பட்டை நாமம்"

இதுபோன்ற இதயத்தைத் துளைக்கும் உரைநடைகளால் இரண்டு நண்பர்களின் மன ஆதங்கங்கள் வெள்ளிடை மலையாகப் பிரதி பலிக்கப்படுகின்றன.

தமிழ்மொழிப் பிரயோகம் இச்சிறுகதையின் வெற்றிக்குத் துணை போகின்றது.

**புதுப்புலவு**

பழையன கழிதலும் புதியன'புகுதலும் தவிர்க்க முடியாத ஒன்று என்ற பழமொழிக்கிணங்க எதிர்காலத்தை புது நம்பிக்கையுடன் அணுகும் சிறுகதை.

மதயானை ஓர் குறியீடு.

சாதாரண குடிமகன் படித்தவர்களாலும், பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களாலும் காலந்தோறும் வஞ்சிக்கப்படும் வரலாறு இயல்பாக வாசகனுக்கு உணர்த்தப்படுகிறது.

"இல்லையடி பிள்ளை, உந்த விதானைமாரை கையுக்கை வைச்சுக் கொண்டு யாழ்ப்பாண வாத்திமார் கமம் செய்து காணி பூமி சேர்க்க நாங்கள்தானே அடிச்சுக் குடுத்தது...... இந்தக் காணியள் அப்பவே



படிப்பகம்

padippakam

எங்களுக்குக் கிடைச்சிருந்தால் எத்தினை போகம் செய்திருப்பம். . .”

**வாகரை இடம் பெயர்வு**

எல்லாமே ஓர் இரவில் நடந்து முடிந்தது!
அவர்கள் வந்தார்கள்!
இவர்கள் அகதிகள் ஆகினர்!!
மனிதத் தலைகள்!
ஒன்றை ஒன்று நெரித்தபடி
எங்கெங்கும் மனிதத் தலைகள்!!
வாகரைவீதியெங்கும் மனிதத்தலைகள்!!!
ஐரோப்பாவே அமைதியாய் இரு!
நாளை உனக்கு ரீ. வி. யில்
வல்லவன் படமும் உண்டு!!
யாழ்ப்பாண மிளகாய்த்தூள்
தமிழ்க்கடைகளிலும் உண்டு!!!

வாகரை இடம்பெயர்வுக்கு புலம்பெயர் தமிழர்கள் மௌனித்திருந்ததை தன் பாணியில் கண்டிக்கின்றார்.

**ஊமை உறவுகள்**

சேவலினதும் பேட்டினதும் காதல் ராணியின் கருச்சிதைவு காரணமாக தோற்றுப்போகிறது.

ஜீவகுமாரன் எளிய சரளமான பிரதேச மொழி நடையைக் கையாளுகிறார். நேர்த்தியான துல்லியமான வர்ணனைகள் கதைக் களத்தை கண் முன்னே நிறுத்துகின்றன.

**டென்மார்க், ரஞ்சனி**

டென்மார்க்குக்குப் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் தமது கடின உழைப்பினாலும் சாமர்த்தியத்தினாலும் வெளிநாட்டில் தமது பொருளாதாரத்தை மிகவும் வேகமாகக் கட்டியெழுப்புகின்றனர். அதே நேரம் கலாச்சாரப் பிரச்சனைகளுக்கும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி வருகின்றது. டென்மார்க், ரஞ்சனி ஆகிய இரண்டு கதைகளும் இந்தச் சிக்கல்களை அலசுகின்றன.

“புலம்பெயர் தமிழர்கள் . . . புலம்பெயர் தமிழர்கள் என்று பூரிப்படைகின்றீர்களே, இதுதான் டென்மார்க்கையா (புதுமைப்பித்தன்



படிப்பகம்

padippakam

மன்னிக்க!)" என்று கதை முடிகிறது. யாரோ கன்னத்தில் அறைந்தாற் போல் இருந்ததது.

**காதல் வந்திருச்சு**

இக்கதையில் வரும் முன்னுரை கம்பியூட்டர் மயமாக மாறிய புதியதோர் உலகத்தைப்பற்றிய மிகப்பயன் உள்ள கட்டுரையாகும். வாலிபப் பருவத்தின் சலனங்களைக் கருவாகக் கொண்டு நகைச் சுவையாக எழுதப்பட்டுள்ள சிறுகதை ஆகும்.

## Mothersday

"மதர்ஸ் டேக்கு ஏன் இத்தனை மத்தாப்பூக்கள். .
காதலர் தினத்துக்கு ஏன் இந்தக் கீயாமாயாக்கள்.. . .
அன்பையும் காதலையும் ஏன் அன்பளிப்புகளால் அளக்கின்றீர்கள்?"
எனக் கவிதையைத் தொடக்கிவிட்டு,

"அதுகளுக்கும் எங்கோ ஓர்
வயோதிபமடக்கட்டில் காத்திருக்கு!
அம்மணியிடம் சொல்லிவிட்டு ஓர் தடவை போய்ப் பார்த்து விடு!
கிழவி பாவம்! யன்னல் கரையோரம் உன்வரவைப் பார்த்திருக்கு!
கிழவி பாவம்! யன்னல் கரையோரம் உன்வரவைப் பார்த்திருக்கு!!"
என்று கவிதையை முடித்திருக்கிறார்.

**வரிச்சுமட்டை வேலிகள்**

உள்நாட்டுப் போர் அவலங்கள் காரணமாக நாட்டைத் துறந்து இந்தியாவுக்குச் செல்ல முயற்சிக்கும் ஒரு குடும்பத்தினரைப் பற்றியது இந்தச் சிறுகதை.

ஊர்மீது பற்று, உறவினர் மீது பாசம், வீடு வளவு என்ற பிணைப்பு, ஊர் அம்மாளாச்சி மீது கொண்ட பக்தி - நம்பிக்கை, மேலாக கண் தெரியாத ஓர் பிச்சைக்காரனில் உள்ள கருணை. .. இந்த உணர்வுகள் கொழுந்துவிட்டு எரிகின்றன. இந்தக்கதைக்கு வரிச்சுமட்டை வேலிகள் என்ற தலையங்கம் மிகவும் பொருத்தமாக உள்ளது.

**ரஞ்சனி**

தமது சொந்த இன மக்களுடன் பழகினால் வீண் பிரச்சனை என்று டெனிஷ் மக்களுடன் பழகும் பெற்றோரின் மகள் டெனிஷ் இளைஞனைத்



படிப்பகம்

padippakam

திருமணம் செய்ய விரும்பும்பொழுது எதிர்க்கின்றார்கள். எங்கள் சமுதாயத்தின் போலி விழுமியங்களின் சாயம் இங்கு வெளுக்கப்படுகிறது. ரஞ்சனியின் பல கேள்விகள் சமுதாயத்தை நோக்கி சாட்டையால் வீசுகின்றன.

**என்னால் உனக்காக அழமட்டுமே முடியும்**

குடும்பச் சுமையினால் சிறகுகளைச் சுருக்கிக்கொண்ட தமிழ் இளைஞனின் பரிதாப நிலை என்னால் உனக்காக அழமட்டுமே முடியும் என்ற கவிதை. இளைமையை உணரமுதல் முதுமைக்குள் குடி போனவனே என்ற ஆசிரியரின் ஆதங்கம் மனதை வாட்டுகிறது.

**துடக்கு கழிவு**

புலம்பெயர் நாட்டில் சாதிப்பிரச்சனையை அலசும் கதை துடக்கு கழிவு, இயற்கையுடன் ஒட்டிய விறுவிறுப்பைத் தருகிறது. பனி பூப்போல பூப்போல எனத் தொடங்கி அவ்வாறே கதையும் முடிகிறது. ஆனால் அந்த இரண்டு பூப்போலகளுக்கும் இடையில் ஓர் பனிப்புயலல்லவா கொட்டிவிட்டுப் போயிருக்கிறது.

**வெள்ளம்**

வெள்ளத்தின் கதாநாயகன் புதுப்பொம்மைகளின் கதாநாயகன் போன்று அக நுண்ணாராய்ச்சி செய்து "நான்" எது என்று உணர்கின்றான்.

காலை பிரகாசமாகப் புலர்கிறது. பின்பு மழை வருகிறது. இறுதியில் வெள்ளம் அசுத்தங்களைக் கழுவிச் செல்கிறது. இங்கு மழையும் வெள்ளமும் குறியீடுகள். மிகவும் சாமர்த்தியமாகப் பயன்படுத்தப் படுகின்றன. கதை மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது.

அழகாக நெய்யப்பட்ட அருமையான கதை இது. சம்பவங்கள் இயல்பாகக் கோர்க்கப்பட்டுள்ளன. இந்தக்கதை நுண்ணறிவு வாசகர் வட்டத்தை நிச்சயம் கவரும்.

**போரினால் ஊரில் ஏற்பட்ட அவலங்களைச் சித்தரிக்கும் இன்னொரு கதைக்கவிதை கிராமத்து வீடும் என் முதல் காதலியும்**

"வழி நெடுக மகளும் மகனும்
கேள்வி மேல் கேள்வியாக
பதில் தெரியாத எம் நாட்டு யுத்தமாய்
விழி பிதுங்க நானும்"



படிப்பகம்

padippakam

நாட்டு நிலைமையை நறுக்குத் தெறித்த நாலு வார்த்தையால் முன் வைக்கின்றார் ஆசிரியர்.

**தாய் + மண்**

தாய் + மண் என்ற சிறுகதை போர்க்காலச் சூழ்நிலையையும், அக்காலக் கொடுமைகளையும், தற்போதைய நாட்டு நடப்புகளையும் பக்கச் சார்பின்றி வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது.

"மௌனம்! அல்லது உயிர்வாழ்தலுக்கு மௌனித்திரு என்ற தாரக மந்திரத்தை மக்கள் இப்போது நன்றே கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்"

ஜீவா கதையை நினைவோட்டத்தின் மூலம் நகர்த்திச் சொல்லு கின்றார். கதை சொல்லும் பாங்கு விறுவிறுப்பாக உள்ளது. மொழி நடையும் கதைக்கு வேகம் ஊட்டுகிறது.

தனி மனித வாழ்வுப் போராட்டம், சித்திரவதை முகாம்கள், புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதில் உள்ள கஷ்டங்கள், பிரிந்திருக்கும் தாய் மனதின் ஏக்கங்கள் ஆகியவற்றை இயல்பாக சிறுகதையாக வடித்துள்ளார்.

வசனங்கள் பளீர் என்று இருக்கின்றன.

கதையின் முடிவு சாட்டையாக மூளையில் உறைக்கிறது. இந்தச் சிறுகதை இந்த மணியாரத்தில் ஒரு முத்து எனப் பெருமைப்படலாம்.

**அந்திமத்தில் ஓர் ஆசை**

இந்தக் கவிதைக்கதை புலம் பெயர்ந்து வாழும் ஒரு தமிழ் இளைஞனின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. கடமைகளும், எதிர் பார்ப்புகளும், பேராசைகளும், மனிதனை வேகமான வாழ்க்கைக்குள் தள்ளுகின்றன; கூடவே சாவுக்குள்ளும் தள்ளுகின்றன. மரணத்தை ஆவாது மெதுவாகத் தழுவ ஆசைப்படும் அவனின் நினைவுகளை கட்டற்ற கட்டமைப்புள்ள (free verse) உரைநடைக் கவிதையால் ஆசிரியர் கூறியுள்ளார்.

"திரி கருகி மணக்கிறது. . .
அந்த மணம் எனக்குப் பிடித்திருக்கிறது"



படிப்பகம்

padippakam

வாழ்வின் யதார்த்தத்தை இங்கு குறியீடு பிரதிபலிக்கிறது.

## யாவும் கற்பனை அல்ல

சந்தர்ப்பச் சூழ்நிலை வசதியாக வருமாயின் மனித பலவீனங்கள் உயிர்த்தெழுகின்றன என்ற சிறுகதை யாவும் கற்பனை அல்ல. தமிழ்ச் சமுதாய வரட்டுக் கௌரவங்கள் இங்கு எள்ளி நகையாடப்படுகின்றன. கூடவே செல்விக்காக திரைமறைவில் கண்ணீர் வடிக்கும் ஆசிரியர் அவளை ஒரு புதுமைப் பெண்ணாக உருவாக்கிய விதம் பாராட்டுக்குரியது.

பரிதாபம் யாதெனில், சமுதாயத்தில் செல்விக்கு அந்த பாராட்டு கிடைக்கவில்லை.

## கரு முதல் காடு வரை தொடர் நவீனம்

பிறப்பு முதல் இறப்பு வரை இத்தொடர் ஒரு ஞானவிசாரணை செய்கிறது.

நான் யார் என்ற தேடலும் பாரம்பரிய பழக்க வழக்கங்களும் நடைமுறை வாழ்க்கை முரண்பாடுகளும் தத்துவ விசாரணை செய்யப்படுகின்றன.

சிந்தனைக்கு கனதியான எத்தனையோ விடயங்களை ஜீவகுமார் இங்கு முன்வைக்கின்றார்.

பராம்பரிய யாழ்ப்பாண வரட்டு விழுமியங்களை கேலிசெய்யும் அக்னிகாண்டம் என்ற அத்தியாயத்தில் எமது கல்விமுறையைப் போட்டுச் சாடுகின்றார். அதன் தோல்வியையும் அழகாகச் சொல்லுகின்றார்:

"மற்றவனை அழுத்த
உயர்த்திய கால்கள் எல்லாம்
மீண்டும் மண்ணை மிதிக்க முடியாது
அகதிகள் ஆகின"

காதல் என்ற அத்தியாயத்தில் நிலவுடைமைப் பிரபுத்துவ சமுதாயமான யாழ்ப்பாண பாரம்பரிய குடும்ப எதிர்பார்ப்புகள் எவ்வாறு காதலுக்கு சாவுமணி அடிக்கிறது என்பதனை மிகவும் லாவண்யமாக எடுத்துக் காட்டுகிறார்.



படிப்பகம்

padippakam

"கம்பி வேலிகளுக்கு அப்பால் நின்று
கைகளைக் குலுக்கிக் கொண்டோம்.
முகமூடி போட்டுக்கொண்டு
முத்தமிட்டுக் கொண்டோம்"

பாரம்பரிய யாழ்ப்பாணத் திருமணங்கள் இங்கே சாடப்படுகின்றன. கருத்து புதியதல்ல என்றாலும் சொல்லப்பட்ட விதம் வாசகனைக் கவர்கிறது.

அரசியலை ஆராயும் சதுரங்கம் மனிதநேயத்துடன் கூடிய சமா தானத்தை வரவேற்பது மட்டுமன்றி மிகத் துணிச்சலாக நம் நாட்டு குருக்ஷேத்திரப் போரைக் கண்டிக்கிறது.

"மனித நேயம் மீட்கப்பட வேண்டும்
மந்திகள் கொப்பிழக்க வேண்டும்"

திரைப்பட மாயையில் மூழ்கி தூரநோக்கு இன்றி உலக யதார்த் தங்கள் புரியாமல் வாழ்வின் முற்பகுதியை அறிவிலியாகக் கழித்த எமது தலைமுறைக்கு இந்த தினசரி 4 காட்சிகள் என்ற பகுதி சமர்ப்பணம்.

"திரைச் சுருள்களை எல்லாம்
ஓர் சின்னக் குச்சிக்கு
தின்னக் கொடுப்போம்" என
கவிதை பாடிய வைரமான மணிகள் எல்லாம்
சிலுக்கின் ஒட்டியாணத்திற்கு
கண்ணாடிக் கற்களாய் பதிந்தன"

புலம் பெயர்வு என்ற பகுதியில்

"எங்கள் உயிர்வாழ்தலுக்கும்
எங்கள் இருப்புகளை
காப்பாற்றிக் கொள்ளவும்
வழியெல்லாம் அல்லவா
நேர்முகப் பரீட்சைகள்" என்று பரிதவிக்கின்றார்.

"கல் தோன்றா மண் தோன்றா காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த இனம்
கையில் தட்டுகளுடன் வரிசை வரிசையாக. . . ."

"எந்தக் கருடனின் நிழல்கள்
எங்கள் மீது பட்டதோ



படிப்பகம்

padippakam

எந்த முனிவன்
எம்மினத்துக்கு போட்ட சாபமோ?"

தமிழினத்தின் இன்றைய இழிவு நிலை நெருப்புப் பொறியாகச் சொல்லப்படுகிறது. இத்தனை புலம் பெயர்வுகளுக்குப் பின்பும் முரண்பாடுகள் தோன்றுவதை இவ்வாறு காட்டுகின்றார்.

"பிரிவினைகள் வந்தது. . ..
யாழ்ப்பாணம் வந்தது. . ..
சாதிகள் வந்தது. . . .
இயக்கங்கள் வந்தது. . . .
ஆனால் என்ன?
இங்கு கத்தியெடுத்து வெட்டுவதில்லை
கைகளைக் குலுக்கிக் கொண்டே கால்களை வாருவோம்"

நவீன புலம் பெயர்ந்த தமிழர் சமுதாய நடைமுறைகள் விழிப் புணர்வுடன் சாடப்படுகின்றன.

இந்த நவீனம் காலத்தின் தேவை. காலத்தின் கண்ணாடி.

மொத்தத்தில் ஜீவகுமாரனின் கதைகளானாலும் சரி, கவிதை களானாலும் சரி, காலங்களும் கருத்தோட்டங்களும் ஆனாலும் சரி, அவர் சமகாலப் பிரச்சனைகளை கலப்படமின்றி அலசுகின்றார். பல சிறுகதைகள் சொந்த அனுபவங்களாய் இருக்கலாம். ஆனால் பொதுமைப்படுத்தப்படுகின்றன. சில படைப்புகளுக்கு காலத்தின் கட்டாயத்திற்கிணங்க தீர்வுகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இத்தொகுதியில் எதிர்காலத் தொலைநோக்கு, சமுதாய எதிர்பார்ப்பு, கழிவிரக்கம், மனிதநேயம் என்பன விரவிக்கிடக்கின்றன. இந்தப் படைப்புகளின் வடிவாக்கம், மொழியாற்றல், உருவகங்களை பொருத்தமாகக் கையாளும் திறமை இவரைப் பண்பட்ட எழுத்தாளராக இனம் காட்டுகின்றன.

திருமதி ரேணுகா தனஸ்கந்தா

*ஆங்கிலப் பட்டதாரி - விமர்சகர்*
*மெல்போர்ண்*
*அவுஸ்திரேலியா*



படிப்பகம்

padippakam

# முன்னீடு

'பழையன கழிதலும் புதியன புகுதலும்? வழுவல' என்று இலக்கண ஞானத்துடன் மொழிந்தாலென்ன, 'கட்டுடைத்தல்' என நவீன மோடியிலே வல்லவம் பேசினாலென்ன, மனித வாழ்க்கையின் சகல செயற் பாடுகளிலும் மாற்றங்கள் நிகழுதல் நியதி. இந்த நியதியிலிருந்து தமிழ் இலக்கியப் படைப்புக்கு விதிவிலக்கு இல்லை. தமிழ் வளர்ச்சி இவ் விதிகளைப் பேணும் தன்மைத்தால் சீரிளமை குன்றர்து வாழ்கிறது.

சங்க காலத்துச் சான்றோர் இயல்பு வாழ்வுடன் இணைந்து, அகம்-புறம் எனச் செய்யுள் இயற்றிச் சுகித்த இலக்கிய மரபின் செழுமையிலே, சங்கம் மருவிய காலத்தில் சடைத்து எழுந்ததுதான் காப்பிய மரபு. சிலப்பதிகாரம் சமைந்தது. தமிழின் தலைமைக் காப்பியமாகவும், முதல் காப்பியமாகவும் அஃது உயர்ந்து வாழ்கிறது. அத்துடன், தமிழ் இலக்கியப் படைப்பில் ஒரு புதிய சகாப்தத்தின் விடியலாகவும் அதன் சீரிய சிறப்பு நிலைக்கின்றது.

*'உரை இடையிட்ட*
*பாட்டுடைச் செய்யுள் என*
.............................................
*உரைசால் அடிகள் அருள மதுரை*
*கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்'*

என்கிற அடிகள் சிலப்பதிகாரப் பதிகத்திலே காணப்படுவன. செய்யுள் மரபே வழக்கில் இருக்க, இடையிடை உரைநடையைப் பயிலுதல் சேமமென,

*'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென் றோர்மணி யாரம் படைத்த தமிழ்நாடு'*



படிப்பகம்

padippakam

எனப் பாரதி வாய்மணக்கப் பாராட்டும் இளங்கோ அடிகள் என்னும் இலக்கியப் படைப்பாளி கருதினார். அந்தப் புதுமையை, கட்டுடைத்தலை, அது பாலித்த செழுமையைத் தமிழ் ஏற்றது.

*'......... இளங்கோ வைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,*
*உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!'*

என்று இன்றும் தமிழ் ஆராதனையாளர் சிலப்பதிகாரப் படைப்புக் குறித்து ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.

இளங்கோ அடிகள் பற்றிய இந்நினைவுகள் வி.ஜீவகுமாரனின் 'யாவும் கற்பனை அல்ல' என்கிற இந்நூலின் ஊடாகப் பயணிக்கும் பொழுது என் நெஞ்சில் என்னை அறியாமல் எழுந்தன.

'புத்தாயிரத்தில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தமிழில் புதியன படைத்து, உலகளாவிய தமிழ் இலக்கியத்திற்கு தலைமை தாங்குவார்கள்' என்கிற சுபிசேஷத்தினை ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அறிவித்து, தமிழ்நாட்டில் வாழும் இலக்கியச் சண்டியர்களின் ஆக்கினைகளைத் தாங்கி வாழும் ஓர் இலக்கிய ஊழியன் நான் என்பதை அறிந்தோர் அறிவர்.

இன்று இந்த 'சுபிசேஷத்தை' மெய்யே என இலக்கியச் சுவைஞர்கள் ஏற்றுக்கொள்ளும் சூழல் ஏற்பட்டுள்ள சாங்கங்கள் தெரிகின்றன. தமிழ்நாட்டுத் தமிழர்கள் உடனடியான அரசியல் ஆதாயங்கள் கருதி, தீக்கோழி சாகசம் ஒன்றினைப் பயிலுதல் வேதனையானது. ஈழத் தமிழர்கள் கால்நூற்றாண்டுக்கு மேலாகவே துயர்களையும் இன்னல் களையும் இழப்புகளையும் சோகங்களையும் தொடர்ந்து அநுபவித்து வருகிறார்கள். இவற்றின் கோரத்தினையும் கொடூரத்தையும் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் அறிவர். இதற்கு எதிரான உணர்ச்சிப் பெருக்கினைக் காணோம். அவர்கள் உள்ளங்கள் ஈரம் வறண்டுபோன மலட்டு நிலங்களா?

தமிழ்நாட்டின் பராக்குகள் வேறு. அதற்கு 'சாணக்கியம்', 'காய்நகர்த்துதல்' என்று என்னென்னவோ வார்த்தையாடல்களைப் பத்திரிகையாளர் கண்டுபிடித்துள்ளனர். Unity and territorial integrity



படிப்பகம்

padippakam

என்று நாராயணன்களும் மேனன்களும் மணி கிலுக்கிச் செய்யும் பூஜைகளுக்கு பேயாட்டத்தைத் தோற்கடிக்கும் தலை ஆட்டுதல்கள். அஃது அவர்கள் பாடும் யோகமும்!

ஆனால், அரசியலுக்கு அப்பால் தமிழுக்கு என்ன நேர்ந்தது? 'தமிழ் செம்மொழி'யாகியுள்ளதாம். அந்தப் பழைமையின் கியாதியைப் பாதுகாக்கப் பண்டிதர்களும் பேராசிரியர்களும் 'பாடம்' செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். 'தமிழ் என்னும் சடலம் இனிக் கெட்டுப்போகாது' என அபயந் தருதல் அவர்கள் பணி. பத்துக்கு மேற்படப் புழுத்து வழியும் 'சின்னத்திரை'த் தடங்கள் 'குறுந்தசைக் குவடு'களைச் சோக்காகக் குலுக்கி, நாவழுகும் ஆங்கிலத்துடன் 'தொட்டுக்க ஊறுகாய்' போலக் கலக்கும் தமிழ்ச் சொற்கள் தடவிடும் 'தங்கிலீஷ்' என்றும் புதுப் பாஷையிலே பிளந்து கட்டுகிறார்கள். கதை இலக்கியத்தை முன்னெடுத்த தமிழ் சஞ்சிகைகள் வெண்திரை வனிதையர், வல்லவர் படங்களையும், அவர்கள் குறித்துக் கோடம்பாக்கத்திலே புழுத்துச் சிந்தும் கிசுகிசுக்களையும் பக்கமெல்லாம் வர்ணங்களாலே அப்பி 'ஒன்னுக்கு இருக்க' முந்தி நிற்கின்றன. தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள் பலரும் பணம் சேர்க்கும் எலியோட்டத்திலே புனைவின் பொற்பங்களைத் தொலைத்துவிட்டார்கள்.

இச்சிதைவுகள் பற்றியும், சிதிலங்கள் பற்றியும், அலங்கோலங்கள் பற்றியும் யாருக்கும் கவலையில்லை!

இந்நிலையில், தமிழும் அதன் எதிர்கால இலக்கிய வளமும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களினால் முன்னெடுக்கப்படுதல் காலத்தின் நியதி. பனைவளர் நாட்டிலிருந்து பனிஉறை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து எல்லாவற்றையும் இழந்து, உயிரை மட்டுமே காப்பாற்றி, புதிய சூழலிலே நம்பிக்கையுடன் வாழ்வு தேடுகிறார்கள். அந்தத் தேடலிலே அவர்களுக்குத் துணை நிற்பது இனத்துவ அடையாளம். அதனை உபகரிப்பது தமிழ். எனவே, தமிழ் அவர்களைப் பொறுத்தமட்டும் வாக்கு சேகரிக்கும் கோஷம் அல்ல. தமது தனித்துவத்தை நிறுவி வாழத் துணை நிற்கும் சுவாசம். இந்த சுவாசம் இல்லையேல் அவர்கள் நடைப்பிணமாக வாழும் பரதேசிகளே! வாழும் எழுச்சிதான் அவர்களுடைய தமிழ்ப்படைப்பின் ஆதார சுருதி. புலம் புதிது. பொருள்



படிப்பகம்

padippakam

புதுசு. இலக்கிய நூல்களின் தாக்கம் இல்லை. புதிய ஏக்கங்களை வார்த்தைகளிலே வடிக்கும் சுகமான வடிகால்களைத் தேடுகிறார்கள்.

விட்டுப்பிரிந்த மண்ணின் ஏக்கம், காலங்காலமாகப் போற்றப்பட்டு வந்த விழுமியங்களின் கசக்குதல்கள், புதிய வசதிகளின் மத்தியிலே பழமை நாட்டுவதான பாவனைகள், உண்மையான வலிகளை மறைக்கும் போலிச் சிரிப்புகள் ஆகிய பல அவலங்களைச் சொல் வதற்குப் புதிய இலக்கிய வடிவங்களே தேவைப்படுகின்றன. மரபு ரீதியான கட்டுரைகள், கவிதைகள், கதைகள் என்கிற கட்டுமானங் களுக்கு அப்பாற்பட்ட வடிவங்களும் தேவைப்படுகின்றன. புதிய மொழி நடையும் தேவை. பல்கலைக்கழகங்களுக்கு அப்பாலாக வாழும் மண்ணின் மைந்தர்களின் பேச்சுத் தமிழ் அவர்களின் படைப்புகளிலே புதிய அகங்காரம் கொள்ளுகின்றது. அத்துடன் கதை - கட்டுரை - கவிதை என்கிற தனி இலக்கிய வரையறைகளை நெகிழ்த்தி, அவற்றைத் தேவை கருதி கலக்கவும் செய்கிறார்கள். ஆனால் புனைவு வல்லபம் இதனை இலக்கியமாகச் சேதுபந்தனப்படுத்துகின்றது. இத்தகைய ஓர் எளிமையான ஞானப் பிரகாசத்துடன் இந்நூலுக்குள் நுழையுமாறு தமிழ்ச் சுவைஞர்களை ஆற்றுப்படுத்துகிறேன்.

ஜீவாவின் *யாவும் கற்பனை அல்ல* என்ற இந்நூலிலே உரைநடை இலக்கியத்தில் இடையிட்டு செய்யுள் வருகிறது. செய்யுளுள் உரைநடை புகுதல் ஆகுமாயின், உரைநடையில் செய்யுள் புகுதல் இயல்பெனு அவர் கருதுகிறார் போலும். எஃது எவ்வாறாயினும், தமிழ் இலக்கியத்தில் கட்டுடைத்தல் புத்தாயிரத்தின் கோலம் என்பதுமே அமைதி.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மத்தியில் மலர்ந்து வரும் புதிய இலக்கியப் படைப்பாற்றலின் வகைதொகைக்கு யாவும் கற்பனை அல்ல என்கிற இந்நூலும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இதற்கு இம்முன்னீடு எழுதுதல் எனக்குப் புதிய இலக்கிய அநுபவமாகச் சுகந் தருகின்றது.

- எஸ். பொ



படிப்பகம்

padippakam

# நுழைவாயிலில் . . .

இங்கேயுள்ள எனது படைப்புகள் ஒன்றும் முன்பு சொல்லப் படாதவைகள் அல்ல.

நான் சொன்ன விதம் வேறுபட்டுள்ளதாக இப்படைப்புகளை விமர்சித்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இது எனது தமிழுக்குக் கிடைத்த கௌரவமாக எண்ணி மிக மகிழ்கின்றேன்.

இவை வெறும் பதிவுகள்தான்.

எவர்களுடனும் எவையுடனும் சமரசம் செய்யாத பதிவுகள்.

அதனால்தான் இத்தொகுப்பிற்கு 'யாவும் கற்பனை அல்ல' எனப் பெயர் சூட்டியுள்ளேன்.

இந்தப் படைப்புகள் முழுவதிலும் நான் உங்களுடன் சேர்ந்து அங்கிருப்போருடனும் இங்கிருப்போருடனும் சரளமாக உரையாடியுள்ளேன்.

அது எனக்குப் பிடித்திருக்கின்றது. உங்களுக்கும் பிடிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.



படிப்பகம்

padippakam

## நன்றிக்குரியவர்கள்

மண்வாசனையை எனக்கு அறிமுகப்படுத்திய வீரகேசரிப் பிரசுரங்களில் ஒன்று நிலக்கிளி. அதன் ஆசிரியரும் டென்மார்க்கில் நல்ல இலக்கிய நண்பருமான திரு. ஆ. பாலமனோகரன் இப்படைப்புக்கு ஆசி வழங்கியதை மனம் நன்றியுடன் எண்ணிப் பார்க்கின்றது.

ஆங்கில இலக்கிய வகுப்புகளில் ஒன்றாகக் கூடியிருந்து, பின் புலம் பெயர்ந்தபொழுது தொலைத்துவிட்டு சுமார் இருபது வருடங்களுக்குப் பின்பாக மீண்டும் சந்தித்துக்கொண்ட எனது பள்ளித் தோழனும் தோழியும் இந்நூலுக்கு அணிந்துரையும் முன்னுரையும் எழுதியுள்ளார்கள். அவர்கள் இருவருக்கும் நன்றி கூறி இனியும் தூரத்தில் விடப்போவதில்லை. பிரிந்திருந்தது போதும் என்று நினைக்கின்றேன்.

திருமதி. ரேணுகா தனஸ்கந்தா அவுஸ்திரேலியாவில் மொழி பெயர்ப்பு இலக்கியங்களிலும், விமர்சனத்துறையிலும் பெரிய பங்கு வகிக்கின்றார்.

திரு. கந்தையா ஸ்ரீகணேசன் யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் ஆங்கிலப்பகுதிப் பொறுப்பாளராகவும் அறியப்பட்ட நாடகாசிரியராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் விளங்குகின்றார்.

இப்படியும் எழுத முடியுமா என என் சின்ன வயதில் வாசித்த சடங்கு நாவல் என்னுள் ஏற்படுத்திய தாக்கம் இன்றும் மறைய முதல் எனது தொகுப்புக்கு முன்னீடு வழங்கியும், எம் சந்ததி யினருக்கு இலக்கியச் சுவடாக பல ஆக்க இலக்கியங்களை அறிமுகம் செய்தவருமாகிய திரு. எஸ்.பொ. அவர்களின் அறிமுகம் இந்நூலால் எனக்குக் கிடைத்ததை இட்டு எனது படைப்புகள் மகிழ்ச்சி கொள்கின்றன.

தொலைந்துபோன எனது சில படைப்புகளைத் தேடித்தந்த டென்மார்க் எழுத்தாளர் திரு. எம். சி. லோகநாதனுக்கும், எனது படைப்புகளைப் பிரசுரித்த சஞ்சீவி, இனி போன்ற மாத இதழ்களுக்கும், வானம். டீ. கே. என்ற இணையத்தளத்திற்கும் என்றென்றும் எனது நன்றிகள்.



படிப்பகம்

padippakam

இந்நூலுக்கு சித்திரம் தீட்டிய எனது மகள் முறையான வினோத் காமராஜின் கைவண்ணம் எனது எழுத்துகளை மேலும் துலக்கமாக்கி யுள்ளது. தாங்க்ஸ்டா செல்லம்.

இந்த நூலில் உள்ள ஒவ்வோர் எழுத்து, சொல், வசனம் அத்தனையையும் வரிக்கு வரி விமர்சித்து என் ஆரோக்கியமான எழுத்துப் பணிக்கு என்றென்றும் துணை நின்ற என் சின்ன வயது இலக்கியத் தோழி கலாநிதி ஜீவகுமாரனுக்கும், தங்களுடன் இருக்க வேண்டிய நேரத்தை உங்களுடன் இருக்க அனுமதித்த மிதிலா, மீரா இருவருக்கும், இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த மித்ரா வெளியீட்டாளர்களுக்கும் என் நன்றிகள்.

இங்ஙனம்

வி. ஜீவகுமாரன்

*புவியியல் சார்ந்த கணனிப் பதிவு பொறுப்பாளர்*
*(GIS system - Oddsherreds நகரசபை)*
*புலம் பெயர்ந்தோருக்கான அரச நூலக தமிழ்ப்பகுதி ஆலோசகர்*
*(State Library for immigrants-Denmark)*

முகவரி :

Hojvangsparken- 7
4300 Holbaek
Denmark

தொலைபேசி : 0045 - 59 46 45 47
கைத்தொலைபேசி : 0045 - 22 30 31 34
மின்னஞ்சல்: jeevakumaran5@yahoo.com



படிப்பகம்

padippakam

## உள்ளுறை

புதுப்பொம்மைகள் - 31 * அம்மா வலிக்குது - 41 * நனவோடை - 43 * பிரக்ஞை - 48 * எங்கே போனீர்கள்? - 50 * புதுப்புலவு - 59 * வாகரை வீதிகளில் - 66 * ஊமை உறவுகள் - 68 * டென்மார்க் - 78 * காதல் வந்திருச்சி - 89 * Mothersday - 96 * வரிச்சுமட்டை வேலிகள் - 99 * ரஞ்சனி - 110 * என்னால் உனக்காக அழமட்டுமே முடியும் - 123 * துடக்குக்கழிப்பு - 125 * வெள்ளம் - 132 * கிராமத்து வீடும் என் முதல் காதலியும் - 158 * தாய் + மண் - 162 * அந்திமத்தில் ஓர் ஆசை - 175 * யாவும் கற்பனை அல்ல - 179



படிப்பகம்

padippakam

# புதுப்பொம்மைகள்

**"எதுக்காக என்னைக் கட்டினியள்?"**

இந்த இலையுதிர் காலத்தில் மரங்கள் எல்லாம் இலைகளைக் கொட்டி விட்டு சூனியம் கவ்வி நிற்பது போலவே, அந்தக் கேள்வியின் பின் மூர்த்திக்கும் இந்த இரண்டு நாட்களாக மனதுள் இருள் கவ்வியிருந்தது.

பகற்காலம் குறைந்து இருள் காலம் கூடியிருந்தது போலவே, இந்த இரண்டு நாளும் அவனுள்ளும் ஓர் சரிசமனற்ற நிலை நிலவிக் கொண்டு இருந்தது.

இரண்டு நாட்களாகவே அவனாக அறையினுள் முடங்கிக் கொண்டான். வீட்டில் எந்தச் சாமான் குறைந்தாலும் வாங்கி வந்து "இந்தா தேவி" எனக் கொடுத்துவிட்டு, பிள்ளைகள் விளையாடக் கேட்டால் "அப்பாக்கு வேலையிடத்து வேலை இருக்கு. செய்து முடிக்க வேணும்" எனத் தப்பித்துக் கொண்டு, தனக்குத் தானே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு அறையினுள் முடங்கிக் கொண்டான்.

தேவிக்கும் காரணம் தெரியாமல் இல்லை.

தன் வைராக்கியத்தை விட்டுக் கொடுக்காமல். . . . இதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல. . . அவளும் காலையில் எழுதல், குளித்தல், உணவாக்கல், உணவு பரிமாறுதல், வேலைக்குப் போதல், பிள்ளைகள் தூக்கத்திற்குப் போகும்வரை அவர்களுடன் பொழுது போக்குதல், தவிரவும் நேரம் இருப்பின் ஓர் படம் போட்டுப் பார்த்தல், ரெலிபோனில் தெரிந்த மற்றைய தமிழ்ப் பெண்களுடன் சின்னச் சின்ன அரட்டைகள் என சராசரி டென்மார்க் + யாழ்ப்பாணப் பெண்ணாக இயங்கிக்கொண்டு இருந்தாள்.

மனதுக்குள் மட்டும் அவரைக் குற்றவாளியாக்கிப் போட்டன் என்ற பெருமிதமும், இப்போது மனத்துள் குமைகிறார் என்ற

படிப்பகம்

padippakam



பரிவிரக்கமும் இருந்தாலும் இரண்டையுமே அவள் வெளிக் காட்டவில்லை.

மூர்த்தி மட்டும் பக்கவாட்டாகப் போடப்பட்டிருந்த சோபாவில் சாய்ந்தபடி யன்னலினூடு மப்புக் கட்டியிருந்த வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூடவே தன்னைப் பொறிகலக்க வைத்த தேவியின் கேள்விக்கான பதிலை மனம் தேடிக்கொண்டு இருந்தது. அதுவும் ரகு, ரேவதி என்ற இரண்டு பிள்ளைகள் வாழ்க்கையில் வந்து பாடசாலை செல்லும் வயதுக்கு வந்தபின்பு கேட்கப்பட்ட கேள்வி அது.

"எதுக்காக என்னைக் கட்டினியள்?"

நேற்றைக்கு முதல்நாள் சனிக்கிழமையும் இப்படித் தான் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.

ரகுவையும் ரேவதியையும் தமிழ் வகுப்பிற்குக் கொண்டு போய் விட்டு விட்டு ஆறுதலாக இருந்தபொழுது, "நாலுவருடமாய் ஒரு இடத்துக்கும் போகேல்லை. இந்த கிறிஸ்மஸ் லீவுக்கு பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு சிங்கப்பூருக்கு போவமோப்பா?" எனத் தேவி கேட்க "அதுக்கென்ன. . . . போகலாம்தான். . . . இருக்கிற காசு போதுமோ?" வழமையான பொருளாதாரத் தயக்கத்தினூடு மூர்த்தியின் பதில் வந்தது.

நத்தார் வரையிலான சேமிப்பு, வங்கியில் கடனாக எடுக்கக் கூடிய மொத்த தொகை, விடுமுறைச் சம்பளம் ஆகியவற்றை ஓர் தட்டிலும். . . பயணச் செலவு, லொட்ஜ் வாடகை, இடம் சுற்றிப் பார்ப்பதற்கான செலவுகள், ரேவதிக்கும் தேவிக்கும் இரண்டொரு நகைகள், கொஞ்சம் உடுப்புகள், போய் வந்தபின் தெரிந்தவர் களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்க சில அன்பளிப்புப் பொருட்கள் என்பவற்றின் செலவுகளை மறு தட்டிலும். . . . போட்டுப் பார்த்தாலும் ஓர் ஐயாயிரம் குறோன்கள் கைகளைக் கடிக்கவே செய்தது. சரி... தை மாதத்தில் வரும் பிள்ளைகளுக்கான காசு மூவாயிரம் போக



படிப்பகம்

padippakam



யாரிடமாவது இரண்டாயிரம் கை மாத்தாய் வேண்டினால் போதும் என்கின்ற வகையில் தேவியின் பட்ஜட் மீதான விவாதம் சுமுகமாக நிறைவேறியது.

ஆனால் மூர்த்தி மட்டும் மொத்த செலவாக உள்ள முப்பதாயிரம் குறோன்களையும் மனதால் இருபது ரூபாயால் பெருக்கி ஆறு லட்சம் இலங்கை காசு எனக் கணக்குப் பார்த்துவிட்டு, தேவிக்குத் தெரியாமல் தனக்குள் தானே ஓர் பெருமூச்சை விட்டபடி லைபிரறிக்கு வாரத்துக்கொரு முறை இலங்கையில் இருந்து வரும் வீரகேசரி வாரமலரைப் பார்க்க சைக்கிளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

வெளியில் மெல்லிய தூறலும் பலத்த காற்றும் தொடங்கி யிருந்தன. இவையிரண்டும் தான் டென்மார்க்கில் இலையுதிர் காலம் வந்தமைக் கான சரியான அறிகுறிகள். அத்துடன் பழுத்த இலைகள் றோட்டின் இரு கரையிலும் நிரம்பி வழுக்கப் பார்க்கும். சைக்கிளை மிகக் கவனமாக ஓட்ட வேண்டும்.

குடும்பமாய் சிங்கப்பூருக்குப் போவது என்கின்ற நினைவு மனத்துள் மகிழ்ச்சியாய் இருந்தாலும் இந்த ஆறு இலட்சமும் இலங்கைக்குப் போனால் தன் மூன்று சகோதரிகளின் குடும்பங் களுக்கு எத்தனையோ வகைகளில் உதவும் என்பதும், அதனால் தாய் சிவபாக்கியம் மகிழ்வாள் என்பதுவும் மூர்த்திக்குள் சின்ன ஓர் கனவோடை.

ஆனால் தேவியினதும் பிள்ளைகளினதும் சந்தோசங்களுக்கு இடையில் தனது சுய விருப்பு வெறுப்புகள் எந்த விடயத்திலும் குறுக்கே நிற்கக் கூடாது என்பதில் முழு உறுதியாக இருந்தான்.

மெல்லிய மழைத்துளிகள் இப்போது பெரிய மழைத்துளிகளாகக் கொட்டத் தொடங்கின.

வீரகேசரியில் யாழ்ப்பாணம் போர்க்கோலம் கொண்டிருந்தது. மக்கள் துப்பாக்கிகளுக்கும், பம்பர்களுக்கும், பதுங்கு குழிகளுக்கும் மத்தியில், நாளை என்பதில் எந்த நம்பிக்கைகளும் அற்று,



படிப்பகம்

padippakam



இன்றைய பொழுது மட்டும் இழவற்றதாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள்.

பேச்சுவார்த்தைகள், நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள், அரசியல் கொலைகள், யார் நண்பன், யார் எதிரி, யாரை யார் எப்போ கடத்து வான், யார் யாரை எப்போது காட்டிக் கொடுப்பான் என்ற நிலையில் யார் யாருக்கோ எவர் எவரோ கலிங்கத்துபரணி பாடும் புதினங்களே பத்திரிகையின் அதிக பக்கங்களை நிறைத்திருந்தன.

மூர்த்திக்கு வீரகேசரியின் புதினங்கள் சுவாரஸ்யமாக இல்லாமல் இருக்க மீண்டும் மழையையும் பொருட்படுத்தாமல் வீட்டுக்குத் திரும்பினான்.

சைக்கிளை முன்புறமாக நிறுத்திவிட்டு நெற்றியில் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரை வழித்தபடி வீட்டுக்குள் துவாயைத் தேடினான்.

“இந்தாங்கோ துவாய். . . உங்கடை அக்கா கடிதம் போட்டிருக்கிறா. மேசையிலை இருக்கு.”

நாட்டுப்பிரச்சனைகளில் குடும்பங்கள் எப்படியோ என்ற நினைப்பில் வாசிகசாலையில் இருந்து வீட்டை திரும்பினவனுக்கு கடிதம் வந்தது மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், “மூத்த மச்சாள்” எனக் கூப்பிடும் தேவி, “உங்கடை அக்கா” என்று சொல்லிக் கடிதத்தைக் கொடுத்தது சற்று வியப்பைக் கொடுத்தது.

“உங்கடை அக்கா” என பிறத்தியில் தேவி சொன்னதன் அர்த்தத்தை கடிதத்தின் முதல் பந்தி நன்கு விளக்கியது.

மூத்த சகோதரி மாலதியின் மகனை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்ப தேவையான பத்து லட்சத்தில், ஓர் ஏழு இலட்சத்தை வீட்டை ஈடுவைத்து கடனாகப் பெற்றாலும் கடைசி மூன்று இலட்சத்தை தம்பி என்ற முறையில் மூர்த்தியிடம் எதிர்பார்த்துக் கடிதம் வந்திருந்தது.

சிங்கப்பூருக்கு புறப்பட இருந்ததில் பாதிப் பணம்.



படிப்பகம்

padippakam



பளீர் என ஒரு கிளாஸ் குசினியுள் விழுந்து சத்தம் கேட்டது. இன்னோர் பாத்திரம் சரிந்தது போலவும் இருந்தது.

"என்னது சத்தம் தேவி?"

" அது சனியன் வழுக்கிப் போட்டுது."

வழுக்கியது கிளாஸ் மட்டுமில்லை. அவளின் சந்தோஷங்களும் வழுக்கப் போகுதோ என்ற அவளின் பயங்களும்தான் என மூர்த்திக்கு நன்கு தெரியும்.

எப்படியும் காசு அனுப்பத்தான் வேண்டும் என மூர்த்தி தனது மனத்துக்குள் தீர்மானித்தாலும், "அப்ப மாலதி அக்காக்கு என்ன செய்வம்?", என குசினிக்குள் வந்து தேவியிடம் கேட்டான்.

எப்போ மூர்த்தி கேட்பான் எனக் காத்திருந்தது போல அவன் சற்றும் எதிர்பார்க்காத வகையில் தேவியின் வார்த்தைகள் வேதனையின் வெளிப்பாடாக எள்ளும் கொள்ளும் வெடித்துப் பாய்ந்தன.

"அப்ப என்ன செய்யுறது? எல்லாத்தையும் அனுப்புங்கோ. நாளைக்கு இரண்டாவது அக்காவின்ரை மகளுக்கும் கலியாணம் வரும். அதுக்கும் அனுப்புங்கோ. பிறகு கடைசி அக்காக்கு. . . உங்களுக்கு என்னைப் பற்றியோ, பிள்ளையளைப் பற்றியோ என்ன கவலையள் இருக்கு. . . அங்கை இருக்கிற எல்லாரும் உங்களை தெய்வமாய் கும்பிட்டால் போதும். . . என்னை விட குறைஞ்ச சீதனத்திலை கட்டினதுகள் எல்லாம் எவ்வளவோ நல்லாய் இருக்குதுகள். நான்தான். . . ."

கோபத்தில் வெடித்த குரல் ஓர் விம்மலுடன் விக்கித் தவித்தது.

கடைசியாக அவள் சொன்னது அவனை ஒரு தரம் உலுக்கியது. ஆனாலும் தன்னைத் தானே அடக்கிக்கொண்டு கேட்டான்.

"அப்ப நான் என்ன செய்யிறது தேவி? எளியவனாய் பிறந்தாலும் இளையவனாய் பிறக்கக் கூடாது எண்டு சொல்லுவினம்.. நானும் ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளையாய் போயிட்டதாலை எல்லாப்



படிப்பகம்

padippakam



பொறுப்பும் என் மேலை விழுந்திட்டுது."

"அப்ப ஏன் என்னைக் கட்டினியள்?"

வெளியில் வீசிய காற்றில் கூரை படபடத்தது.

அழுத்தம் திருத்தமாக மூர்த்திக்கு முன்னால் நின்று கேட்டு விட்டு தன் ஆற்றாமையையும் இயலாமையையும் மறைப்பதற்காக ஓடிப்போய்க் கட்டில் மீது விழுந்தாள்.

சின்னக் கேள்விதான். ஆனாலும் அவனின் உடம்பின் ஒவ்வோர் அணுவையும் மேலாக அவன் ஆண்மையைத் துளைத்துக் கொண்டு போய் திரும்பத் திரும்பக் கேட்டது,

'ஏன் என்னைக் கட்டினியள்?'

'ஏன் என்னைக் கட்டினியள்?'

'ஏன் என்னைக் கட்டினியள்?'

இந்த இரண்டு கிழமையும் இந்த அறையுள் இருந்து இதனைத் தான் தன்னிடம் தானே கேட்டுக் கொண்டு இருக்கிறான்.

"எதுக்காக அவளைக் கட்டினனான்?"

மனத்தைக் கேள்விகள் துளைத்தன.

"கடைசி அக்காவின்ரை கலியாணத்துக்காகவா சீதனம் வேண்டி தேவியைச் செய்தனான்?"

இல்லை! வடிவாக பாங்கிலை ஓர் சின்னக் கடன் போட்டு அக்காக்கு கலியாணம் செய்திருக்கலாம்.

"நான்கு வருடம் தனிமையில் டென்மார்க்கிலை வாழ்ந்த களைப்பாலா தேவியைச் செய்தனான்?"

இல்லை!! நிச்சயமாக இருந்திராது. . . ஆறு நாள் வேலையும் ஒரு நாள் நண்பர்களுடன் கூத்து என சந்தோசமாகத்தானே இருந்தேன்!

"மற்றவர்கள் சொல்லுறது போலை தாம்பத்திய சுகத்தோடை ஒருத்தியோடை வாழ வேண்டும் என்றா தேவியைச் செய்தனான்?"

இல்லை!!! நிச்சயம் இல்லை. வேலையிடத்தில் ஊர் அறிந்த ஓர் வெள்ளைக்கார விதவையுடன் யாரும் அறியாத உறவை



படிப்பகம்

padippakam



வைத்திருந்தவன்தான் நான். பின்பு ஏன் தேவியைக் கட்டினனான்?

மீண்டும் மனம் தளராத விக்கிரமாதித்தன் என்பது போல 'எதுக்காக கட்டினேன்? எதுக்காக கட்டினேன்?' என்ற கேள்வியை ஆயிரம் தடவைகள் ஆயிரம் கோணத்தில் இருந்து கேட்டுப் பார்த்தாலும் பதில் என்னவோ கலங்கலாகவே இருந்தது.

சின்ன வயதிலிருந்தே அவன் மூர்த்தியாக வாழவில்லை. கைம்பெண் சிவபாக்கியத்தின் சாயலிலே அவன் வளர்ந்தான் - அச்சில் போட்டு எடுத்த சீமெந்துக் கட்டிகள் போல.

"கோயிலுக்குப் போ" – போனான்.

"படத்துக்கு போகாதே" – போகவில்லை.

"எஞ்ஜினியருக்கு படி" – படித்தான். ஆனால் பாஸ் ஆகவில்லை.

"வெளிநாட்டுக்குப் போ" – போய் விட்டான்.

"மூன்று அக்காக்கும் நீதான் துணை" – தலையாட்டினான்.

முதல் இரண்டு கல்யாணத்தை டென்மார்க்கில் இருந்து சிறப்பாகச் செய்து வைத்தபோது ஊரே அவனைப் புகழ்ந்தது - தாயின் கலி தீர்த்து வைக்க வந்த பிள்ளை என்று.

மூன்றாவது தமக்கையாருக்கு கலியாணம் வந்தபொழுது கொஞ்சம் காசு இடித்தது உண்மைதான். அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிப்பதற்கு முன்பாகவே தேவியின் ஜாதகத்துடனும் படத்துடனும் புறோக்கர் ஒருத்தர் சிவபாக்கியத்தைச் சந்தித்தார்.

"தம்பி, நல்ல சம்பந்தம். நல்ல பிள்ளை. அதையே நீ செய்" - அப்படியே செய்தான்.

இவ்வளவும் கண்முன் ஓடியபோது, எதிலுமே தான் சம்பந்தப்பட்டிராதது போல ஓர் உணர்வு அவனுள் தோன்றியது.

எவ்வாறு தன் சுயவிருப்பத்தில் அவன் பிறக்கவில்லையோ அவ்வாறே தான் பிறந்தபின்பும் தன் சுயத்தில் எதுவும் நடக்கவில்லை போல் தோன்றியது. மேலாக தன் சுயத்துடன் வளர தன்னை யாரும் விடவில்லை போல் தெரிந்தது.



படிப்பகம்

padippakam



அவனுள் தன்னைக் காணவில்லை. சிவபாக்கியத்தைக் கண்டான். இந்து சமய தத்துவங்களைக் கண்டான். உண்மையும் பொய்யும் கலந்த கலாச்சாரப் பதிவுகளைக் கண்டான். விருப்பத்தின் பெயரிலோ அன்றி வலிந்து திணிக்கப்பட்ட அரசியல் சித்தாந்தங்களைக் கண்டான்.

காலடியில் கிடந்த ரேவதியின் பொம்மைபோல, துணியுள் பஞ்சைப் போட்டு அடை அடையென்று அடைந்து அதற்கு ஓர் ரையையும் கட்டி கோட்டையும் போட்டு உலாவவிட்டது போல தன்னையும் தன் வய தொத்த பலரின் வாழ்வு அமைந்தது போல அவனுக்குப்பட்டது.

எல்லாவற்றையும் கண்டு கொண்டதாலோ..... இல்லை...... அறிந்து கொண்டதாலோ இப்போ என்ன பலன்? இனியொரு சுயமான வாழ்வைத் தேடிப் போகமுடியுமா? ஏற்படுத்திக்கொண்ட உறவுகளைத்தான் தள்ள முடியுமா? எதற்காகக் கட்டினோம் என்று தெரியாமல் கட்டியிருந்தாலும், கட்டியபின்பு இன்று கண்டுகொண்ட உண்மையால் தேவியை விட்டுப் பிரிய முடியுமா? ரகுவையும் ரேவதியையும் நடு றோட்டில் விடமுடியுமா?

“நான்” அற்ற நிலையில் தொடங்கிய வாழ்வை ‘நானை’ ஆராய்ந்த பின்பு தலைமுழுகுவது தன்னைச் சரி, தேவியைச் சரி, குழந்தைகளைச் சரி, இன்னமும் தன்னை நம்பியிருக்கும் தாய்-சகோதரிகளின் வாழ்வைச் சிதறடித்துவிடும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டான்.

எனது வாழ்க்கைப் பாடம் இனி எனக்கு உதவாவிட்டாலும், ரகுவையும் ரேவதியையும் நன்கு வளர்க்க நிச்சயம் உதவும் என மனதுள் திடமானான். அதுகளுக்கை எந்தப் பஞ்சையும் போட்டு நானும் தேவியும் திணிக்க வேண்டாம். அதுகளாவது புதுப்பொம்மை களாக உருவாகட்டும்.

ஆனால் இந்தத் தத்துவார்த்த விசாரணைகளை தேவியின் முன் வைத்து, ஓர் ஏமாற்றத்தின் விளிம்பில் நிற்பவளை இன்னும் கோபமடையச் செய்யாமல் அவள் வழியில் போய்த்தான் அவளுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற தீர்மானத்துடன் அறையிலிருந்து ஹோலுக்கு வந்தான்.



படிப்பகம்

padippakam



தேவி சாண்டில்யனின் கடல்புறாவினுள் ஒன்றிப் போய் இருந்தாள். அவளைக் குழப்பாமல் முன்னே போய் சோபாவில் அமர்ந்தான். மூர்த்தி வந்தது அவளுக்குத் தெரிந்திருந்தாலும் புத்தகத்திலிருந்து முகத்தைத் திருப்பவில்லை.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

கடைசிப் பக்கத்தையும் படித்து முடித்தவளுக்கு ஏற்பட்ட சோம்பலை முறித்துக் கொண்டு புத்தகத்தை ஓர் கரையில் போட்டாள்.

"என்னப்பா தேத்தண்ணி வைக்கிறதோ?"

"அதை பிறகு குடிப்பம். இப்ப உன்னட்டை ஒரு விசயம் கேட்க வேணும். நீ கேட்ட கேள்வியை இரண்டு நாளாய் என்னையே நான் கேட்டுட்டன். எனக்கு பதில் தெரியேல்லை. அதுதான் உன்னட்டை கேட்கிறன். நீ ஏன் என்னைக் கட்டினனீ என்றாவது உனக்குத் தெரியுமா?"

சற்றும் எதிர்பாராத இந்தக் கேள்வியாலை தேவி ஓர் கணம் தடுமாறினாள்.

"இது என்ன கேள்வி. . ... . அப்பா, அம்மா, அண்ணர் எல்லோரும் நீங்கள் நல்ல ஆள்; என்னைக் கஷ்டப்படுத்தாமல் பார்ப்பியள் எண்டு சொல்லிச்சினம். அதுதான் கட்டினனான்."

"அப்ப நீயாக என்னைக் கட்ட விரும்பேல்லை?"

இதை அழுத்தியே கேட்டான்.

"என்ன இது கேள்வி. . . கலியாணம் செய்து இரண்டு பிள்ளை களுமாகி அதுகளுக்கும் ஏழு வயதும் ஐந்து வயதுமாகிப் போட்டுது" தேவி தடுதடுத்தாள்.

"உனக்கு எதுக்காக என்னைக் கட்டினனீ என்று உனக்கே பதில் தெரியாதோ, அதே மாதிரித்தான் எனக்கும் ஏன் உன்னைக் கட்டினனான் எனத் தெரியாது. இப்படித்தான் எங்கடை பலபேரின்ரை வாழ்க்கை – அலையிலை அள்ளுப்பட்டு போற தேங்காய் மட்டையள் போலை. . .

ஆனால் இங்கை வந்தபிறகு நதிமூலம் ரிஷிமூலம் என்று நினைச்சிருந்த எத்தனையோ விடயங்களை அக்குவேறு ஆணி



படிப்பகம்

padippakam



வேறாய் பிரிச்சு பார்க்கேக்கை நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை கூட அருவருப்பாய் தோன்றலாம். அல்லது வேறுமாதிரி இதை அமைச்சுக் கொண்டிருக்கக் கூடாதோ எனத் தோன்றும்.

இண்டைக்கு உன்ரை அண்ணர் கனடாவிலை இருக்கிறார். நாங்கள் இஞ்சை வராமல் ஊரிலை இருந்து ஏதாவது பணக்கஷ்டம் என்று எழுதி உன்ரை அண்ணி அந்த ஆளிலை பாய்ஞ்சு விழுந்தால் அந்த ஆள் எவ்வளவு பாவம். . . .” பேச்சை நிறுத்தி தேவியைப் பார்த்தான்.

தேவியின் கன்னங்கள் வழியே கண்ணீர் ஓடிக் கொண்டு இருந்தது.

“ஏன் இப்ப அழுகிறாய்?”

“உங்கடை மனத்தை சரியாய் நோகடிச்சுப் போட்டன்.”

“இல்லை. . .நீ கேட்ட கேள்வியாலை எனக்கு சில விசயங்கள் நல்லாய் தெளிவாயிருக்கு. எனக்குள்ளை இண்டைக்கும் ஓர் சிவபாக்கியம் இருக்கிற மாதிரி இல்லாமல், உனக்குள்ளையும் இஞ்சை வந்த மற்ற சராசரி பொம்பிளையளுக்கும் இருக்கிற மாதிரி இல்லாமல், எங்கடை ரகுவையும் ரேவதியையும் இன்னுமோர் மூர்த்தியாகச் சரி, தேவியாகச் சரி இல்லாமல், அதுகளை அதுகளாக வாழவைக்க வேண்டும். அதுகளை புதுப் பொம்மைகளாக இந்த உலகத்திலை உலாவ விட வேண்டும். அதுக்கு நீ தடையாக நிற்கமாட்டாய் எண்டு நினைக்கிறன்.”

மூர்த்தி சொன்னவற்றை தேவி நன்கு உள்வாங்கிக் கொண்டாள்.

“மச்சாளுக்கு காசை அனுப்புங்கோ. அடுத்த முறை சிங்கப்பூருக்கு போவோம்.”

“உங்கடை அக்கா” மீண்டும் “பெரிய மச்சாள்” ஆகியது மூர்த்திக்கு மனநிறைவைக் கொடுத்தது.

“இல்லை தேவி. . . அக்காக்கு முழுக்காசும் அனுப்பப் போறதில்லை. பாதி தானே அனுப்பப் போறம். மிகுதிக்காசுக்கு வடிவாய் லண்டனுக்கு போய் வரலாம். எங்கை நாலு பேரும் போறது என்பதை விட எப்பிடி நாங்கள் நாலு பேரும் சந்தோசமாய் போயிட்டு வரப்போறம் எண்டது தான் முக்கியம் தேவி!”

தேவிக்கு கங்கையில் குளித்து எழுந்தது போல இருந்தது. ●



படிப்பகம்

# அம்மா வலிக்குது. . .

றோஜாவின் முட்கள்
என் நகக்கண்ணில் குற்றியது போல
சில நாட்களாகவே ஒரே வலி. . .

ஆண் பிள்ளைச் சிங்கம் என
கூரை தட்டிப் பிறந்த பிள்ளை
கூனிப் போய் நிற்குது!
அறியாத வயதில்
தெரியாமலே நீ தூக்கி வைச்ச சுமைகளை
சுமக்கவும் முடியவில்லை!
இறக்கவும் முடியவில்லை!

பத்து மாதம் தான் நீ சுமந்தாய். . .
ஈர் பத்து வருடங்களாய் நான் சுமக்கின்றேன். . .
இப்போ கொஞ்ச நாட்களாய்
அதிமாகவே வலிக்குது. . .

அம்மாக்களே!
இனியொரு ஆண்பிள்ளைக்கு ஆசைப்படாதீர்கள்!
பாவங்கள் அதுகள். . .
தொப்புள் கொடி அறுத்து நுகத்தடியில் கட்டாதீர்கள். .
பிறந்த குழந்தைகளை சிலுவையில் அறையாதீர்கள். . .
பெண்பிள்ளைகளை வாழ வைக்க
ஆண்பிள்ளைகளை நரபலி கொடுக்காதீர்கள். . .

padippakam



நல்ல பிள்ளைகள் என எமை
புஷ்பாஞ்சலிகள் செய்தது போதும். . .
உங்கள் வாழ்த்துகளுக்காக
வாழ்க்கையை தொலைத்தவர் ஆயிரம் பேர்!
பூக்களின் வலிகள் எங்கே உங்களுக்கு தெரியப் போகுது!
பூமர வேர்கள் எங்களின் கீழே
கறையான்கள் புற்று எடுத்துவிட்டது. . .

உங்களுக்கென்ன – ஓர் பிள்ளை போனால்
இன்னோர் பிள்ளை கொள்ளி வைக்க. . .
என் பிள்ளைக்கு இனியெங்கு இனியொரு அப்பன்!

அம்மா வலிக்குது. . . இப்போ கொஞ்ச நாட்களாய். . .

●



படிப்பகம்

padippakam

# நனவோடை

மனதை ஏதோ சூனியம் கவ்விக் கொண்டிருக்கிற மாதிரி ஓர் பிரமை. அப்படி ஏதும் நடந்து விடவில்லை. யாருடன் எந்தக் கொடுக்கல் வாங்கலோ, வாக்குவாதமோ எதுவுமே இல்லை. ஆனால் மனம் மட்டும் வெறுமையில் போன மாதிரி. . . கண்கள் மட்டும் ரீவியில் பதிந்திருக்க, கைகள் மட்டும் ஏனோதானோ என்று ரிமோட் கொன்றோலில் சனல்களை மாற்றி மாற்றி அழுத்திக் கொண்டிருக்கிறது.

றொஸ்கில் பெஸ்ரிவலில் அப்படி என்னதான் இருக்கின்றது. இவ்வளவு சனக்கூட்டம். ஆண்களின் தோள்களில் பெண்களும், பெண்களின் தோள்களில் ஆண்களுமாக. . . ஏதோ அதில் இருக்க வேண்டும். எனக்குத்தான் அந்த இசையை சுவைக்கத் தெரியவில்லை. டனிஷ்காரர்களால் மட்டும் வைரமுத்துவின் கூத்தை விடிய விடிய இருந்து ரசிக்க முடியுமா என்ன?

கை ஆபிரிக்காவுக்குத் தாவுகிறது. மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடுகின்றார்கள். கண்முன்னே ஒரு குண்டனின் தடியடியில் ஓர் கறுப்பனின் தலையிலிருந்து இரத்தம் பீறுகிறது. கற்கள் எங்கேயோ எங்கேயோ இருந்து வந்து விழுகின்றன. ஒரு பெண்ணை நாலு பேர் தரதரவென்று பற்றை மறைவுக்குள் இழுத்துக்கொண்டு போகின்றார்கள். அந்தப் பெண்ணின் கதறலில் புதர்ச் செடிகள் குலுங்கின.

மேல் அறையில் எனது மூன்றாவது பிள்ளை வயிற்றுக்குத்தால் அழுகிறது. மனைவி இரண்டு மணித்தியாலமாக சமாதானப் படுத்துவது கேட்கிறது. ஆனால் எனக்குத்தான் மேலே போய் ஆறுதல்

படிப்பகம்

padippakam



படுத்த மனம் ஏவுதில்லை. சோபாவின் சொகுசிலும் மனத்தின் மூட்டத்திலும் மீண்டும் ரீவிக்குள் அமிழ்கின்றேன்.

அந்த அண்ணாமலைச் சித்தர் ஏதோ எனக்கு சொல்லுமாப் போல் இருக்கின்றது. சிக்கடித்த முடியும், அரைத்துண்டு துணியும், கால் வயிற்றுக் கஞ்சியுடனும் அந்த சித்தர் நிமிர்ந்து நிக்கிற மாதிரி ஏன் என்னால் சுதந்திரமாய் திரியமுடியவில்லை? சுமைகள், பொறுப்புகள், கடமைகள் என்று எல்லாத்தையும் தூக்கிப் போட்டுக் கொண்டு ஏன் அமிழ்ந்து அமிழ்ந்து போகின்றோம்? சித்தருக்கு என்ன கவலை? எந்த சீட்டு, என்ன கழிவு, என்ன வட்டி, என்ன பில், என்ன கவலைகள். . . ஒரு சோற்றுப் பருக்கையையாவது எந்த யோசனையும் இல்லாமல் சாப்பிட முடிகிறதா? கையும் மனமும் ஒன்று சேரச் சாப்பிட்டு கவலை இல்லாது கண்மூடித் தூங்கி எத்தனை நாளாச்சு?

ரெலிபோன் மணி பயங்கரமாக அலறுகிறது. செல்லத்துரை அண்ணை தனது மகளின் ஐந்தாவது பிறந்த நாளுக்கு வரட்டாம். காலம் எவ்வளவு கெதியாக ஓடுகிறது. இப்போதுதான் நாலாவது பிறந்த நாள் வந்தது போலிருக்கு. நாலாவது பிறந்த நாளுக்கு மூன்றாவது பிறந்த நாளுக்கு வந்ததில் அரைவாசிப் பேரும் இருக்கவில்லை. இம்முறை அதிலும் அரைவாசியாகத்தான் இருக்கும். இலங்கையில் இருந்து வந்தோம் என்பதைத் தவிர ஏன் பழகுகின்றோம்? எதுக்காக பழகுகின்றோம்? எவருடன் பழகுகின்றோம்? என்று எந்தவித தொடுப்பும் இல்லாது அண்ணா, அக்கா, அன்ரி, அங்கிள் உறவு முறை வேறு. ஆனால் அண்ணர் அக்காவிடம் அறாவட்டி வேண்டுவார். அன்ரி அங்கிளுக்கு ஆயிரம் பொய் சொல்லி அடித்து சத்தியம் செய்வார். இந்த உறவு முறைகளால் ஏற்படும் பிச்சுப் பிடுங்கலில் செல்லத்துரையண்ணரின் சுற்று வட்டாரமும் ஆண்டுக்கொரு முறை அரைவாசியாகக் குறையும்.

ஏன் என் மனம் இந்த உலக வியாக்கியானங்களில் இன்று அலைந்து கொண்டு இருக்கின்றது?



படிப்பகம்

padippakam



"உந்த ரீவியிலை இருந்தது காணும். ஒருக்கா வயித்தாலை போற மருந்தை வேண்டிக் கொண்டு வாங்கோ. அதைக் குடுத்தாலாவது சுகமாய் இருக்கும்." மகளை ஆற்ற முடியாத இயலாமையை மனுசி என்மேல் கோபமாய்க் காட்டுகிறாள்.

நேரத்தைப் பார்க்கின்றேன். இரவு 10 மணியாகிவிட்டது. மூலைத்தெருவில் உள்ள மருந்துக் கடைதான் இரவு முழுக்கத் திறந்திருக்கும். காரில் போவதைவிட நடந்து போனால் மனதுக்கு நல்லாய் இருக்கும் போல இருக்கு. ஜக்கற்றையும் கைப்போனையும் எடுத்துக்கொண்டு றோட்டில் இறங்குகின்றேன்.

றோட் வெறிச்சோடிப் போய் இருக்கிறது – என் மனம் போல். யாரையும் காணவில்லை. விடிய விடிய திருவிழாக்கள் நடந்த யாழ்ப்பாண வீதிகள் கேர்வியூ சட்டம் வந்த பொழுது இருட்ட முதலே இருட்டி விட்டது போல இந்த டென்மார்க் தெருக்களும் இருக்கின்றன.

கைத்தொலைபேசி அடிக்கிறது. மாமாவுக்கு ஊரிலை கடுமையாம். ஒரு தரம் அதிர்ந்து போனேன். ஏதோ ஓர் தொப்புள் கொடி உறவு அறுந்தது போலை. திருவிழாவுக்கு, பள்ளிக்கூடத்துக்கு, படத்துக்கு சைக்கிளில் முன் இருத்திக்கொண்டு போய் விட்டது தொடக்கம், டென்மார்க் வர வெளிக்கிட ஸ்ரேசன்வரை வந்து அழுது அழுது பயணம் அனுப்பியது வரை ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றது.

"எனக்கு என் மாமா வேண்டும். . . நீ வேண்டும் மாமா."

கண்கள் கலங்குகின்றன. மிக அருகில் ஒரு கார் வந்து விலத்திப் போகின்றது.

அடுத்த ரெலிபோன் வருகிறது.

"நீங்கள் ஊருக்கு வருவியளாமோ?"

மனம் நிஜத்தை நோக்கித் திரும்புகிறது. பக்ரறியில் லீவு கிடைக்குமா? எக்ஸ்ராவாகச் செய்யும் கழுவுற வேலையை எப்படிச்



படிப்பகம்

padippakam



சமாளிக்கிறது? பதிவில்லாமல் களவாய்ச் செய்யும் பிற்ஸாக்காரன் நான் திரும்பிவர நிற்பாட்டிப் போடுவானோ? இல்லாட்டி வேறை தமிழ் ஆட்களை எடுத்துப் போடுவானோ?. . . என்ன இது? என்னை நினைக்க எனக்கே விசராய்க் கிடக்கு.

இப்படியா இங்கு டென்மார்க் வர முதல் என்னுடைய யோசனைகள் இருந்தன? நான் மாறிவிட்டேனா? இல்லை, சில நிஜங்களை யோசித்து இலங்கைக்குப் போகாமல் இருப்பதற்கு நியாயம் கற்பிக்கின்றேனா? இலங்கைக்குப் போக ஏன் நான் பயப்பட வேண்டும்? இலங்கை என் நாடு இல்லையா? எதுக்காக பயப்பட வேண்டும்? நான் என்ன துரோகியா? இல்லையே? ஆனாலும் மனம் பயப்படுகிறது.

ஒன்று மட்டும் உண்மை. நான் வளர்ந்த இலங்கை அல்ல அது. காணி உறுதி மட்டும் என் பெயரில். ஆனால் யாரோ அளவெட்டி ஆட்களை இருத்தி இருக்கினமாம். வீட்டுக்குப் போனாலும் வீட்டுத் தாழ்வாரத்திலைதான் கட்டில் போட்டுப் படுக்க வேணும். அல்லது மூத்தக்கா வீட்டை போய் தங்க வேணும்.

மருந்தை வேண்டிக் கொண்டு திரும்புகின்றேன். சந்தின் மூலையில் நாலைந்து டெனிஷ்காரர் பியர்ப் போத்தலுடன் நிற்கிறார்கள். அவர்களைப் பொருட்படுத்தாமல் வீதியின் மறு பக்கத்தால் அவர்களைத் தாண்டிச் செல்லுகின்றேன். "சோட்ட சுவின. . . கோ ஜெம்" (கறுத்தப் பன்டியே நாட்டுக்குப் போ) பின்னால் கத்திக் கேட்கிறது.

உடல் பதறிப் போகிறது.

துணிவினை வரவழைத்துக்கொண்டு அவர்களை நெருங்கு கின்றேன்.

"உங்களுக்குத் தெரியுமா. எனக்கு டென்மார்க்கில் பிரஜா உரிமை இருக்கிறது. நானும் இந்த நாட்டுப் பிரஜைதான்", சொல்லி முடிக்க வில்லை, ஒரு வெற்று பியர் போத்தல் என் கன்னத்தருகால்



படிப்பகம்

padippakam



பறக்கின்றது. அவர்கள் கை, கால்கள் எல்லாம் என்மீது பாய்கின்றன. மூக்கடியும் முகமும் விறைப்பது போல் இருக்கிறது. எனது வலு எல்லாம் போய் விட்டது போலும். றோட்டுக்கரையிலுள்ள குப்பைத் தொட்டியருகே ஒதுங்கிக் கிடக்கின்றேன். உடல் மட்டும் உதறுகிறது.

என்னை அடித்த மகிழ்ச்சியில் மீண்டும் ஒரு பியரைக் குடித்துக் கொண்டு அவர்கள் போய்விட்டார்கள். ஆனால் கடைசியாக அவர்கள் சொன்ன வார்த்தை மட்டும் காதில் ஒலிக்கிறது.

"உந்த நியாயங்களை உன்ரை நாட்டிலை போய்க் கதை."

எனக்கு நாக்கு வரண்டுபோய்க் கிடக்கிறது.

'எங்கே என் நாடு?'

ஜக்கற் பொக்கற்றில் இருந்த பிள்ளையின் மருந்துப் போத்தல் உடைந்து போய் இருக்கின்றது.

●



படிப்பகம்

padippakam

# பிரக்ஞை

செக்கல் நேரம்
விழித்துப் பார்த்தேன்
வீட்டில் ஒருவரும் இல்லை
கண்கள் மீண்டும் மூடுகின்றன

ஏதோ அமுக்கங்கள்
என்னை அமுக்குகின்றன
அமிழ்ந்து கொண்டு போகின்றேன்

கறுத்த ஆடு
அலறியபடி என்னருகே வந்து விழுகிறது
விழித்துப் பார்த்தேன்
முலைக்கும் தொடைக்கும் இடையில்
இரத்தம் பாய்கிறது
சன்னம் பாய்ந்திருக்க வேண்டும்

யார் சுட்டார்கள்?

மயக்கம் தீரவில்லை
கண்கள் மட்டும் மூடப்பார்க்கிறது
வீட்டில் யாரையும் காணவில்லை
ஆடு மட்டும் பெரிதாக அலறுகிறது

படிப்பகம்

padippakam



தெற்குச் சின்னவர் வீட்டில்
சேமக்கலச் சத்தம் கேட்கிறது
எழுந்து போகின்றேன் போலும்
வீடு வெறிச்சென்று இருக்கிறது
யாரையும் காணவில்லை

காலில் மட்டும் ஏதோ தட்டுப்படுகிறது
குனிந்து பார்க்கின்றேன்
சின்னத் தங்கம் செத்துக் கிடக்கின்றாள்

மீண்டும் தூக்கம் வருகிறது
மயங்குகின்றேனா எனத் தெரியவில்லை
அவளை அணைத்துக் கொண்டு
தூங்குகின்றேன் போலும். . .

யாரோ றோட்டில் கதைப்பது மட்டும்
தெளிவாகக் கேட்கிறது
“இயக்கங்களுக்கும்
இணக்க சபைகளுக்கும்
சண்டையாம்”

மயக்கங்கள் தீர ஆறுதலாக எழுவோம்!
அதுவரை தூங்கியே கிடப்போம்! – அல்லது
தூங்குபவர் போல் கிடப்போம்!

●



படிப்பகம்

padippakam

# எங்கே போனீர்கள்?

ஸ்பிரிங் காலத்து மெல்லிய குளிர்.

வீதிக்கரையெங்கும் தானாவே துளிர்த்தெழுந்த ரியூலிப்ரின் பூக்களின் அழகு.

இந்த இரண்டையும் அனுபவித்தபடி வீட்டின் பின்புறம்வரை மெதுவாக சைக்கிளை ஓட்டி வந்த குமாரின் கால்கள் வீட்டின் தபால் பெட்டியைக் கண்டதும் அவனையுமறியாமல் தானாகவே பெடல்களை ஊன்றி அழுத்துவதை உணர்ந்தான்.

அன்று செவ்வாய்க்கிழமை. அதிகமாக இலங்கையில் இருந்து கடிதங்கள் வரும் நாள்.

யாழ்ப்பாண கிடுகு வேலிகளுக்கு மத்தியில் இழுக்கவும் முடியாமல் இறக்கி வைக்கவும் முடியாமல் சுமைகளை ஏற்றி வைத்துக்கொண்டு அவதிப்படும் ஓர் சராசரிக் குடும்பத்தின் மூத்தபிள்ளை அவன்.

ஆசிரியத் தொழிலால் தனது தேவைகளை ஈடுகட்ட முடியாத பொருளாதாரத் தேவைகளின் அவசரங்கள், அவனால் ஏற்கவும் முடியாத மறுக்கவும் முடியாத. . . மேலாக அவனுக்கே புரியாத கண்ணாமூச்சி அரசியல்கள், ஊர்வலங்கள், போராட்டங்கள். . . . . . எல்லாவற்றிலும் இருந்து தன்னைத் தானே காப்பாற்ற தானே போட்டுக் கொண்ட 'அகதி' என்ற பட்டை நாமம்.

இங்கு வந்த காசுக்கும் அங்கு தாய் ஏற்கனவே பட்ட கடன்களுக்குமாய், சுமார் 14-16 மணித்தியாலங்கள் உழைக்கும் அவனுக்கு வெளி உலகத்தை கிழமையில் ஒரு தடவையாவது காட்டும் கண்ணாடிதான் இலங்கையில் இருந்து அந்த தபால் பெட்டியினுள் வந்து விழும் கடிதங்கள். யாருக்கு அவன் கஷ்ட நஷ்டங்கள் புரிகிறதோ இல்லையோ அந்த தபால் பெட்டிகளுக்குப் புரியும்.

படிப்பகம்

padippakam



சைக்கிளில் இருந்து இறங்காது காலை படலையில் ஊன்றியபடி தபால்பெட்டியைத் திறந்தான்.

இரண்டொரு விளம்பரப் பத்திரிகைகள், தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த அழைப்பிதழ், வீட்டு வாடகைத் துண்டு, அத்தனைக்கும் கீழே இலங்கையில் இருந்து வந்த ஏரோகிறாம்.

யார் அனுப்பியுள்ளார்கள் எனத் திருப்பிப் பார்த்தான்.

ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் இருந்து ஆரம்பித்த நட்பு - சிறிகணேசன் போட்டிருந்தான். மெல்லிய காற்று வந்து கண்களையும் மனதையும் குளிர்வித்தது போன்றிருந்தது.

சைக்கிளை படலையில் சாத்திவிட்டு, வாசலில் தான் அமைத்திருந்த றோஜாத் தொட்டியின் விளிம்பில் அமர்ந்து கடிதத்தைப் பிரித்தான். பக்கத்து வீட்டுக் காணிக்குள் பூக்கன்றுகள் நட்டுக்கொண்டிருந்த அந்த வயோதிபத்தம்பதிகள் “லெற்றேர்ஸ் புறம் சிறிலங்கா” என தமது அன்னியோன்னியத்தைத் தெரிவித்தார்கள். தலையாட்டலாலும் தன் புன்சிரிப்பாலும் பதிலைச் சொல்லிவிட்டு கடிதத்துள் மூழ்கினான்.

கடவுள் வணக்கம், வீட்டில் அனைவரும் சுகம், ஆமி நேற்றும் சோதனை போட்டது, தபால்கார செல்லத்துரையின் மகனை மூன்று நாட்களாகக் காணவில்லை என்ற சம்பிரதாய வரிகளினூடாக வளர்ந்துகொண்டு சென்ற கடிதம் புவனம் ரீச்சர் இப்பவும் உன்னை விசாரிக்கிறவா என்ற வரிகள் வந்த பொழுது ஆசிரியக் கல்லூரியின் ஆட்டோகிராவ்கள் அரைகுறையாகக் கண்கள் முன் வந்து போயின. இளமையை அனுபவிப்பதாய் இருப்பதானால் ஐரோப்பாவில் பிறந்திருக்க வேண்டும் என தன்னுடன் வேலைசெய்யும் ஓர் சக கூட்டாளி சொல்வதை குமார் ஒரு தடவை நினைத்துக் கொண்டான்.

கடிதம் தொடர்ந்தது.

“இப்போது நான் இடைக்கிடை கவிதை எழுதத் தொடங்கி விட்டேன். எம் வாசிகசாலை ஆண்டுமலரில் உன்னை நினைத்து எழுதிய வரிகள் எப்படி இருக்கிறது என்று பார்” என்று அடைப்புக் குறிக்குள் நான்கு வரிகள் எழுதியிருந்தான்.



படிப்பகம்

padippakam



கோயில் வீதிகளில்
என்னுடன் கிட்டியடித்த
என்னருமைத் தோழர்களே
எங்கே போனீர்கள்?

எங்கேயோ கேட்ட ஒரு கவிதையின் தொனி போல் இருந்தது. ஆனால் சொற்கள் மாறியிருந்தன.

சிறிகணேசனும் கவிதை எழுதத் தொடங்கீட்டான் என்ற நமட்டுச் சிரிப்புடன் "எங்கே போனீர்கள்" என மீண்டும் அந்த வரிகளை வாசித்துவிட்டு. . . "விசரா" என சிறிகணேசனை தனக்குத்தானே உரிமையுடன் பேசிக்கொண்டு வீட்டுக்குள் போனான்.

பூட்டியிருந்ததால் வீட்டுக்குள் எழுந்த அந்த மணத்தைப் போக்க எல்லா யன்னல்களையும் நன்கு திறந்து விட்டான். ஜக்கற்றைக் கழற்றி சோபாவில் போட்டுவிட்டு சிறிகணேசனின் கடிதத்தை முன்னும் பின்னுமாய் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டு நின்றான்.

அழகிய இலங்கைக் கடற்கரை. அதிலிருந்து எழும் சின்னச் சின்ன அலைகள். கடலை வளைந்து தொடும் அழகிய தென்னை மரங்கள். வெள்ளை நிறத் தேமாப்பூக்கள். . .

எதையோ எங்கேயோ தொலைத்துவிட்டோம் என்ற மன ஆதங்கத்துடன் சிறிகணேசன் கேட்ட கேள்வியின் பதிலை மனம் எல்லா மூலை முடுக்கிலும் தேடியது. மெல்லிய பெற்றோல் வாசனை மூக்கைத் தொட்டது. வெளியே எட்டிப் பார்த்தான். அந்த வயோதிபத் தம்பதிகள் தமது பழைய காரை ஸ்ராட் செய்து கொண்டு இருந்தார்கள்.

கோயில் வீதிகளில்
என்னுடன் கிட்டியடித்த
என்னருமைத் தோழர்களே
எங்கே போனீர்கள்?



படிப்பகம்

padippakam



குமார் யன்னலினூடு வானத்தின் எல்லைவரை பார்த்துக்கொண்டு நின்றான்.

"நாளை சிறிகணேசனுக்கு கடிதம் போட வேண்டும்" - மனம் சொல்லிக் கொண்டது.

*

தோட்டத்தால் வந்த களையில் தகப்பன் வெளிவிறாந்தையிலும், தாயும் இரண்டு சகோதரிகளும் அறையிலும் நன்கு தூங்கிக் கொண்டு இருந்தார்கள். சிறிகணேசனுக்கு மட்டும் தூக்கம் வராமல் நடுக்கூடத்தில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டு இருந்தான்.

கைக்கு எட்டும் தூரத்தில் இருந்த மணிக்கூட்டை எட்டி எடுத்து லைற்றை அழுத்தி நேரத்தைப் பார்த்தான். இரவு பதினொரு மணிக்கு பத்து நிமிடம் இருந்தது.

பாடசாலையிலும், ரியூசன் வகுப்புகளிலும் தொண்டை கிழிய கத்துவதால் ஏற்படும் களைப்பும், பல்லாங்குழி ஆடக்கூடிய றோட்டுகளில் ஸ்கூட்டர் ஓட்டுவதால் எழும் அசதியும் என வழமையாக பத்து மணிக்குள் தூங்கிவிடும் சிறிகணேசனுக்கு இன்று இவ்வளவு நேரமாகியும் நித்திரை வராதது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஆனால் உடலின் அசதியை நன்கு உணரக் கூடியதாக இருந்தது.

கண்ணை எத்தனை தடவை மூடிப்பார்த்தாலும் நினைவுகள்தான் தாறுமாறாக ஓடுகின்றதே தவிர நித்திரை என்பதனை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. லைற்றைப் போட்டுவிட்டு கண்கள் களைக்கும்வரை ஏதாவது புத்தகத்தை எடுத்து வாசிக்கலாம் என்றாலும் திடீர் எனத் தோன்றும் வெளிச்சங்களுக்கு அடுத்தநாள் எத்தனையோ பேருக்கு காரணங்கள் சொல்லவேண்டி வரலாம். நாடு அப்படியான ஓர் நிலையில் பிரகடனப்படுத்தப்படாத ஊரடங்குச் சட்டத்தை தனக்குத் தானே வகுத்துக் கொண்டு வாழ்ந்து (?) கொண்டு இருந்தது.

வயிற்றுக்குள்ளும் ஓர் சின்னக் குடைச்சல் காண, வெளிக்கு ஒரு



படிப்பகம்

padippakam



தரம் போய் வந்தால் நித்திரை வரும் என்ற ஒரு எண்ணத்தில், கருக்கலுக்கு முதலே தண்ணி அள்ளி நிரப்பி வைக்கும் தொட்டியில் இருந்து ஓர் வாளி தண்ணியை மொண்டு கொண்டு போனான்.

அந்தக் கிணற்றை தன் முயற்சியால் தோண்டி ஊற்றுத்தண்ணீர் கண்ட மூன்றாம் நாளே அவனது பேரன் மாரடைப்பால் இறந்து போனார். அப்படிக் கஷ்டப்பட்டுக் கட்டிய கிணற்றில் இரவு வேளைகளில் தண்ணி அள்ளும் சலசலப்புச் சத்தம் கூட அண்டை அயல்களால் போகும் ஆமி நேவிக்காரன்களை பீதி கொள்ள வைத்து விடும் என்ற காரணத்தால் பின்னேரத்தில் தொட்டியில் தண்ணி நிரப்பி வைக்கும் வாழ்க்கையை நொந்து கொண்டே கக்கூசுக்குள் போய்க் குந்தினான்.

கக்கூசினுள்ளும் ஊர் உலக நடப்புக் கவலைகள்தான் கூடியதே தவிர மலம் வரவில்லை. நித்திரை வராததால் கண்கள் எரிச்சல் கண்டிருந்தன. கால் இடுக்குகளில் கையை எவ்வளவு நேரம்தான் கொடுத்துக் கொண்டு இருக்கமுடியும். கை விறைக்குமாப்போல் இருந்தது. சரி, கால்களைக் கழுவிப் போட்டு திரும்பிப் போய் படுப்போம் என நினைத்துக்கொண்டு எழுந்தபொழுது கக்கூசை அண்டியுள்ள வேலியடியால் நாலைந்து பேர் ஓடிப்போகும் சத்தம் கேட்டது.

அவனுக்கு மனம் 'திக்' என்றது. வயிறு ஒரு தரம் நடுங்கியது. மெதுவாக கக்கூசு சுவரின் ஓட்டையூடு எட்டிப் பார்த்தான். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

நாய்கள் மட்டும் அங்கும் இங்கும் குரைத்துக் கொண்டு ஓடின.

சிறிது நேரத்தில் அந்த சத்தமும் அடங்கி விட்டது.

சிறிகணேசனுக்கு கக்கூசை விட்டு வெளியே வர மனம் துணிய வில்லை. காதைக் கூராக்கி வெளியே விட்டான். பக்கத்து வளவுப் பனம் பாத்திக்கூடலைச் சுற்றி நாலைந்து பேர் கதைப்பது போலவும் குசுகுசுப்பது போலவும் இருந்தது.

"தாரோ இயக்கப் பொடியள் போலை" என நினைத்த மறுகணமே "சிறியையும் கூப்பிட்டு கிழங்கு சுடுவம்" என்று யாரோ சொன்ன மாதிரி



படிப்பகம்

padippakam



இருந்தது.

அவ்வளவுதான், அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. இவ்வளவு நேரமும் போராடியும் வெளியே வராத மலம் இப்பொழுது முந்திக் கொண்டு வந்தது. மலக்குழியில் குந்திக் கொண்டான்.

மலம் தன்வழியில். .. . மனம் வெளிவௌவில். .. .. உடம்பு தெப்பமாக வியர்வையில் தோய்ந்தபடி . . . காதை மீண்டும் வெளி நீட்டினான். . . எந்தச் சத்தமும் இல்லை. . . . . ஆனால் மூக்கை நோக்கி ஓர் மணம் அண்மித்துக் கொண்டு இருந்தது. . . . . இது . . . இது. . . பனம் கிழங்கு சுடும் மணமே தான்!

உடல் மேலும் நடுக்கம் கண்டது. வெளியில் நெருப்பைக் காண வில்லை. . . . பனங்கிழங்குப் பாத்தியடியில் இருந்து மணம் மட்டும். . . .

கண்களை இறுக்க மூடி அரசடிப் பிள்ளையாரை வேண்டினான். இப்போது அவர்தான் அவனுக்குத் துணை.

சின்ன வயதில் "பிள்ளையாரப்பா. . . பிள்ளையாரப்பா" என தாயின் சேலையைப் பிடித்தபடி அரசடிப்பிள்ளையாரைச் சுற்றி வந்து . . . பின்பு அறிவு கொஞ்சம் அதிகமாக ஆயிரத்தெட்டு இசும்களில் மனம் வயப்பட. . . பிள்ளையார் இருக்கிறாரா? இல்லையா? என்று x,y போட்டுப்பார்த்து . . . பிள்ளையாரை மறுதலித்து. . . பின் இந்தியன் ஆமி வந்த போது மற்றவர் களுக்குத் தெரியாமல் ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்து பிள்ளையாருக்கு மெதுவாக தலையாட்டுப் போட்டாலும், வராத பக்தி எல்லாம் இன்னமும் சுத்தம் செய்யப்படாத உடம்புடன் கக்கூசில் இருந்தபடி வந்தது.

பிள்ளையார் காப்பாற்றித்தான் விட்டார்.

பனம் கிழங்கு சுடும் சத்தம் அறவே நின்று விட்டது. எந்தச் சத்தமும் கேட்கவில்லை. வெளியே வந்து கால்களை நன்கு கழுவிக்கொண்டு தெப்பமாய் நனைந்து போயிருந்த உடம்பை, இருட்டு வெளிச்சத்தில்



படிப்பகம்

padippakam



கொடியில் தெரிந்த துவாயை எடுத்து நன்கு துடைத்துக் கொண்டான்.

சித்திரைக் காற்றுப் பட மனமும் உடலும் கொஞ்சம் ஆறுதல் கண்டது போலிருந்தது.

இப்போ அரசடிப்பிள்ளையார் கோயில் பக்கத்தில் யாரோ விளையாடும் சத்தம் கேட்பது போலிருந்தது. அதுவும் கிட்டியடித்து விளையாடும் சத்தம் போலிருந்தது. பாலுக்கே பச்சைமண்கள் அழப்பயப்படும் இந்த இரவில் யார் கோயில் வீதியில் கிட்டியடிப்பது.?

மெதுவாக வீட்டுக்குள் வந்து மீண்டும் படுத்துக் கொள்வதே பாதுகாப்பு என நினைத்துக்கொண்டவன் மீண்டும் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

நேரம் நடுச்சாமம் ஒரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆமியால் சுடப்பட்ட எங்கள் ஊர்ப்பொடியன்களின் ஆவிகள் தான் இருட்டில் வந்து கூத்தடிக்கின்றதோ? . . . அதுகளுக்கு ஒரு சாந்தி, அந்தியேட்டி, திவசம் ஏதாவது இருக்கா?. . . ரயரைப் போட்டுக் கொளுத்திய உடம்புகள் தானே?

விடை தெரியாத கேள்விகளை மனம் அடுக்கிக் கொண்டு போனது.

இப்போது சின்ன உதறலுடன் காய்ச்சல் காய்வது போல் இருந்தது. போர்வையை எடுத்து தலைமுதல் கால்வரை போர்த்திக் கொண்டு தன்னைச் சுருட்டிக் கொண்டான். கண்களை இறுக மூடிக்கொண்டான். காது மட்டும் தன்பாட்டில் பின்வளவுப் பக்கத்தை நோக்கித் திரும்பியது.

இப்போது கோயிலடியில் இருந்து அவன் வீட்டை நோக்கி சத்தம் நெருங்கிக் கொண்டு வந்து தென்னையில் யாரோ ஏறும் சத்தம் கேட்டது. சிறிகணேசனுக்கு மீண்டும் நடுக்கம் கண்டது.

மீண்டும் பிள்ளையாரைத் தன்னருகில் இழுத்துக் கொண்டான்.



படிப்பகம்

padippakam



ஆனால் அடுத்த கணமே தென்னையில் இருந்து இளநீர் குலைகள் 'தொப்' 'தொப்பு' என்று விழத்தொடங்கின.

இப்போ பிள்ளையாரும் அவனை விட்டு விட்டார். பின்பு நடந்தது எதுவுமே அவனுக்குத் தெரியவில்லை.

*

"என்னடா சிறி! இண்டைக்குப் பள்ளிக்கூடத்துக்கு போகேல்லயோ. . கொப்பர் காலமை இறைப்புக்கு போகேக்கை உன்னை எழுப்பேலையோ?" என்றபடி தாயார் சிறிகணேசனை எழுப்பினார்.

"உந்த காண்டாவன வெயில் காலத்திலை. . . உங்கை பார் தலைமுழுக்க போத்திக்கொண்டு கிடக்கிறதை" தங்கச்சியாரும் தன்பாட்டுக்கு தாயுடன் சேர்ந்து கொண்டாள்.

சிறிகணேசன் கண்களை அகலத் திறந்து சுற்றும் முற்றும் பார்த்தான். சூரிய வெளிச்சம் வாசலில் பட்டுத் தெறித்து கண்களைக் கூச வைத்தது. இரவு நடந்தது எல்லாம் ஓர் பிரமைபோல் பட்டது.

யாருடனும் ஏதும் பேசாமல் பின்வளவுப் பக்கம் எழுந்து போனான்.

"என்னடி பிள்ளை.... கொண்ணைக்கு இண்டைக்குப் பள்ளிக் கூடம் இல்லையோ. பிந்தி எழும்பின கவலைகூட இல்லாமல் பின் பக்க வளவுப் பக்கம் போறான்."

"அண்ணைக்கு உலகக் கவலையள் கூடிப் போச்சு. வகுப்புக்கு வந்தாலும் நாட்டுக் கவலையள்தான். எரிஞ்சு விழுந்துகொண்டு நிற்கும்."

பின்வளவு, பனம் பாத்தி எல்லாம் சுற்றிப் பார்த்தான் – காலடிகள் ஏதும் தெரிகின்றதா என்று. பனம் பாத்தியைத் தவிர எதுவுமே தெரிய வில்லை. பனம் பாத்தியில் ஓர் துரும்புகூட அசைந்திருக்கவில்லை. வியப்பாய் இருந்தது. தென்னையடியில் வந்து பார்த்தான். ஒரேயொரு காவோலை மட்டும் விழுந்திருந்தது.



படிப்பகம்

padippakam



வீட்டுக்குத் திரும்பி வந்து இரவுக் களைப்பு முழுக்க நன்கு தீரக் குளித்து விட்டு பள்ளிக்கூடத்துக்கு புறப்படத் தயாராக தபாற்கார கந்தசாமி கடிதக்கட்டுகளுடன் வந்து இறங்கினான்.

"தம்பிக்குத்தான் வெளிநாட்டுக் கடிதமாக்கும். காசு கீசு வந்திருக் காக்கும்" கடிதத்தைக் கொடுத்துவிட்டு தலையைச் சொறிந்துகொண்டு நின்றான். பொக்கற்றில் இருந்து ஓர் பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு கடிதத்தை வேண்டிப் பிரித்துப் பார்த்தான்.

டென்மார்க்கில் இருந்து குமார் போட்டிருந்தான்.

"எங்கே போய்விட்டீர்கள் எனக் கவலைப்பட்டுக் கடிதம் எழுதியிருந்தாய். 'விசரா?' பகலில் எங்களால் எங்கும் போக முடியாது. இயந்திரங்களுடன் இயந்திரங்களாக அதுகளின் தாளத்துக்கு நாங்களும் ஆடிக்கொண்டுதான் இருப்போம். ஆனால் இரவில் நாம் எங்கே இருக்கின்றோம், எப்படி இருக்கின்றோம் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். காரணம், உங்களுக்கு என்னதான் போராட்டம், வாழ்க்கைச் சுமைகள் இருந்தாலும் அப்பா, அம்மா, சொந்த பந்தங்கள் என்று அவர்களுடன் நீங்கள் நிம்மதியாகத் தூங்கி விடுவீர்கள். அப்படித் தூங்குகின்ற உங்களால் நாங்கள் இரவு முழுக்க எங்கு அலைகின்றோம் என அறிய முடியாது – அன்புடன் குமார்."

கடிதத்தை வாசித்துவிட்டு பொக்கற்றில் வைத்தவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை, மீண்டும் பின்வளவு முழுக்க ஓர் தடவை சுற்றி வந்தான். தென்னைமரத்துடன் சாய்ந்து கொண்டு மீண்டும் ஒரு முறை கடிதத்தைப் படித்தான்.

கடிதம் விளங்கியது போலும் இருந்தது, விளங்காதது போலும் இருந்தது.

அன்று சிறிகணேசன் பாடசாலைக்குச் செல்லவில்லை.

●



படிப்பகம்

padippakam

# புதுப்புலவு

*"தனியனுக்கு மதம் பிடிச்சு றோட்டுக்கு வந்து கடையள் எல்லாம் உடைச்சு எறியுதாம்."*

*"வெருண்டு ஓடட்டும் எண்டு ரயரைக் கொளுத்திப் போட, அதையும் தூக்கிப் புத்தகக் கடைக்கு மேலை எறிஞ்சு போட்டுதாம். கடை பத்தி எரியுது."*

*"உந்தச் சனியனுக்கு வருஷத்துக்கு ஒருக்காவாவது மதம் வருகுது"*

*

அந்தக் காட்டை ஒரு கிழமைக்கு முதலே நெருப்பு வைச்சு அழிச்சு கொட்டிலும் போட்டிருந்தனர்.

கட்டைகளையும் வேர்களையும் கிளறிப் பின்னால் குவித்து விட்டிருந்தனர்.

"இராவைக்கு நெருப்பு வைச்சால் இந்தச் சோளகக் காத்துக்கு கருகிப் போடும் பிள்ளை" காளிமுத்துக் கிழவனார் கூறினார். அந்தக் காட்டு வீரைகளையும் பாலைகளையும் விட பலமான பழுத்த கட்டை அவர்.

"அப்பு, இந்தப் போகத்துக்கு ஒரு கை பார்க்கிறது எண்டுதான் நிற்கிறியள்" இது பேத்தி கமலா.

ஐம்பத்தெட்டுக் கலவரத்துக்கை மகளையும் மருமகனையும் சாகக்கொடுத்துவிட்டு கைக்குழந்தை கமலாவுடன் காலியிலிருந்து புளியங்குளத்துக்கு வந்து சேர்ந்தவர்தான் காளிமுத்துக் கிழவர்.

படிப்பகம்

padippakam



காட்டுக்குத் தீ வைப்பு, கட்டையடிப்பு, விதைப்பு, அரிவு வெட்டு என கூலிவேலைக்குச் சென்று. . . இந்த பதினெட்டு வருஷமாக அந்தக் காட்டையே படித்திருந்த அவருக்கு இப்பதான் புதுப்புலவு செய்யக் கடவுள் கண்ணைத் திறந்து விட்டிருக்கிறார்.

"இந்தப் போகத்தோடை உன்னையும் ஒருத்தன்ரை கையிலை பிடிச்சுக் குடுத்திட்டன் எண்டால் எனக்கு என்ன கவலை?. . . உந்தக் கொள்ளியை கொஞ்சம் இஞ்சை எடு பிள்ளை." வாயில் ஒரு சுருட்டை எடுத்து வைத்துக்கொண்டார்.

"நானும் கலியாணம் செய்து போட்டால் தாரப்பு உனக்குத் துணை?"

"போடி விசர்ப் பெட்டை. . . இந்தக் காட்டுக்கை தாரை நம்பி வந்தனான். இப்ப புதுப்புலவு செய்யப் போறன்."

வெட்டிக் குவித்துவிட்ட அந்தக் கட்டைகளையும் கருகிப்போன பற்றைகளையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்த கிழவனார் ஒரு பெருமூச்சு விட்டார்.

"என்னப்பு பெருமூச்சு விடுகிறியள்?"

"இல்லையடியாத்தை. .. உந்த விதானைமாரை கையுக்கை வைச்சுக் கொண்டு யாழ்ப்பாண வாத்திமார் இஞ்சை வந்து கமம் செய்து காணி பூமி சேர்க்க நாங்கள் தானே அடிச்சுக் குடுத்தது. . . . இந்தக் காணியள் அப்பவே எங்களுக்கு கிடைச்சிருக்க எத்தினை போகம் கண்டிருப்பன் சொல்லு பார்ப்பம்."

"சரியப்பு. போனதுகளை நினைச்சு என்ன பிரயோசனம். நானும் தோட்டவேலைப் பாடத்துக்கு வாத்திமாரின்ரை காணிகளுக்கை களைபிடுங்கி திரிஞ்சனான்தானே?"

இயலாமையில் எழுந்த சோகத்தை கிடைத்த காணியைக் கொண்டு மறந்தாள் கமலா.

"அப்பு மண்ணெண்ணையும் இல்லை. வேளைக்கு சாப்பிடுங்கோ. நான் சட்டி பானையளைக் கழுவி வைக்கவேணும்."



படிப்பகம்

padippakam



"இல்லையடி பிள்ளை. நீ தட்டுக்கை போட்டு வை. நான் கட்டையளுக்கு நெருப்பு வைச்சிட்டுத்தான் சாப்பிடுவன்."

மெதுவாக எழுந்து கட்டைக் குவியலடிக்குப் போனார்.

கட்டைகள் எல்லாம் காய்ந்து பொலபொலவென்றிருந்தன.

ஒரு கட்டையை எடுத்து தட்டவே சருகுகள் எல்லாம் உதிர்ந்தன.

"நல்லாய் காஞ்சிட்டியள். . . பொறுங்கோ வாறன்" என தன்பாட்டில் மரக்கட்டைகளுக்கு கதை சொன்னபடி நெருப்பு பந்தத்தைக் கொளுத்தி கட்டைகள் நடுவில் செருகி விட்டார்.

கொஞ்சம் கொஞ்சமாய் புகையைக் கிளப்பிய அந்தக் கட்டைக் கும்பல் சிறிது நேரத்தில் மொற மொற என எரியத் தொடங்கியது.

"அப்பு திறமாய் எரியுதனை" என சின்னக் குழந்தை போலை கமலா ஓடி வந்து கிழவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக் கொண்டாள்.

வானத்தை நோக்கி எழும்பிய தீச்சுவாலைகள், அதோடு மேலே எழும் தீப்பொறிகள் அந்த மாலைக்கருக்கலுக்கு ஓர் அழகைச் சேர்த்தன.

பின்வளவு இலுப்பையில் நின்ற குரங்குகள் பக்கத்துக் காணிகளுக்குள் தாவி ஓடின.

"உவை இனி இரண்டு மூண்டு நாளைக்குப் பிறகுதான் வருவினம்."

நெருப்பின் வெளிச்சத்தில் கிழவனாரின் முகத்தில் தெரிந்த அந்தப் பிரகாசம், அவரின் புதுப்புலவு செய்யப் போகும் இலட்சிய வெறியைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அந்த நெருப்புச் சுவாலைகளை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கிழவனாரினதும் கமலாவினதும் கவனத்தை சின்னவனின் அவலக்குரல் திடுக்கிட வைத்தது. பின்வளவில் போடப்பட்டிருந்த வேலிக்கதியால்களைத் தள்ளியபடி ஓடி வந்து கொண்டிருந்தான்.



படிப்பகம்

padippakam



"அப்பு! தண்ணியை ஊத்தி முதலிலை இதை அணையுங்கோ. தனியனுக்கு மதம் பிடிச்சு கடையடியெல்லாம் பெரிய அல்லோலம். நெருப்பைக் காண இன்னும் வேகம் கூடுதாம்."

"அறியாயத்தை. . ." என தவித்த அவர்கள் அவசர அவசரமாகத் தண்ணியை அள்ளி வந்து எரிந்து கொண்டிருந்த கட்டைகள் மீது ஊற்றினார்கள். கறுப்பும் வெள்ளையுமாகப் புகை கிளம்பியது.

சாக்காட்டுக்குருவி ஒன்று வடக்கிலிருந்து தலைக்கு மேலாக தெற்கு நோக்கிப் பறந்து போனது.

"உஸ்" என சுவாலைகள் புகையைக் கக்கிக்கொண்டு அணைந்து விட்டாலும் மரக்கட்டைகள் வெக்கையில் கருகிக் கொண்டிருந்தன" கிழவனாரின் மனம் போல். . .

"கச்சானுக்கிடையிலை விதைக்கேலாதோ அப்பு?"

"உந்த சனியனை சுட்டொழித்தால் தான் நிம்மதியாய் புலவு செய்யலாம்."

*

அடுத்தநாள் காலை சனமெல்லாம் சந்தியில் கூடிநின்று கதைப்பதும், வேடிக்கை பார்ப்பதும், கடைகளில் எரிந்தவை போக எஞ்சியுள்ளவைகளை எடுத்து வெளியில் அடுக்குவதாயும்... கடையடியே கலவரப்பட்டுக் கொண்டு இருந்தது.

அனேக கடைகள் முற்றாகக் கருகியிருந்தன.

விதானையார் அங்கு வந்து யார் யாருக்கு சேதம் எவ்வளவு என எழுதிக் கொண்டு நின்றார்.

"விதானையார் உந்தத் தனியனைச் சுட்டுவிட்டால் பிரச்சனை இல்லைத்தானே" சனத்திடையே ஒரு குரல்.

"அவசரப்படாதை மணியம். யானை தேசிய விலங்கு. அதைச் சுடக்கூடாது."



படிப்பகம்

padippakam



"அப்ப அழிக்க அழிக்க பார்த்துக் கொண்டு இருக்கிறதோ?"

"அப்பிடியில்லை. . . . சேர்மன் இப்ப கச்சேரிக்கு கதைக்கப் போயிருக்கிறார். மேலிடத்துக்கும் முறைப்பாடு செய்வார். அவை யானையைப் பிடிச்சு மதத்தை அடக்க யோசிக்கினம்."

விதானையாரைச் சுற்றிச் சனம் நின்று கதைத்துக் கொண்டிருந்த பொழுது ஒரு ஜீப் வந்து நின்றது.

அதிலிருந்து வெள்ளைவேட்டி சகிதம் சேர்மனும், அவர் மனைவியும் வந்து இறங்கினார்கள். விதானையார் ஓடிப்போய்க் கூனிக்குறுகி நின்று கதைத்துவிட்டு "எல்லாரும் இருங்கோ. ஐயா சில விசயம் சொல்லப்போறார்" என்றார். அனைவரும் றோட்டுக் கரையிலும் கற்கும்பிகளிலும் குந்திக் கொண்டார்கள்.

"அனைவருக்கும் வணக்கம். எம் பகுதியில் இப்பிடி நடந்தது மிக வேதனையான விடயமாகும். இதைப்பற்றி நாம் கச்சேரியில் கலந்துரையாடிவிட்டு, வீட்டிற்கும் போகாமல் நேரடியாக இங்கு வந்துள்ளோம். யானைக்கு மதம் பிடிக்காமல் வெளிநாட்டிலிருந்து ஓர் பெரிய ஊசியை வரவழைத்து அதனைப் போடவுள்ளோம். ஆகவே, நீங்கள் எந்த வன்முறைகளிலும் இறங்க வேண்டாம். அகிம்சையால் தான் காந்தி இந்தியாவை வென்றடுத்தார் என்பதை நீங்கள் மறந்து விட வேண்டாம். அவ்வாறே நாமும் எதையும் அறவழியில் வெல்வோம். பாதிக்கப்பட்டோருக்கு இப்போதே நிவாரணத் தொகை கிடைக்கும்" எனப் பேசிய சேர்மன் பக்கத்தில் திரும்பி "கொஞ்சம் தண்ணி தாங்கோ. . . தொண்டையை அடைக்குது" எனக்கூற,

"ஐயாக்கு தண்ணி வேண்டாம். நான் இளனி வேண்டிக் கொண்டு வாறன்" என, தன் கடையை எரியக் கொடுத்த ஒரு கடைக்காரர் ஓடினார்.

"இப்போ சேர்மன் ஐயாவின் துணைவியார் அவர்கள் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண நிதி வழங்குவார்" என விதானையார் கூற குழுமியிருந்தவர்களின் கை தட்டல் காதைப் பிளந்தது.



படிப்பகம்

padippakam



காளிமுத்துக் கிழவனுக்கு அதிலிருக்கப் பிடிக்காமல் எழுந்து போனார்.

*

காளிமுத்துக் கிழவனாரின் கொட்டிலினுள் மூன்று நான்கு வாலிபர்கள் உட்கார்ந்திருந்தனர்.

தீ வைத்து அணைத்த மரக்கும்பிகள் மீண்டும் தீ வைக்கப்படாமல் அப்படியே இருந்தன.

வாலிபர்கள் முகத்தில் விரக்தி நன்கு குடிகொண்டு இருந்தது.

"அது சரிப்படாது.. . . விதானையாரும் சேர்மனும் சனத்தைப் பேய்க்காட்ட நினைக்கினம். யானையிண்டை மதத்தை யாராலும் அடக்க முடியாது. அது இயற்கை" என குமுறிக் கொண்டிருந்தான் ஒருத்தன்.

"அதுக்கு மதம் வந்து ஊரை அழிச்சு அழிச்சுக்கொண்டு தான் இருக்கப் போகுது. . . நேற்று ராத்திரி நல்லவேளை. . . உயிர்ச்சேதம் எதுவும் நடக்கேல்லை. . . நாளைக்கு அதுவும் நடக்காது எண்டது என்ன நிச்சயம். . . சேர்மனும் செத்த வீட்டுக்கு வருவார். பெண்சாதியும் செத்த வீட்டில் பாடுவா. அத்தோடை கதை முடிஞ்சுடும். சனங்கள் கஷ்டப்பட அவையள் தங்கட தங்கட பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுவினம். சனங்கள்தான் கொஞ்சம் கொஞ்சமாய் அழியவேணும்" அது இன்னொருவரின் மனக்குறுமல்.

"களவாச் சுடலாம். ஆனால் சேகுவராவோடை துவக்கெல்லாத்தையும் அரசாங்கத்திட்டை ஒப்படைத்தாச்சு. அப்பிடிச் சுட்டாலும் சனம் காட்டிக் கொடுத்திடுவாங்கள்" இது அடுத்தவன்.

சேர்மனையும் விதானையையும் நம்பக்கூடாது என்பதிலும், யானையை எப்படியோ அழிக்கவேண்டும் என்பதிலும் தீர்க்கமாக இருந்தாலும் எப்படி அதைச் செய்து முடிப்பது என்பதற்கு சரியான வழி தெரியாது ஆளை ஆள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.



படிப்பகம்

padippakam



காளிமுத்துக் கிழவர் ஒரு தரம் செருமி தொண்டையைக் கனைத்து விட்டுத் தொடர்ந்தார்.

"தம்பியவை நீங்கள் நினைக்கிறது சரி தான். இனி இவையை நம்பிப் பிரயோசனம் இல்லை. இந்த பதினெட்டு வருசத்திலை இந்தக் காட்டை நல்லாய் அறிஞ்ச அனுபவத்திலை சொல்லுறன். உந்த யானைகள் எல்லாம் தண்ணிக்கு குளங்களையும் ஆறுகளையும் நம்பித்தான் இருக்குதுகள். அழிவுக்குப் பதில் அழிவுதான். அகிம்சை சரிவராது. உந்த ஆறுகளுக்கையும் குளங்களுக்கையும் நஞ்சைக் கலந்து விட்டால் அதுகள் குடிக்க வரேக்கையும் குளிக்க வரேக்கையும் அதைக்குடிச்சு செத்துப் போகுங்கள். . . இல்லாட்டி உதுகள் அதிகமாக அண்டியிருக்கிற இடங்களிலை உள்ள பெரிய குளக்கட்டுகளையும் ஆற்று அணைக்கட்டுகளையும் உடைச்சு விடவேணும். அந்தத் தண்ணி அதுகளை அடிச்சுக் கொண்டு போகும்."

கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்த அந்த இளைஞர்கள் முகத்தில் ஓர் புதுப்பிரவாகம்.

நாலு பேரும் எழுந்து கொண்டனர்.

வழியில் கிடந்த தடி தண்டுகளைத் தூக்கித் தூர எறிந்து கொண்டு வீரநடை போட்டுக் கொண்டு சென்றனர்.

அவர்கள் சென்று மறையும் வரை கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த கிழவனார், "எடு பிள்ளை பந்தத்தை" என்றவாறு ஒரு புதுத்தெம்புடன் அம்மரக்கட்டைகளை நெருங்கினார்.

●

*(1979ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தின்பொழுது எழுதப்பட்டது)*



படிப்பகம்

padippakam

# வாதரை வீதிகளில்...

மனிதத் தலைகள்!
ஒன்றை ஒன்று நெரித்தபடி
எங்கெங்கும் மனிதத் தலைகள்!!

எதில் எது வருகிறது எனப் பயந்தபடி...
எங்கெங்கும் மனிதத்தலைகள்!!
ஆங்காங்கு கொஞ்சம் தாண்டும் போச்சுதாம்
ஆளுக்காள் சொல்லிக் கொள்கிறார்கள்!

முழுக்கிராமமே தண்ணீரில் மிதந்தபடி
முழுவாழ்க்கையுமே சின்னச் சின்ன பைகளில் கட்டியபடி
கோடுபோட்டு நட்ட எல்லைக் கதியால்கள் அத்தனையும் விட்டபடி
நிர்வாணத்தை மறைக்க கொஞ்ச கொஞ்ச துணிகளை சுற்றியபடி

யாரை நொந்தென்ன? யாருக்கு சொல்லி அழுதென்ன?
எத்தனை தூக்குக் காவடிகள், கற்பூரச் சட்டிகள் ஏந்தி பலனென்ன?
எந்தப் புத்தவிகாரையின் எந்த ஆராய்ச்சி மணியை அடித்தென்ன?
எந்த வட்ட மேசையைச் சுற்றி எத்தனை பேர் இருந்தென்ன?
எந்த நாட்டில் என்ன என்ன ஊர்வலங்கள் நடத்தியென்ன?

படிப்பகம்

padippakam



எல்லாமே ஓர் இரவில் நடந்து முடிந்தது!
அவர்கள் வந்தார்கள்!
இவர்கள் அகதிகள் ஆகினர்!

மனிதத் தலைகள்!
ஒன்றை ஒன்று நெரித்தபடி . . .
எங்கெங்கும் மனிதத் தலைகள்!
வாகரைவீதியெங்கும் மனிதத்தலைகள்!

ஐரோப்பாவே அமைதியாய் இரு!
நாளை உனக்கு ரீ. வி. யில்
வல்லவன் படமும் உண்டு!
யாழ்ப்பாண மிளகாய்த்தூள்
தமிழ்க்கடைகளிலும் உண்டு!!!



படிப்பகம்

padippakam

# ஊமை உறவுகள்

ஒரு மாதத்தின் முன்புதான் அன்னத்தின் மூத்தமகள் ராணி பெரியவளாகி இருந்தாள்.

அண்டை அயல்கள் கொண்டு வந்த நல்லெண்ணையிலும், உளுத்தம் மாவிலும், முட்டையிலும் இரண்டு ரின்கள் நிறைய முட்டைமா செய்தது போக எஞ்சியிருந்த முட்டைகள் பங்குனி வெயிலில் பழுதாகிப் போய்விடும் என்பதற்காக பக்கத்து வீட்டுப் பூரணத்திடம் இருந்த அடைக்கோழியை வாங்கி குஞ்சுக்கு வைத்ததில் தேறியவை ஏழு.

காகம் தூக்கியது, பூனை பிடித்தது, கிணற்றுள் விழுந்தது. . . .என விசாவை முடித்துக் கொண்டவை போக மிகுதி மூன்று. அதிலும் அடைக்கோழி அக்கிரிமன்றின்படி பக்கத்துவீட்டு பூரணத்துக்கு ஒன்று போக தேறியவை கறுவலும் சிவப்பியும்தான்.

"அம்மா இஞ்சை பார்த்தியளோ. . . எப்பவும் இதுகள் ஒண்டாய்த் திரியுதுகள்."

"ஓமடி பிள்ளை. . . ஒண்டாய் அடைவைச்சதுகள். . . ஒண்டாய்த் திரியுதுகள்."

"ஒரு மாதக்குஞ்சுகள் எண்டாலும் நல்லாய் செட்டை முளைச்சிட்டுதுகள்."

வீட்டின் தாழ்வாரம், பாவட்டை நிழல்கள், கிணற்றடி வாய்க்கால்கள் எங்குமே கறுவலினதும் சிவப்பியினதும் ஆதிக்கம் தான்.

நிலம் வெளுக்க இறங்கி வருவது தொடக்கம் சூரியன் படுத்துச் செக்கல் வரும்வரை அவையிரண்டும் ஒன்றாகவே வலம் வரும்.

எங்கேயாவது காகம், பருந்தைக் கண்டால் ஒன்றிற்கு ஒன்று தம் கீச்சிட்டு சத்தத்தால் சமிக்ஞை கொடுத்துவிட்டு வேலிப்பற்றைகளுள்

படிப்பகம்

padippakam



ஓடி ஒளிந்து விடும்.

அப்படி ஓர் உறவு அவையிடையே. . .

ஒரு மூன்று மாதம் போயிருக்கும்.

இருந்தாற் போல் எங்கிருந்தோ வந்த மழையினால் ஊரே கூதலால் விறைத்து நின்றது. ஆங்காங்கே சில பள்ளிக்கூடக் கூரைகளைக் கூட காற்று பெயர்த்து விட்டது.

"இந்தக் காத்தும் மழையும் எப்ப விடப்போகுதாம். நீர்வேலியிலை ஒரு வாழைத்தோட்டமும் மிச்சமில்லையாம்."

"ஒரு காய்கறி கூட வேண்டேலாமல் கிடக்கு. கடலுக்கும் செமியோன் போகேல்லையாம்."

"வெங்காயம் இனி முளை கக்கிப் போடும் கண்டியோ. காணி, வீட்டை அடைவு வைச்ச சனங்கள்தான் பாவங்கள்."

"கடைக்கார சின்னவரின் பின் சுவர் பாறி விழுந்திட்டுதாம்."

ஊர் தன் கவலையில். . . .

கறுவலும் சிவப்பியும் மூன்று நாட்களாக குளிரில் நடுங்கிக் கொண்டு வீட்டுப் பின் தாழ்வாரத்துடன் ஒட்டியபடி நின்றன. காலமையிலும் பின்நேரத்திலும் கூப்பிட்டு பழஞ்சோறு அல்லது தேங்காய்ப்பூ துருவலைப் போடும் அன்னம்மாவும் இந்த மூன்று நாளும் இவையிரண்டையும் தேடவில்லை.

நாலாம் நாள் காலை கொஞ்சம் மழையும் காற்றும் குறைய ஊர் வீடுகளுக்கு வெளியே வந்தது. சந்தையும் கூடியது.

சிவப்பிக்கு பசி பொறுக்க முடியாது உடம்பு நடுங்கத் தொடங்கியது. கண்களை முற்றாகத் திறக்க முடியாது முனகிக் கொண்டு இருந்தமையைப் பார்க்க கறுவலுக்கு பரிதாபமாகப் பட்டது.

அவ்வாறே சிறிது நேரம் சிவப்பியைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு மெதுவாக கால்கள் மறையும் தண்ணீரில் இறங்கி அப்படியே



படிப்பகம்

padippakam



குசினிப் பக்கம் எட்டிப் பார்த்தது.

அப்போதுதான் அன்னம் ஒழுங்கை மூலையில் காத்திருந்து சைக்கிள்காரனிடம் நாலைந்து கீரி மீன்குஞ்சு வாங்கி வந்திருந்தாள், "கீரி மீனுக்கு அவன் சொல்லுற விலைக்கு ஒரு கிடாய் வேண்டி பங்கு போடலாம்" என மீன்காரனை வாய்க்குள் புறுபுறுத்துக்கொண்டு மீன் உமலைத் திண்ணையில் வைத்துவிட்டு, "பிள்ளை ஒரு தேத்தண்ணி வை. ஒழுங்கை முகரியிலை நிண்டு கால் கையெல்லாம் விறைச்சுப் போச்சு" என்றவாறே அரிமணை எடுக்க குசினியின் பின்பக்கம் போனாள்.

உமலை குந்தில் வைத்துவிட்டுப் போவதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த கறுவல் இதுதான் தருணம் என ஒரு கீரி மீனை 'லபக்' என்று கொத்திக் கொண்டு ஓடியது.

"அம்மா உங்கை உந்தச் சேவல் ஒரு மீனைக் கொண்டு போகுது."

"கொல்லடி அதை" குளிரில் நின்ற களை, மீன்காரன் கூடக்காசு வேண்டிவிட்ட கோபம் இரண்டும் கறுவல் மீது திரும்ப, திண்ணையில் இருந்த திருவலகையைத் தூக்கி கறுவலை நோக்கி எறிந்தாள்.

நல்ல காலம் . . . கொஞ்சம் குறி தவறியதால் கறுவல் பிழைத்தது.

"உனக்கு எப்பவும் ஒரு கதைப் புத்தகமும் கையும். அதுக்கை தலையைப் புதைச்சுக்கொண்டு கிடக்காமல் உந்த மீனை ஒருக்கா பாக்கத் தெரியாதோ?" கறுவல் மீதிருந்த கோபம் மகள் மீது திரும்பியது.

"சும்மா கத்தாதை அம்மா."

"இப்ப கத்துற மாதிரித்தான் கிடக்கும்" தன் இயலாமையில் புறுபுறுத்தபடி மற்ற மீன்களை நோண்டத் தொடங்கினாள் அன்னம்மா.

கொத்தி வந்த மீனை சிவப்பிக்கு முன் போட்டுவிட்டு அதனைப் பெருமிதமாகப் பார்த்தது.



படிப்பகம்

padippakam



இரண்டு மூன்று நாள் பசி சிவப்பிக்கு. . . . மீனை கொத்திக் கொத்தி சாப்பிடத் தொடங்கிய சிவலை சிறிது நேரத்துக்குப் பின் நிமிர்ந்து கறுவலைப் பார்த்தது. அது சிவப்பி சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றது.

சிவப்பி என்ன நினைத்ததோ. . . மீனை கறுவலுக்கு கிட்டவாகப் போட்டது.

அது கறுவலுக்கும் புரிந்திருக்க வேண்டும். பின் இரண்டுமாக கொத்திக் கொத்தி சாப்பிடத் தொடங்கின.

மீனின் முட்களை அப்படியே தாழ்வாரத்தில் விட்டுவிட்டு பசி போன களையில் இரண்டும் முன்விறாந்தைப் பக்கமாக இறங்கிப் போயின.

"உங்கை பாத்தியே பிள்ளை. . . என்ரை மீனைத்திண்டுட்டு சோடிகட்டிப் போயினம்."

அன்னத்தின் புலம்பல் தீரவில்லை. மகள் கிளுக்கென்று சிரித்துவிட்டு தாய் முழிசிப் பார்க்க முகத்தை மீண்டும் கதைப்புத்தகத்தினுள் புதைத்தாள்.

*************************************************************

"பிள்ளையை ஒரு மாசம் அல்லது இரண்டு மாசம்தான் பள்ளிக்கூடத்தாலை மறிச்சு வைக்கிறது. . . . உன்ரை பிள்ளைதான் ஊரிலை பெரிசாய் சாமத்தியப் பட்டது போலை ஆறு மாசம் வீட்டுக்கை மறிச்சு வைச்சிருந்திட்டாய். . . இனியாவது அவளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பு."

*************************************************************

இந்த ஆறு மாதத்துள் அழகாய் மாறியது அன்னத்தின் மகள் ராணி மட்டுமில்லை. கூடவே கறுவலும் சிவப்பியும் தான்.

கறுவலுக்கு தலையில் சிவத்த கொண்டை துளிர்க்கத் தொடங்கியிருந்தது.



படிப்பகம்

padippakam



சிவப்பியின் செட்டைகள் பரந்து கொழு கொழு என்றிருந்தன.

அன்று சன்னதித் தேர். அதிகாலையில் ஊர்ச் சேவல்கள் கூவிய பொழுது கறுவலும் தன்னை மறந்து ஏதோ ஓர் உந்துதலில் தானும் செட்டையை அடித்துக் கொண்டு கூவியது.

சிவப்பி சிலிர்த்துக் கொண்டது.

கறுவலுக்கு அதுவே ஒரு பெருமையாகப் பட மீண்டும் மீண்டும் செட்டையை அடித்துக் கூவியது.

சிவப்பி தலையைத் தாழ்த்திக் கொண்டது.

நாணமோ?

அன்று முழுவதும் ஏனோ சிவப்பி வெட்கப்பட்டது போலத் தயங்கித் தயங்கி தத்தித் தத்தியே கறுவலுக்குப் பின்னால் திரிந்தது.

அன்று செக்கலை நெருங்கிக் கொண்டு இருந்த வேளை பக்கத்து வீட்டுப் பூரணத்தின் வெள்ளடியன் சிவப்பியைக் கண்டவுடன் சிலிர்த்துக் கொண்டு கூவியபடி சிவப்பியைக் கலைத்துக்கொண்டு வந்தது.

சிவப்பிக்கு பயம் தொற்றி விட கதறிக்கொண்டு வந்து கறுவலுடன் ஒட்டிக்கொண்டது.

கறுவலின் ஆண்மை விழித்துக் கொண்டது.

சிலிர்த்துக் கொண்டு பூரணம் வீட்டு வெள்ளடையன் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கியது.

அதுவும் விடவில்லை. இரண்டும் பந்தயத்திற்குக் கட்டி விட்ட சேவல்களாக ஒன்றை ஒன்று மூர்க்கமாகத் தாக்கத் தொடங்கின.

சிவப்பி பயந்து நடுங்கியது.

சிவப்பியின் நடுக்கத்தைக் கண்ட கறுவல் தன் பலம் எல்லாவற்றையும் சேர்த்து வெள்ளடையனின் கழுத்தைக் குறி



படிப்பகம்

padippakam



வைத்து ஒரு பாய்ச்சல்தான்.

வேலி இடுக்கினூடு பாய்ந்து ஓடியது வெள்ளடையன்.

அச்சமயம் வேலியோரம் சாம்பல் கொட்ட வந்த அன்னம் "சனியன்கள் கொழுப்பெடுத்து திரியுதுகள்" என்றவாறு தன் பங்கிற்கும் வெள்ளடையன் மீது சுடுசாம்பலைக் கொட்டிவிட்டாள்.

கறுவலுக்கு தாடையடியில் மட்டும் சிறிது இரத்தம். சிவப்பிக்கு அடி வயிற்றை வறுகியது.

தன் அலகால் கறுவலின் தாடையை வருடி வழிந்த இரத்தத்தை தன் செட்டையில் துடைத்தது.

அது கறுவலுக்கு ஓர் இன்பானுபவமாகப்பட்டது.

*

இரவு வீடே அமர்க்களப்பட்டது.

"பச்சை உடம்பு காய முதல் பாவி இப்பிடிச் செய்திட்டாளே" என ஊர் வாயில் கை வைக்க முதல். . . "மழைக்குள்ளை நனைஞ்சதாலை சன்னி கண்டுவிட்டது" என அதே ஊரை அனுதாபப்பட வைத்தது அன்னத்தின் சாதுர்யம்தான்.

வயிற்றில் வாங்கி வந்ததை வள்ளி ஆச்சியின் கை மருந்தால் வாய் வழியே அழித்துவிட்டாலும் உடம்பு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அவசரப்பட்டு முந்தானை விரித்ததின் பலன். . . ராணி முனகிக் கொண்டு இருந்தாள்.

"எதுக்கும் அன்னம் அராலி வைத்தியரிட்டை ஒருக்கா கொண்டு போய் காட்டு. உடம்பு தேற அந்த மனுசன் ஏதாவது உருண்டை தரும்" வள்ளி ஆச்சி சொல்லிவிட்டு நூறுரூபாய் காசையும் வேண்டிக் கொண்டு போய் விட்டாள்.

*

அடுத்த நாள் நிலம் வெளுத்தபோது முதல் நாள் பட்ட நோ



படிப்பகம்

padippakam



அனைத்தையும் மறந்து கறுவல் கம்பீரமாகக் கூவியது.

சிவப்பி கறுவலின் தாடையைப் பார்த்தது. இரத்தம் காய்ந்து போயிருந்தது.

கறுவலின் தாடையை சிவப்பி தன் அலகால் தடவியது.

கறுவலும் ஓர் உற்சாகத்துடன் சிவப்பியை செல்லமாகக் கொத்தியது.

சிவப்பிக்கு உடல் சிலிர்த்தது.

அதுவும் திரும்பக் கொத்தியது.

விளையாட்டாக இரண்டும் மாறி மாறிக் கொத்திக் கொண்டிருந்த பொழுது கறுவல் தன் சிறகால் சிவப்பிக்கு அடித்தது.

ஊடலோ. . . . அல்லது கூடலுக்கான அழைப்போ. . .

சிவப்பிக்கு புரிந்து விட்டது.

சிவப்பி தாழ்வாரத்தில் இருந்து குதித்து ஓடியது. பின்னால் கறுவல் துரத்தியது.

சிவப்பி நிற்பதும் பின் ஓடுவதுமாய் கறுவலுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டு இருந்தது. கறுவலோ களைக்கவோ அன்றி சளைக்கவோ இல்லாது ரொம்ப உற்சாகத்துடன் சிவப்பியுடன் விளையாடிக் கொண்டு இருந்தது.

மாறி. . . மாறி. . . கலைத்து விளையாடிக் கொண்டிருந்த கறுவல் ஒரு கட்டத்தில் ஒரு பாவட்டைப் பற்றையின் நெருக்கத்தில் வைத்து தன் அலகினால் சிவப்பியின் சின்னக் குடுமியைப் பிடித்துக் கொண்டது.

சிவப்பியின் நாணத்தில் எழுந்த பெண்மையின் திணறல் கொஞ்சம் கொஞ்சமாக கறுப்பியின் ஆளுமையுள் கட்டுண்டது.

அந்த காலைப் பொழுது சிவப்பிக்கும் கறுவலுக்கும் ஓர் புத்துணர்ச்சியைக் கொடுத்திருந்தது.



படிப்பகம்

padippakam



*

“காலமையே வைத்தியரிட்டை போட்டு வந்தது நல்லதாய் போச்சுது. . பிள்ளையை சாப்பாட்டாலைதானாம் தேத்த வேணுமாம்.”

“என்னடி சொன்னவர்?”

“கூவாத சேவலும் கன்னிப் பேடும்தான் நல்லதாம்.”

“இப்ப கோழிவிக்கிற விலையிலை எங்கை போகப்போறாய். மருதனாமடம் சந்தையும் பெரிசா கூடுறேல்லை.”

“உந்தக் கறுவலும் இப்ப இரண்டு நாளாய் தான் கூவுது. அதோடை உந்த சிவப்பியும் காலமை தொடக்கம் கொக்கரிச்சுக் கொண்டு திரியுது. முட்டை கிட்டை போடப்போகுதோ தெரியேல்லை.”

“அன்னம் முட்டை போடுற கோழியெண்டால் அதை விடு. இண்டைக்கு கறுவலைப் பிடிப்பம். நாளைக்கு ஊருக்கை பார்த்து வேண்டுவம்.”

“பொறு. . .பொறு. . உங்கை இரண்டு பேரும் ஆடி ஆடி வருகினம். பிள்ளை கொஞ்சம் அரிசியை எடு. இரண்டு பேரையும் பிடிப்பம். சிவப்பியை முட்டைக்கு அடைப்பம்.”

அன்னம் அரிசியால் எறிந்த பாசக்கயிற்றால் இரண்டின் ஆவிகளும் துடித்தன.

*

சுதந்திரமாக கறுவலுடன் ஊர் உலாத்தி வந்துகொண்டிருந்த சிவப்பிக்கு அந்த கடகத்துள் அடைபட்டுக் கிடந்தபொழுது உலகமே இருண்டு போய் இருந்தது.

“கறுவா. . . நீ எங்கை போயிட்டாய்?”

வேதனையில் சிவப்பி துடித்தது.

“கறுவா. . . நீ எங்கை போயிட்டாய்?”



படிப்பகம்

padippakam



அப்பொழுது அடிவயிற்றில் ஒரு நோ தொட்டது.

காலையில் கறுவலுடன் கலந்த அந்த சுகானுபவத்தில் ஏற்படப் போகும் அந்த தலைப்பிரசவ வேதனை. . .

"கறுவா. . . வயிற்றுக்குள் நோகுது. . . நீ எங்கை போயிட்டாய்?"

அம்மிக்குழவியுடன் கால்கள் கட்டிவைக்கப்பட்டிருந்த கறுவல் சுற்றும் முற்றும் சிவப்பியைத் தேடியது. "சிவப்பி. . . சிவப்பி. . . நீ எங்கை போயிட்டாய்?"

அம்மிக் கல்லுடன் சேர்ந்து தெத்தித் தெத்திப் பார்த்தது.

அம்மியின் கனமும் அன்னத்தின் கட்டும் அசைய விடவில்லை.

தன் சக்தி எல்லாவற்றையும் சேர்த்து பெரிதாகக் கூவியது.

சிவப்பியால் பெரிதாகக் கூவமுடியவில்லை. அவ்வளவு வலி. . . ஆனாலும் கதற முயற்சித்தது. அது வெறும் முனகலாகவே வெளியே வந்தது.

ஆனால் அந்த முனகல் கடகத்தினுள் இருந்து வெளியில் வரவில்லை.

"மாணிக்கம்! உந்த அம்மிக் காலோடை கட்டியிருக்கிறதுதான். அடிவளவுக்கை கொண்டு போ. . . நான் சட்டியும் தண்ணியும் கொண்டு வாறன்."

மாணிக்கம் செட்டையில் பிடித்துத் தூக்கினான்.

கறுவல் கதறியது.

அந்தக் கதறல் கறுவலுக்கு ஏதோ ஒரு ஆபத்து என்பதனை சிவப்பிக்கு உணர்த்தியது.

"கறுவா. . . உனக்கென்ன நடந்தது?"

"சிவப்பி, என்னைக் கொண்டு தின்னப் போறாங்கள்."



படிப்பகம்

padippakam



வேப்ப மரத்தடியில் கட்டியிருந்த உருவு தடத்தில் கறுவலின் தலையை வைத்து மாணிக்கம் கயிற்றை இறுக்கி உருவி விட்டான்.

கறுவல் மரணவேதனையில் துடித்தது.

செட்டையை பலமாக அடித்தது.

சிவப்பியால் தாங்க முடியவில்லை.

கடகத்தினுள் இருந்தவாறே எகிறிக் குதித்தது.

வயிற்றில் நோ தாக்கியது

இரண்டுக்குமே ஜீவமரணப் போராட்டம்.

"கறுவா"

"சிவப்பி"

சிறிது நேரத்திற்குப் பின் இரண்டின் குரல்களும் இரண்டிற்கும் கேட்கவில்லை.

"இஞ்சை பார்த்தியளே . . . காலமை கொக்கரிக்குது எண்டிட்டு அடைச்சு வைச்சன். இப்ப செத்துக் கிடக்கு. ஏதும் பாம்பு கீம்பு கடிச்சுதோ தெரியேல்லை"

அன்னம் அதனைத் தாழ்ப்பதற்கு வேப்பமரத்தடிக்கு எடுத்துச் சென்றாள்.

●



படிப்பகம்

padippakam

# டென்மார்க்

*"வெளிநாட்டுக்குப் போனால் எங்கடை கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்திடும்."*

*"மூலைவீட்டு கணபதிப்பிள்ளையின்ரை பேரன் போய் மூண்டு வருசத்துக்கிடையிலை மூண்டு சகோதரிகளையும் கரையேத்திப் போட்டான்."*

*"இதொரு வாழ்வோ. . . இயக்கப் பொடியளோடை நிண்டு கதைச்சால் ஆமிக்காரன்களுக்குப்பயம். . . ஆமிக்காரன் களோடை கதைச்சால் இயக்கத்துக்குப் பயம்."*

*

இந்தக் கனவுகள் அல்லது தப்பித்தல்களுக்குரிய காரணங் களுடன் நாட்டை விட்டு அகதி என்ற அவப்பெயரிலும். . . புலம் பெயர்ந்தவர்கள் என்ற கௌரவப் பெயரிலும். . . . இங்கு நாம் உண்ணல் உறங்கல்கள், பொருளாதாரத் தேடல்கள், போட்டிகள், பொறாமைகள் அத்தனையுடனும் வாழ்ந்து (?) கொண்டு இருக்கின்றோம்.

இந்தத் தேடல்களினால், டென்மார்க்கில் என்ன என்ன சட்டப்பிரிவில் என்ன என்ன சலுகைகள் பெறலாம், எந்த எந்த சட்டப்பிரிவில் என்ன என்ன விதிவிலக்குப் பெறலாம் என அறிந்து அதற்கேற்ப வசதிகளைப் பெருக்குவதில் இங்குள்ள டெனிஷ்காரரை விட இலங்கைத் தமிழர்கள் மிகவும் கெட்டிக்காரர்களாக விளங்குகின்றார்கள்.

இல்லாவிட்டால், பரம்பரையாக எத்தனையோ டெனிஷ்காரர்கள் வாடகை வீடுகளில் வசித்திருக்க, இங்கு வந்து இருபது வருட காலத்துள் சொந்தவீடு, சொகுசுக் கார்கள், சம்மர் விடுமுறைக்கு ஏதோ ஒரு நாட்டுக்கு விமானத்தில் பறப்பு என வசதிகளைப் பெருப்பித்துக் கொண்டதிலும் அதைத் தப்பிக்க வைக்க ஓடி ஓடி உழைப்பதிலும்

படிப்பகம்

padippakam



இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிகர் இலங்கைத் தமிழ் மக்களே தான்.

சரி. . . . இனிக் கதைக்கு வருவோம்!

ஆறுமுகம்!. . . . சென்ரல் காம்பில் அகதி அந்தஸ்துக்காகக் காத்திருந்தபொழுது அங்கு மூன்று ஆறுமுகங்கள் இருந்ததால் அவரின் ஊர்ப்பெயருடன் சேர்ந்து அளவெட்டி ஆறுமுகமாகி. . . . பின் கையில் கொஞ்சம் காசு சேர சீட்டுப் பிடித்தும் வட்டிக்கு காசு கொடுத்தும். . . அந்த வட்டிக்காசை வேண்டுவதில் அறாப்பிடியாக இருந்ததால். . . அளவெட்டி ஆறுமுகம் அறாவட்டி ஆறுமுகமானார்.

ஊர் என்னதான் அவரைத் திட்டினாலும் அந்தர அவசரத்துக்கு அவர் வீட்டுக் கதவையே தட்ட வேண்டிய நிலையில்தான் அதிகமானோரின் நிலை இருந்தது. அதனால் இந்த சிற்றி அவரை ஏற்கவும் முடியாது தவிர்க்கவும் முடியாது தவித்தது.

பணவிசயத்தைத் தவிர்த்துப் பார்த்தாலும் டென்மார்க்கின் பல சட்ட திட்டங்களை அறிந்து வைத்திருந்ததால் கறுப்புக் கோட்டு போடாத அப்புக்காத்தாக அறாவட்டி ஆறுமுகம் விளங்கினார். . . வயதுக்கு முந்திய வயோதிபப் பென்ஷன் எப்படி எடுப்பது? பிள்ளைப்பராமரிப்பு காசு கூட எடுப்பதற்கு கள்ள விவாகரத்து எப்படிக் கோருவது? வேலை இழந்தவர் நிதியை எடுத்துக் கொண்டு எப்படி மனைவியின் வரிச்சலுகை அட்டையைப் பயன்படுத்தி எப்படி கள்ள வேலை செய்வது? என்று எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தார்.

மற்றவர்கள் எல்லாம் பார்த்துப் பொறாமைப்படும் வகையில் மனைவி என்ற ஒன்றைத் தவிர மற்றவை அனைத்தும் அவருக்கு இரண்டு தான்.

இரண்டு வீடு.

இரண்டு கார்

இரண்டு கடை.

இரண்டு அழகான பெண்கள்



படிப்பகம்

padippakam



மூத்தவள் டென்ஷி. இளையவள் டியானா.

இந்த நாட்டுக்கு வந்து நல்லாய் இருப்பதற்கு நன்றிக்கடனாக பெண்பிள்ளைகளுக்கு டென்ஷி, டெனிசியா என்றும் ஆண் பிள்ளைகளுக்கு டென், டெல்சன், டன், டனுசன் என்றும் பெயர் வைத்தமை ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது, தொண்ணூறுகளில் ஒரு நாகரீகமாய் இருந்தது.

அவ்வகையில் டென்மார்க்கில் பிறந்ததால் மூத்த மகளுக்கு டென்ஷி என்றும், டென்மார்க்கில் டியனலுண்ட் என்ற கிராமத்தில் அவர்கள் வசித்ததால் இளைய மகளுக்கு டியானா என்றும் பெயர் சூட்டி, தன் புலம் பெயர்ந்து வந்த நாட்டுக்கும் புலம் பெயர்ந்த அந்தக் கிராமத்துக்கும் தனது நன்றிக்கடனை ஆறுமுகத்தார் செலுத்தியிருந்தார்.

இதற்காக மன்னாரில் பிறந்தவனை மன்னா என்றோ. . . . வடலியடைப்பில் பிறந்ததால் வடலியன் என்றோ. . . கொடிகாமத்தில் பிறந்ததால் காமக்கொடியாள் என்றோ ஏன் பெயர் வைக்கவில்லை என்று வாசகர்கள் யாரும் குறுக்கு மறுக்காகக் கேள்விகள் கேட்கக்கூடாது.

தொடர்ந்து கதைக்குள் செல்வோம். . .

மூத்த மகள் டென்ஷி பெரியவளாகியபோது யாருமே நினைத்திராதளவிற்கு அந்தச் சாமத்தியத்தைச் செய்ய வேண்டும் என்று தங்கமணி ஒற்றைக் காலில் நிற்க, இந்தியா, சிங்கப்பூர் என்று குடும்பமே ஒரு சுற்றுப் பயணம் போய் வந்தது. வந்தபின்பு தான் தெரியும் கொழும்புக்கும் போய் மூன்று நாட்கள் நின்றவர்கள் என்று.

அழைப்பிதழ் தொடக்கம் விழாவுக்கு வந்து போவோருக்குக் கொடுத்தனுப்பும் குத்துவிளக்கு + குங்குமச்சிமிழ் வரை தாங்களே பார்த்து வேண்டி தம் கைகளிலேயே எடுத்து வந்திருந்தார்கள்.

(குறிப்பு : இந்த இடத்தில் இலங்கை, இந்திய வாசகர்கள் திகைக்க



படிப்பகம்

padippakam



வேண்டாம். இந்த குத்துவிளக்கு கலாச்சாரம் என்பது இங்கு புதிதாய் புகுத்தப்பட்ட ஒன்று. கலியாண வீடுகளில் பெயின்ற் மணம் மாறாத ஒரு பிளாஸ்ரிப் பையுள் மூன்று காய்ந்து போன வெத்திலையும். . . கொஞ்சம் பாக்கு சீவலும். . . சில வேளைகளில். . .ஒரு தேசிக்காய். . . அதையும் தாண்டினால் ஒரு வாழைப்பழம் அல்லது தேங்காய்முடி என்று கிடைத்திருக்குமே . . . அந்தப் பைக்குப் பதிலாக வந்ததுதான் இந்தக் குத்துவிளக்கு! ஒவ்வொருவரின் பொருளாதார ஏற்றத் தாழ்வு களுக்கு ஏற்ப இந்தக் குத்துவிளக்குகளின் அளவு சிறிதாகலாம். . . அல்லது பெரிதாகலாம்.)

இனிச் சாமத்திய வீட்டிற்குச் செல்வோம். . . .

இங்கிலாந்துச் சோடனை, பரீஸ் மேளம், ஜேர்மன் வீ. டீ. யோ என்று ஐரோப்பாவில் எங்கு எங்கு எவையெல்லாம் பிரபல்யமோ அது எல்லாம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. கனடாவில் இருந்து சொக்கிலேற் பீடா என்ற ஓர் ஸ்பெசல் பீடாவை தங்கமணியின் தமை யனார் எடுத்து வந்திருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தவிரவும் கிட்டடிச் சொந்தம், தூரத்துச் சொந்தம் என்று ஆறுமுகத்தார்க்கு சொந்தமான அளவெட்டி ஆட்களும் தங்க மணிக்குச் சொந்தமான அச்சுவேலி ஆட்களுமாய் டென்மார்க்கின் தலை நகரமான கொப்பனேகன் களைகட்டியது.

சாமத்தியவீடு முடிய ஊர் போலை ஆடு அடிச்சு பார்ட்டி வைக்க வேண்டும் என்று இத்தாலிச் சித்தப்பா சொல்ல இரவோடு இரவாக ஆட்டுக்கார ஜென்ஸை எழும்பி ஆடு அடித்து விடிய விடிய பார்ட்டி வேறு. . . குறைந்தது பதினைந்து விஸ்கிப் போத்தலாவது காலியாய் இருக்கும்.

இவ்வாறு ஊரும் உலகமும் சந்தோஷப்பட்டும் பொறாமைப்பட்டும் நடைபெற்ற சாமத்தியவீடு முடிந்து இப்போ சுமார் ஓர் வருடமாகி விட்டது.

டென்ஷியும் எட்டாம் வகுப்பு முடிந்து ஒன்பதாம் வகுப்புக்கு வந்து விட்டாள். இவ்வருடம் இறுதித் தேர்வு வேறு. கடுமையாகப்



படிப்பகம்

padippakam



படிக்காவிட்டால் தேர்வில் சித்தியடைவது மிகக்கஷ்டம். அதைவிட, மாணவர்களும் மாணவிகளும் கூட்டாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இத்தனைக்கும் இடையே அனைத்து மாணவ மாணவி களுடன் ஒத்துழைத்துச் செயல்பட வேண்டும் என்றால் அவர்களுடைய வீட்டுப் பிறந்த நாட்கள். . . வெள்ளிக்கிழமை இரவுகளில் பாடசாலைகளில் நடைபெறும் பார்ட்டிகள் என்பவற்றிற்கு விரும்பியோ விரும்பாமலோ போய்வர வேண்டும்.

ஆறுமுகமும் தங்கமணியும் இந்த பார்ட்டிகள், விழாக்களினால் டென்ஷி வழி தவறிப் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, எந்த விழா என்றாலும் பத்து மணிக்குள் வந்து விட வேண்டும் என்று கட்டளை போட்டு விழா மண்டபங்களுக்கு வெளியில் காரில் போய் நின்று கூட்டி வந்த பின்புதான் ஆறுமுகம் நித்திரைக்குப் போவார்.

கிறிஸ்மஸ் லீவும் முடிந்து தை போய் மாசி வந்தது.

மாசி மாதத்தில் வரும் வின்ரர் லீவில் டென்ஷியின் வகுப்பினர் தமது ஆசிரியை ஆசிரியர்களுடன் பனிமலையில் சறுக்குவதற்கு நோர்வே நாட்டிற்குச் செல்வதாக ஏற்பாடாகி இருந்தது.

இப்படி ஒவ்வோர் வகுப்பினரும் வின்ரர் லீவுக்கு ஒவ்வோர் நாட்டுக்குப் போவது வழமையாய் இருந்தது. சென்ற ஆண்டு கிறீன்லாந்துக்கு மீன் பிடிக்கப் போயிருந்தார்கள்.

பனிமலையில் சறுக்கி விளையாடுவதற்கான உடுப்புகள், சறுக்கும் பலகைகள் என்பனவற்றை பல பிள்ளைகள் இரவலாயும் வாடகைக்கும் எடுத்துச் சென்றபோதிலும் "என்ரை பிள்ளை ஏன் இரவல் சாமான்கள் பாவிக்க வேண்டும்" எனக்கூறி அனைத்தையும் புதிதாக வேண்டிக் கொடுத்து வழியனுப்பினார் ஆறுமுகத்தார்.

மற்ற பிள்ளைகளுடன் சந்தோஷமாய் போய்வரட்டும் என வழி அனுப்பி வைத்திருந்தாலும் குமர்ப் பிள்ளையை தனியே அனுப்பிப் போட்டம் என மனம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது.



படிப்பகம்

padippakam



அதைவிட பனியில் சறுக்கும்பொழுது கால் கை உடைஞ்சால் என்ன செய்வது என்று மனக்கிலேசமாயும் இருந்தது.

எப்படியும் ஒவ்வொரு நாளும் குறைந்தது 3, 4 தடவைகள் தங்கமணி கைத்தொலைபேசியில் டென்ஷியைக் கூப்பிடுவதும். . . . "அம்மா வையுங்கோ. . . . .. . . நெடுக தமிழிலை கதைக்க எல்லாப் பிள்ளைகளும் பார்க்குதுகள்" என டென்ஷி கெஞ்சி தாயிடம் இருந்து விடுபடுவதாயும் அந்த ஓர் கிழமை ஓடிப் போனது.

அடுத்து வந்த சனிக்கிழமை பின்னேரத்தில் எல்லாப் பெற்றோரும் கைகளில் சிறிய டெனிஷ் கொடிகளை வைத்து தூரத்தில் வரும் கப்பலை நோக்கிக் கை அசைத்துக் கொண்டும் பாட்டுப் பாடிக்கொண்டும் இருக்க அந்த இராட்சத பயணிக் கப்பல் கடற்கரையை நோக்கி அசைந்து கொண்டு வந்தது.

கப்பல் கரைக்கு கிட்டவாக வந்தபொழுது எல்லாப் பிள்ளைகளும் முதலாவது தளத்தில் நின்று கை அசைத்துக் கொண்டு வந்தனர்.

டென்ஷியைக் கண்டதும் ஆறுமுகத்தாருக்கும் தங்கமணிக்கும் திக் என்றிருந்தது. மற்றைய சக மாணவிகள் போல் டென்ஷியும் தலைமுடியைக் கட்டையாக வெட்டி தலைக்கு மெல்லிய மண்நிறமும் வெண்நிறமும் கொண்ட கலர் பூசியிருந்தாள்.

கப்பல் தரையைத் தொட்டதும் எல்லாப் பிள்ளைகளும் இறங்கி ஓடிவந்து தம் பெற்றோரைத் தழுவி தம் சந்தோஷங்களைத் தெரிவித்தும், தாம் அனுபவித்தவற்றைச் சொல்லியும் மகிழ்ந்துகொண்டு இருந்தார்கள்.

தங்கமணி "உது என்னடி வேலை பார்த்துக்கொண்டு வந்திருக்கிறாய்" எனத் திட்டினாலும் ஆறுமுகத்தார் சுற்றி நின்ற டெனிஷ்காரர் இடையே தனது கோபத்தைக் காட்டாமல் அடக்கி வைத்திருந்தார்.

பின் ஒருவாறாக எல்லாப் பெற்றோரும் ஒருவருக்கொருவர் ஹாய் சொல்லிக் கொண்டு விடைபெற்றுக் கொண்டார்கள்.



படிப்பகம்

padippakam



டென்ஷி மௌனமாக வந்து காரில் ஏறிக்கொண்டாள். தாய் தகப்பனுக்கு தான் தலைமுடி வெட்டியது சரி. . . டை அடித்தது சரி பிடிக்கவில்லை என்பது நன்கு புரிந்தது.

வீட்டுக்கு வரும் வழியிலும் தாய் தங்கமணிதான் டென்ஷியை ஏசிக்கொண்டு வந்தாளே தவிர ஆறுமுகம் ஏதும் பேசவில்லை. அவர் உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டு வந்தார்.

“நான் என்ன செய்யுறதம்மா? எல்லாப் பொம்பிளை பிள்ளையளும் தான் தலைக்கு டை அடிச்சதுகள். நான் தனியா எப்பிடி மாட்டன் என்று சொல்லுறது”.

இத்துடன் தங்கமணி மௌனமானாள்.

ஆறுமுகமோ, பாம்பு தின்னுற ஊருக்குப் போனால் நடுத்துண்டு நமக்கு வேண்டும் என்று யாரோ சொன்னது இங்கு உண்மையாகிக் கொண்டிருப்பதை நினைத்துக்கொண்டு காரை வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார்.

*

இப்போ வின்ரர் லீவும் முடிந்து பாடசாலை தொடங்கி ஒரு மாதமாகி விட்டது.

ஒரு நாள் இரவு டென்ஷி சாப்பாட்டு மேசையில் இருந்து சீக்கிரமே எழுந்து போனாள்.

தங்கமணிக்கு அது நல்லதாய்ப் படவில்லை.

மற்றவர்கள் சாப்பிட்டு முடிக்கும்வரை பொறுத்திருந்துவிட்டு அவர்கள் கதிரையில் எழுந்து போனதும் தங்கமணி டென்ஷியின் அறைக்குப் போனாள்.

“ஏன் டென்ஷி. . . வடிவாய் சாப்பிடேல்லை?”

“வயுத்துக்கை பிரட்டுதம்மா.”

தங்கமணிக்கு திக் என்றது.



படிப்பகம்

padippakam



தான் தன் பிள்ளையிடம் கேட்பது சரியோ பிழையோ என்று எந்த வித ஆராய்ச்சிகளும் இல்லாது நேரடியாகவே கேட்டாள்.

"பிள்ளை. . . இந்த மாதம் வீட்டுக்கு விலக்கு வந்ததோ. . ."

"இல்லை". . . எனத் தலையாட்டினாள்.

"என்ன சொல்லுறாய்?"

தங்கமணிக்கு பெத்த வயிறு நொந்தது.

"ஏதும் அசம்பாவிதம் நடந்ததோ?"

டென்ஷி ஏதும் சொல்லவில்லை. கண்களில் கண்ணீர் ஓடிக்கொண்டேயிருந்தது.

தங்கமணி எத்தனையோ தடவைகள் அதட்டிக் கேட்டும் பிரமை பிடித்தவள் போல் இருந்தாளே தவிர டென்ஷி எதுவும் சொல்லவில்லை.

தங்கமணி அறையை விட்டு வெளியே வந்தாள். .

ஆறுமுகத்தார் வட்டிக் கொப்பியுடன் ஹோலில் இருந்து வட்டிப் பாக்கி தரவேண்டியவர்களை தொலைபேசியில் நெருக்கிக் கொண்டிருந்தார்.

அன்று இரவு முழுக்க தங்கமணி தூங்கவேயில்லை. ஆறுமுகத்தாருக்கும் இது பற்றி மூச்சு விடவில்லை.

காலையில் தங்கமணி டென்ஷியுடன் டாக்டர் வீட்டுக்குப் போனாள்.

உள்ளே அழைத்து சோதித்த டாக்டர் ஐந்தாவது நிமிடத்தில் கர்ப்பம் என உறுதியளித்தார்.

சாமத்திய வீட்டு மண்டபமே தங்கமணியின் தலைமையில் இடிந்து விழுந்தது போல் இருந்தது.

"என்ன செய்யப் போறீங்க?" அந்த வயோதிப டெனிஷ் டாக்டர் கேட்டார்.



படிப்பகம்

padippakam



"என்ன கேக்கிறீங்கள்?" தங்கமணி பதறினாள்.

"அபோர்ஷன் செய்யப் போகின்றீர்களா?. . . . அல்லது உங்கள் மகள் பிள்ளையைப் பெற்று வளர்க்கப் போகின்றாவா?"

தங்கமணியின் கைகள் நடுங்கின.

டாக்டர் நிலைமையைப் புரிந்து கொண்டார்.

"இதுக்கு நீங்கள் இப்போது பதில் சொல்ல வேண்டும் என்று கட்டாயம் இல்லை. . . இதில் இரண்டு போர்ம் இருக்கு. வீட்டை எடுத்துக் கொண்டு போங்கோ. . . அபோர்ஷன் செய்வதாய் இருந்தால் சிவத்த போர்மை நிரப்பிக் கொண்டு வாங்கோ. . . பெற்று வளர்ப்பதாய் இருந்தால் பச்சை போர்மை நிரப்பிக் கொண்டு வாங்கோ."

இரண்டையும் வேண்டிக் கொண்டு ஒரு கையினால் தன் கண் களைத் துடைத்தபடி மறுகையினால் டென்ஷியைப் பிடித்தபடி டாக்டரின் அறையில் இருந்து வெளியே வந்தாள்.

டாக்டருக்காக வெளியே காத்திருந்த அனைவரும் ஏதோ விபரீதம் நடந்து விட்டதாக உணர்ந்தார்கள்.

தங்கமணிக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஆறுமுகத்தாருக்கு இனியும் மறைத்தால் நிலைமை இன்னும் விபரீதமாகிவிடும் என்பதால் உடனே ரெயில்வே ஸ்டேசனுக்கு வரச் சொல்லிவிட்டு அங்குள்ள வெயிற்றிங் ஹோலில் இருவருமே காத்திருந்தார்கள்.

டென்ஷி தாயைப் பார்க்கப் பயந்தோ. . . தன் நிலைக்கு வெட்கித்தோ அல்லது இன்னும் கொஞ்ச நேரத்தில் தந்தையார் செய்யப் போகின்ற அட்டகாசத்துக்கு முகம் கொடுக்க முடியாமலோ தனக்குள் தானே குமைந்து கொண்டு இருந்தாள். . . . அல்லது தனக்குள் தான் தன்னை மூடிக் கொண்டு இருந்தாள். . . .

ஒரு பத்து நிமிடத்துள் ஆறுமுகம் அவசர அவசரமாக



படிப்பகம்

padippakam



ஸ்டேசனுக்குள் நுழைந்தார்.

டென்ஷியை இருக்கச் சொல்லி விட்டு. . . தங்கமணி ஆறுமுகத்தாரை ஒரு மூலைக்குக் கூட்டிப் போனாள்.

அவரால் எதையுமே நம்பவோ. . . ஜீரணிக்கவோ முடியவில்லை. . .

டென்மார்க்கில் வெற்றி என்பதைத் தவிர எந்தத் தோல்வியையுமே சந்தித்திராதவர்க்கு. . . இது தோல்வி மட்டுமில்லை. . . .யாரோ தன் குடும்பத்தை பாதாளக்கிணற்றில் தள்ளி விட்டது போல. . . . .

இயலாமையில் எழுந்த கோபத்துடன்,

"அவளையும் கூட்டிக்கொண்டு வந்து காருக்கை ஏறு. . . பள்ளிக்கூடத்தை உண்டு அல்லது இல்லை எண்டு ஆக்கிறன்."

கார் பள்ளிக்கூடத்தை நோக்கிப் பறந்தது.

இவர்கள் காரில் இருந்து இறங்கவும், வகுப்பாசிரியை பாட சாலைக்கு வெளியே வரவும் சரியாக இருந்தது.

"ரீச்சர், உங்களோடை ஒரு விடயம் அவசரமாய் கதைக்க வேணும்."

அவர்கள் மூவரைப் பார்த்ததும் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும் எனப் புரிந்துகொண்டார்.

"வாங்கோ. . . .ஒவ்வீசுக்கு போவம்."

ஒவ்வீசுக்குள் போனதும் மூவருக்கும் கதிரைகளை எடுத்துக் கொடுத்துவிட்டு கோப்பி அல்லது தேனீர் குடிக்கிறீர்களா என வகுப்பாசிரியை கேட்டார்.

எதுவுமே வேண்டாம் என்று விட்டு, டென்ஷி நோர்வேக்குப் போனது. . அங்கு கர்ப்பம் ஆனது. . . அதற்கு பள்ளிக்கூடம் என்ன பதில் சொல்லப் போகிறது என தனது ஆவேசத்தை எல்லாம் ஆறுமுகத்தார் கொட்டிக் கேட்டார்.

வகுப்பாசிரியை கவலையுடன் டென்ஷியைப் பார்த்தார்.



படிப்பகம்

padippakam



"யு ஆர் எ அன்லக்கி கேர்ள். . . . டென்ஷி உன்னை யாராவது உன்ரை விருப்பத்துக்கு மாறாகக் கெடுத்தார்களா?"

"இல்லை. . . " எனத் தலையாட்டினாள்.

"அப்ப ஸ்கூலாக நாங்கள் எதுவுமே செய்ய முடியாது. . .அவள் ஒரு ரீன்ஏஜ் பிள்ளை. பெற்றோர் என்ற முறையிலை நீங்கள்தான் அவளுக்கு முன்கூட்டியே கருத்தடை மாத்திரை கொடுத்து அனுப்பியிருக்க வேண்டும்."

தங்கமணிக்கும் ஆறுமுகத்திற்கும் இதை ஜீரணிக்க முடியவில்லை.

வகுப்பாசிரியை தொடர்ந்தார்.

"என்ரை மகளும் டென்ஷியின்ரை வகுப்புத்தான் படிக்கிறா. . பயணத்துக்கு சாமான் அடுக்கேக்கை அந்த குளிசைகளை நானேதான் எடுத்து கவனமாகக் குடுத்து விட்டனான்."

அதுக்கும் பிறகு ரீச்சர் ஏதோ ஏதோ எல்லாம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

தங்கமணிக்கு எதுவுமே விளங்கவில்லை. ஆனால் ஆறுமுகத்தாருக்கு எல்லாமே விளங்கியது. ஆனால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை.

டென்ஷி அழுது கொண்டு இருந்தாள். . . .

"அழாதை டென்ஷி. . .." தங்கமணி அவளைத் தன் நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"டென்ஷி" என்ற பெயர் இப்போது ஆறுமுகத்தாருக்கு அருவருப்பாகப்பட்டது.

●

*புலம் பெயர் தமிழர்கள். . . புலம் பெயர் தமிழர்கள் என்று பூரிப்படைகின்றீர்களே, இதுதான் டென்மார்க்கையா. (புதுமைப்பித்தன் மன்னிக்க).*



படிப்பகம்

padippakam

# காதல் வந்திருச்சி

இந்தக் கதைக்கு, இந்தக் கதையின் நீளத்தை விட நீண்ட ஓர் முன்னுரை தேவையென்று நினைக்கின்றேன்.

இந்த உலகம் எப்பவுமே ஒரு ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது என்றே கடந்த 10 வருடத்துக்கு முதல் நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆமைவேகம், மாட்டு வண்டி அசைவது போல என்று கதைகளில் உதாரணங்கள் படித்திருப்போமே. . . . அது மாதிரித்தான். . . இந்த ஆடி அசைந்து இயங்கும் உலகத்தில் ஏன் பிறந்தோம் என்று விரக்தி கூட சிலவேளைகளில் ஏற்படுவதுண்டு.

இந்த விரக்தியில் இருந்து விடுபட்டு கொஞ்சம் ரிலாக்ஸாக இருக்கலாம் என்று வின்சர் தியேட்டருக்கு ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றால் அங்கே கூட திரையில் காட்டப்படும் சம்பவங்கள் இன்னும் ஆறுதலாக அசையும். காதலியின் சேலை நுனியைத் தொட காதலனுக்கு ஆயிரம் யுகங்கள் ஆகும். காதலி முல்லைப் பந்தலின் கால்களுடன் கன்னங்களை உரசிக் கொண்டு கண்களை வெட்டியபடி தனது நாணத்தை வெளிப்படுத்திக் கொண்டு இருக்க எனது கையில் இருக்கும் கச்சான் கடலைப் பை தீர்ந்து விடும்.

இந்த ஆறுதலான ஓட்டத்தை இலங்கையில் மட்டும் அவதானிக்கவில்லை – இங்கே டென்மார்க்கிற்கு வந்த பின்பும் அதே ஆறுதலான போக்கைத்தான் அனேக விடயங்களில் அவதானித்திருந்தேன். மோட்டார் பாதைகளும் எக்ஸ்பிரஸ்

படிப்பகம்

padippakam



*றெயின்களும் இருந்தாலும் நாடு என்னவோ ஆறுதலாய்த் தான் சென்று கொண்டு இருந்தது.*

*ஆனால் வானத்தில் இருந்து தேவன் வருகின்றார். . . . அதிசயங்கள் நிகழ்த்த இருக்கின்றார். . .உலகம் 2001ல் அழிய இருக்கின்றது. . . . தேவ இரட்சணியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கடற்கரைகளில் சுவிசேஷக் கூட்டங்களில் சொன்னதுக்கு எதிர்மாறாக ஒரே ஒரு விடயம் உலகத்தில் நடந்தது.*

*ஆம் ! உலகம் கம்பியூட்டர் மயப்பட்டது. அது அனைத்தையும் மாற்றி அமைத்தது. .*

*நான் தேடிய அந்த வேகத்தை உலகத்திற்குத் தந்தது.*

*ஆம். . . பூகோள உருண்டையின் நடு அச்சைக் கம்பியூட்டர் பிடித்து வேகமாகச் சுழற்றி விட்டது.*

*கைத்தொலைபேசிகள், எஸ்.எம்.எஸ்கள். இ-மெயில்கள், இன்ரநெற்கள், கிறாவிக், அனிமேஷன். . . . அப்பப்பா. . . . .*

*பாரதி மட்டும் இன்று இருந்தால் "புதியதோர் உலகம்" செய்தோம் என தனது முண்டாசை ஒருதரம் உதறிக் கட்டிக் கொண்டு, ஒரு கையில் லப்டப் கம்பியூட்டரும், மறுகையில் கைத்தொலைபேசியில் செல்லம்மாவுக்கு எஸ். எம். எஸ். அனுப்பிக்கொண்டும் இருந்திருப்பான்.*

*றொபேட்டுகளை விட்டு வெள்ளைக்காரர்களை அடித்துத் துரத்தியிருப்பான். . . . .*

*இன்று என்னதான் நான் வேகமாக கம்பியூட்டரில் கேம்ஸ் விளையாடினாலும். . . எழுதினாலும். . . அதன் வேகத்துக்கு நான் கம்மிதான். எனவேதான் நான் எதிர்பார்த்த வேகம் இந்த உலகத்துக்கு வந்து விட்டது என்பதை ஒத்துக் கொள்கின்றேன்.*

*இந்த கணனி உலகத்தின் வளர்ச்சி நான் எதிர்பார்த்த*



படிப்பகம்

padippakam



*உலகத்தை வேகமாக ஓடவிட்டாலும் இடைக்கிடை அது உலகத்தையும் குலுக்கி ஸ்தம்பிக்க வைத்திருக்கிறது.*

*உதாரணமாக நம்மவர் செய்யும் கள்ளக் கிறடிட் காட், ரீ. வி. காட் தொடக்கம் அல்கைதா இயக்கம் வெற்றிகரமாக நடாத்தி முடித்த 'செப்டம்பர் 11' தாக்குதல் வரை சொல்லலாம்.*

*இந்த முன்னுரையுடன் இந்தக் கதையின் கதாநாயகி சுதாவுக்கு இடம் விட்டு ஒதுங்கிக் கொள்கின்றேன்.)*

**எ**னது பெயர் சுதா. . . வசிப்பது டென்மார்க். வயது பதினெட்டு. உயர்தரம் 2ம் வருடம்.

எப்படியும் டாக்டராக வரவேண்டும் என்ற பெற்றோரின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்று தினமும் புத்தகங்களுடன் போராடிக் கொண்டு இருக்கிறேன்.

ஆனாலும் அவ்வப்போது ஒரு 18 வயதுப் பெண்ணுக்குரிய கனவுகளும் கற்பனைகளும் இடைக்கிடை வராமல் போவதில்லை.

தவிரவும் எனது விருப்பத்திற்காக வயலினும் அப்பா அம்மா விருப்பத்திற்காக பரதநாட்டியமும் கற்றுக் கொண்டு இருக்கின்றேன். எப்படியும் எனக்குத் திருமணமாகும் முன் அரங்கேற்றம் நடந்துவிடும் என நம்பிக்கொண்டு இருக்கின்றேன். இதுவரை மூன்று நடன ஆசிரியைகளுக்கு குருவணக்கமும் செலுத்தியாயிற்று. குறோன் வணக்கமும் செலுத்தியாயிற்று. இன்றைய பங்குச்சந்தை நிலவரப்படி ஒரு டெனிஷ் குறோனின் இலங்கை மதிப்பு 21 ரூபாய் 18 சதம்.

இதை விடவும் நான் 'வானம்' என்ற தமிழ்-டெனிஷ் இணைத் தளத்தின் ஓர் அபிமானி. அங்கத்தினர்.

ஐரோப்பாவில் வெளிவரும் இணையத்தளங்களில் தரமான ஒரு இணையத்தளம் என்பது பலரின் அபிப்பிராயம். இதில் பலர் மற்றைய இணையத்தளங்களைப் போல் தமது சொந்தப் பெயர்களில்



படிப்பகம்

padippakam



எழுதாமல் வேறு வேறு பெயர்களிலும், தமது சொந்தப் படங்களுக்குப் பதிலாக வேறு படங்களையும் பிரசுரித்திருப்பார்கள். இதைப்பற்றி யாரும் பெரிதாய் அலட்டிக் கொள்வதில்லை. ஆக்கங்கள் தரமாய் இருந்தால் போதும் என்பதே 'வானத்'தின் நோக்கம்.

முதன் முதலாக 'வானத்'திற்கு நான் எழுதிய கவிதை – காதல்.

'வானம்' இணையத்தளம் 'காதல்' என்ற தலையங்கத்தில் ஒரு போட்டி நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

நான் மிகவும் கஷ்டப்பட்டு காதலை அருவி, ஆறுகளுடன் ஒப்பிட்டு எழுதி எனது பிரண்ட்ஸ் எல்லோரும் அங்கீகாரம் அளித்த பின்னே அதை அனுப்பியிருந்தேன்.

'அருவிகளிலும் ஊற்றெடுப்பேன் – அழகே
உன் இதயத்தின் உள்ளேயும் ஊற்றெடுப்பேன்

மலையில் இருந்தும் பாய்வேன்
உன் இதயம் குமுறும் போதும்
உன் கண்களில் இருந்தும் பாய்வேன்

மங்கிய மாலைப் பொழுதில்
உனை Titanic படகிலும் சுமப்பேன்
காற்றில் பறக்கும் உன் கூந்தலும்
கைவிரல்களும் எனைத் தீண்டுவதையும் ரசிப்பேன்.

உனை ஒருவன் உரச வந்தால்
உயிரையும் குடிப்பேன்
எனக்கு சுனாமி என்றும் ஓர் பேர் உண்டு.'

அந்தப் போட்டியில் எனக்குத் தான் முதலாவது பரிசு.

அதே மாதிரி வானத்தில் முதல் முதலாக கவின் என்பவரும் கவிதை எழுதியிருந்தார்.

'முன்னை உன் நாமம் கேட்டேன் – இன்று



படிப்பகம்

padippakam



மூத்த உன் அக்காவின் அழகில் விழுந்தேன்
பின்பு உன் bank balance கேட்டேன்
பெயர்த்தும் உன் அக்காக்கே அடிமையானேன்
என்னை மறந்தேன் என் படிப்பை மறந்தேன்
உன் அம்மாக்கு காய்கறி வேண்டிக் கொடுத்தேன்
உன் அப்பாவின் சைக்கிளுக்கு காற்றடித்தேன்
தலைப்பட்டேன் என் தலைவியின் காலடியைத் தேடி

புலம்ப வைத்து விட்டாயே - காதலே
என்னை புலம்ப வைத்து விட்டாயே
Herning பிள்ளையாரைச் சுற்றி
என்னைப் புலம்ப வைத்து விட்டாயே!'

கவினின் கவிதை கொஞ்சம் லூஸ் தனமாகப் பட்டாலும் அந்த லூஸ் தனம் எனக்கு ஏனோ பிடித்திருந்தது.

பரிசைப் பற்றிக் கவலைப்படாமல், வேண்டுமென்றே மற்றவர்கள் சிரிக்க வேண்டும் என்று தேவாரத்தை உல்டா பண்ணி எழுதியிருந்தார் எனப் புரிந்தது.

பிள்ளையார் கோயில் பற்றி எழுதியிருந்ததால் ஒவ்வோர் வெள்ளிக்கிழமையும் பிள்ளையார் கோயிலுக்குப் போகும்பொழுது அங்கு நிற்கும் இளைஞர் பட்டாளத்தில் யார் கவினாக இருக்கும் என கண்கள் துழாவும்.

தமிழ்ப் படங்கள் போல இது ஓர் கண்காணாக் காதல். .

இந்த நேரத்தில்தான் 'வானம்' ஓர் இலக்கியச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

கட்டாயம் என் கவின் வருவார் எண்டு. . . என் மனம் சொன்னது. . .

அந்த நாளுக்காகக் காத்திருந்தேன். ஒவ்வோர் நாளும் கழிவது கஷ்டமாய் இருந்தது.

அந்த நாளும் வந்தது!



படிப்பகம்

padippakam



அம்மா சிங்கப்பூரால் வேண்டிவந்த சுரிதார்களிலேயே மிக அழகான ஒரு சுரிதாருடன் போயிருந்தேன்.

விழா மண்டபம் களைகட்டியிருந்தது.

கொஞ்சம் தெரிந்த முகங்கள். . .சூரியன், நிலா, கபி, பிரதாப் அத்தனை பேரும் விழா ஏற்பாடுகளில் மூழ்கிப்போய் இருந்தார்கள்.

தெரிந்த முகங்களை விட தெரியாத முகங்களே அதிகம். . . அதில் என் கவின் யார்?

ஒரு மேசையடியில் இருவரைச் சுற்றிக் கொஞ்சம் அதிக கூட்டம்.. . . Sweet 50யும் அழகனுமாம்.

Dp Abs, Xile, கஸ்து போன்றோர் அவர்களுடன் இலக்கியம் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

Sweet 50க்கு உண்மையில் 48 வயதாம். ஆளின் சிரிப்பு கம்பீரமாகத் தெரிந்தது. கண்களில் இலக்கியம் தெரிந்தது. மீசைக்கும் தலைக்கும் டை அடித்திருந்தது வடிவாய் தெரிந்தது.

அழகனுக்கு 35 வயது மட்டில் இருக்கலாம். கொஞ்சம் சீரியஸான ஆள் போல் தெரிந்தார்.

“அனைவரையும் ‘வானத்’தின் சார்பாய் வருக வருக என அழைக்கின்றோம்.”

கபியும் பிரசாத்தும் ஆளுக்கோர் மைக்குடன் நின்று கொண்டிருந்தார்கள்.

இருவரும் கோட்டுக்கும் ரையுக்கும் வெளியே சங்கிலியைப் போட்டுக்கொண்டு நின்றது கொஞ்சம் ஓவராய்ப் பட்டது. ஓகே! அது அவர்கள் நகரத்து ஸ்ரையில் போலும். . .

அனைவரும் மேடைக்கு அண்மையாகப் போய் அமரத் தொடங்கினார்கள். என் கண்கள் கவினைத் தேடியது! கவின் நீ எங்கே? கவின் நீ எங்கே?



படிப்பகம்

padippakam



சிலவேளை இந்தக் கபி தான் கவினோ. . . தலைக்குள் ஓர் பொறி. .

'ஆண்டவனே அப்பிடி இருந்திரக் கூடாது'

மனம் பிள்ளையாரை வேண்டிக் கொண்டது.

"இப்பொழுது 'வானத்'தின் நேயர்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றோம்" என கபி ஆரம்பிக்க, "முதலில் அண்மையில் பிறந்தநாள் கொண்டாடிய இரட்டைச் சகோதரிகள் Aisuவையும் Sweetgirlஐயும் மேடைக்கு அழைக்கின்றோம்" என பிரதாப் தொடர்ந்தார். இருவரும் புன்னகையுடன் மேடைக்கு வந்தார்கள். . . Like two drops of water!

"பிள்ளை கொஞ்சம் தள்ளி இரும்."

என்னருகில் கட்டிய பற்கள் தள்ளாட, கடைவாயில் வெற்றிலைச்சாறு வடிய ஓர் வயோதிபர் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அமர்ந்தார்.

"I am Apputhurai; known as Kavin."

அந்த விழா மண்டபம் இடிந்து என் தலையில் விழுந்தது.

பின்பு நடந்த எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை.

●



படிப்பகம்

# Mothersday

கொஞ்சம் ஓவரடா! உங்கள் அம்மா பாசங்கள்!
கொஞ்சம் ஓவரடா! உங்கள் அம்மாப் பாட்டுகள்!!
அதனால் தான் சொல்லுகின்றேன்!
கொஞ்சம் அடக்கி வாசியுங்கள்!!!

எதுவரை உந்தப் பாட்டுகள். . .
உனக்கொருத்தி வரும் வரை தானே. . .
"அம்மா கொஞ்சம் பேசாமல் இருக்கிறியளோ!
அவள் சொல்லுறதையும் கேளுங்கோவன்"

இங்கு தான் அம்மா உறவு ஆட்டம் காணும்!
அம்மணியின் அரசாட்சி கோலோச்சும்!!
ஐயா நீ அவுட். . . ! நீ எழுதிய கவிதைகளும் அவுட். . . !!
மீறினால் தலையணை நனையும்! சாப்பாட்டில் உப்புக்கூடும்!!
கொம்மாவும் நீயும் கொமூன் (நகரசபை) வாசலில் தான். . .

வாழ்க்கையை பாடப்புத்தகங்களில் படித்தது போதும்!
திரைப்படங்களைப் பார்த்து
அம்மாக்களுக்கு கண்ணீர் விட்டது போதும்!!
தாயைத்தூக்கி வைத்து அம்மா பாட்டுப்பாட

padippakam



சுகமாய்த் தான் இருந்தது – அதற்கு
நீதானே ரஜனிக்கு காசு கொடுத்தாய்! புரியுமா?
நாற்காலியில் இருந்து தூக்கிப் பார். . .
நாரி ஒடிந்து போகுமடா மகனே!
அம்மாவில் பாசத்தை வை!
அதையே அட்வட்டைஸ் பண்ணாதே!!
மதர்ஸ் டேக்கு ஏன் இத்தனை மத்தாப்பூக்கள். . .
காதலர் தினத்துக்கு ஏன் இந்தக் கீயாமாயாக்கள். . .
அன்பையும் காதலையும்
ஏன் அன்பளிப்புகளால் அளக்கின்றீர்கள்?

அலட்டிக் கொள்ளாத அன்பும்
ஆர்ப்பாட்டம் இல்லாத காதலும் என்றும் நிலைக்குமடா!
வானத்தில் எழுதும் வாழ்த்துப் பா அல்ல இது!

வாழ்க்கையைப் புடம் போடும் பாடம்!!

அதனால் தான் சொல்லுகின்றேன்
கொஞ்சம் அடக்கி வாசியுங்கள்!!
அம்மாமாரை ஏமாற்றி விடாதீர்கள்!!!
அதுகளுக்கும் எங்கோ ஓர் nursing home கட்டில் காத்திருக்கு!
அம்மணியிடம் சொல்லிவிட்டு ஓர் தடவை போய்ப் பார்த்து விடு!

கிழவி பாவம்! யன்னல் கரையோரம் உன்வரவைப் பார்த்திருக்கு!
கிழவி பாவம்! யன்னல் கரையோரம் உன்வரவைப் பார்த்திருக்கு!!



படிப்பகம்

padippakam



மனச்சாட்சிக்கு சாவுமணியடிக்கும்
மனுநீதிச் சோழனின் மக்காளே
தேரிலிட்டுச் சாகடிக்கப்படுவது உங்கள் மனித நேயமே. . .
ஆத்திசூடியை பள்ளியிலும்
அரளிவிதையை வீட்டிலும் கொடுக்காதீர்கள்
நீங்கள் செய்யும் தவறுகளுக்கு
இதெல்லாம் இங்கு இயற்கை என
போலிக் கையெழுத்துப் போட வேண்டாம்

●



படிப்பகம்

padippakam

# வரிச்சுமட்டை வேலிகள்

பொழுது இன்னும் புலரவில்லை.

சந்திரன் வீடு துரிதமாக இயங்கிக் கொண்டு இருந்தது.

எல்லோருக்கும் இடையில் மௌனத்திரைகள். பகல் பதினொரு மணிக்கு பலாலியில் இருந்து கொழும்புக்குச் செல்லும் விமானத்தில் போகப் பதிவாகியிருந்தது. காலை எட்டுமணிக்கு காருக்குச் சொல்லி யிருந்தார்கள். காரில் யாழ்ப்பாணத்துக்குப் போய் பின்பு ஆமியின் பஸ்சில் பலாலிக்குப் போகவேண்டும்.

கார் வர முதல் எல்லா சூட்கேசுகளும் சரியாக இருக்கின்றதா எனப் பார்த்துக் கொண்டார்கள்.

சந்திரன் முற்றத்து லைற்றைப் போட்டுவிட்டு சிகரட்டைக் கையில் வைத்து ஆழமாக யோசித்துக் கொண்டிருந்தான். அந்தப் பெரிய குடும்பத்தை எப்படி இந்தியாவில் கொண்டு போய் செற்றிலாக்குவது என்ற பெரிய கேள்விக்குறிதான் அவன் முன் நின்றது. ஆனாலும் இனியும் இருக்க முடியாது என்ற நிலை வந்தபொழுதுதான் அந்தப் பெரிய சுமையைத் தூக்கி தன் தோளில் போட்டுக் கொண்டான்.

தனக்கு வேலைக்குப் போகும்பொழுதும் சரி, வரும்பொழுதும் சரி ஏதும் நடந்தால் தன் மூன்று பெண்பிள்ளைகளும் மனைவியும் நடுறோட்டில் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. யாழ்ப் பாண இலங்கை வங்கிக்கும் கோட்டைக்கும் தூரம் அதிகமில்லை. ஏற்கனவே ஒருநாள் இரவு 'செல்'லும் விழுந்தது தான்.

சந்திரன், விசுவலிங்கத்தாருக்கும் வேவியக்காக்கும் பிறந்த இரண்டாவது ஆண்பிள்ளை.

விசுவலிங்கத்தார் ஆங்கிலகாலத்து ஆமிக்காரர். 58 கலவரத்துடன் அதைவிட்டுவிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வேலைக்கு வந்தபொழுது பாரிசவாதம் தாக்கியதால் உயிரை மட்டும் பிடித்துக்

படிப்பகம்

padippakam



கொண்டு, அந்த வீட்டின் நாலு வேலிக்கிடையில் நடக்கக் கூடிய பலத்தை ஆண்டவன் கொடுத்ததால். . . ஓரளவு தனது வேலைகளை மட்டும் கவனித்துக் கொண்டு வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த மாலுக்குள் தனது வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்துக் கொண்டிருந்தார்.

புருஷனுக்கு கால் ஊனமாகிப் போனதால் குடும்பப் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டு கடனோ. . .கிடனோ பட்டுக் குடும்பத்தை ஒரு வழிக்குக் கொண்டு வந்தவர் வேவி - வேவியக்கா.

மூத்தமகள் விஜயா. திருகோணமலைக் கல்விக்கந்தோரில் புக் கீப்பராகச் சேர்ந்து இன்று அக்கவுண்ட்டராக உயர்ந்திருந்தார். கணவன் மாவட்டக் கல்வி அதிகாரி. திருகோணமலையில் நல்ல வசதியாக இருக்கிறார்கள்.

விசுவலிங்கத்தாருக்கு கால்கள் இயலாமல் போன பின்பு, அடுத்த இரண்டு ஆண்பிள்ளைகளும் தான் வேவியக்காவின் இரண்டு கால்கள். சந்திரன் பாங்கில் வேலை செய்து கொண்டு குடும்பத்தைக் கவனிக்க. . . இளையவன் நெருங்கிக் கொண்டிருந்த தன் உயர் கல்வியையும் தூக்கி எறிந்து விட்டு கப்பலுக்குப் போய் குடும்பத்தையே ஒரு கரைக்குக் கொண்டு வந்தவன். இன்று அவன் டென்மார்க்கில்.

அவன்தான் தமையனுக்கு எழுதியிருந்தான், "ஆகப் பிரச்சனையெண்டால் எப்படியும் இந்தியாவுக்கு வாங்கோ. நான் டென்மார்க்கிலை எண்டைக்குமே ஒரு சாதாரண ஆளாக வாழும்வரை உங்களை இந்தியாவில் வைத்துக் காப்பாற்ற முடியும்" என்று.

கடைக்குட்டி திலகம். இருபது வயதை நெருங்கி விட்ட பெண் பிள்ளை. ஆனால் வேவியக்காக்குப் பிறந்த மூன்றாவது ஆண் பிள்ளை என ஆனைக்கோட்டை மாமியாரும், சங்கானை அன்ரிமாரும் கூப்பிடுவார்கள். அவ்வளவு துணிச்சல்காரி.



படிப்பகம்

padippakam



இத்தனை பேரையும் சந்திரன் இன்று கொழும்புக்கு கூட்டிச் சென்று அதால் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப் போகின்றான்.

எரிந்து வந்த சிகரட்நுனி கையைச் சுட்டபோது, தனக்குள் தான் யோசித்துக் கொண்டிருந்ததை விட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவன் மனைவி மூன்று பெண் குழந்தைகளையும் வெளிக்கிடுத்திக் கொண்டு இருந்தாள். அவளையுமறியாமல் அன்று அவளின் கட்டுப்பாட்டுக்குள் நிற்க முடியாது கண்கள் பொல பொல என்று கொட்டிக்கொண்டு இருந்தது. விக்கி விக்கி அழுதால் குழந்தைகள் பயப்படும் என்ற எண்ணம் ஒருபுறமும், தனது தாய் தகப்பன் சகோதரங்களை விட்டு விட்டுப் போக வேண்டுமே என்ற கவலைகள் மறு புறமும் அவளை வாட்டியன.

சந்திரனுக்குத் தெரியும் மனைவியின் நிலை. ஆனாலும் மெளனம் காத்தான்.

"சரி பிள்ளை அழாதை. . . நாங்களும் வாறம் தானே." வாசற்படிக்கட்டில் வெளிக்கிட்டபடியே இருந்தபடி விசுவலிங்கத்தார் மருமகளுக்கு ஆறுதல் கூறினார்.

"இல்லை மாமா.. . .அப்பா அம்மாக்கு ஏதும் நடந்தால். . . " சந்திரனின் மனைவியால் மேலும் அடக்க முடியவில்லை. சந்திரன் எதுவும் சொல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவ்வேளையில் ஒரு கற்பூரக்கட்டியுடன் வந்த தாயாரைப் பார்த்து "எங்கை போறியள்" என்றான்.

"அம்மாளாச்சிக்கு ஒரு கற்பூரம் கொளுத்திப் போட்டு. . . " சொல்லி முடிக்க முதலே வேவியக்கா விம்மத் தொடங்கினா.

வீட்டிற்கு நாலு வீடு தள்ளி இருந்த வெளியில் நின்ற அரசமரத்தின் கீழ் ஒரு கல் வந்து, பின் சூலம் வந்து, பின் ஓர் அம்மன் சிலையைப் பிரதிஷ்டை செய்து அதுவே அம்மன் கோயிலாக மாறிய அத்தனை நிகழ்வுகளிலும் வேவியக்காவின் பங்களிப்பு அதிகம்.



படிப்பகம்

padippakam



வீட்டின் எந்த நல்லது கெட்டது என்றாலும் முதல் நேர்த்தி அம்மனுக்குத்தான். நேர்த்தியின் பருமன் ஒரு கற்பூரக்கட்டி தொடக்கம் பொங்கல் வரை பருமனில் மாறுபடும்.

"இப்ப இருட்டுக்கை வேண்டாம். கார் வந்த பிறகு எல்லாரும் போய்க் கும்பிட்டிட்டு போகலாம்தானே?" என சந்திரன் சொன்ன போது அதைத் தட்ட ஏலாமல் வீட்டிற்குள் திரும்பிப் போகவிருந்த வேவியக்காவின் கவனத்தை ஒழுங்கையடியில் குரைத்த நாய்களின் சத்தம் திருப்பியது.

சந்திரன் கதிரையிலிருந்து எழுந்து பார்த்தான்.

ஒழுங்கையில் இரண்டொரு அரிக்கன் லாம்பு விளக்குகள்.

"அன்ரியாக்களும் ஆசையம்மாக்களும் வருகினம் போலை கிடக்கு." அவை முறையே வேவியக்காவின் இளைய சகோதரியும் மூத்த தமக்கையும். அவர்களுக்கு நாட்டை விட்டு வெளிக்கிட துணிவு மில்லை. . . பணமும் இல்லை.

ஆனாலும் தலையிடி என்னும் முன்னே காலடியில் வந்திருக்கும் சகோதரங்களை விட்டுவிட்டு. . . வேவியக்கா பிரமை பிடித்தது போல் நின்றா.

"என்னப்பா திகைச்சுப் போய் நிக்கிறாய். நானும் என்ர சகோதரங்களை விட்டுட்டு இந்த பச்சை மண்ணுகளுக்காக வெளிக்கிட்டிட்டன்தானே" என சந்திரனின் பிள்ளைகளைக் கையுள்ளும் மடியிலும் வைத்தபடி சமாதானப்படுத்தினார் விசுவலிங்கத்தார்.

"அப்பாக்கு ஆமியிலை இருந்ததாலை மனதிலை நல்ல இறுக்கம்" என நினைத்தபடி தேத்தண்ணியை ஊற்றி வந்து அனைவருக்கும் கொடுத்தாள் திலகம்.

"அன்ரி ஆட்களுக்கும் ஊத்து" இது அடைத்த குரலில் வேவியக்கா.

அன்ரியாக்கள், அக்கம் பக்கம், சந்திரனோடு வளர்ந்த சின்ன வயதுச் சிநேகிதங்கள், திலகத்தின் பள்ளித் தோழிகள். . . .என சற்றே நிலம் வெளித்த அந்த முற்றத்தில் கதிரைகளிலும், வாங்கிலும்,



படிப்பகம்

padippakam



நிலத்திலுமாக உட்கார்ந்திருந்தார்கள்.

யாரும் எவருடனும் அதிகம் பேசவில்லை.

"அப்ப இனி யார் வீட்டைப் பாக்கிறது?" அக்கறையுடன் மகாதேவன் சந்திரனிடம் கேட்டான்.

சந்திரன் ஒரு தரம் விரக்தியாகச் சிரித்தான்.

அதன் அர்த்தம் மகாதேவனுக்குப் புரிந்தது.

"அன்ரியவை பார்ப்பினம். . . . ஆனால் அவையும் வெளிக்கிட்டிட்டால். . . அவ்வளவு தான்."

மகாதேவன் மௌனமானான்.

மகாதேவன் போல் முற்றத்தில் இருந்த அனைவரும் ஏதும் கேட்டு. . . அல்லது கதைத்து. . . அந்த மௌனத்தைக் கலைக்க விரும்பினாலும். . . எதைக் கேட்பது. . . அல்லது எதைக் கதைப்பது. . . . என்ற ஆழ்மன ஆராய்ச்சிகள் எல்லாம் அங்கு நிலவிய மௌனத்திடம் தோற்றுப்போய் நின்றன.

இந்த நெருக்கடியில் சந்திரனின் மூன்று பிள்ளைகளும் அவனின் ஒன்றுவிட்ட தமக்கையின் மகளும் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்க அனைவரின் கண்களும் கலங்கின.

"எங்கை போறியள்?"

"இந்தியாக்கு."

"ஏன்?"

"இஞ்சையிருந்தால் ஆமி சுட்டுப் போடும்."

"அப்ப என்னையும் கூட்டிக்கொண்டு போங்கோ."

"நீ உங்கடை அப்பா அம்மாவோடை வா"

"எங்கடை அப்பா அம்மா அங்கை வந்து வேலை செய்ய ஏலாது. உங்களுக்கு உங்கடை சித்தப்பா வெளிநாட்டிலை இருந்து காசு அனுப்புவார். எங்களுக்கு காசு அனுப்ப யாருமில்லை."



படிப்பகம்

padippakam



அந்த சின்ன வாயில் எத்தனை பெரிய வார்த்தைகள். அது கூடியிருந்தவர்களின் நரம்புகளை இராவி அறுத்தது.

அவைகள் கதைக்கும் எந்த உண்மைகளையும் தாங்கும் நிலையில் சந்திரன் இல்லை.

"இந்தா நிஷா. . . . ஐஞ்சு ரூபா. . . நாங்கள் போன பிறகு நீ சொக்கிலேற் வேண்டிச் சாப்பிடு" சந்திரன் பேச்சின் திசையைத் திருப்பினான்.

நேரத்தைப் பார்த்துக் கொண்ட சந்திரன் தங்கச்சியாரிடம், "திலகம் வா. எல்லாத்தையும் எடுத்து வெளியில் வைப்போம்" என்றவாறு எழும்ப, "ஏன் அவளை. . . நாங்கள் எடுத்து வைப்போம் தானே" என அனைவரும் எழ, அங்கிருந்தவர்கள் மத்தியில் ஒரு கலவரம் படர்ந்தது. செத்த வீட்டில் பிரேதம் எடுக்க முதல் ஒரு கலவரம் படருமே. . . அது போல. . .

முகங்கள் ஒன்றை ஒன்று சந்திக்க மறுத்தன. யாருக்கு யார் ஆறுதல் கூறுவது?

விசுவலிங்கத்தார் மட்டும் அவ்வளவு நடக்க முடியாததால் எழும்பாமல் இருக்க, மற்றைய எல்லோரும் தலைவாசலுக்குள் போய் சந்திரன் குடும்பத்தினர் அனைவரின் கைகளையும் பிடித்தபடி விம்மினார்கள்.

அப்போ "வேவியக்கா எங்கே?" என யாரோ கேட்க, அனைவரின் கண்களும் அவரைத் தேடின.

அறை, தலைவாசல், குசினி எங்கும் வேவியக்காவைக் காணவில்லை.

ஒரு சின்னப் பரபரப்பு.

"அம்மா!. . . அம்மா!" என்றவாறு சந்திரன் பினவளவுப்பக்கமும் கக்கூஸடிப் பக்கமும் போய்ப் பார்த்தான்.



படிப்பகம்

padippakam



வேவியக்கா பின்வளவில் நின்ற தென்னைமரத்தைப் பிடித்தபடி வளவு முழுவதையும் பார்த்துக் கொண்டு நின்றா.

"என்னம்மா. . . . நேரம் ஆகுதல்லோ. . . ."

"இல்லையடா. . . ." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாலும் சொல்லத் தெரியவில்லை. மூக்கை உறிஞ்சியபடி கண்களை முழங்கையால் துடைத்தபடி வீட்டுக்குள் வந்த வேவியக்காவை நேர் கொண்டு பார்க்கும் வலு அங்கு யாருக்கும் இருக்கவில்லை.

இந்த இக்கட்டை சந்திரனின் சிறிய தாய் மகன் சுரேசின் குரல் உடைத்தது.

"அன்ரி. . . ஒழுங்கேக்கை கார் வந்திட்டுது" என அவன் சொன்ன போது வேவியக்கா அவனைக் கட்டிக்கொண்டு பலத்த குரலில் அழத்தொடங்கினா.

வேவியக்கா தன்னைத் தானே அடக்க முடியாது தவித்தா.

அப்போது சந்திரன் சற்றுக் கோபமாக, "இண்டைக்குப் போனது போலைத்தான். . . நானும் செத்து பிள்ளையள் நடுத்தெருவுக்கு வந்த பிறகு வள்ளத்திலை போங்கோ" என அதட்டினான்.

"சந்திரன் போகேக்கை சந்தோஷமாய் வெளிக்கிட வேணும். . . . நீ பொறு. . . திலகம் வந்து அம்மான்ரைக் கையைப் பிடி" என யாரோ ஒருத்தர் சொல்ல திலகமும் அழுதபடி வந்து தாயின் கைகளைப் பிடித்தாள்.

அன்ரியின் மகன் சுரேஸ் விசுவலிங்கத்தாரின் கைகளைப் பிடித்து முன்படியில் இருந்து கவனமாக எழும்ப உதவி செய்ய மற்றவர்கள் பெட்டிகளைத் தூக்க அனைவரும் தலைவாசலில் இருந்து முற்றத்துக்கு இறங்கினார்கள்.

வேவியக்கா தன்னை அடக்க முடியாது தவித்தாலும் திலகம் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.



படிப்பகம்

padippakam



"அம்மா கற்பூரம் எங்கை" மெதுவாகக் கேட்க, கைகளைத் திறந்து காட்டினா. கைமுட்ட விளைவு கற்பூரம்.

"50 வருசமாய் வோட்டுப் போட்டவையும் வாழவைக்கேல்லை. . . வந்து வந்து காசு கேட்க குடுத்த 25 இயக்கங்களும் வாழ வழி செய்யேல்லை. . . எல்லாரையும் நம்பினதை விட நாங்கள் போராடியிருக்க வேணும். . . . . " என நிதர்சனமான ஓர் உண்மையை கூட்டத்தில் இருந்து யாரோ சொன்னார்கள்.

நொந்து போயிருந்த மணங்களை அது சற்றுக் குத்தியது.

யாரும் பேசாது ஒழுங்கையில் இறங்கினார்கள்.

வீட்டு வாசலுடன் இருந்த பொதுக்கிணற்றடி. . . அப்பால் பிள்ளைகள் விளையாடும் விளாத்தியடி. . . சிறிய தாய் வீடு. . . பெரியன்ரி வீடு என்று ஒழுங்கை நீண்டு வந்து இடையில் பெரிய வளவு ஒன்றில் நின்ற அம்மாளாச்சியின் அரசடியில் நின்றது.

ஒவ்வொன்றையும் தாண்டிவர வேவியக்காக்கு மனத்திலும் உடலிலும் அதிக பலம் தேவைப்பட்டது.

தினசரி நூறு தடவைக்கு மேல் வெறும் கால்களுடன் நடந்து திரியும் ஒழுங்கைதான் அது. ஆனால் இன்று மட்டும் ஒழுங்கையில் இருந்த சரளைக் கற்கள் அதிகமாகவே குத்தின.

இப்போது அனைவரும் கோயிலடியில் நின்றார்கள்.

"அம்மா கற்பூரத்தைக் கொளுத்துங்கோ" எனச் சந்திரன் சொல்ல வேவியக்கா தன் கைநிறைய வைத்திருந்த விளைவு கற்பூரத்தை வாசல் கற்கள் மீது வைத்தா.

வேவியக்கா கொளுத்தி கொளுத்தியே அதிக கருமை பெற்ற கல்லு அது.

நெருப்புக் குச்சியைத் தட்டி அதைக் கொளுத்திவிட்டு "இனி எப்ப ஆச்சி உன்னைக் காணப் போறன்" எனத் தலையில் அடித்துக் கொண்டு குழறத் தொடங்கினா.

கற்பூரம் ஏற்றி வைத்த கற்கள் கூடக் கதறத் தொடங்கின.



படிப்பகம்

padippakam



"அம்மா அழாதையுங்கோ. . . . .அழாதையுங்கோ. . . . ." எனத் திலகம் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதாள்.

"விடடி என்னை. . .எல்லாருமாய் என்னை என்ரை ஆச்சியிற்றை இருந்து கொண்டு போகப் போறியள். அவாவோடை கொஞ்சம் இருக்க விடடி", திலகத்தின் கைப்பிடியில் இருந்து திமிறிக்கொண்டு கோயில் வாசலில் ஒப்பாரி வைத்தபடி குந்தியழுதா.

"மனுஷி போய்ச் சேர முதலே செத்துப் போடும் போலை கிடக்கு" கூட்டத்தினிடையே ஒரு குசுகுசுப்பு.

அப்போது ஒழுங்கை முகரியில் நின்ற கார் உரத்து ஹோர்ன் அடித்தது. இது வேவியக்காவின் உயிரை உலுக்கியது போன்றிருந்தது.

அதேவேளை ஒழுங்கை முகரியில் கேட்ட குரல் அனைவரின் கவனத்தை அதியமாகத் திருப்பியது.

"தெத்தெரி. . . தெத்தெரி. . . தெதரி. . . தெரி. . .தெரியேல்லை. . . . தெத்தெரி. . . .தெத்தெரி. . .தெதரி. . .தெரி. . . தெரியேல்லை. . ."

என்றவாறு தெத்தெரிக் குருடன் தனது தடியைத் தட்டித் தட்டிக் கொண்டு வந்தான். .

ஊத்தை உடுப்பு. . . . உடம்பை மறைக்க இடுப்பில் ஒரு சின்னத் துண்டுத் துணி. . . ஒரு கையில் தடி . . . மறுகையில் தேத்தண்ணீர் குடிக்க பால் ரின் பேணி. . . .அதனுள் சில சில்லறைகள். . . . கக்கத்தினுள் இரண்டொரு ஊத்தை உடுப்புகள். . .

தெத்தெரி. . . . தெத்தெரி என அவன் கூவிப் பிச்சை எடுப்பதால் அவன் பெயரே தெத்தெரியாகி விட்டது.

பருத்தித்துறை தொடக்கம் கொடிகாமம் வரை யாழ்க்குடாநாட்டில் பல ஊர்கள் அவனுக்கு அத்துப்படி. ஒவ்வோர் ஊரிலும் ஓர் தங்கு மடம். அவ்வகையில் சங்கானையில் அவனுக்கு ஆதரவு வேவியக்கா வீடு.

"குருடன் வாறான். முழிவிளத்துக்கு கூடாது" எனக் கூட்டத்திடையே



படிப்பகம்

padippakam



ஒரு சரசரப்பு. . .

கோயிலடியில் வழமைக்கு மாறாக அந்தக் காலைவேளையில் அதிகமாய் ஆட்கள் நின்ற அசுமாத்தத்தை நன்கு உணர்ந்த தெத்தெரி, "என்ன விசேசமாக்கும்" எனக் கேட்க "அது சந்திரன், வேவியக்காவை இந்தியாக்குப் போகினம்" என அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

"வேவியக்கை. . . வேவியக்கை. .. நீ போறியோ. . . இனி நான் தார் வீட்டை தங்கிறது. . . . சந்திரனைக் கொண்டு என்ரை செத்தவீடு செய்வன் எண்டியே. . . இப்ப நீயும் போகப்போறியோ."

வேவியக்காவின் உடம்பு முழுக்க குளிர்ந்து கொண்டு வந்தது.

"வேவியக்கை இனி தார் எனக்கு குளிக்க வாக்கிறது. . . . என்ரை காசுகளை எண்ணித் தாறது. . . " எனத் தொடர்ந்தான்.

அதிகாலையில் இருந்து அடிமனத்துள் இருந்து ஆட்டிக் கொண்டிருந்த அந்தப் பூதாகாரம் மேலே மேலே எழுந்து வந்து கொண்டிருந்தது.

"எனக்குத்தான் கண்ணில்லை . . . . நீயும் கண்ணை மூடிக் கொண்டு போறியோ" என தெத்தெரி தொடர்ந்தான்.

பெத்த பிள்ளைகள் நாலுடன் பெறாத பிள்ளையா அவனையும் வளர்த்த வேவியக்காவின் மனம் இப்போது அதிகமாய் தள்ளாடியது.

"தெத்தெரி நான் போகேல்லையடா. . . . . .உன்னையும் இந்த அம்மாளாச்சியையும் விட்டுட்டு நான் போகேல்லையடா. . . . " எனக் குமுறிக்கொண்டு எழுந்த வேவியக்கா அப்படியே மயங்கிச் சாய்ந்தா. திலகம் கைத்தாங்கலாகப் பிடித்து தனது மடியில் வைத்துக் கொண்டாள்.

சந்திரன் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். அவன் மனது பதைபதைத்தது.

"தள்ளி நில்லுங்கோ. . . கொஞ்சம் காத்துப்படட்டும். . ." என கூட்டத்தை விலக்கி யாரோ தண்ணி தெளித்தார்கள்.



படிப்பகம்

padippakam



அப்போது ஒரு கையை கோயிலடித் தென்னையிலும் மறு கையை கைத்தாங்கலாக சுரேசன் பிடிக்க நின்றிருந்த விசுவலிங்கத்தார் “சந்திரன் இஞ்சை வா” எனக் கூப்பிட்டார்.

சந்திரன் தகப்பனுக்கு கிட்டவாகப் போனான்.

“சந்திரன் . . . நான் சொத்தியெண்டாலும் உன்னோடை வாற தைரியம் எனக்கிருக்கு. ஆனால் கொம்மாக்கு எந்த தைரியமும் இல்லை. . . . அவள் இந்தியாக்கு வந்தாலும் ஒரு நடைப்பிணமாய்த் தான் இருக்கப் போறாள். . .வீடு . . . வளவு. . . சொந்தங்கள். . . அக்கம். . . பக்கம். . . இந்தக் கோயிலடி. . . எண்டு வரிச்சுமட்டை கட்டின வேலியள் மாதிரி கட்டுப்பட்டு இருக்கிறா. இப்ப ஏதோ ஒரு மட்டையைச்சரி கயிற்றைச் சரி நீ கழட்டினால் முழுவேலியும் பாறிப்போகுமடா.”

தகப்பன் சொல்லுவதில் உள்ள நியாயங்களை சந்திரன் மௌன மாகக் கேட்டுக் கொண்டு நிற்க விசுவலிங்கத்தாரே தொடர்ந்தார்.

“நீ பிள்ளையளோட போ. . . திலகத்தையும் இஞ்சை ஆமிக்காரருக்கை வைச்சிருக்கேலாது. . . அவளையும் கூட்டிக் கொண்டு போ. . . . நாங்கள் எப்பிடியோ இஞ்சை காலத்தைக் கடத்திப் போடுவம்.”

தகப்பன் சொன்னவற்றுக்கு சந்திரன் எதுவும் எதிர்த்துக் கதைக்கவில்லை.

வரிச்சுமட்டை வேலிகளின் பலங்களையும் பலவீனங்களையும் அவன் நன்கு அறிவான்.

“காரைப் போகச் சொல்லுங்கோ. . . நாளைக்குப் போகலாம்” எனச் சுற்றி நின்றவர்களிடம் சொல்லிவிட்டு தாய்க்கு கிட்டவாகப் போனான்.

“அம்மா வீட்டை வாங்கோ. . . போவம்” எனக் கூறியபொழுது முதன் முதலாக சந்திரனின் குரல் தழதழத்தது.

•



படிப்பகம்

padippakam

# ரஞ்சனி

புகையிரதம் ஓசுகை இன்னும் ஒரு மணித்தியாலத்தில் அடைந்து விடும்.

காலையில் கொப்பனேகனில் ஏறியது முதல் இந்த ஆறுமணி நேரமும் சின்னக்குழந்தைகள் அடம் பிடித்து மூலைச்சீற்றில் இருப்பது போல் இருந்து கொண்டு, எதிரே ஓடும் வாகனங்கள், வயல்கள், கம்பித் தூண்களில் கண்கள் பதிந்திருக்க நினைவுகள் மட்டும் ரஞ்சனியைப் பற்றியதாக இருந்தது சாம்பசிவமூர்த்திக்கு – சாம்பு மாமாக்கு.

“சாம்புமாமா நீங்கள் நேரில் வந்தால்தான் எல்லாம் சரிவரும். . . இல்லாவிட்டா எங்கடை மானம் மரியாதை எல்லாம் அவளாலையே சந்தி சிரித்துப் போடும்” சிவநாயகமும் பரிமளமும் ரெலிபோனில் கதறிய பரிதாபம் தாங்காமல் தான் சாம்புமாமா றெயின் ஏறினார்.

சாம்புமாமா! டென்மார்க்குக்கு வந்த ஏழு வருட காலத்துள் இரண்டு மகள்களையும் கரைசேர்த்துவிட்டு, “கடைக்குட்டிக்கும் காசு சேர்த்தால் என்னுடைய டென்மார்க் வாழ்க்கை சரி” என்று பிடிவாதமாகத் தனது குடும்பத்தை இங்கு அழைக்காமல், தான் ஊர் போகும் நாளை எண்ணி எண்ணிக் காத்திருக்கும் மிகச் சாதாரணமான யாழ்ப்பாணப் பெரியவர் – வயது 53.

அவரின் வாழ்க்கை முறைகளும், வாழ்க்கை மீது அவர் கொண்டிருந்த வித்தியாசமான பார்வையும் பலரை அவருடன் இணைக்கக் காரணமாகின. அது மட்டுமில்லாது மரியாதை காரணமாக சின்னப் பிள்ளைகள் தொடக்கம் பெரியோர்கள் வரை சாம்பசிவமூர்த்தியை சாம்புமாமாவாக மாற்றியிருந்தார்கள்.

அவ்வகையில் 1997ல் மிடில்பார்ட் அகதிக்காம்பில் சாம்பு மாமாவுக்கு ஏற்பட்ட சந்திப்புகளில் ஒன்றுதான் சிவநாயகம் – பரிமளம் குடும்பம். மகள் ரஞ்சனி. மகன் ரமேஸ்.

படிப்பகம்

padippakam



“சாம்புமாமா! சாம்புமாமா!! தம்பியையும் கூட்டிக்கொண்டு வோக்கிங் போவாமா” செல்லமாகத் தன்னை ரஞ்சனி சுற்றி வந்தது நேற்றுப் போல் இருந்தது.

காலம் ஓடிய வேகத்தை அவரால் நம்ப முடியவில்லை.

அப்போது ரஞ்சனிக்கு 7 வயது. பயங்கரச் சுட்டிப் பெண். அகதி நிலையத்தில் நடாத்தப்படும் கலாச்சார வகுப்புகளில் “பைந்தமிழ்ச் சோலையில். . .” பாடினால் அடுத்த வரியில் காணப்படும் பரவசம் அனைவர் முகங்களிலும் படரும்.

சலங்கை இல்லாவிட்டாலும் சின்ன மணிகளைக் கோர்த்து காலில் கட்டிக்கொண்டு அவள் ஆடுவதைப் பார்த்து “உங்கள் பிள்ளைக்கு நடராஜர் கடாச்சம் நிறையவே உண்டு. கெட்டிக்காரியாய் வருவாள்” என கண்கள் கலங்கப் பரவசப்படுவார்.

இப்பொழுது ரஞ்சனிக்கு 18 வயதாகிறது. அந்த ரஞ்சனியால்தான் இன்று பிரச்சனை என்று தாயும் தந்தையும் ரெலிபோனில் கதறியபொழுது, தாயும் தந்தையும் மறுக்கின்ற அல்லது அவர்களுக்கே புரியாத ஒரு கிரகணம் அந்தக் குடும்பத்தைச் சுற்றி நிற்கிறதோ என நினைத்தாரே தவிர நிச்சயமாக ரஞ்சனி காரணமாக இருக்கமாட்டாள் என அவர் மனம் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டது.

நேரில் சந்தித்துக் கதைத்த பின்புதான் முழுப்பிரச்சனையையும் அறிய முடியும். ரெலிபோனில் கேட்டதெல்லாம் கீறிட்ட இடத்தை நிரப்பும் வாசகங்கள்தான் என்ற நினைப்புடன் றெயின் ஏறினார். மேலாக ரஞ்சனியுடன் ஒரு வார்த்தை கூடக் கதைக்கவில்லை.

மிடில்பார்ட்டில் இருந்து சிவநாயகம் குடும்பமும், சாம்புமாமா குடும்பமும் பிரிந்து ஓகூசுக்கும் கொப்பனேகனுக்கும் மாறியபின்பு தினசரி ரெலிபோனில் கதைத்து வந்தவர்கள். . . தமக்கு தமக்கு வேலைகள் அதிகரிக்க அதுவே கிழமைக்கு ஒரு தடவை. . . மாதத்திற்கு ஒரு தடவை. . . எனக் குறைந்து நல்ல நாள் பெரிய நாட்களில் வாழ்த்துக் கூறி தமது சுக துக்கங்களைப் பரிமாறிக்



படிப்பகம்

padippakam



கொண்டார்கள்.

அதிலும் கடைசியாகக் கதைத்தது எப்போது என சாம்புமாமாவுக்கு நன்கு ஞாபகம் இருக்கின்றது.

அது ரஞ்சனி வயதுக்கு வந்தபொழுதுதான்.

தன் பொருளாதாரப் பிரச்சனைகளினால் தனது எந்தப் பெண் பிள்ளைக்கும் நாலு பேருக்குச் சொல்லி ஒரு சாமத்தியச் சடங்கு செய்ய முடியவில்லை என்ற ஆதங்கம் என்றுமே அவரினுள் இருந்து கொண்டிருந்தது. ஆகவே, ரஞ்சனியின் விடயத்தைக் கேள்விப்பட்டதும் தன் பிள்ளையே பெரியவளாகி விட்டது போன்ற சந்தோஷத்தில்,

"அப்ப பரிமளம், பிள்ளைக்கு வடிவாய் பெரிசாக செய்வம்" – அவர் குரல் குதூகலித்தது.

ரெலிபோனின் மறுமுனையில் மௌனம்.

"ஏன் பிள்ளை யோசிக்கிறாய். . . நானே வந்து எல்லாத்தையும் முறைப்படி செய்து வைக்கிறன்."

"இல்லை மாமா. . . . இப்ப உதுகள் செய்யுறது எல்லாம் டீசன்ற் இல்லை. . . . இனி டெனிஷ்காரருக்கு எல்லாத்துக்கும் காரணம் சொல்லிக் கொண்டிருக்கேலாது. பேசாமல் இந்தக் கிழமை வீட்டிலை நிண்டிட்டு அடுத்த கிழமை பள்ளிக்கூடம் போகட்டும்."

சாம்புமாமாவின் குதூகலம் எல்லாம் கை கட்டிக் கொண்டன.

சரி, பிள்ளையைக் கூப்பிடு என ரஞ்சனியை அழைத்து "நல்லாய் இருக்க வேணும்" என கண்கள் கலங்க வாழ்த்திவிட்டு ரெலிபோனை வைத்தார்.

மனம் ஏனோ கனத்தது.

கொப்பனேகனில் இருந்து ஓகூஸ் வரை ஓடிய களைப்பைத் தீர்ப்பது போல் இன்ரசிற்றி தனது வேகத்தைப் படிப்படியாகக் குறைத்து மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

சாம்புமாமா எட்டிப் பார்த்தார். சிவநாயகத்தைக் காணவில்லை.



படிப்பகம்

padippakam



தனது சின்ன தோள் பையை எடுத்துக் கொண்டு மெதுவாக இறங்கி வந்தார்.

பிளாட்பாரத்தில், அவருடன் மிடில்பார்ட் அகதி முகாமில் ஒன்றாயிருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தினர் நின்று கொண்டிருந்தனர். சாம்புமாமாவும் அவர்களும் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொண்டு பரஸ்பரம் சிரித்து சுகம் விசாரித்துக் கொண்டார்கள்.

தூரத்தில் சிவநாயகம் இளைக்க இளைக்க ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார்.

சிவநாயகத்தைச் சுட்டிக்காட்டி "அதிலை வாற சிவநாயகம் வீட்டைதான் வந்தனான்" என சாம்புமாமா கூறியபொழுது "ஆ. . . " என சுவாரஸ்யம் இல்லாது அவர்கள் தலையாட்டினார்கள்.

கிட்ட வந்த சிவநாயகம், "என்ன மாமா கண நேரமோ?"

"சீ. . . இப்பதான்"

"சரி! வாங்கோ மாமா போவம்."

சாம்பு மாமா மட்டும் அந்தத் தமிழ்க்குடும்பத்துக்கு "போட்டு வாறன்" சொல்லி விடை பெற்றுக் கொண்டார்

"என்ன சிவநாயகம். . .உங்கடை சிற்றியிலை இருக்கிற அந்தக் குடும்பத்தை தெரியாத மாதிரி வாறாய்?"

"இல்லை மாமா. . . ஆகத்தமிழ்ச் சனங்களோடை பழகினால் வீண் பிரச்சனைகள் எண்டு அவ்வளவாகப் பழகிறதில்லை"

இப்ப மட்டும் பிரச்சனை வராமல் இருந்திட்டுதோ எனக் கேட்க வேணும் போல் இருந்தது. ஆனால் கேட்கவில்லை.

மேலும் தமிழ் ஆட்கள் என பொதுவாகச் சொல்லும் ஒரு சொல்லை தமிழ்ச் சனங்கள் என சிவநாயகம் சொன்ன தோரணையில் இருந்து தமிழ்ச் சமுதாயத்தில் இருந்து அவர்கள் விலகி இருக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்தது.



படிப்பகம்

padippakam



சிவநாயகத்திற்குப் பின்னால் சென்று அவர்களது விலையுயர்ந்த காரில் ஏறிக்கொண்டார்.

வீட்டிற்கு வந்து சேரும்வரை சிவநாயகம் ரஞ்சனி பற்றி ஏதும் கதைக்கவில்லை. சாம்பசிவத்தாரும் எதுவும் கேட்கவில்லை.

"நல்ல பெரிய வீடப்பா. . ." எனக் கூறிக்கொண்டு காரில் இருந்து இறங்கினார்.

"இது அவ்வளவு வாடகையில்லை. இதுவும் அந்தக் கொன்ராக் பமிலியின்ரை வீடு."

(டென்மார்க்கிற்கு அகதியாக மக்கள் வந்தபொழுது அந்த மக்கள் இந்த நாட்டைப்பற்றி நன்கு அறிய. . . உதவி செய்ய . . . தாமாக முன்வந்த குடும்பங்களைத் தான் கொன்ராக் பமிலி என அழைப்பதுண்டு.)

"அந்தக் கொன்ராக் பமிலி" என்னும்பொழுது சிவநாயகத்தின் தலையும் குரலும் கொஞ்சம் தாழ்ந்தது.

"வாங்கோ மாமா" பரிமளம் கதவைத் திறந்து கொண்டு வந்தாள்.

பரிமளம் நன்கு மாறியிருந்தாள். நன்கு உப்பி, தலையெல்லாம் கிறில் செய்து, கழுத்து நிறைய நகை போட்டு டெனிசும் இல்லாத தமிழும் இல்லாத இருநாட்டுக் கலப்பிலும் நின்றிருந்தாள். அதனாலோ என்னவோ முன்பிருந்த இலட்சுமிகரம் இல்லாமல் போயிருந்தது.

சாம்புமாமாவிடம் பரிமளம் தோள் பையை வேண்டிக்கொள்ள மூவரும் போய் ஹோலில் அமர்ந்தார்கள்.

ஒரு பணக்கார டெனிஷ் வீடே தோற்று விடுமாப் போல் ஹோல் அழகு படுத்தப்பட்டிருந்தது. அது அது இருக்க வேண்டிய இடத்தில் அழகாய்த்தான் இருந்தது.

சாம்பசிவத்தாரும் எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டு தாய் தகப்பன் தாங்களாகவே தொடங்கட்டும் எனக் காத்திருந்தார்.



படிப்பகம்

padippakam



ஆனால் யார் முதலில் தொடங்குவது, எங்கிருந்து தொடங்குவது என்ற தயக்கம் சிவநாயகத்திற்கும் பரிமளத்துக்கும் கூட இருந்தது.

வினாடிகள் நிமிடங்களாக அவர்களின் தயக்கத்தைப் புரிந்து கொண்ட சாம்பசிவத்தார், "பிள்ளை எங்கை?" என தானாகவே அடியெடுத்தார்.

"இப்ப வந்திடுவாள் . . . நீங்கள் தான் பக்குவமாய் எடுத்துச் சொல்ல வேணும். உங்கள் ஒருத்தரிலைதான் அவள் சரியான மரியாதை வைச்சு இருக்கிறாள்" பரிமளம் மன்றாடுவது போல் கூறினாள்.

"அவளுக்கு தாய் கதைக்க ஏலாமல் கிடக்கு. . . பாய்ஞ்சு விழுகிறாள். . . நேருக்கு நேர் வாய் காட்டுறாள்" சிவநாயகம் தொடர்ந்தார்.

"இப்ப ரஞ்சனியோடை என்ன கதைக்கிறதுக்கு எண்டதுக்கு முதல் உண்மையில் என்ன நடந்தது எண்டு சொல்லுங்கோ. . . பிறகு நான் எப்படிக் கதைக்கிறது எண்டதைப் பார்ப்பம்."

பரிமளம் தானே சொல்லத் தொடங்கினாள்.

"என்னத்தைச் சொல்லுறது. . . வந்த காலத்திலை இப்ப ரஞ்சனி செய்யப் போறன் எண்டு நிக்கிற டெனிஷ் பொடியன்ரை குடும்பம்தான் எங்கடை கொன்ராக் பமிலி. . . நல்ல சனங்கள். . . வந்த காலத்திலை இந்தப் பொடியன், தங்கச்சியார் எல்லாம் வெள்ளி பின்னேரம் எங்கடை வீட்டை வந்தால் இஞ்சையே நிண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலைதான் தங்கடை வீட்டை போறதுகள். . . சிலவேளை எங்கடை பிள்ளையளையும் அவையள் கூட்டிக் கொண்டு போய் இராவிலை வைச்சிருக்கிறவையள் . . . . டெனிசும் நல்லாய் படிச்சு அவங்கடை நடைமுறைகளையும் பழகட்டும் எண்டு தான் விட்டனாங்கள். . . ஆனால் அது இப்பிடி வந்து போச்சு. . . "

பரிமளம் சொல்லிக்கொண்டிருக்க சிவநாயகம் தேனீர் கலந்தெடுத்து வந்தார்.



படிப்பகம்

padippakam



"எனக்கு அவள் சாமத்தியப்பட்ட பிறகு அவ்வளவாக விட விருப்பமில்லை. . . ஆனால் நெடுக வீட்டுக்கை அடைஞ்சு இருக்கிறதோ. . . பாவங்கள் எண்டிட்டு. . . . இரண்டொரு நாள் விட்டனான். . . . அதோடை அந்தப் பொடியன் பாடங்கள் சொல்லிக் குடுக்கிறது. . . ." எனச் சிவநாயகம் தொடர பரிமளத்தின் பார்வையினால் அவர் மௌனமானார்.

இதை சாம்பசிவத்தார் கவனிக்கத் தவறவில்லை.

"அப்ப. . . . தெரியாமல் தான் கேக்கிறன். . . . இஞ்சை இருக்கிற மற்ற தமிழ் ஆட்களின்ரை பிள்ளையளும் உப்பிடித்தானோ?

"சீ. . . . அவ்வளவு சனங்களுக்கு கொன்ராக் பமிலி கிடையாது. . . டெனிஷ்காரர் எண்டாய்ப் போலை எல்லாரோடையும் சேருகிறான்களோ. . . எங்களைப் போலை டீசன்ரான குடும்பங்களோடை தானே அவங்களும் பழகுவாங்கள். . . இஞ்சை இருக்கிற தமிழ்ச் சனங்கள் அவ்வளவாய் டெனிஷ் கதையாதுகள். . . . இனி. . . ஊரிலை முன்னை பின்னை தெரியாத சனங்களோடை என்னத்தைப் பழகிறது எண்டிட்டு நாங்களும் அவ்வளவாய் பழகிறேல்லை. . . .நாலு நாளைக்கு பழகுங்கள். . . பிறகு மூஞ்சையை நீட்டுங்கள். . . றோட்டிலை நிண்டு சண்டை பிடிக்குங்கள். . . அதுபடியால் அந்தக் குடும்பங்களிலை என்ன கூத்து நடக்குது எண்டு எங்களுக்குத் தெரியாது."

ஒரு தரம் மூச்சை எடுத்து விட்டுக்கொண்டு பரிமளம் மீண்டும் தொடர்ந்தாள்.

"ஆனால் மாமா. . . .நாங்கள் நல்லாய் டெனிஷ்காராரோடை பழகிறம் எண்டு எல்லா தமிழ்சனங்களுக்கும் சரியான பொறாமை. . . அப்ப இதைக் கேள்விப்பட்டால்தான் காறித்துப்புங்கள்", பரிமளத்தின் பலவிதமான குழப்பங்களில் வார்த்தைகள் தள்ளாடின.

சாம்பசிவத்தார் தியானத்தில் இருந்து கேட்டுக்கொண்டு இருப்பது போல கண்ணை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டு இருந்தார்.. சில வேளைகளில் "உம்" கொட்டினார். பின் தொடர்ந்து யோசித்துக்



படிப்பகம்

padippakam



கொண்டிருந்தார்.

சிவநாயகமும் பரிமளமும் சாம்பசிவத்தார் என்ன சொல்லப் போகின்றார் என்று அமைதியாகக் காத்திருந்தார்கள்.

சாம்பசிவத்தார் கண்களை மெதுவாகத் திறந்து வெளியே பார்த்தபடி சாடையாகச் செருமிவிட்டு ஏதோ ஒரு தயக்கத்துடன் கூற வெளிக்கிட "ஹாய் மாமா" என்றபடி ரஞ்சனி வாசல் கதவைத் திறந்துகொண்டு வந்தாள்.

சாம்பசிவத்தாரால் நம்ப முடியவில்லை. அந்தக் குட்டி ரஞ்சனியா இவள் என வியக்கும் வண்ணம் வளர்ந்திருந்தாள். அந்தச் சிரிப்பில் சரி. . குதூகலத்தில் சரி. . . காற்றில் பறக்கும் நீண்ட நெற்றி முடியை ஒதுக்கி ஒதுக்கிக் கதைக்கும் பாவனையில் சரி. . . எதிலுமே அவள் மாறவில்லை.

இயற்கை ஏற்படுத்தியிருந்த மாற்றங்களைத் தவிர அதே ரஞ்சனி தான், அதே கள்ளங்கபடமில்லாத ரஞ்சனிதான் தன் முன்னே நிற்பதாய் சாம்பசிவம் உணர்ந்தார்.

ஆனால் அந்தக் கள்ளம் கபடம் இல்லாத அவளின் இயல்புதான் இன்று தாய் தகப்பனுக்குச் சரி. . . அன்றில் அவளுக்குச் சரி வந்துள்ள பிரச்சனைகளுக்குக் காரணம் என முற்றாக நம்பினார்.

"என்ன மாமா திடீரென்று வந்திருக்கிறியள்?"

"ஏன் பிள்ளை வரக்கூடாதோ. . . . உன்னைப் பாக்க வேணும் போல இருந்தது. . ."

"இல்லை, பொய் சொல்லுறியள். . . அப்பா அம்மா நான் லாசை லவ் பண்ணுறன் எண்டு ரெலிபோனிலை அழுதிருப்பினம். தங்களாலை தடுக்கேலாமல் இருக்கு. . . நீங்கள் வாங்கோ எண்டு கெஞ்சியிருப்பினம். . . நீங்களும் வந்திருப்பியள். . . அப்பிடித்தானே" கூறிவிட்டு செல்லமாகக் கண்ணடித்தாள் ரஞ்சனி.

சாம்பசிவத்தர் அதிர்ந்து போனார் என்றாலும் சமாளித்துக் கொண்டு "அப்ப அந்த லாசைத்தான் கட்டுறது எண்டு முடிவு எடுத்திட்டியோ?"



படிப்பகம்

padippakam



ஒரு வினாடி தன்னைச் சுதாரித்துக் கொண்டு. . . "மாமா. . . . அப்பா அம்மா இண்டைக்கு பயப்பிடுகிற மாதிரி நாளைக்கு கல்யாணம் கட்டிக் கொண்டு நாளையிண்டைக்கு பிள்ளை பெறுகிறது. . . . அப்பிடி எதுவுமே இல்லை. . . . நானும் அவனும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறம். . . சேர்ந்து வாழ ஆசைப்படுறம். . . அது பிழையோ?. . . அப்பா அம்மா சரி. . இப்ப நீங்கள் சரி தடுக்க நினைக்கிறது தான் பிழை."

அவள் கண்களில் ஓர் உண்மையின் ஒளி தெரிந்தது.

சாம்பசிவத்தார் ஒரு தரம் ஆழமாக மூச்சை உள்வாங்கிக் கொண்டார்.

"இல்லை ரஞ்சனி. . . நீங்கள் இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நல்லாய் விரும்பிறியள் எண்டு சொல்லேக்கை அதைச் செய்யாதையுங்கோ என கடைசி வரை தடுக்க மாட்டன். . . "

சிவநாயகத்துக்கும் பரிமளத்திற்கும் பயம் தொற்றிக் கொண்டது.

"ஆனால் இஞ்சை நடக்கிற விவாகங்களைவிட விவாகரத்துகள் தான் கூட எண்டது உனக்கே தெரியும். . . .தாய் தகப்பன் இருந்தும் அநாதையாய் வாழுற பிள்ளைகள், பிள்ளையள் இருந்தும் அநாதையாய் வாழுற பெற்றோர்கள் என்று என்னாலை ஜீரணிக்க முடியாத ஒரு சமுதாயத்துக்கை நீ போய் வாழ் எண்டு நானாக வழி அனுப்பி வைக்க மாட்டன்."

சிவநாயகத்துக்கும் பரிமளத்திற்கும் மீண்டும் மூச்சு வந்தது.

"ஆனால் நீயாகப் போனால் நிச்சயம் நல்லாய் இரு என வாழ்த்துவன். . . அதுசரி ரஞ்சனி. . . ஒரு விதண்டா விவாதத்துக்கு கேட்கிறன். . . இப்பிடியான கல்யாணங்களாலை எங்கடை கலாச்சாரம் பண்பாடுகள் எண்டு இருக்கே அது எல்லாம் இத்துப்போய் ஒரு நாளைக்கு அழிஞ்சு போகும் எண்டு நீ நினைக்கிறேல்லையோ?

ரஞ்சனி சிறிது யோசித்தாள்.

சாம்பசிவத்தார் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.



படிப்பகம்

padippakam



"மாமா. . . சொல்லுறத்துக்கு கொஞ்சம் வெக்கக் கேடுதான் . . . எங்கடை கலாச்சாரம். . . . பண்பாடு எண்டு சொல்லுறியளே. . . அதுகள் இதுதான் எண்டு அப்பா சரி. . . அம்மா சரி. . . எதுவுமே சொல்லித் தரேல்லை. சொல்லித் தந்தது எல்லாம் அந்தத் தமிழ்க் குடும்பம் கூடாது. . . . இந்தத் தமிழ்க் குடும்பம் கூடாது. . . அவையளோடை பழகக்கூடாது. . . கொன்ராக் பமிலியோடை பழகுங்கோ எண்டு அவையளாகவே கை காட்டிச்சினம். நானும் பழகினன். இப்ப லவ் பண்ணுறன் எண்டவுடனை ஐய்யோ . . . குய்யோ எண்டு கத்தினம். நான் என்ன பச்சோந்தியோ?" உணர்ச்சி வசப்பட்டு உரத்துக் கதைத்ததால் அவள் குரல் அடைத்தது.

கண்களும் கலங்கின.

"சின்னப் பிள்ளையிலை ஊரிலை பாட்டா பாட்டி வெள்ளிக் கிழமையிலை மாமிசம் சாப்பிடக் கூடாது. . . பொய் சொல்லக் கூடாது எண்டு அணைச்சு எத்தனையோ விசயங்களை சொல்லித் தந்தினம். அதுக்குப் பிறகு எண்டைக்காவது அப்பா சரி, அம்மா சரி ஏதாவது சொல்லித் தந்திருப்பீனமோ. . . . சொன்னது எல்லாம் தமிழரை விட டெனிஷ்காரர் நல்லது எண்டு. நாங்களும் நம்பினம். . இப்ப. . . இப்ப. ."

ரஞ்சனிக்கு கண்கள் சிவந்தன. அதில் சிவதாண்டவம் தெரிந்தது.

சாம்பு மாமா ரஞ்சனிக்காய் பெரிதும் பரிதாபப்பட்டார்.

தொடர்ந்து ரஞ்சனி அங்கே நின்று கதைத்தால் அது பரிமளத்தை கோபப்படுத்தும் என நன்கு உணர்ந்தவராக, "வா. . . உன்ரை அறைக்குப் போவம்" எனக் கூட்டிப் போக முயற்சித்தார்.

ஆனால் ரஞ்சனி அசைவதாயில்லை.

"ஏன் மாமா கனக்க. . . அப்பா அம்மா உண்மையாய் எங்களை வளர்த்திருந்தால் ஏன் உங்களை இண்டைக்கு அங்கை இருந்து கூப்பிட வேணும். . . எல்லாத்துக்கும் மேலாலை. . . அம்மா உப்பிடித் துள்ளுறாவே. . . .ஊரிலை தாத்தா, பாட்டிக்கு முன்னாலை உப்பிடியே பொப் வெட்டிக்கொண்டு திரிஞ்சவா. . . .தினசரி இல்லாவிட்டாலும் பார்ட்டியலலுக்குப் போகேக்கை கொஞ்சமாய் வைன் எடுக்கிற அளவுக்கு அம்மா மாறியிருக்கேக்கை நான் செய்ததிலை என்ன பிழை?"



படிப்பகம்

padippakam



கைகளில் சிலம்புடன் கண்ணகியாக ரஞ்சனி நின்றிருந்தாள்.

பரிமளம் பத்திரகாளியாக மாறினாள்.

யாரும் எதிர்ப்பார்க்காத வகையில் "அம்மா எண்ட மரியாதை யில்லாமல் கதைக்கிறியோ" என்றவாறு ரஞ்சனியின் இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி பரிமளம் அடித்தாள்.

"பிள்ளை பிள்ளை, அவளை அடியாதை" சாம்பசிவத்தார் தடுத்தார்.

சிவநாயகம் மகளைக் கட்டிப் பிடித்து அப்பால் கொண்டு செல்ல முயற்சித்தார்.

"என்னை அடிச்சுக் கொல்லட்டும், விடுங்கோ" என ரஞ்சனி தகப்பனிடம் இருந்து திமிறினாள்.

தொடர்ந்து கேவி அழுதாள். இந்தக் கேவலில் தோல்வி இருந்தது. ஏமாற்றம் இருந்தது. இந்த அடக்குமுறைக்கு எதிராக எல்லாரையும் இழக்கப் போகின்றேனோ என்ற வேதனை இருந்தது.

நிலைமைச் சரிசெய்ய சாம்பசிவத்தாருக்குத் தெரிந்த ஒரே வழி ரஞ்சனியை அவள் அறைக்குக் கூட்டிச செல்வதுதான்.

"வா பிள்ளை உன்ரை அறைக்குப் போவம்."

சாம்பு மாமாக்குப் பின்னால் தன் அறைக்குப் போனாள்.

அவளின் அறை நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மேசையில் தாய் தகப்பன் தம்பியருடன் எடுத்த ஒரு சின்ன படமும் மூன்று பக்கச் சுவர்களில் தம்பியருடன் சேர்ந்தெடுத்த படங்களும் மாட்டப்பட்டிருந்தன. எங்குமே அந்த டெனிஷ் பையனின் படத்தைக் காணவில்லை. ரஞ்சனி மற்ற பிள்ளைகளை விடச் சற்று வித்தியாசம் என்பதை அதுவே சாம்பு மாமாவுக்கு உணர்த்தியது.

நியாயங்கள் ரஞ்சனியின் பக்கம் இருந்தது. உண்மையின் பக்கம் இருந்தது.

கன்னங்களில் கண்ணீர் வழிய யன்னல் ஓரத்தில் நின்று வெளியே



படிப்பகம்

padippakam



பார்த்துக் கொண்டு நின்றாள் ரஞ்சனி.

சாம்பசிவத்தாரால் ஏதும் பேசமுடியவில்லை.

கொஞ்ச நேரம் மௌனமாக நின்றுவிட்டு ஆதரவாக அவளின் தலையைத் தடவி விட்டு மீண்டும் ஹோலுக்கு வந்தார்.

"ஏதும் புத்திமதி சொன்னியளோ?" பரிமளம் பதைபதைத்தாள்.

"இல்லை பிள்ளை . . . அவள் புத்திசாலித்தனமான பிள்ளை. . . அவளுக்கு யாரும் புத்திமதி சொல்லத் தேவையில்லை."

பரிமளம் நிமிர்ந்து பார்த்தாள்.

"நான் சொல்லுறன் எண்டு குறைநினைக்க வேண்டாம். . . இண்டைக்கு அவளின்ரை நிலைக்கு முழுப்பொறுப்பும் நீங்கள் தான். . . அதை நான் விளக்கமாய்ச் சொல்லி உங்களைக் கவலைப்படுத்த விரும்பேல்லை. . . நீங்கள் காட்டின பாதையிலை போன பிள்ளையை நீங்களே இருத்தி வைச்சு இது பிழை எண்டால் அதுகள் என்ன செய்யும்.

இடையிலை ஒரு காலத்திலையாவது. . . இப்பிடித்தான் பிள்ளை. . . போற போற நாடுகளிலை நாங்கள் நடுப்பாம்பு திண்டு எங்களை அட்ஜெஸ் செய்யுறனாங்கள் எண்டு எங்கடை பச்சோந்தித் தன்மையை அதுகளுக்கு விளக்கப்படுத்தியிருக்க வேணும்.

முன்னுக்குப் பின் தெரியாத எங்கடை சனங்களோடை எப்பிடிப் பழகிறது எண்டு புறக்கணித்துவிட்டு இன்னொரு முன் பின் தெரியாத டெனிஷ் சமுதாயத்தை கடவுள் எண்டு காட்டினியள். . . அதுகளும் கும்பிடுதுகள். . . பிரசாதம் கிடைக்கப் போகேக்கை நஞ்சு எண்டு தட்டி விடுகிறியள். . ."

சாம்பசிவம் இடைநிறுத்தினார்.

"ஏன் மாமா, நீங்கள் கதைக்கிறதைப் பார்த்தால் நீங்களே கட்டிக் கொடுத்திடுவியள் போலை கிடக்கு" பரிமளம் கறுவினாள்.

"இல்லைப் பிள்ளை, ரஞ்சனிக்கு முதலே சொன்ன மாதிரி



படிப்பகம்

padippakam



இதைச் செய் அல்லது செய்யாதை எண்டு சொல்லுற நிலையிலை இப்ப நான் இல்லை. ஆனால் ரஞ்சனி உங்கள் எல்லாரிலையும் தன்ரை உயிரை வைச்சிருக்கிறாள். நீங்களும் அவளிலை அதை வைச்சிருக்கலாம். அது அவளுக்குத் தெரியேல்லை. தெரிஞ்ச தெல்லாம் இந்தப் பொடியனும் . . . அவங்கடை அப்பா அம்மா காட்டின அன்பும்தான். . . . "

"அப்ப இப்ப என்ன செய்யுறது மாமா?" சிவநாயகத்தின் குரல் தளதளத்தது.

"நீங்கள் இரண்டு பேரும் தனிய இருந்து யோசியுங்கோ. அவள் எதிர்பார்க்கிற ஒரு அப்பா அம்மாவாக மாறுங்கோ. . . . பிறகு அந்தக் குழந்தையையும் சேர்த்து நல்ல முடிவு எதுவோ அதை எடுங்கோ. இனியும் பிள்ளையிலை கை வைச்சிங்கள் எண்டால் அது ஒன்றில் வீட்டை விட்டுப் போகும். . . இல்லாட்டி மனநோயாளியாய் மாறும். . . . இரண்டுமே உங்களுக்கு தோல்விதான். .. . .

மூவருக்கும் இடையில் ஒரு மௌனம். . . . . சாம்பு மாமாவே தொடர்ந்தார்.

"நாட்டை விட்டு வந்ததே எங்களுக்கு பெரிய தோல்விதான். . . . அப்ப இப்பிடிச் சின்னச் சின்ன தோல்வியள் வரப்போகுது எண்டு யாரும் நினைக்கேல்லை. . . . ஆனால் இப்ப சந்திக்க தொடங்கீட்டம். இனி வரும் காலங்களிலை இன்னும் அதிகமாய் சந்திப்பம்."

சாம்பு மாமா சொன்ன உண்மைகளை ஜீரணிக்க முடியாது அவர்கள் அவஸ்தைப்பட்டார்கள்.

சாம்புமாமா தன் தோள் பையைக் கையில் எடுத்துக் கொண்டார்.

"என்ன மாமா சாப்பிடாமல் போறியள்?"

"இல்லைப் பிள்ளையள். நான் எண்டைக்கும் சாப்பிடலாம். ஆனால் மாடியில் பசியோடை இருக்கிற பிள்ளையைப் போய் பாருங்கோ"

சாம்பசிவம் றோட்டில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

●



படிப்பகம்

padippakam

# என்னால் உனக்காக அழமட்டுமே முடியும்...

அது காதல் என்றே நினைத்திருந்தேன் - நீ
உன் திருமண அழைப்பை நீட்டும் வரை

வானத்தில் பறப்பாய் என கனவுகண்டேன் - நீயோ
வேலி உயரம் கூடத் தாண்டவில்லை!
வாழ்க்கைச் சுமைக்குள்
உன் சிறகுகளை சுருக்கிக்கொண்டாய்

என்னால் உனக்காக அழமட்டுமே முடியும்...

எதற்காக இந்த அவசரம்?
அறுகரிசி... ஆரவாரம்.. தலைவாழை இலை... சோறு பந்தி
எல்லாமே ஓர் நாளைக்குத் தான்..
உன் ஹீரோ பரிவட்டம் இறங்கி விடும்

நாளை மறுநாள்
நாலு சனத்தோடு நீயும் ஒன்றாக
சீட்டுக் கழிவு பார்த்து பார்த்து
சிரசில் பாதி முடி கொட்டிப் போகும்

படிப்பகம்

padippakam



என்னால் உனக்காக அழமட்டுமே முடியும். . . .

எதுக்காக இந்த சிலுவையில்
உன்னையே நீ அறைந்து கொண்டாய்
எவர் செய்த பாவத்தை – உன்
இரத்தத்தால் கழுவுகின்றாய். . . .

என்னால் உனக்காக அழமட்டுமே முடியும். . .

இளமையை உணர முதல்
முதுமைக்குள் குடிபோன
என் முதல் காதலனே போய் வா
சடங்குகளும் சம்பிரதாயங்களும்
உனக்காகக் காத்திருக்கும்

நீ திரும்பி வரும்போது
என் காதல் உனக்காகக் காத்திராது – என்
கவிதை மட்டுமே காத்திருக்கும் – அதுவரை
என்னால் உனக்காக அழமட்டுமே முடியும். . .

●



படிப்பகம்

padippakam

# துடக்குக்கழிப்பு

பனி பூப்போல. . . பூப்போல மெதுவாக காற்றில் ஆடியபடி இறங்கிக் கொண்டு இருந்தது.

வழமைக்கு மாறாக வானம் தெளிவாகவும் பிரகாசமாயும் இருந்தது.

சுமார் பின்னேரம் மூன்று மணிக்கே இருட்டிவிடும் டென்மார்க் அன்று நான்கு மணியாகியும் இருட்டாமல் இருந்தது கொஞ்சம் வியப்புத்தான்.

அன்று வேறு ஞாயிற்றுக்கிழமை. ஆதலால் றோட்டில் விழுந்த பனிப்பூக்களை அடித்துச் செல்ல அதிக போக்குவரத்தும் இருக்க வில்லை. பனிப்படலம் சின்ன பனிமேடாக உயரத் தொடங்கியது.

அந்த பனிமெத்தையில் நிமிர்ந்து படுத்தபடி மூக்கிலும் கண்ணிலும் வந்து விழும் பனிப்பூக்களை. . . அதன் மென்மையை . . . குளிர்மையை அனுபவித்தால். . . எப்படியிருக்கும் என்ற கற்பனையில் றோட்டுக்கும் ரெயில்வே தண்டவாளத்திற்கும் இடையில் போடப் பட்டிருந்த இரும்புக் கம்பி வேலியில் தனிமையில் இருந்து பனி விழும் அழகை அனுபவித்துக் கொண்டிருந்த வரதனுக்கு நேரம் போவது தெரியவேயில்லை.

கையில் இருந்த சின்னப் பாசல் நனைந்து விடும் என்பதால் ஜக்கற்றினுள் வைத்தவனுக்கு கல்லடிப்பாலம் மழைக்காலத்தில் நிரம்பி ஓடும் அழகை ரசித்த அந்த நாள் நினைவுகள் வந்து போய்க் கொண்டு இருந்தன. முன்னால் ஓடும் ஆறு, பின்னால் ஓடும் ரெயில் பெட்டிகள். எப்போது இவைகளை மீண்டும் காண்பேன் என நினைக்கத் தொடங்கியவனை ஜக்கற்றில் இருந்த சின்னப் பாசல் அவசரப்படுத்தியது.

அவனைப் போல் இந்த நாட்டுக்கு அகதியாக வந்த ஓர் தமிழ்த் தம்பதியினரின் மூத்தபிள்ளை டனாக்கு இன்று துடக்குக்கழிவு.

படிப்பகம்

padippakam



அந்த சின்ன சிற்றியில் உள்ள அனைத்து தமிழர்களையும் அழைப்பது என்ற பட்டியலில் அவனுக்கும் அழைப்பு வந்தது. தன் வசதிக்கு ஏற்றமாதிரி ஒரு சின்ன விளையாட்டுச் சாமானை வேண்டி அழகாகச் சுற்றி எடுத்து வந்தவனை இந்தப் பனிப்பூக்கள் தடுத்து இரும்புக்கிராதியில் இருக்க வைத்து விட்டன.

அன்பளிப்பின் பெறுமதி மிகக் குறைவுதான். காப்பு போட்ட மாமா, சங்கிலி போட்ட மாமி என்ற பட்டியலில் தான் வராவிட்டாலும் மாமா வேண்டித்தந்த கிலுக்கியுடன் தினம் தினம் விளையாடும் என்பதில் வரதனுக்கு பெரிய திருப்தி.

துடக்குகழிவு பொதுவாக காலையில் அல்லது மத்தியானத்தில் தான் நடைபெறும். இது துடக்குகழிவுப் பார்ட்டி. அதனால்தான் பின்னேரத்தில் வைத்துள்ளார்கள்.

துடக்குகழிவை விட இந்தப் பனிவிழும் அழகில் இன்னும் மூழ்கியிருக்கலாம் போல் இருந்தது.

அப்போ காற்றின் திசை கொஞ்சம் மாற, செங்குத்தாக விழுந்து கொண்டிருந்த பனிப்பூக்கள் முகத்தின் பக்கப்பாட்டால் வந்து விழுந்தது. அது கொஞ்சம் அதிகமாகவே குளிர்ந்தது.

"என்ன வரதன் மாஸ்டர். . . கம்பிவேலியிலை இருந்து கொண்டு. . . ஏதும் ஊருக்கு காசு அனுப்புற பிரச்சனையோ?" தோளில் ஒரு கை பட்டது.

துடக்குகழிவுக்கு போவதற்காக இன்னும் நாலைந்து இளைஞர்கள் வந்திருந்தார்கள்.

"இல்லையடாப்பா. . . இந்த ஸ்னோ கொட்டுற வடிவைப் பார்த்துக் கொண்டு நின்றனான்" என்றபடி இரும்புக்கிராதியிலிருந்து குதித்து இறங்கி அவர்களுடன் வரதன் சேர்ந்து கொண்டான்.

வரதன் ஓர் யாழ்ப்பாண தமிழ்ப் பட்டதாரி. கிழமையில் 6 நாட்கள் பன்டி வெட்டுற கடையில் வேலைசெய்தாலும் ஞாயிற்றுக் கிழமைகளில்



படிப்பகம்

padippakam



அந்த நகரப்பிள்ளைகளுக்கு இலவசமாக தமிழ் கற்றுக் கொடுப்பதால் வரதனுடன் ஒரு மாஸ்டரும் மரியாதையின் நிமித்தம் சேர அனைவரும் வரதன் மாஸ்டர் என்றே அழைத்தார்கள்.

அன்றைய அரசியல், அடுத்த வாரம் வெளியாக இருக்கிற தமிழ்ப் படம், போன கிழமை வீட்டைவிட்டு ஓடிப்போன ராஜியின் தாய் ஆஸ்பத்திரியில் என அங்கு அங்கு கேள்விப்பட்ட நியூஸ்களை ஆளுக்காள் தம் தம் விமர்சனப் பார்வையில் அலசி ஆராய்ந்தபடியே துடக்குகழிவு வீட்டை வந்தடைந்தார்கள்.

அழைப்புமணியைத் தொடர்ந்து கதவு திறந்து கொண்டது.

வீட்டின் ஹோல் களைகட்டியிருந்தது. வண்ண வண்ண விளக்கு களின் வெளிச்சத்தில் விதம் விதமான கூறைச்சேலைகளின் சரிகைகள் மின்னின. லேட்டஸ்டாக வந்த பைனியர் செற்றில் நேற்றைய ராத்திரியின் சுகத்தில் சிலுக்கு உருகிக் கொண்டு நின்றாள். அதற்கேற்ப வண்ண விளக்குகளும் தமது நிறத்தைக் கூட்டிக் குறைத்துக் கொண்டிருந்தன.

அனைவரும் வந்தது சந்தோஷம் என்ற தோரணையில் குழந்தையின் தகப்பன் சிவா தனது புன்சிரிப்பாலும் தலையாட்டலாலும் அனைவரையும் வரவேற்றுக் கொண்டு நின்றான்.

சாவகச்சேரி தெற்கு கதிரேசப்பிள்ளை விதானையின் மகன் வழிப்பேரனான ரிபேக் கல்லூரி ஆசிரியர் சண்முகரட்டிணத்தின மூத்தமகன்தான் சிவா. அட்வான்ஸ் லெவலில் மூன்று வருடம் வீணடித்தது போக இயக்க ஈடுபாடு அது இது என ஊருக்குள் ஒரு சின்னச் சண்டியனாக உருவெடுத்ததைக் கண்ட சண்முகவேல் சட்டம்பியார் ஆட்களைப் பிடித்து சிங்கப்பூர் கம்பெனி ஒன்றுக்கு அனுப்பி வைத்தார். கையில் காசுடனும் கழுத்தில் சங்கிலி சகிதமாயும் வந்து இறங்கிய சிவாவை, விதானைவீட்டுச் சொந்தம் விட்டுவிடக் கூடாது என்ற காரணத்தால், உடையார் மகனும் - இளைப்பாறிய ஓவசியருமான கனகரத்தினத்தின் மூத்தமகள் சுகிக்கும் திருமணம் நடந்து டென்மார்க் வந்தவர்கள்தான் சிவாவும் சுகியும்.



படிப்பகம்

padippakam



ஹோல் நிரம்பிவிட்டது. இன்னும் சிலரே வரவேண்டியிருந்தது. வந்தவர்கள் தமக்கு ஏற்றமாதிரி குழுக்கள் குழுக்களாக இருந்து "சேர். பொன். இராமநாதன் தனித்தமிழ் நாடு கேட்டிருக்கலாம்" என்பதில் தொடங்கி. . . . . . டென்மார்க்கில் சிறுவர் பாடசாலைக் கட்டணத்தைக் குறைக்க ஊர்வலம் போனால் தான் சரி வரும்" என்று தீர்மானம் எடுக்கும் வரையில் பேச்சுகள் வளர்ந்து கொண்டு போனது.

"போற போக்கில் டென்மார்க்கில் தமிழீழம் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்று வரதன் மாஸ்டர் கூறவும் அவரைச் சுற்றியிருந்த அனைத்து இளைஞர் பட்டாளமும் கொல் லெனச் சிரிக்க பெரியவர்கள் கொஞ்சம் விசனப்பட்டு திரும்பிப் பார்த்தார்கள்.

"வரதன் மாஸ்டர் ஆட்களுக்கு ரீ குடுத்தாச்சோ" என்று சிவா ரீ பரிமாறிக் கொண்டிருந்தவரைக் கேட்க, "இல்லை சிவா. . . புதிசாக வந்தவைக்கு இனித்தான் ரீ கலக்க வேணும்" என்றபடி வைலை (Vejle) அன்ரி முன்னே வந்தார்.

"எப்பிடி மாஸ்டர் சுகமாய் இருக்கிறியளோ?"

"ஓம்! அன்ரி. . . . பரவாயில்லை."

அன்ரி – திருமணமாகி ஒரு நாற்பது அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து வயதுப் பெண்களையும் கௌரவமாக அன்ரி என உறவுமுறை கொண்டாடுவது இங்கு வந்த தமிழர்களுக்கு ஒரு வழக்கமாக இருந்தது. ஊருக்கொரு அன்ரி வரத்தொடங்கிய பொழுது அவர்கள் வாழும் நகரத்தின் பெயரையே முன் அடைமொழியாகக் கொண்டு அவர்கள் பெயர்கள் அமைந்துவிட்டன.

அதிலும் இந்த Vejle அன்ரி கொஞ்சம் ஸ்பெஷல். தான் எந்த விழாவில் எங்கே நின்றாலும் தன் பேச்சு வசீகரத்தால் சரி. . ., தனது ஆடை அலங்காரத்தால் சரி. . . மற்றவர்களை ஒரு தடவை தன் பக்கம் திரும்பச் செய்வதில் மிகத் திறமையானவர்.

அட்டமி எப்போ வருகுது. . . பஞ்சமி எப்போ விலகுது. . . வருஷம் எப்போ பிறக்குது.. . . நல்லூர்க் கொடி எப்போது இறங்குது என்று சமய



படிப்பகம்

padippakam



விடயங்களில் ஓர் அப்பாக்குட்டி தங்கம்மாவாக நடப்பதாயினும் சரி. . ஐசிங் கேக்கில் இருந்து கோழிக்குருமா வரை தீபம் ரீ. வி. க்கு தொலைபேசியில் கதைப்பதானாலும் சரி அன்ரிக்கு நிகர் அன்ரி தான்.

ஏதும் இல்லாவிட்டாலும் கூட பெண்கள் கூட்டத்துக்கை யாரோ ஒருவரைப் பார்த்து "நாளைக்கு ஒருக்கா போன் பண்ணும். . . ஒரு விசயம் கதைக்க வேணும்" என்று சும்மா இருக்கும் ஒரு பெண்ணிற்கும் அப்பெண்ணைச் சுற்றியிருக்கும் மற்றைய நாலு பெண்களுக்கும் ஒரு கேள்விக்குறியைப் போட்டுவிட்டு தன் பாட்டில் போய்க்கொண்டு இருப்பார்.

இன்றைய விழாவின் முழு ஏற்பாடுகளையும் கவனிப்பவரும் இந்த அன்ரி தான். புதிதாய் திருமணம் செய்து வந்த சிவா-சுகிக்கு அனைத்து உதவிகளையும் ஆரம்பத்தில் இருந்தே செய்து வந்தது அன்ரிதான் என்பதால் அந்த வீட்டில் அன்ரிக்கு உரிமை கொஞ்சம் அதிகம்.

புதிதாகக் கலக்கப்பட்ட ரீயை ரம்ளர்களில் ஊற்றிக் கொண்ட சிவாவின் கைகளை அன்ரியின் கை தடுத்தது. "மாஸ்டர் ஆட்களுக்கோ?" அன்ரி தான் கேட்டார்.

"ஓம்" என்று சிவா சொல்லி முடிக்க முதலே "அந்தக் கிளாசுகளை எடுங்கோ" என்றார்.

சிவாவுக்கு எதுவும் புரியவில்லை.

ரம்ளர்களில் இருந்த ரீ கிளாசுகளுக்குள் மாறிக்கொண்டு இருந்தது.

"மாஸ்டரோடை வந்த பொடியள்களிலை இரண்டு பேர் என்ன ஆக்கள் எண்டு தெரியுமோ? அதுதான் இப்படி. . . . இவ்வளவு நேரமும் இப்படிப் பார்த்துத்தான் அந்த தம்பி குடுத்துக் கொண்டு நிண்டவன்."

தற்சமயமாக சிகரட் பற்ற தீப்பெட்டி எடுக்க குசினிக்கு வந்த வரதன் மாஸ்டருக்கு ஏதோ புரிந்தது போலுமிருந்தது. . . . புரியாதது போலுமிருந்தது.



படிப்பகம்

padippakam



ஆனாலும் அன்ரி தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "மாஸ்டருக்கு எப்ப பொம்பிளை வருது?" என்று தன் அன்னியோன்னியமான பேச்சினால் மாஸ்டருக்குக் கிட்டவாகச் சென்றாலும் வரதன் தன் இறுகிய முகத்தில் புன்னலகையை வரவழைத்துக் கொண்டு விலகிப் போனான்.

கிளாசில் கொடுக்கப்பட்ட ரீயைக் குடித்துக் கொண்டிருந்த அந்த இரண்டு இளைஞர்களையும் அன்ரி பார்க்காத இன்னோர் கோணத்தில் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் வரதன்.

வெளியில் தொடர்ந்து விழும் பனியில் ஜக்கற்றும் இல்லாமல் தனியே நடந்து போக வேண்டும் போலிருந்தது.

சாப்பாடுகள், டெசேட்டுகள், குழந்தைக்கு நகை போடுதல், படம் எடுத்தல்கள், பகிடிகள் எல்லாமே ஒரு தாளகதியுடன் நடைபெறத் தொடங்கின.

வரதன் மாஸ்டர் தன்னுடைய பேனாவை எடுத்து தான் கொண்டு வந்த பாசலில் ஒரு வரி எழுதினார்.

"துடக்கு குழந்தையில் இல்லை."

*

அடுத்தநாள் பாடசாலைக்குப் போக வரதனுக்கு ஏனோ மனம் வரவில்லை.

முதல்நாள் நினைவுகள் அவனை அழுத்திக் கொண்டிருந்தன.

பொருளாதாரச் சமநிலைமையின்மைதான் சாதிப்பிரச்சனை களுக்குக் காரணம். அதில் சமநிலை வரும் பொழுது சமூகத்திலும் சமநிலை நிலவும் என பல்கலைக்கழகத்தில் படித்தது இங்கு பொய்ப்பித்துப் போய்விட்டதை கண்கூடாகக் கண்டபொழுது மிகவும் கவலையடைந்தான்.

பொதுவான அடிப்படைச் சட்டங்களினால் கட்டி எழுப்பப்பட்ட ஒரு நாட்டில், அடிப்படையான வசதிகள் ஒரே அளவாக வழங்கப் பட்டிருந்த பொழுதும், அகதிகளாக அல்லது அகதிகள் என்ற பெயரில் வாழ வந்த ஓர் இனம் தன்னைத் தானே ரம்ளராலும் கிளாசுகளாலும் வேறுபடுத்திப் பார்க்கும் நிலையை எண்ணி எண்ணி மிகவும்



படிப்பகம்

padippakam



கவலைப்பட்டான்.

தலைமாட்டில் இருந்த கைத்தொலைபேசி அடித்தது.

"என்ன மாஸ்டர். . . . பள்ளிக்கூடம் போகல்லையோ?"

"இல்லையடப்பா. . ."

"விசயம் கேள்விப்பட்டனிங்களோ?"

"என்ன விசயம்?"

"ராத்திரி யாரோ அன்ரி வீட்டுக்கும் சிவா வீட்டுக்கும் கல்லாலை எறிஞ்சு போட்டாங்களாம். இரண்டு வீட்டுக் கண்ணாடிகளிலையும் கனக்க உடைஞ்சு போச்சாம்."

வரதன் வீட்டுக்குள் பனிமழை கொட்டியது.

"துடக்கு கழிஞ்சிட்டுது என்று சொல்லு."

"என்ன மாஸ்டர் நான் ஏதோ சொல்ல நீங்கள் ஏதோ சொல்லுறியள்? "

"இல்லையடா மச்சான். நான் ஏதோ யோசனையிலை இருந்தனான். அது தான்.. . பிறகு என்ன?"

"பிறகென்ன. . . பொலிஸ் வந்ததாம். ஆரையும் இன்னும் பிடிக்கேல்லையாம். அன்ரி தானாம் சரியாய் பயந்துபோய் இருக்கிறாவாம். அன்ரி வீட்டையும் சிவா வீட்டையும் துக்கம் விசாரிக்க சனம் போகுதாம். நீங்களும் வருகிறியளோ?"

"நான் வரல்லை. . . போட்டு வந்து வேறையும் ஏதாவது புதினம் இருந்தால் சொல்லு மச்சான்."

வரதனுக்கு தன்னையே நம்ப முடியவில்லை.

குழந்தையில் துடக்கு இல்லை என்று மட்டும்தான் தன்னால் எழுத முடிந்தது. . . .ஆனால் எவனோ ஒருவன் துடக்கைக் கழித்து வைத்திருக்கிறான் என்பதில் எதிர்காலம் மீது நம்பிக்கை பிறந்தது.

இப்போ மீண்டும் வெளியில் பனி பூப்போல . . . .பூப்போல. . . வரதனின் மனம் போல. . . . .. .

●



படிப்பகம்

padippakam

# வெள்ளம்

**கா**லை வழமையை விட சற்றுப் பிரகாசமாகவே புலர்ந்திருந்தது.

கீழே பூந்தோட்டத்தில் குருவிகளின் கீச்சு சத்தமும், மாமனார் பூங்கண்டுகளுக்கு தண்ணி பாச்சும் பம்பின் ஒலியும், றோட்டில் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து பாய் விற்கும் அந்த முஸ்லீம் வயோதிபரின் கூவலும், அதிகாலையிலே விழித்தெழும் ஆட்டோக்களின் ஹோரன் சத்தமும் என்று பல்வேறு காரணிகள் நித்திரையைக் கலையப்பண்ணினாலும் மீண்டும் ஒரு முறை புரண்டு படுத்து அந்த விடுமுறை நித்திரையின் சுகத்தை இன்னும் அனுபவிக்க விரும்பினார் ரங்கராஜன்.

லெக்சரர் ரங்கராஜன்.

வசந்தி கீழே சமையற்காரி சின்னத்தங்கத்துடனும் தாய் மகேஸ்வரியுடனும் கதைத்துக் கொண்டிருப்பதும் விவாதித்துக் கொண்டுமிருப்பது கேட்டது.

"வசந்தி" வாய் சிறிது முணுமுணுத்துக் கொண்டது.

கண்ணை மீண்டும் மூடிக்கொண்டு கட்டிலின் மறுகரையில் கிடந்த வசந்தியின் தலையணையைத் தனக்குக் கிட்டவாக இழுத்து அதனை அணைத்துக்கொண்டு அதன் சூட்டில் மீண்டும் நித்திரை கொள்ள முயன்று பார்த்தார்.

ஆனால் முற்றாகவே விழித்துவிட்ட அந்த கிராமத்தின் பெரிய வீட்டில் கள்ளத் தூக்கம் போடுவது கொஞ்சம் கஷ்டமாகவே பட்டது.

கண்ணை முழித்து தலைமாட்டில் வைத்திருந்த குறிப்பேட்டை எடுக்கப் போனவரின் கவனம் கால்மாட்டில் தொங்கிய அவரினதும் வசந்தியினதும் படத்தில் தரித்து நின்றது.

அது அவர்களின் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட படம்.

படிப்பகம்

padippakam



இருவரின் தந்தைமாருக்கும் சின்ன வயதில் இருந்து வந்த வியாபார நட்பு தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்பதாலும். . . . பெரிய படிப்பு படித்ததோடு மட்டும் அல்லாது 31 வயதிலேயே சுவீடன் ஸ்ரொக்கொல்ம் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராய் உள்ள ஒருவர் தன் மகளுக்கு மாப்பிள்ளையாய் வர வேண்டும் என்ற வசந்தியின் தகப்பனாரின் பெரிய ஆசையாலும். . . . . ஊரின் எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரு காணியாவது வசந்தியின் பெயரில் இருந்ததை ரங்கராஜனின் தந்தையார் அறிந்திருந்ததாலும். . .குடும்ப கௌரவங்களும் காணி பூமிகளும் தட்டுமாற்றிக் கொள்ள ஒரு நல்ல முகூர்த்தத்தில் வசந்தியின் கழுத்தில் ரங்கராஜன் தாலி கட்டினார்.

அப்படி ஒரு திருமணத்தை இந்தக் கிராமம் என்றுமே கண்டதில்லை என்று இன்றுவரை ஊர் அடிக்கடி பேசிக்கொள்ளும். இந்த ஒரு வருடத்துள் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால், குறிப்பாக பொருளாதாரத் தடை வந்திருக்கிற நிலைமைகளில் அப்படியொரு திருமணத்தை நடாத்துவதும் சாத்தியமில்லை எனவும் ஏகமனதாக ஊரே ஒத்துக் கொண்டிருந்தது. .

திருமணம் முடிந்த கையுடன் ரங்கராஜன் வசந்தியுடன் சுவீடனுக்குத் திரும்பியபொழுது, "காசுக்காக பட்டிக்காட்டுக்குப் போனியோ" என ஆரம்பத்தில் நண்பர்கள் துளைத்தெடுத்தாலும், அந்தப் பணம், பகட்டுகள், காணிகள், பூமிகள் எல்லாவற்றிற்கும் மேலாக வசந்தி என்ற அந்த வாழ்க்கைத்துணை அவரின் வாழ்க்கைக்கு எத்தனையோ அர்த்தங்களைக் கொடுக்க ஆரம்பித்தது.

இப்போ ஓராண்டுக்குப் பின்பு ஊருக்கு வந்திருக்கிறார்கள்.

நாட்டு நிலைமையை யோசித்து கொழும்போடு திரும்பத்தான் இருந்தார்கள்.

ஆனால், இந்தியன் ஆமி வந்திருந்தபொழுது பாதி இடிந்துபோன கோயிலைத் திருத்தி கும்பாபிஷேகம் செய்யும்பொழுது வசந்தியும் மாப்பிள்ளையும் நிற்கவேண்டும் என்ற வசந்தியின் தந்தையின் விருப்பத்தைத் தட்ட முடியவில்லை.



படிப்பகம்

padippakam



இந்த ஒரு வருட தாம்பத்தியம் இனிதே நிறைவேறிய நினைப்புகளில் லயித்திருந்த ரங்கராஜனுக்கு வசந்தி மாடிப்படிகளில் ஏறி வரும் சத்தம் கேட்டது.

ரங்கராஜனின் கண்கள் பூனையாக மெதுவாக மூடிக்கொண்டன.

"குழந்தைப்பிள்ளை போலை நித்திரை கொண்டது காணும், இனி எழும்புங்கோ."

பூனை இன்னும் கண்களை இறுக மூடிக்கொண்டது.

அவரின் தோளைத் தொட்டு எழுப்பிய வசந்தியின் கைகளை இறுகக் கட்டிக் கொண்டார்.

"இனிச் சின்னப் பிள்ளை போலை அவரோடை செல்லம் கொட்டினால்தான் எழும்புவாராக்கும்" என்றபடியே பக்கத்தில் அமர்ந்தாள்.

முற்றாகத் துவட்டாத தலைமுடியில் இருந்து சிதறிய நீர்த்திவலைகள் ரங்கராஜனில் பட்டுத் தெறிக்க கூச்சத்தால் கண் முழித்தார்.

"ஏய் . . . . " என மீண்டும் அவளை அணைத்தபடி தலையை அவள் மடிமீது வைத்துக் கொண்டு, "என்ன கீழை சத்தம். . . . வட் ஹப்பிண்ட் ரூ சின்னத் தங்கம்?"

"அது பாவம். . . மகள் ஓடிட்டாள் எண்ட கவலை மாற முதல் அவங்கள் சங்கிலியும் காப்பும் வேண்டிக்கொண்டு வா எண்டு திருப்பி அனுப்பிப் போட்டாங்கள். காலமை வந்து சொல்லி அழுதது. பாவமாய்க் கிடக்குது."

வசந்திக்கு நினைவு தெரிந்த நாட்கள் தொடக்கம் சின்னத் தங்கம் தான் தாய் மகேஸ்வரிக்கு வீட்டு வேலைகளில் முழு ஒத்தாசையும். மாதச் சம்பளமும் நல்ல நாள் பெரிய நாட்களில் துணிமணிகளும் அவளுக்குக் கிடைக்கும். அவள் வசந்தி வீட்டார்க்கு எந்த சொந்த பந்தம் இல்லா விட்டாலும் இத்தனை வருட காலத்தில் அவளும் அவள் குடும்பமும் இவர்கள் குடும்பத்தில் ஒன்றாக இணைந்து



படிப்பகம்

padippakam



விட்டனர்.

வசந்திக்கு நன்கு ஞாபகம் இருக்கு. . . . தனது கலியாணத்தின் பொழுது சுமார் ஒரு மாதமாக சின்னத் தங்கம் தன் வீட்டுக்கே போகவில்லை. மேலாக வசந்தி சுவீடனுக்குக் கிளம்ப ஆயத்தமான பொழுது தாய் மகேஸ்வரியைவிட அதிகமாக விக்கி விக்கி அழுதது சின்னத்தங்கமே.

அவள் கைகள் அவர் நெற்றி மீது கோலம் போட்டபடி இருந்தாலும் சின்னத்தங்கத்தின் மகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி வசந்தியைக் கோபப்படவைத்தது.

"அவனைக் கொல்ல வேணுமப்பா."

"இது ஒண்டும் உங்கடை கிராமத்திலை அதிசயமில்லைத்தானே."

"போங்கோ. . . . உங்களுக்கு கிராமம் எண்டால் எப்பவுமே இளக்காரம் தான்."

வசந்தி செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

பட்டணத்து சூழலில் வளர்ந்ததாலோ . . . . . வசந்தியைத் திருமணம் செய்யும் வரை எந்தக் கிராமத்து காற்றைச் சுவாசித்தோ அன்றில் ஓர் வயல் கிணற்றில் குளித்த சுகத்தை அனுபவித்தோ பழக்கப்பட்டிருக் காமையாலோ. . மேலாக எப்பவுமே மற்றவர்கள் அவரை உயரத்தில் வைத்துப் பார்க்கத் தொடங்கியதால் அவருக்குள் அவரையும் அறியாமல் ஏற்பட்டிருந்த அந்த படித்த வர்க்கப் பெருமிதங்களின் காரணங்களோ என்னவோ. . . . .கிராமங்கள் மீதும் அங்கு நிலவும் பல பழக்க வழக்கங்களின் மீதும் தனக்கு ஏற்பட்டிருந்த இளக்காரம்தான் வசந்தியை கோபப்பட வைத்தது என்பதை எண்ணி சற்று மனதுக்குள் வருந்தினார்.

"சொறியடா. . . .ஐ டோன்ற் மீன்ற் லைக் தற். . . . காதல் எண்டு ஓடிப்போய் திரும்பி வந்தவளுக்கும் அந்த மகசீன் அட்டைப்படத்துக்கும் என்ன வித்தியாசம் கிடக்கு. இற் கநொற் பி லவ். . . .இற் வில் பி ஒன்லி



படிப்பகம்

padippakam



இன்பச்சுவேஷன்" என்று முன்னால் இருந்த மாத சஞ்சிகையைச் சுட்டிக் காட்டினார்.

ஒரு பேட்டுக் கோழியை சேவல் துரத்தும் படம் பிரசுரமாகியிருந்தது.

"எனக்கு உங்கடை தத்துவங்கள் எதுவும் விளங்காது. . . ஆனால் சின்னத்தங்கத்தின்ரை மகள் பாவம். . . . அதுக்கு இனியொரு கலியாணம் எண்டது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ. . . இதென்ன சுவீடனோ விரும்பினால் வைச்சிருக்கவும். . . விருப்பமில்லை எண்டால் தூக்கி எறியவும்!"

"சரி வசந்தி. . . . நாங்கள் எங்கடை கலியாணங்கள், கற்பு பற்றி கனக்க கதைச்சாலும் அந்த நாட்டுச் சனங்களும் ஏதோ சந்தோஷமாய்த்தானே வாழுதுகள். . . இளவயதிலை நல்ல சந்தோஷமாய் திரியுதுகள். . பிள்ளை பெறுதுகள். . . . நல்லாய் வளர்க்குதுகள். . . தொடர்ந்து வாழப்பிடிக்காட்டி பொருளாதார பலம் இருக்கிறதாலை பிரிஞ்சு போகுதுகள். . . எங்களை விட எவ்வளவு நேர்மையான சனங்கள் தெரியுமே. விட்டுட்டுப் போன புருஷனும் மனுசியும் ஆளை ஆள் சந்தித்து கதைச்சு ஒரு ஹோட்டலுக்கு போய் சாப்பிட்டு ஒரு கிளாஸ் வைனைக் குடிக்கிற மனப்பான்மை வருகிறதுக்கு இஞ்சை எத்தினை வருசம் வரும் தெரியுமே!"

ரங்கராஜன் தத்துவார்த்த விசாரணைகளில் தொடங்கினால் இலகுவில் நிற்பாட்ட மாட்டார் என்பது வசந்திக்கு நன்கு தெரியும்.

மேலாக அவர் குளிப்பதற்காக கீழே போட்டு வைத்த சுடு தண்ணீரும், சுட்டு வைத்த தோசையும் வசந்தியை அவசரப்படுத்தியது.

"என்ரை அச்சாப் பிள்ளையாம். . . இப்ப கீழை வந்து குளிச்சிட்டு சாப்பிடுங்கோ. . . பிறகு கதைப்பம். . . நானும் இன்னும் சாப்பிடேல்லை" என்றவாறு கட்டில் காலடியில் இருந்து எழுந்து யன்னல் திரைகளை பக்கப் பாட்டாக இழுத்து விட்டாள்.

யன்னலினூடு வெளியே பார்த்துக்கொண்டிருந்த வசந்தியின் கழுத்தைப் பின்புறமாக வந்து கட்டிக்கொண்டபடி "மோர்னிங் நல்ல



படிப்பகம்

padippakam



பிறைற்றாய் இருந்தது. . . .இப்ப பார்த்தீரே எவ்வளவு கிளவுடியாய் இருக்கு" என்றார் ரங்கராஜன்.

"ஓமப்பா மழை வரப்போகுது போலை கிடக்கு" அவரின் பிடியினுள் நின்றபடி தூரத்தில் வானம் கறுத்திருப்பதை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள் வசந்தி.

************************************************************

காலையின் வெந்நீர்க் குளிப்பும், மொறுமொறுப்பான எண்ணைத் தோசையும் ஒரு நிறைவைக் கொடுத்தாலும் வெளியே மழையும் வராமல் வெய்யிலும் இல்லாது மப்பும் புழுக்கலுமாய் இருந்தது அசௌகரியமாய்ப்பட காலைப்பத்திரிகையை சும்மா புரட்டிக் கொண்டிருந்தார் ரங்கராஜன்.

"பா(F) னைப் போடட்டோ."

"ஓம் வசந்தி."

"மழை வந்தால் பரவாயில்லை. இது இரண்டும் இல்லாமல் சரியான புழுக்கம்."

"பை த வே. . . .யூ நோ வன் திங் . . . . வசந்தி. . . . . ."

புரியாமல் பார்த்தாள்.

"தெயர் இஸ் ஒன்லி ரூ டேஸ் மோர்."

"போர் வட்?"

"அடடா. . . பட்டிக்காடு இங்கிலிசு பேசுதா!" பரிகாசம் பண்ணினார்.

"போங்கோ. . . உங்களோடை கோபம். . . . நீங்கள் தான் உங்கட ஸ்ரேற்றை கீப் அப் பண்ண என்னையும் இங்கிலிசுலை கதைச்சு பழகச் சொன்னியள். . இப்ப பகிடி பண்ணுகிறியள். . . போங்கோ. . . அம்மா தனியச் சமைக்கிறா. நான் அவாட்டைப் போறன்" வசந்தி செல்லக் கோபம் காட்டினாள்.



படிப்பகம்

padippakam



"நோ. . . வசந்திக்குட்டி. . . ஐ ஆம் ரியலி ஹப்பி. . . .நான் பகிடிக்குத்தான் சொன்னனான்."

"சரி சொல்லுங்கோ. . . எதுக்கு இரண்டு நாள் இருக்கு. . . ."

"எங்கடை வெடிங் டேக்கு."

"ஓ!. . . அதுவா சேர்பிறைஸ். . . .அம்மாவும் அப்பாவும் எல்லா ஆயுத்தமும் செய்து போட்டினம். காலமை முருகன் கோயிலிலை பெரிய அர்ச்சனைக்கு அப்பா ஒழுங்கு செய்திருக்கிறார். உங்கடை அப்பா, அம்மா, தங்கச்சி குடும்பம் எல்லாரும் வருகினம். எல்லாரும் மத்தியானம் ஒண்டாய் சாப்பிட்டு பின்னேரம் எல்லோருமாய் படத்துக்கு போறம்."

"ஓ ஓல்றெடி அரேஞ்டா. . . வசந்தி எங்கடை வெடிங்கை. . . நீ பட்ட பயங்களை. . . கூச்சங்களை எல்லாம் ஞாபகம் இருக்கா?"

பெண்மை சிலிர்க்க அவள் நாணத்தாள் மௌனமானாள்.

25 வருடமாக எல்லாவற்றிற்கும் அப்பா அம்மா என்றிருந்து. . . இல்லை, இனி எல்லாமே அவர்தான் என ஓர் உறவை எல்லோரும் சுட்டிக் காட்ட. . . அந்த அவர் எப்படியோ என்ற பயம் கௌவ மாலை மாற்றி. . . . அக்கினிக் குண்டம் சுற்றி வந்தது தொடக்கம். . . சுவீடனில் போய் அகமும் புறமும் நிறைவான ஒரு வாழ்க்கை வாழ்ந்த திருப்தியுள் தன்னை மறந்து நினைவுகளை அசைபோட்டபடி மூழ்கினாள்.

"ஹலோ. . . என்ன கற்பனைக் குதிரை பின்னாலை ஓடுதா" என்று தன் கையால் வசந்தியின் கையை அழுத்தினார்.

"சும்மா இருங்கோ. அம்மா பார்த்தாலும். . . பெரிய குளப்படிப் பொடியன்" காதினுள் கிசு கிசுத்தாள்.

எடுங்கோ என்று சொன்ன கையை ரங்கராஜனும் எடுக்காமலும் வசந்தியும் விலத்தாமல் அப்படியே இருந்தார்கள். வாசல் மணி ஒலித்தது.

சேர்மன், விதானையார், பள்ளிக்கூட தலைமை ஆசிரியர் மற்றும்



படிப்பகம்

padippakam



ஊர்ப் பெரியவர்கள் எனக் குறிப்பிடப்படும் இரண்டு பேருமாக மொத்தம் ஐந்து பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

"எப்பிடிப்பிள்ளை இருக்கிறாய் . . . . நீங்கள் லீவிலை வந்தது எண்டு கேள்விப்பட்டம். . . தம்பி இருக்கிறாரோ. . . ."

"ஓம் உள்ளுக்கை வாங்கோ."

அனைவரும் உள்ளுக்குள் வர ரங்கராஜனும் மரியாதையின் நிமித்தம் எழுந்து வணக்கம் சொல்லி விட்டு மீண்டும் தன் கதிரையில் அமர்ந்தார்.

"மழைதான் குழப்பிப் போடும் போலை கிடக்கு. . . . . "

"ஒருக்காலும் மாசியிலை இப்பிடி மூட்டம் கட்டுறேல்லை. . . இது வெங்காயத்துக்கும் கூடாது. . . . "

"அவ்வளவுக்கு முருகன் கை விடமாட்டார்."

"பள்ளிக்கூடத்துக்குள்ளை எண்டபடியாலை பரவாயில்லை. . . ஆனால் மழை எண்டால் சனம்தான் வரப் பஞ்சிப்படும்."

எதுக்காக வந்தார்கள், எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்று புரியாமல் ரங்கராஜனும் வசந்தியும் ஆளை ஆள் பார்த்தார்கள்.

"என்ன விதானையார். . . .வந்தமாம். . . பேசினமாம். . . போனமாம் எண்டு சட்டுப்புட்டென்று விசயத்தை முடிக்காமல். . . இன்னமும் எத்தினை வேலை கிடக்குது சொல்லுங்கோ பார்ப்பம்" கொஞ்சம் தனது அதட்டும் குரலில் அவர்களின் சம்பாசணைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டு சேர்மனே தொடர்ந்தார்.

"தம்பி. . . எங்கடை பள்ளிக்கூடத்திலை இண்டைக்கு பாரதியார் விழா கொண்டாடுறம். . . எல்லா வீட்டுக்கும் நோட்டீஸ் போட்டனாங்கள். நீங்கள் பார்த்தியளோ தெரியாது. அதுக்கு நீங்களும் பிள்ளை வசந்தியும் கட்டாயமாய் வந்து கலந்து கொள்ள வேணும். . . அதோடை பாரதியார் பற்றி நீங்கள் கொஞ்சம் பேசவேணும். இது எங்கடை எல் லாரிட்டையும் வேண்டுகோள்."



படிப்பகம்

padippakam



"வட் இஸ் த றெஸ்போன்ஸ் ஒவ் திஸ் மீற்றிங்" என மனத்துள் நினைத்தாலும், அவர்கள் தன்னை மதித்து வந்தவிடத்து தான் மறுத்தால் அவர்கள் மனது சங்கடப்படும் என்பதாலும், வசந்தியின் தகப்பனாருக்கு கௌரவக் குறைச்சல் என்பதாலும் "என்ன பேச வேண்டும்" என முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

"என்ன தம்பி. . . நீங்கள் சுவீடன் பல்கலைக்கழகத்திலை படிப்பிக்கிறனீங்கள். இதையெல்லாம் சொல்லியோ தரவேணும். . . மாணிக்கவாசகர் ஊரிலேயே பெரிசா படிச்ச மாப்பிளையாய் உங்களை எடுத்து வைச்சிருக்கிறார். எங்கடை நல்ல காலம் நீங்கள் லீவிலை வந்து நிற்கிறியள். . . " விதானையார் சேர்மனை முந்திக் கொண்டார்.

வசந்தியின் தாயார் கோப்பியுடனும் பிஸ்கட்டுகளுடனும் வந்தார்.

"ஆ. . . கொண்டு வா பிள்ளை. . . இந்த மழை மப்பு மந்தாரத்துக்கு கோப்பி நல்லாய்தான் இருக்கும் . .ஓ. . . . சுவீடன் பிஸ்கட்டுப் போலை."

வசந்தி ஓம் எனத் தலையாட்டினாள்.

"எங்கை பிள்ளை. . . அப்பர் தோட்டப்பக்கமோ. . . லெக்சரர் தம்பி. . . உங்கடை மாமனார் அப்பிடிப்பட்ட பிரயாசையான ஆள்.. . . . வியாபாரம், வயல், தோட்டம் எண்டு ஒரே பிரயாசை. . . சுவீடனுக்கு அவரைக் கொண்டு போனியளோ அரைவாசி சுவீடனை வேண்டிப் போடுவர்."

அனைவரும் கொல்லெனச் சிரித்தார்கள்.

"என்ன விதானையார். . . திரும்பக் கச்சேரியோ. . . இன்னும் எத்தினை வேலையள் கிடக்கு. . . . ", சேர்மன் அவசரப்படுத்தினார்.

அப்படியே ரங்கராஜனின் பக்கம் திரும்பி "கட்டாயம் ஆறு மணிக்கு வந்திடுங்கோ. . . பெரிய பட்டணத்திலை இருந்து பாட்டுக் கச்சேரியும் வருகுது. பார்த்திட்டு வரலாம்" சேர்மன் கூறி விட்டுச் சென்றார்.

மழை சிணுங்கத் தொடங்கியது.

விதானையார் அன்று காலை எடுத்துக் கட்டிய மடிப்புக்கலையாத



படிப்பகம்

padippakam



வேட்டியை மழைக்குப் பயந்து கொஞ்சம் உயரமாகவே கட்டிக் கொண்டார்.

"சரி. . . . போட்டு வாறம் பிள்ளை."

"போயிட்டு வாங்கோ."

வசந்தியும் ரங்கராஜனும் வாசல்வரை போய் மரியாதைக்காக வழியனுப்பிப் போட்டு வந்தார்கள்.

"இண்டைக்கு என்ன பேசப்போகிறியள்" வசந்திதான் தொடங்கினாள்.

"என்ன பேசப்போறம் எண்டதைவிட இப்பிடியான மீற்றிங்களிலை எனக்கு நம்பிக்கையில்லை வசந்தி."

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்!"

"சும்மா ஆண்டுக்கொரு முறை யாரோ ஒருத்தரின்றை ஐம்பதாவது நூறாவது ஆண்டு விழா என்று கூட்டம் கூடி அதிலை ஆளுக்காள் மேடையிலை நின்றுகொண்டு சுய விளம்பரம் தேடுகிறது. . . .ஐ டோன்ற் லைக் இற். . . .பாட்டுக் கோஷ்டிக்கும் பாரதியாருக்கும் என்ன தொடர்பு இருக்கு. . . இஸ்ன்ற் இற் நொற் சில்லி?. . . ."

"உங்கடை லெக்சர்களை எல்லாம் யூனிவேர்சிற்றியிலை வைச்சுக் கொள்ளுங்கோ. . . அவையள் வந்து கூப்பிட்ட மரியாதைக்கு நல்ல விதமாய் நீங்க பேசவேணும். அதுதான் எண்டை விருப்பம்."

வசந்தியின் குழந்தைப்பிள்ளைத்தனத்தை நினைத்து தனக்குள் சிரித்துக்கொண்டாலும் அவளின் அப்பாவித்தனமான ஆசைக்குக் கட்டுப்பட்டு கூட்டத்திற்குப் போய் நன்கு பேசவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டார்.

அங்கிருந்த அனைத்து கோப்பைகளையும் பிஸ்கட் தட்டையும் எடுத்துக் கொண்டு வசந்தி குசினிக்குள் போனாள்.

"பாரதியாரைப் பற்றி எதைப் பேசுவது?. . . . ஆன்மீகத்துறை?. . . கவித்துவம்?. . . அரசியல் பார்வை?. . . . பெண்ணடிமை?. . . .சமூகத்தின் மீதிருந்த அவரின் தார்மீகக் கோபங்கள்? இப்படி ஏதாவதைச் சொல்லி



படிப்பகம்

padippakam



அந்த சப்ஜக்ட் பற்றி பேசச் சொல்லியிருந்தால் பரவாயில்லை" என ஒரு கணம் நினைத்தாலும் அப்படி ஒரு சப்ஜக்ட்டை தெரிவு செய்யும் அளவுக்கு வந்தவர்களுக்கு சப்ஜக்ட் இருக்குமோ என்னமோ - என நினைத்துக்கொண்டு கையில் பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டார்.

எதுவும் எழுதத் தோன்றாமல் வெளியில் பார்த்தார்.

சின்ன மழைத்துளிகள் ரோஜாப்பூக்களில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்தன. அந்த அழகை நேரம் தெரியாமல் ரசித்துக் கொண்டேயிருக்கலாம் போலை இருந்தது.

என்ன பேசுவது? . . . . யூனிவேசிட்டியில் லெக்சர் பண்ணுறம். . . றிசேர்ச் செய்யுறம். . . தீசீஸ் எழுதுறம். . எல்லோரும் பாராட்டு கிறார்கள். . . அது வேறு. . . .இது. . . . ? பள்ளிக்கூடத்தைச் சுற்றி லவுட்ஸ்பீக்கர் கட்டி மேடையில் நின்று ஊரெல்லாம் கேட்க. . . . இதென்ன கோணங்கித்தனம் என மனம் என்னவோ கூச்சப்பட்டது! அன்றில் உடன்பாடில்லாத ஒன்றை செய்யப் போகின்றோம் என்று மனம் அருவருத்தது.

"என்ன எழுதீட்டீங்களா" என்றவாறு ரங்கராஜன் இருந்த சோபாவின் பின்னால் வந்து நின்று பார்த்தாள் வசந்தி.

பேப்பரில் எந்த எழுத்துகளையும் காணவில்லை.

அப்படியும் இப்படியும் வெறுமனே கோடுகள்தான் போடப்பட்டிருந்தன.

******************************************************************

மதிய உணவுக்குப் பின்னான குட்டித் தூக்கம் உடலின் அசதியைப் போக்கியிருந்தாலும் ரங்கராஜனின் மனதுக்குள் ஏதோ இருள் கவ்வியிருந்தது – வெளியே கவிந்திருந்த மந்தாரம் போல்.

"இந்தாங்கோ ரீ. . . குடிச்சிட்டு வாஷ் எடுத்திட்டு வெளிக்கிடுவம்."

"ஊம். . . ."



படிப்பகம்

padippakam



"அது சரி. . . எல்லாம் பிரிப்பியர் பண்ணீட்டீங்களா?"

"ஊம். . . . "

தலைமாட்டில் வைத்திருந்த பேப்பரை எடுத்துப் பார்த்தாள்.

பாரதியின் ஒவ்வோர் துறையும் அவற்றுக்கு உதாரணமாகச் சில குறிப்புகளும் ஆங்காங்கே காணப்பட்டன.

மப்பும் சிணுங்கலுமாய் இருந்த மழை சற்று பெலக்கத் தொடங்கியது.

"சீ. . . .இந்த மழை எல்லாத்தையும் குழப்பிப் போடும் போலை கிடக்கு."

"உங்கட ஊர்ப் பள்ளிக் கூடத்திலை ஹோல் இருக்குத்தானே. . . . தென் வை ஆர் யு வொறியிங்?"

"இல்லையப்பா. . . .மழையெண்டால் இரைச்சலாய் இருக்கும்."

"சரி! இறங்குவமோ" என்றபடி வசந்தியின் தகப்பனும் தாயும் பட்டு வேட்டியும் கூறைச் சேலையும் சகிதமாக வந்தார்கள்.

"ஓ! கிழவனும் கிழவியும் வெளிக்கிட்டாச்சோ" என அவர்களை சீண்டியபடி தான் வெளிக்கிடுவதற்காக தன் அறைக்குள் ஓடினாள் வசந்தி.

பெற்ற அந்த இரண்டு உள்ளங்களும் அவளது சீண்டலில் அகமகிழ்ந்தது.

வசந்திக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்தது வேறு! இந்த ஒரு வருடத்தில் தன்னை எவ்வாறு நல்லாய் வைத்திருந்தார் என தாய்க்கு வசந்தி கூறியவற்றை தாய் தகப்பனுக்குச் சொல்ல, அவரின் கைகள் தானாகவே வயல் முருகன் கோயிலை நோக்கிக் கூப்பின.

மேலாக அந்த நல்வாழ்வை ஊரே அங்கீகரித்தது போல் மருமகனை ஊரார் வந்து பேச அழைத்ததில் அதிகம்



படிப்பகம்

padippakam



மகிழ்ந்திருந்தார். கொஞ்ச நேரத்தில் ரங்கராஜன் பிறவுன் கலர் சூட்டிலும், வசந்தி மரூன் கலர் காஞ்சிபுரச்சேலையிலும் முன்னே வந்தார்கள். மாணிக்கவாசகருக்கும் மகேஸ்வரிக்கும் தங்கள் கண்களே பிள்ளைகளில் பட்டுவிடும் போல் இருந்தது.

மழை இரைந்தது. அது மனத்தைக் கொஞ்சம் குடைந்தது.

“குடையைக் கொண்டு வரட்டோ” என்று சின்னத்தங்கம் வாசலின் ஓரத்தில் நின்றுகொண்டு கேட்டாள்.

ஓம் என மாணிக்கவாசகர் தலையாட்ட சின்னத்தங்கமே பெரிய குடையை எடுத்துக்கொண்டு வந்து கேற்றடியில் நின்ற காரின் கிட்டவாகக் கொண்டு போய் மழை படாமல் அனைவரையும் ஏற்றிவிட்டாள்.

மகளையும் மருமகனையும் பின்னால் உட்கார வைத்து தான் மனைவியுடன் காரின் முன் இருந்து பெருமையாக காரை ஓட்டிக் கொண்டு போனார் மாணிக்கவாசகர்.

பாடசாலையை நெருங்க அரைக்கட்டை தூரத்திற்கு முதலே “கல்யாணம்தான் கட்டிக்கொண்டு ஓடிப்போலாமா” என லவுட் ஸ்பீக்கரில் கடைசியாக வந்திருந்த படத்தில் இருந்து ஒரு பட்டிமன்றப் பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டு இருந்தது.

ரங்கராஜன் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

“என்ன சிரிக்கிறீங்க?”

“இல்லை. . . . பாரதியார் விழாவுக்கு பாட்டு எப்பிடியிருக்கு பார்த்தியா?”

“சும்மா இருங்கோ. . . உங்களுக்கு எல்லாத்துக்கும் ஒரு பகிடி.”

கார் மிதந்து சென்று பாடசாலை வளவினுள் நின்ற பெரிய அரசமரத்தின் கீழ் நின்றது.

காரைக்கண்டதும் விதானையாரும் சேர்மனும் ஒன்றுசேர



படிப்பகம்

padippakam



குடைகளுடன் வந்து அவர்களை அழைத்துக்கொண்டு விழா மண்டபத்துக்குப் போனார்கள்.

முன்வரிசையில் மாணிக்கவாசகரும் மகேஸ்வரியும் அமர, அவர்களுக்குப் பக்கத்தில் அமரப் போன வசந்தியை, "நல்ல விளையாட்டாய் கிடக்கு பிள்ளை. . . நீர் அவரோடை மேடையிலை பக்கத்திலையல்லோ இருக்க வேணும்" என விதானையார் வசந்தியையும் மேடைக்கு அழைத்துக் கொண்டு சென்று ரங்கராஜனுக்குப் பக்கத்தில் அமர வைத்தார்.

ஏற்கனவே மேடையில் அமர்ந்திருந்தவர்கள் எழுந்து நின்று ரங்கராஜனையும் வசந்தியையும் வரவேற்றதைப் பார்த்தபொழுது தாம் பிறவிப்பலனை அடைந்து விட்டது போல் மாணிக்கவாசகர் தம்பதிகள் மகிழ்ந்தார்கள்.

"சிவன் பார்வதி போலை இருக்குதுகள்" மகேஸ்வரி மெதுவாய்ச் சொல்ல மாணிக்கவாசகரின் கண்கள் கலங்கின.

அடுத்த வினாடியே கடவுள் வணக்கத்துடன் வசந்தி பாரதியார் படத்துக்கு குத்துவிளக்கேற்ற கூட்டம் இனிதே ஆரம்பமானது.

பாடசாலை மண்டபம் நிரம்பியதால் இடம் இல்லாதவர்கள் மண்டபத்தைச் சுற்றியிருந்த அரைச்சுவர்களில் ஏறி உட்கார்ந்து இருந்தார்கள்.

விழாத்தலைவரான சேர்மனின் வரவேற்புரையுடன் கூட்டம் தொடங்கியது. குறிப்பாக "திரு. ரங்கராஜன் இன்று இங்கு வந்ததால் பாரதியே பெருமை அடைகிறான். அதற்கு நாம் பெருமைப்பட வேண்டும்" என்று கூறிய பொழுது மண்டபம் கை தட்டலால் நிரம்பியது.

ரங்கராஜன் கதிரையில் இருந்தபடி நெளிந்தார்.

அடுத்து வந்த தலைமை ஆசிரியர், "நாம் பாரதிக்கு எடுக்கும் விழாச்செய்தி சுவீடன் வரை பரவ இருப்பதை எண்ணி என் மனம் மகிழ்கிறது. அதற்காக இந்த இளம் பேராசிரியரை நான் மனமார வாழ்த்துகின்றேன்" என வாழ்த்த மீண்டும் மண்டபம் கைதட்டலால்



படிப்பகம்

padippakam



நிரம்பியது.

ரங்கராஜன் மெதுவாக வசந்தியின் காதினுள், "டு யு நோ வட் ஹவுஸ் அரஸ்ட் மீன்ஸ்?" என வினவ, வசந்தி அவரின் கையில் நன்றாக ஊன்றி ஒரு தடவை கிள்ளி விட்டாள்.

அடுத்து வந்த விதானையார் அவருக்கே உரிய பாணியில் கம்ப ராமாயணத்திலும் மகாபாரத்திலும் இருந்து உதாரணங்களை எடுத்து பாரதியினுள் போட்டு பாரதியின் கவிதைகளைக் கொண்டு போய் சிலப்பதிகாரத்தில் வைத்து "கண்ணகி பூம்புகாரை எரித்த கோபத்தின் கண்களை பாரதியின் கண்களில் காண்கின்றேன்" என, மண்டபம் விசில்களால் பறந்தது.

ரங்கராஜனுக்கு உண்மையில் சங்கடமாக இருந்தது.

கைதட்டல்களினால் அதிகமாகவே குளிர்ந்த விதானையார், "சிங்களத் தீவினிற்கு பாலம் அமைப்போம்" என்றான் பாரதி. அது வெள்ளைக்காரர் காலத்தில் நிறைவேற்றப்படவில்லை. கப்பலோட்டிய தமிழனாய் சிவாஜிகணேசன் மீண்டும் கேட்டார். இந்திரா காந்தி அம்மா காது குடுக்கவில்லை. இப்போ இந்த மேடையில் நின்று இந்தியா அரசாங்கத்தைக் கேட்கிறேன். எப்போதையா பாலம் போடப் போகின்றீர்கள்?"

கை தட்டல்கள் மண்டபத்தின் கூரையைப் பிளந்தன.

ரங்கராஜனுக்கு நல்லாய் வந்து மாட்டுப்பட்டு விட்டோம் எனப் புரிந்தது.

விதானையாரிடம் இருந்து மைக்கை வேண்டுவது தலைவர் சேர்மனுக்கு பெரிய பாடாய்ப் போய் விட்டது.

கிட்டவாகவும் எட்டவாகவும் நின்று தன் மணிக்கூட்டைச் சுட்டிக் காட்டி ஒரு மாதிரி விதானையாரை வணக்கம் போட வைத்தது சேர்மனின் கெட்டிக்காரத்தனம்தான்.

அடுத்து இரண்டொருவர் ஏதோ ஏதோ பேச கடைசியாக ரங்கராஜனின் முறை வந்தது.



படிப்பகம்

padippakam



ரங்கராஜனின் படிப்பு, அவரின் மாமனாரின் பணம் – செல்வாக்கு இரண்டும் அவர் மேல் ஊராருக்கு பெரிய மதிப்பை ஏற்படுத்தியிருந்ததால் அவரை பலத்த கைதட்டல்கள் மைக் முன்னே அழைத்து வந்தன.

அப்போது மழையைக் கிழித்துக் கொண்டு பாட்டுக் கோஷ்டியினரின் இரண்டு கார்கள் நிறைய வாத்தியக்கருவிகளுடன் பாடசாலை வளவுக்குள் வந்தன.

அதனைக் கண்ட சந்தோஷத்தில் சிறுவர் சிறுமிகள் எழுந்து பள்ளிக்கூட வெளிச்சுவரால் எட்டிப் பார்த்து ஆர்ப்பரிக்க இளசுகள் விசிலடித்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ரங்கராஜன் ஒரு அமைதி நிலவட்டும் என்று தனது பேச்சை ஆரம்பிக்காமல் மைக் முன்னே மெளனமாக நின்றார்.

விதானையார் நிலைமையை விரைவாக ஊகித்துக்கொண்டு, "சத்தம் போட்டால் பாட்டுக்காரரைத் திருப்பி அனுப்பிப் போடுவன்" என தனது சால்வையால் சிறுவர்களை அடித்து அமரவைக்க, சிறிய சலசலப்பின் பின்னால் சங்கடத்துடன் ரங்கராஜன் தனது பேச்சை ஆரம்பித்தார்.

மிக அமைதியாக அதேவேளை ஆழமாக பாரதியாரின் ஒவ்வோர் துறையின் பாடல்களின் கனத்தை எடுத்து விளக்கினார்.

"அச்சமில்லை. . . . அச்சமில்லை. . . அச்சமென்பதில்லையே" என்ற வீறு கொண்ட வரிகள் முதல் "தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா. . உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுமடா நந்தலாலா" என்ற ஆன்மீக அனுபவிப்பு வரை பாரதியின் பார்வையை . . . .உணர்வை . . . ஈடுபாட்டை பல அன்றாட உதாரணங்களுடன் விளக்கப்படுத்திக்கொண்டு போனார்.

மக்களின் கவனமோ காரில் இருந்து இறக்கப்பட்டு மேடைக்குப் பின்னால் போய்க்கொண்டிருந்த பாட்டுக் கோஷ்டியினரின் வாத்தியக் கருவிகளில்தான் எண்ணம் இருந்தது.



படிப்பகம்

padippakam



ஆனாலும் மரியாதை காரணமாக மௌனமாக இருந்தார்கள்.

ரங்கராஜனை யார் எனத் தெரியாத பக்கத்து ஊர்க்கார இளசு ஒன்று, கொஞ்சம் தண்ணியும் வேறு. . . "இந்தப் பாட்டெல்லாம் தெரியும். பாட்டுக் கோஷ்டியின்ரை பாட்டைத் தொடங்குங்கோ. . . விரலைக் கொண்டு போய் நெருப்புக்கை வைச்சாராம்" என்று சொன்னதுதான் தாமதம் சபையெல்லாம் ஒரு தரம் கெக்கட்டம் விட்டுச் சிரித்தது.

ரங்கராஜனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

முகம் எல்லாம் வேர்த்தது.

போதாக்குறைக்கு சபைக்குள் இருந்த இன்னோர் இளசு "பாரதியாருக்கும் அந்த வெள்ளைக்காரிக்கும் என்னையா கனெக்ஷன்" என, மீண்டும் சிரிப்பும் இரண்டொரு விசில்களும் எழுந்தன.

அந்த மழைக்குளிரிலும் ரங்கராஜனுக்கு உடல் அவமானத்தால் குளிர்ந்தது.

தான் எதிர்பார்த்தபடியே தன் பேச்சு இந்தச் சபையில் எடுபடாமல் போய்விட்டது என்று உறுதியானபோதும் விசில் அடித்து தன்னை அவ மானப்படுத்தியது பெரிய வேதனையையும் கோபத்தையும் அவருள் உண்டாக்கியது.

நடுங்கிய கைகளால் மைக்கை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, "பாட்டுக் கோஷ்டிக்கு இடம் அளித்து என் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்" என திடீரென பேச்சை முடிக்க, வசந்தி, சேர்மன், விதானையார், மாணிக்கவாசகர், மகேஸ்வரி எல்லோருக்கும் ஒரு மாதிரிப் போய்விட்டது.

சபையின் கைதட்டலால் மீண்டும் மண்டபம் அதிர்ந்தது.

இது பேசியதற்கான கை தட்டல் அல்ல. . . பேச்சை முடித்தமைக்கான கைதட்டல் என அவருக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.

"கன்ட்றி புரூட்ஸ்" வசந்திக்குப் பக்கத்தில் வந்து கருவிக்கொண்டு அமர்ந்தார்.



படிப்பகம்

padippakam



வசந்திக்கு அவரைப் பார்க்க பாவமாய் இருந்தது. . . . இத்தனை நாள் காணாத ஒரு முகம். . . கடந்த முப்பத்தொரு வருடகாலமாய் பெற்ற கௌரவங்கள் எல்லாம் இந்தக் காட்டுமிராண்டி சனங்களிடையே போய்விட்டதாக மனதுள் குறுகினார்.

வெளியில் மழை கொட்டியது. . . இடியும் மின்னலும் கண்களையும் காதுகளையும் பறித்தன. . .

விதானையார் மைக்கில் ரங்கராஜனுக்கு நன்றியுரை தெரிவித்துக் கொண்டு நின்றார்.

"தொடங்குங்கையா பாட்டுக் கச்சேரியை. . ." மீண்டும் சபை பொறுமை இழந்தது.

"அமைதி. . . அமைதி. . . . கடைசியாக நமது வேலாயுதத்தின் மகன். பன்னிரண்டு வயதுச் சிறுவன். . . ஒரு பாரதி பாடல் பாடுவான். . . அதனைத் தொடர்ந்து நீங்கள் எதிர்பார்த்திருந்த பாட்டுக்கச்சேரி ஆரம்பிக்கும்" என விதானையார் முடிக்க ஒரு சின்னச் சிறுவன் வெள்ளை நிறக் காற்சட்டை, சேட்டுடன் மேடையில் தோன்றினான்.

'நல்லதோர் வீணை செய்தே' என்ற பாடலை அதன் ஆரம்பத்தில் இருந்து ஆரம்பிக்காமல்,

"சொல்லடி சிவசக்தி – எனைச்

சுடர் விடும் அறிவுடன் படைத்து விட்டாய். . . ."

என்று உச்சஸ்தாயியில் பாட்டின் இடையில் இருந்து ஆரம்பிக்க சபை கப்பென்று மௌனமாகியது.

வெளியே கொட்டிய மழை, ரங்கராஜனுள் இடித்த இடி, வசந்தியினுள் தோன்றிய மின்னல். . . . அத்தனையையும் ஊடறுத்துக் கொண்டு. . .

"தசையினைத் தீ சுடினும் – சிவ

சக்தியைப் பாடும் நல் அகங்கேட்டேன்"

தனது தீக்குள் வைத்த விரலையும் நந்தலாலாவையும் ஏற்க



படிப்பகம்

padippakam



மறுத்த அந்தக் கூட்டம் அந்தச் சிறுவனின் தசையினைச் சுடும் தீயை ஏற்றுக் கொண்டதைப் பார்க்க யாரோ தன்னை மேடையில் இருந்து தூக்கி எறிந்தது போல உணர்ந்தார்.

மெதுவாக வசந்தியைத் திரும்பிப் பார்த்தார்.

அவள் கண்கள் அச்சிறுவனை உற்றுப் பார்த்திருக்க, கன்னங்கள் வழியே கண்ணீர் ஓடிக்கொண்டு இருந்தது.

அவருக்கு "திக்" என்றிருந்தது.

வாழ்வில் முதல் தடவையாக அவள் கண்களில் கண்ணீரைக் காணுகின்றார்.

தனக்கு நடந்த அவமானம் அவளைக் காயப்படுத்தியதோ என மனத்துள் வருந்தினார்.

"நல்லதோர் வீணை செய்தே - அதை

நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ"

இப்பொழுது பாடலின் முதல் வரிக்கு வந்து தன் பாடலை முடித்துக் கொண்டிருந்தான் அந்தச் சிறுவன்.

சிறுவனின் பாடலை சபை ஒருமனதாகப் பாராட்டி கைகளைத் தட்டியது.

வசந்தி பிரமித்திருந்தாள்

"லெற்ஸ் கோ"

வசந்தி மௌனமாக மேடையில் இருந்து அவர் பின்னால் இறங்கினாள்.

மாணிக்கவாசகரும் மகேஸ்வரியும் எழுந்து பக்கத்தில் வந்தார்கள்.

"நாங்கள் போறம் அங்கிள். . . நீங்கள்?"

மருமகன் போக விரும்புவதில் உள்ள நியாயத்தை மாணிக்கவாசகர் நன்கு உணர்ந்து கொண்டார்.



படிப்பகம்

padippakam



"எல்லாரும் போனால் சரியில்லை. . . நீங்கள் காரைக்கொண்டு போங்கோ நாங்கள் வாறம்."

"என்ன பாட்டுக் கச்சேரி கேட்காமல் போறியளோ" என வந்த விதானையாருக்கு,

"இல்லை விதானையார். .. சின்னத்தங்கத்தைதான் வீட்டை விட்டுட்டு வந்தனாங்கள். அவளுக்கும் குமர்ப்பிள்ளையள் வீட்டிலை இருக்கு. இவை போனால்தான் அவளை அனுப்பலாம்" என மாணிக்கவாசகர் சாதுரியமாய் பதில் கூறி அவர்களை விதானையாரிடம் இருந்து விடுவித்தார்.

யாரின் குடைக்கும் காத்திராமல் இருவருமே போய் காரில் ஏறிக் கொண்டார்கள்.

ஆத்திரம், அவமானம் அனைத்தையும் அக்சிலேட்டரில் காட்ட அது பாடசாலையைப் பின் தள்ளி விட்டுப் பாய்ந்து கொண்டு புறப்பட்டது.

கார் அதிவேகமாகப் போய்க் கொண்டு இருந்தது.

இருவருமே எதுவும் பேசவில்லை.

திரும்பி வசந்தியைப் பார்த்தார்.

அவள் 'திக்' பிரமை பிடித்தவள் போல் இருந்தாள்.

கண்களில் கண்ணீர் முட்டி இப்பவோ அப்பவோ என்று வெளியில் கொட்டக் காத்திருந்தது.

ரங்கராஜனாலும் எதுவும் பேச முடியவில்லை.

கார் விரைந்து கொண்டிருந்தது.

மழை பெய்து கொண்டிருந்தது.

கார் கேற்றை நெருங்கி நின்ற பொழுது கேற்றடியில் ஒரு சிறுமி பன்னிரண்டு பதின்மூன்று வயதிருக்கலாம். கோணிப்பையைத் தலையில் கவிழ்த்தபடி நடுநடுங்கியபடி "அம்மா, அம்மா" எனக் கூப்பிட்டுக் கொண்டு நின்றாள்.



படிப்பகம்

padippakam



"யார் வேணும்?" கண்ணாடிக் கதவைச் சற்றுத் தாழ்த்திக் கொண்டு ரங்கராஜன் கேட்டார்.

"அம்மா வேணும்" குளிரினால் நடுங்கிய பற்களுக்கிடையே வார்த்தைகள் சிக்கின.

"எந்த அம்மா?"

"உங்கடை வீட்டிலை வேலை செய்யுறா?"

மற்ற நேரமாயின் உடனே தன்னைச் சுதாரித்துக்கொண்டு "சின்னத்தங்கத்தின் கடைசி மகள் அல்லோ நீ. . . வந்து காருக்கை ஏறு" என அந்த மழையில் நனையும் சிறுமிக்காகப் பரிதாபப்படக் கூடிய வசந்தி கல்லாய் சமைந்து இருந்தது ரங்கராஜனுக்கு வியப்பாய் இருந்தது.

கார் வெளிச்சத்தைக் கண்டு வாசல் கேற்றைத் திறக்க வந்த சின்னத் தங்கம் தன் மகள் குளிரில் நடுங்குவதைக் கண்டு, "ஏன் புள்ளை கொக்காவைத் தனிய விட்டுட்டு வந்தனி" பரிதவித்தாள்.

"அம்மா. . .வீட்டு பின் சுவர் விழுந்து போச்சு. . . ."

"ஐயோ. . . அம்மாளாச்சியே. . . இந்தாங்கோ வீட்டுத் திறப்பும் குடையும்" எனக் கொடுத்துவிட்டு மகளின் கோணிப்பையினுள் தானும் ஒதுங்கிக்கொண்டு இருட்டினுள் வீட்டை நோக்கி ஓடினாள் சின்னத் தங்கம்.

"குடையை நீ கொண்டு போ" எனச் சொல்ல ஏன் தனக்குச் சரி, வசந்திக்குச் சரி தோன்றவில்லை என்ற எண்ணத்தோடு வீட்டுக்குள் வந்து சோபாவில் தொப்பென இருந்தார் ரங்கராஜன்.

கோட்டைக் கழற்றவோ ரையை இளக்கவோ தோன்றவில்லை.

கால்களை நீட்டியபடி. . . தலை முகட்டைப் பார்த்தபடி. . .கண்களை மூடியபடி. . . .என்ரெயலி ரிலாக்ஸ்.

அது அவருக்கு அப்போது மிகவும் தேவைப்பட்டது.



படிப்பகம்

padippakam



ஒரு கிளாஸ் வைன் இருந்தால் நல்லாய் இருந்திருக்கும். மேலாக சுவீடனில் இருந்து இங்கு வந்திருக்காமல் இருந்திருக்கலாம் எனத் தோன்றியது.

வசந்தியும் மௌனமாக முன் சோபாவில் கொஞ்ச நேரம் இருந்தாள். . . பின் தானாய் எழுந்து குசினியுள் போய் இரண்டு கப்களில் ரீ போட்டுக் கொண்டு வந்து வைத்தாள்.

தேனீர்கப்பின் சத்தத்தால் கண்ணைத் திறந்தவர் எதுவும் பேசாமல் தேனீரைக் குடித்தார்.

சுவர்க்கடிகாரம் பத்து மணி என அடித்தது.

வசந்தி ரீயும் குடிக்காமல் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

“நீ. . . ரீ குடிக்கல்லையா.”

“இல்லை”

“குடியேன்”

“வேணாம்”

“ஏன்?”

“என்னாலை இப்ப முடியேல்லை” எனச் சொல்லி முடித்திருக்க மாட்டாள் ... தன்னுள் இவ்வளவு நேரம் அடக்கி வைத்துக் கொண்டிருந்த அத்தனை வேதனைகளும் ஒன்று சேர ‘ஓ’ என ஓடிப்போய் ரங்க ராஜனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத்தொடங்கினாள்.

ரங்கராஜன் திகைத்துப் போனார்.

“வசந்தி வட் ஹப்பின்ட்?”

அவளால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. அழுகையையும் நிறுத்தமுடியவில்லை.

குழந்தைப் பிள்ளை போலை அவர் மார்பில் சாய்ந்தபடி கேவிக் கேவி அழுதாள்.



படிப்பகம்

padippakam



"என்னடா நடந்தது... பிளீஸ் பி காம்."

அவரால் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

"இந்த இன்சிடன்ற்றுக்காக நான் பெரிதாய் வொறி பண்ணப் போறதில்லை. ஐ ஜஸ்ட் லேர்ன் சம் லெசன்... வீ பொர்கெற் இற் வசந்தி... பி குவைற்."

"அது இல்லை... அது இல்லை" அவள் குரல் நடுங்கியது. "ஒரு பையன் பாடினானே... அது கிட்டு பாடுற பாட்டு...'

"யார் கிட்டு?"

"அவன் செத்திட்டான்... செத்திட்டான்."

வசந்தி கேவிக் கேவி அழுதாள்.

அவருக்குள் ஆயிரம் கேள்விகள் எழுந்தன.

எங்கேயோ ஏதோ ஒரு தவறு நடந்து விட்டுவிட்டதோ என அவர் மனம் சஞ்சலப்பட்டது.

"அவன் யார்?.. அவன் உனக்கு?..." அடுத்த சொல்லைத் தன் வாயால் கேட்க வேண்டாம் என நினைத்து கேள்வியை அரைவாசியுடன் நிறுத்தினார்.

"அவன் என்னோடை ஒண்டாய் படிச்சவன்... ஒண்டாய் விளையாடினவன்.. இப்ப.. இப்ப.."

"இயக்கத்துக்கு ஏதும் போய் அங்கு செத்துப்போட்டானா?"

"இல்லை... இல்லை..."

அவர் கைகள் சற்று நடுங்கின.

மேசை மீது அந்த மகசீனின் அட்டைப் படம் இப்போ அவரை உறுத்தியது. சேவல் துரத்திய பேடாய்.. திரும்பி வந்த சின்னத் தங்கத்தின் மகளாய்..

"நோ... அப்பிடி இருக்கக் கூடாது" மனம் சொல்லி முடிக்க முதல்



படிப்பகம்

padippakam



அவரிடம் இருந்து வார்த்தைகள் வேறு வடிவில் வெளிவந்தன.

"இஸ் ஹீ யுவர் லவ்வர்?"

அவளை உலுக்கினார்.

"இல்லை.. இல்லை.. என்ர பிரண்ட்."

"பிரண்ட் எண்டால் உன்னிலை அவ்வளவு உயிரா?"

"ஆமாங்க.. ஆமாங்க.. எட்டாம் வகுப்புவரை ஒண்டாய் படிச்சம்... விளையாடினம். . . திரிஞ்சம். . . நல்லாய் பாடுவான். . . இண்டைக்கு அந்தப் பையன் பாடின பாட்டு. . . இந்தப் பையனை விட எத்தனையோ மடங்கு திறமாக கிட்டு பாடுவான். . . அப்பா ஊர்ப் பள்ளிக்கூடம் வேண்டாம் எண்டு என்னை ரவுனிலை சேர்த்தார். . . கிட்டுக்கு நான் போறது விருப்பமே இல்லை. நீ போகாதை என அழுதான். . . நான் என்ன செய்யுறது...

அண்டைக்கும் இதுபோலைதான் மழை ... பள்ளிக்கூட முதல்நாள்... ரவுன் பள்ளிக்கூடத்துக்கு போக பஸ்சுக்குள்ளை இருந்தன். கிட்டுக்கு சரியான காச்சல். போய் சொல்லிப் போட்டுப் போனால் இன்னும் அழுவான் என்பதால் சொல்லாமலே போனன்...

பஸ் வெளிக்கிட ஆயத்தமானபோது இப்ப சின்னத்தங்கத்தின்ரை மகள் கோணிப்பையைப் போட்டுக்கொண்டு வந்தது போலை கிட்டு மழைக்குள் ஓடி வந்தான்.

"வசந்தி நீ ரவுன் ஸகூலுக்கு போக வேண்டாம்...."

"அப்பா கட்டாயமாய் போகச் சொல்லீட்டாரடா கிட்டு..."

"வசந்தி ... என்னையும் கூட்டிப் போடி..."

"அது முடியாதடா கிட்டு...."

பஸ் மெதுவாக ஊரத் தொடங்கியது. மழையும் பலக்கத் தொடங்கியது.

"நான் போட்டு வாறனடா... நீ வீட்டை போடா. . . ."

"வசந்தி நானும் வாறனடி. . . வசந்தி நானும் வாறனடி. . . ."



படிப்பகம்

padippakam



பஸ் கிளம்பியது. . . .

கிட்டு பஸ்சுக்குப் பின்னால் ஓடி வந்தான் . . .

கோணிப்பை. . . .மழை. . . காய்ச்சல். . . .

காய்ச்சலிலை மழையிலை நனைஞ்சதாலை மூண்டாம் நாள் சன்னி கண்டு அவன் செத்துப் போனான். . . .

"அவன் பாவமுங்கோ. . . என்ரை கிட்டு பாவமுங்கோ. . . . "

வசந்தி கேவிக் கேவி அவர் மேல் சாய்ந்து அழுதாள். அவர் அவளை ஆதரவாகத் தாங்கினார். குழந்தைப் பிள்ளையாய் அவர் கைக்குள் கிடந்தாள். . . கேவியழுத களைப்போ என்னவோ. . . கொஞ்சநேரத்தில் தூங்கி விட்டாள்.

அவளின் தலையை இதமாகத் தடவிக் கோதப் போனவரின் கைகள் நடுங்கின.

"அப்பாவி ஒருத்தியைப் போய் ஒருகணம். . .அதுவும் தான் சந்தேகப்பட்டேன் எனத் தெரியாமலே மடியில் தூங்கும் அந்த அப்பாவியைச் சந்தேகப்பட்டு விட்டேன் என்ற குற்ற உணர்வு அவரைக் கூனிக் குறுக வைத்தது.

பட்டம். . . படிப்பு. . . கௌரவங்கள். . . கோட். . . சூட். . . ரைகள். . . . எல்லாத்துக்கும் பின்னால் அந்த நிலைக் கண்ணாடியினுள் ஒரு கோரப்பேயின் உருவம் தான் அவருக்குத் தெரிந்தது.

"வட் டிட் ஐ போர் யு? ஐ சஸ்பெக்ஸ்ரட் யு?"

ஆனால் அவன். . . அந்தக் கிட்டு. . . .

"ஹி டைட் போர் யு!"

நினைத்துப் பார்த்தபொழுது அந்தக் கிட்டு கோணிப்பையைத் தலையில் போர்த்தபடி உயர்ந்து உயர்ந்து பனை உயரத்துக்கு உயர்ந்து கொண்டு போனான். . . அன்னியமாய். . . அருவருப்பாய் தோன்றிய கிராமத்தின் நடுவே அவன் உயர்ந்து கொண்டே போனான்.

மனிதாபிமானத்தை. . . கிராமத்து மக்களின் நேச பாசங்களை. . .



படிப்பகம்

padippakam



ஆழங்களை அளவிடத் தடங்கலாய் இருந்த அவரின் அகந்தையை வெளியில் அடித்த மழை கழுவிக் கொண்டிருந்தது.

தன் கோணிச்சாக்கை எடுத்து கிட்டு அவரின் தலையை நன்கு துடைத்து விட்டான்.

கடந்த ஒரு வருடமாய் தனக்கென்று எந்த எதிர்பார்ப்பும் இன்றி அவருக்காகவே தன்னைத் தந்து வாழ்ந்த அவளை "தன்நிலை"யில் இருந்து வழுவி அவளைக் கேட்ட கேள்வி அவரைப் புடம் போட்டுக் கொண்டு இருந்தது.

வாழ்வில் முதன் முறையாக அவர் கண்கள் பனித்தன.

நடுங்கும் கைகளால் தூங்கும் வசந்தியின் தலையைத் தன் மடிமீது தூக்கி வைத்து தலையைக் கோதிக் கொண்டிருந்தார்.

வெளியே கொட்டிய மழை கொஞ்சம் ஓய, வீதி ஓரங்களில் தேங்கியிருந்த அழுக்குகளை வெள்ளம் அடித்துக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

●



படிப்பகம்

padippakam

# கிராமத்து வீடும் என் முதல் காதலியும்

டென்மார்க் குளிருக்கு
பயந்து ஒளித்த சூரியன்
தாண்டிக் குளத்தில்
சுட்டெரித்தான்

இருபது வருடத்தில்
எல்லாமே மாறியிருந்தது

கண்களில் மரணபயம்
வீதிகளில் ஒப்பாரி ஓலங்கள்
சாம்பல் பூத்த அடுப்புகளில்
எம் ஊர்ப் பூனைகள்

ஆடிமாதக் காற்றில்
பறந்து திரியும் பட்டங்கள். . .
அம்மன் கோயில் வீதிகளில்
அலறியடிக்கும் லவுட்ஸ்பீக்கர்கள். . . .
வரிசையாக வண்டி கட்டிப் போகும்
வாழைக்குலை வியாபாரிகள். . .
எதுவுமே அங்கு இல்லை

படிப்பகம்

padippakam



ஆளுக்கு ஆள் கைகளில்
கையடக்க துப்பாக்கிகள்
நண்பன் எவன்? எதிரி எவன்?
எதுவுமே புரியவில்லை!

மக்கள் தினம் தினம்
பதுங்கு குழிகளில் மரணித்து
மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுகின்றார்கள்
தினமும் தான் பாலன் பிறப்பு
தினமும் தான் சிலுவையில் உயிர்த்துறப்பு
தினமும் தான் உயிர்த்தெழுந்த ஞாயிறு
எந்த புதிய அத்தியாயத்தில்
எழுதப் போகின்றோம்
எங்கள் இறப்புகளையும் பிறப்புகளையும்

வழி நெடுக மகளும் மகனும்
கேள்விமேல் கேள்வியாய். . . .
பதில் தெரியாத எம் நாட்டு யுத்தமாய்
விழிபிதுங்க நானும். . . .

கொஞ்சம் ஊரை நெருங்க
மங்கலாய் மனதுள் நிற்கும் மனிதர்கள். . .

உதட்டில் சிரிப்பு. . . . உள்ளத்தில் கவலைகள். . .
போன வின்ரரில் கார் விபத்தில் போன
சாந்தியின் மரணத்துக்கு அனுதாபங்கள். . .
பாவம் பிள்ளைகள்!

வயலோரக் கால்தடத்தில்
என் கால்கள் பெரிய வீட்டைத் தேடி. . . .



படிப்பகம்

padippakam



கிராமத்து பெரிய வீடு!
சுனாமி அரித்திருந்தது - அவள்
வாழ்க்கையைப் போல

பாவாடைச் சட்டையுள்
சிரித்திருந்தவள்
தாவணிச் சேலையுள் போனதும்
உருமாறியிருந்தாள்

நாய்க்குட்டி படுத்திருக்கும்
திண்ணையில் தான்
அன்று நாம் தனித்திருந்தோம்
16 வயதுக் கனவுகளுடன்

யாருக்கும் சொல்லாத காதல். . . .
எவர்க்கும் காத்திராத காலம். . . .
அவளுக்கு நல்ல நாள் குறித்திருந்தார்கள். . .
நீளக்காற்சட்டை போடாத வயது என்னுடையது
என்ன நான் செய்து விட முடியும்

பின்வளவில் கட்டிய மாடாய்
அழுது தான் இருந்திருப்பாள்
யாருக்கும் கேட்கவில்லை போலும்

இருபது வருடத்தில்
எல்லாமே மாறியிருந்தது
3 பிள்ளைகள். . . எலும்பு தோலுமாய். . .
புருஷன்காரன் கள்ளச்சாராயம் காச்சுகிறானாம்
தெருமுனையில் சொன்னார்கள். . . .



படிப்பகம்

padippakam



இரண்டு வாரம் ஓடி விட
நாளை நான் திரும்ப வேண்டும்
அவள் வீட்டு முற்றத்தில்
அவளும் நானும் தனித்திருந்தோம்

தூக்குக்குச் செல்லும்
மரண தண்டனைக் கைதியாக
கடைசி ஆசை ஏதோ ஒன்றை
கண்களால் விண்ணப்பம் செய்கின்றாள்

கண்களின் வார்த்தைக்குள்
குரல் அடங்கிப் போயிருக்க வேண்டும்

மாலைச் சூரியனின் தயவு. . . .
அவளின் முகத்தின் நிழல்
என் காலடிக்குக் கிட்ட. . . .
குனிந்து தலையை வருடிவிட்டேன்

பொக்கற்றில் இருந்த டொலர்களை
எடுத்துக் கொடு என்றது மூளை
வேண்டாம் எனத் தடுத்தது மனசு

கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்தது. . . .
திரும்பி நடந்தேன் இதயம் கனக்க!!!

●



படிப்பகம்

padippakam

# தாய் + மண்

செல்லாச்சிக் கிழவி இன்றுதான் முதன் முதலில் கொழும்புக்கு வந்திருக்கின்றா. நாளை அதிகாலை ஏர் லங்காவில் இளையமகன் சுகந்தன் முப்பது வருடங்களுக்குப் பின் இலங்கைக்கு வரவிருக் கின்றான். . . . இல்லை. . . . வரவிருக்கின்றார்.

செல்லாச்சிக் கிழவிக்கு 83 வயது. . .

வாழ்க்கையில் முதன் முதலில் ரெயினில் ஏறியதும் இன்றுதான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் போக பாசுக்கு ஒரு கிழமையாய் அலைஞ்சு, வன்னி வரை பஸ்ஸில் பயணப்பட்டு, பின் தாண்டிக்குளத்தடியில் செக்கிங்கிற்காக காலும் முதுகும் நோக நின்று, 80 வயதுக்கிழவி என்று கூடப் பார்க்காமல் தனியறையில் வைத்து "அங்கை ஏதும் ஒளித்து வைத்திருக்கிறாயா, இங்கை ஏதும் ஒளித்து வைத்திருக்கிறாயா" என வெற்றுடம்பு கூசும் அளவுக்கு இன்னோர் பெண் பொலிசால் சோதிக்கப்பட்டு, கடைசியாய் வவுனியா ரெயில் ஸ்டேசனில் களைப்பு போக ஒரு செவ்விளனியைக் குடிச்சபோதுதான் செல்லாச்சிக் கிழவிக்கு உயிர் வந்தது.

"இந்த வயதிலை உதெல்லாம் தேவையோ அம்மா? அவனை பிளேனிலை யாழ்ப்பாணம் வந்திருக்கச் சொல்லியிருக்க ஒரு பிரச்சனையுமில்லை. இல்லாட்டி நீயாவது பயப்பிடாமல் என்னோடை பிளேனிலை வந்திருக்க வேணும்". கூடவே துணைக்கு வந்த மூத்த மகன் நடராசா தனது களையை கிழவி மீது கொட்டித் தீர்த்தான்.

"பிளேனிலியோ . . . . அது மேலை எழும்ப முதலே என்டை உயிர் போயிடுமடா. . . உனக்கு எத்தினையோ தடவை சொல்லிப் போட்டன். . .

படிப்பகம்

padippakam



மற்றது அவன் யாழ்ப்பாணம் வாறதிலை எனக்கு ஒரு சதமேனும் விருப்பமில்லை கண்டியோ... முப்பது வருசத்துக்குப் பிறகு அம்மாவைக் காண வாற பிள்ளையை அயல்அட்டை நிம்மதியாய் இருக்க விடாது. அந்த நாய் திமிரெடுத்து ஓடாட்டி என்ரை பிள்ளைக்கு ஏன் இந்த நிலை?' கிழவியின் கண்ணும் தொண்டையும் கலங்கியது.

"ஆட்கள் பார்க்கினம். . . .கதையை நிப்பாட்டனை. . . கொஞ்சத்திலை ரெயில் வந்திடும்."

வவுனியா ஸ்டேசனும் கிழவியின் மனம் போல வரண்டு கிடந்தது. ஸ்டேசனுக்குப் பக்கத்தில் இருந்த பூக்கண்டுகள் கவனிப்பாரற்று வாடி வதங்கி நின்றன. இரண்டொரு எலும்பும் தோலுமான ஆட்டுக்குட்டியள் பயணிகள் அறையில் தூங்கிக் கொண்டு கிடந்தன. பக்கத்தே இன்னமும் சுத்தம் செய்யப்படாத ஆட்டுப் புழுக்கைகள் நிறைந்து இருந்தன.

கொழும்புக்குச் செல்வதற்காக ஆயுதங்களுடன் நின்ற ஒரு பத்து பதினைந்து ஆமிக்காரரைக் கண்டதும் கலகலப்பாய் கதைத்துக் கொண்டிருந்த பயணிகளின் கதைகள் தாங்களாகக் குறைந்து கொண்டன.

மௌனம்! அல்லது உயிர்வாழ்தலுக்கு மௌனித்திரு! என்ற தாரக மந்திரத்தை மக்கள் இப்போது நன்றே கற்றுக்கொண்டு இருக்கின்றார்கள்.

முதல்நாளே தெரிந்த ஒருவரைக் கொண்டு கொழும்புக்கு இரண்டு சீற் புக் பண்ணியிருந்தாலும் ரெயின் பிளாட்பாரத்தில் தனது வேகத்தை குறைக்க நடராசன் மற்றவர்களுடன் போட்டி போட்டு தானும் ஏறி, செல்லாச்சிக்கு மூலை ஆசனத்தைப் பிடித்துக் குடுத்தான்.

ரெயின் மெது மெதுவாக ஊர்ந்து பின் தன் வேகத்தை மெதுவாகக் கூட்டி பின் அனைவரையும் தாலாட்டும் தாளகதியில் செல்வது செல்லாச்சிக் கிழவிக்கு முற்றும் ஒரு புது அனுபவமே. மரங்களும் தந்திக் கம்பிகளும் பின்னால் ஓட மூலை ஆசனத்துள் முடங்கிக் கிடந்து, சுகத்துடன் சுகந்தனின் நினைவுகளுள் கிழவி மூழ்கிப் போகின்றாள்.



படிப்பகம்

padippakam



நிலம் வெளிக்க முதல் தோட்டத்துக்கு மருந்தடிக்கப் போக கதிர்காமர் நெஞ்சுக்கை நோகுது எனத் திரும்பி வந்து “செல்லம் இஞ்சி போட்டு ஒரு வாய் தண்ணி தா” என்று குசினித் தாழ்வாரநிலையில் சாய்ந்து கொண்டு கண்ணை மூடிக்கொண்டிருந்தவர், பின் செல்லம் தேத்தண்ணி கொண்டு வந்த போதும் எழும்பாமல் போனபோது செல்லத்திற்கு வயது 38.

அப்பொழுது மூத்தவன் நடராசாக்கு 8 வயது. இளையவன் சுகந்தனுக்கு 3 வயது.

“விதானையாற்றை மகன் கதிர்காமர் காலம் சென்று போட்டார்” என அடுத்த நாட்காலை இழவு சொல்ல . . . . ஊர் எல்லாம் கூடி ஒப்பாரி வைக்க. . . மானிப்பாய் சைவம் கிரியைகள் செய்ய. . . . அராலிப் பாட்டுக்காரர் பட்டினத்தார் பாட்டுகள் பாட . . . குழந்தைகள் இரண்டும் தகப்பனுக்கு கிரியைகள் செய்ய . . . . செல்லம் தாலியை அறுத்து சவப்பெட்டிக்குள் போட்டு. . . . சுமங்கலி செல்லம் கைம்பெண் செல்லமாக. . . .

புகையிரதம் முன்நோக்க மீண்டும் நினைவுகள் பின்நோக்கிச் சென்றன.

கதிர்காமர் இளவயதில் போய்விட்டாலும் செல்லம்மாவை நாலுபேரிடம் கையேந்தும் நிலையில் வைத்துவிட்டுப் போகவில்லை. ஊரில் எங்கு காணி விலைக்கு வந்தாலும் அவற்றை கதிர்காமர் வேண்டி விட்டுக்கொண்டே வந்ததால் அந்தக் காணிகளை மற்றவர்களுக்குப் பராயத்துக்கு செய்யக் குடுத்ததால் வந்த வருமானம் செல்லம்மாவின் வாழ்க்கைக்குப் போதுமாயிருந்தது.

நடராசாவையும் சுகந்தனையும் நல்ல படிப்பு படிப்பீக்க வேணும் என்று நிலவு வெளிச்சத்திலை இருந்து நிலாச்சோறு சாப்பிடும் பொழுது அடிக்கடி கதிர்காமர் கதைப்பதை நிறைவேற்ற செல்லம்மா எவ்வளவோ பிரயத்தனப்பட்டா.

ஆனாலும் நடராசனுக்கு எந்த பள்ளிக்கூடங்களோ. . . ரியூசனோ. .



படிப்பகம்

padippakam



பெரிதாக உதவவில்லை. எட்டாம் வகுப்புக்கு மேல் கடைசிவரை பள்ளிக்கூடம் போக மறுத்துவிட்டான். அப்படி வலுக்கட்டாயமாக அனுப்பினாலும் ஏதோ ஓர் சினிமாக் கொட்டகையில் காலைக்காட்சிக்கு போகத் தொடங்கினான். ஆட்களும் செல்லம்மாவிடம் வந்து "நடராசனை யாழ்ப்பாணத்திலை கண்டம். . . . மினி பஸ்சுக்கை கண்டம்" எனச் சொல்லத் தொடங்கினார்கள்.

முடிவு. . . கதிர்காமர் இறக்கி வைத்த மண்வெட்டியை பதினேழு வயதிலேயே தனது தோளில் தூக்கி வைத்துக் கொண்டான்.

ஆனால் சுகந்தன் அப்படியில்லை. எட்டாம் வகுப்பு பொதுச் சோதனையிலும் சரி, பத்தாம் வகுப்பிலும் சரி யாழ் மாவட்டத்திலேயே அவன்தான் முதலாவதாய் வந்தான். செல்லம்மாவின் கலிதீர்க்க வந்த பிள்ளை என ஊரே கொண்டாடியது.

"டே! எனக்குத் தான் உந்தப் படிப்பு வரேல்லை. . . எங்கடை தோட்டம் காணி எது எண்டாலும் வித்து உன்னை மேல் படிப்பு படிப்பீப்பம். நீ கவலைப்படாமல் எல்லாம் படி!" என நடராசா தம்பியாருக்கு ஊக்கம் கொடுப்பதைப் பார்த்து செல்லம் கண்கலங்கினாள்.

அப்போது சுகந்தனுக்கு அட்வான்ஸ் லெவல் சோதனை நெருங்கிக் கொண்டு இருந்தது. பல்கலைக்கழகங்களுக்கான நுழைவுச்சீட்டு திறமையின் அடிப்படையில் மட்டுமில்லாது மாகாண அடிப்படையிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற தரப்படுத்தல் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நேரம்.

இலங்கையில் ஆங்காங்கே வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இயக்கங்கள் என்ற சொல் மக்களிடையே அறி முகமாகிக்கொண்டு இருந்தது. மினி சினிமா தியேட்டர்களிலே இடைக்கிடை வலுக்கட்டாயமாக சீனப்புரட்சி, மற்றைய கொரில்லாப் போராட்டப்படங்கள் இரகசியமாக காட்டத் தொடங்கியிருந்தார்கள். இவை பற்றிய தகவல்கள் ஊர் பொலிஸ்காரர்களுக்கும் சாடைம ாடையாக எட்டத் தொடங்கின.



படிப்பகம்

padippakam



ஒரு நாள் ரியூசன் வகுப்பு ஆரம்பிக்க இருந்த நேரம். ரியூசன் மாஸ்டர் பத்து நிமிடம் பிந்தித்தான் வருவார் என்ற தகவல்களுடன் சாரம் அணிந்த இரண்டு வாலிபர்கள் உள்ளே வந்தார்கள். அனைத்து மாணவர்களும் அவர்களை ஆச்சரியமாய் பார்த்தார்கள். வந்தவர்கள் அவசர அவசரமாக துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்கள்.

என்னதான் கஷ்டப்பட்டு படித்து முடித்தாலும் பல்கலைக் கழகத்துக்குப் போக முடியாத அவலநிலையைச் சொன்னார்கள். திட்டமிட்ட குடியேற்றல்களைப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக தமிழருக்கு எதிர்காலம் ஓர் இருண்ட காலமாகவே விளங்கப் போகிறது என்று அறுதியிட்டுக் சொன்னார்கள். இறுதியாக இதற்கெல்லாம் இறுதித் தீர்வு தமிழருக்கு "ஒரு சொந்தநாடு வேண்டும் - அது கேட்டுப் பெறுவதல்ல - போராடிப் பெறுவது. அது மாணவர்களாகிய உங்களால் தான் முடியும்" என்று கூறிமுடிக்க முதல் ரியூசன் வகுப்பை பொலிஸ்காரர்கள் சுற்றிவளைத்தார்கள். அந்த இரண்டு வாலிபர்களும் வேலியால் பாய்ந்து ஓடிவிட்டார்கள். சுகந்தன் உட்பட்ட இருபது மாணவர்களும் சுன்னாகம் பொலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

இதைக் கேள்விப்பட்டதும் ஊரே ஒரு தடவை குலுங்கியது. செல்லம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு முற்றத்திலேயே ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

அண்டை அயல்கள் ஏதோ அவலம் நடந்து போய்விட்டதாய் செல்லம்மா வீட்டு வாசலில் கூடி ஆறுதல்படுத்தினார்கள்.

அன்று பின்னேரமே செல்லம்மா உட்பட மற்றைய மாணவர்களின் பெற்றவர்கள் அப்புக்காத்து ஆறுமுகத்துடன் சுன்னாகம் பொலிஸ் ஸ்டேசனுக்குப் போனார்கள்.

அங்கு இவர்கள் மீது பயங்கரவாதச் சட்டத்தில் வழக்குப் பதிவாகியிருக்கிறது என்றும் இவர்களை விசாரணைக்காக கொழும்பு 5ம் மாடிக்கு இரவு மெயில் வண்டியில் கொண்டு போகப் போவதாயும் தெரிவித்திருந்தார்கள்.



படிப்பகம்

padippakam



செல்லம்மா மயங்கி விழுந்தாள்.

நகங்களை குறட்டால் பிடுங்குவது, தலைகீழாகக் கட்டி தலையை மிளகாய்த் தூள் பையினால் கட்டி விட்டு குதிக்கால்களில் பொல்லுகளால் அடிப்பது, ஆண் உறுப்பை மேசை லாச்சியினுள் வைத்து அமுத்துவது என்று 5ம் மாடி விசாரணைகள் பற்றி ஆளுக்காள் அரசல் புரசலாகத் தெரிந்து வைத்திருந்தமையால் தங்கள் பிள்ளைகளை கொழும்புக்குக் கொண்டு செல்வதைத் தடுக்க தம்மால் முடிந்தளவு போராடுவது எனத் தீர்மானித்தார்கள்.

ஊர் எம். பி.யை அணுகிப் பார்த்தார்கள். பயன்படவில்லை.

ஆளும் கட்சியின் ஆதரவாளர் ஒருத்தரை சந்தித்துப் பார்த்தார்கள். இதுவும் பிரயோசனப்படவில்லை.

கடைசியில் கோட்டையில் இருந்த ஓர் ஆமிப் பெரியவனுக்கு நெருக்கமான ஒரு வர்த்தகப் பெரியவருடன் தொடர்பு கொண்டு அவர் மூலம் ஒரு மாணவனுக்கு ஐயாயிரம் படி அந்த இருபது மாணவர்களுக்கும் ஆமிப்பெரியவனுக்கு ஒரு லட்சத்தை லஞ்சமாய் கொடுத்ததில் 5ம் மாடிப்பயணம் ரத்து செய்யப்பட்டது.

இந்தக் கைது, விடுதலையால் ஊரே நன்கு குழம்பிப் போயிருந்தது. ஆளுக்காள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் எந்த எந்த திசையில் போகப் போகின்றதோ எனக் கவலைப்படத் தொடங்கியிருந்தார்கள். மேலாக பிள்ளைகள் இயக்கங்களுக்குள் போய் விட்டால் என்ன செய்வது என்ற பயமே மேலோங்கி இருந்தது.

செல்லம்மாவின் மூத்த தமையன் கொழும்பு கச்சேரியில் வேலை பார்ப்பவர். விசயம் அறிந்து உடனே ஊருக்கு வந்தார். சுகந்தன் நல்ல கெட்டிக்காரன் என்பதால் தன் மகளுக்கு ஒரு நேரத்தில் கட்டிக் கொடுக்கலாம் என்று மனதுள் கணக்குப் போட்டு வைத்திருக்கிறார் என்பதும் செல்லமாவுக்குத் தெரியும்.

இனியும் சுகந்தனை யாழ்ப்பாணத்தில் வைத்திருப்பது புத்தசாலித்தனம் இல்லை என்றும், கொழும்பில் தொடர்ந்து படித்து



படிப்பகம்

padippakam



யூனிவேசிற்றிக்குப் போனாலும் அங்கும் ரியூட்டரியில் நடந்தது போல பிரச்சனைகள் தொட்ட குறை விட்ட குறைகளாய் தொடரும் என்பதால், ஏதாவது வெளிநாட்டுக்கு அனுப்புவது தான் நல்லது எனப்பட்டது.

சுகந்தனுக்கு எந்த முடிவிலும் எது சரி, எது பிழை என்று தெரியவே யில்லை. அந்தளவு சுன்னாப் பொலிஸ் நிலையத்தில் நடந்த விசாரணைகள், மேலாக 5ம் மாடிக்கு கொண்டு செல்லப் போகின்றார்கள் என்ற பயப்பீதி இரண்டிலிருந்தும் முற்றாக விடுபடவில்லை.

“பிள்ளையை விட்டுட்டு நான் உயிருடன் இருப்பனோ” என்று சராசரி யாழ்ப்பாணத் தாய் போல செல்லம் தவித்தாலும் தமையனின் கருத்தில் உடன்பாடாய் இருந்தாள்.

முடிவு? கதிர்காமர் கடைசியாக வேண்டி விட்ட அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த 5 ஏக்கர் வயல்காணியை விலைக்கும் 6 பரப்பு புகையிலைத் தோட்டக்காணியை ஈடு வைத்தும் புரட்டிய காசுடன் சுகந்தனை ஓர் ஏஜன்றுடன் மாமனாரே கூட்டிவந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானம் ஏற்றி விட்டார்.

ரஷ்யா, பனி மலைகள், காட்டுவழிகளினூடு இரவில் நடத்தல், ஏஜன்ற்மாரின் அட்டகாசங்கள், அவர்களுக்கிடையிலான போட்டிச் சண்டைகள், அளவுச் சாப்பாடுகள், அப்பாவிப் பெண் பிள்ளைகளை அவர்கள் அறியாமல் மயக்க மருந்து குடுத்து கெடுக்கும் ஈனச் செயல்கள். . . என தான் பிறந்ததில் இருந்து கற்பனை பண்ணியிராத சம்பவங்களை ரஷ்யாவில் இருந்து காட்டுவழிப் பாதையினூடு டென்மார்க்கிற்கு வந்து சேரும் வரை அனுபவித்திருந்தான்.

சுகந்தனின் இந்த மூன்று மாத வனவாசம் முடிந்து, தான் டென்மார்க்கிற்கு வந்து விட்டேன் என செல்லமாவுக்கு கடிதம் வரும் வரை அவள் அவளாகவே இல்லை.

அடுப்படியில் தேத்தண்ணி வைத்துக் கொண்டு இருந்தாலும் சரி, அம்மியில் மிளகாய் அரைத்துக் கொண்டு இருந்தாலும் சரி, அம்மன் கோயில் வாசலுக்கு பின்னேரத்தில் கற்பூரம் கொளுத்தப்



படிப்பகம்

padippakam



போனாலும் சரி அவளையும் அறியாமல் கன்னங்கள் வழியே கண்ணீர் ஓடிக் கொண்டேயிருக்கும்.

அவ்வாறே இப்பொழுதும் ரயிலின் படபடப்பிலும் சுகந்தனை பல வருடங்களுக்குப் பின் காணப்போகிறோம் என்ற நினைப்பில், சந்தோஷத்தில், பூரிப்பில். . . . கண்ணீர் ஓடிக் கொண்டு இருந்தது.

முன்னால் இருந்த நடராசாவுக்கு தாயின் கண்ணீருக்கான காரணங்கள் நன்கு தெரிந்திருந்ததால் ஏதும் பேசாமல் மௌனமாய் இருந்தான்.

தான் ஊரிலை இருந்தாலும் தனக்கு அமைந்தது போல மனைவி, இரண்டு பிள்ளைகள், மேலாக ஒரு குடும்ப வாழ்க்கை தம்பியாருக்கு இல்லாமல் போய் விட்டதை நினைத்து பெரிதும் கவலைப்பட்டான்.

புகையிரதம் அனுராதபுரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

செல்லாச்சிக்கிழவியின் கண்கள் வெளியேயும் மனம் சுகந்தனுடனும் ஒன்றிப் போய் இருந்தது.

சுகந்தன் தான் சுகமாய் போய் டென்மார்க் சேர்ந்தது, மூன்று மாதத்திலேயே அகதி அந்தஸ்து கிடைத்தது, தொடர முடியாமல் போன படிப்பை படித்து முடித்தது, மேலாக அங்குள்ள ஒரு பெரிய நிறுவனத்தில் டெனிஷ்காரருக்கு சமனுக்கு சமனாக வேலை கிடைத்தது. . . . இவ்வாறு ஒவ்வோர் கடிதமும் அவனிடம் இருந்து வரும்போதெல்லாம் அரசடி அம்மனுக்கு செல்லம்மாவின் பொங்கல் காணிக்கை ஆகும்.

சுகந்தன் படிப்படியாக முன்னேற முன்னேற தள்ளி நின்ற பல சொந்தங்கள் கிட்டவாக வரத் தொடங்கின. இது கொழும்புத் தமையனுக்கு வயிற்றில் புளியைக் கரைக்க, நேரடியாக உரிமையுடன் செல்லம்மாவிடம் தன் மகளுக்கு சம்பந்தம் பேசி வந்தார்.

சுகந்தன் இவ்வாறு முன்னேறி வந்ததற்கு அவனை நாட்டை



படிப்பகம்

padippakam



விட்டு கவனமாக அனுப்பிய தமையனின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாமல் இருந்தாலும், தமையனின் மகள் ஒரு யாழ்ப்பாணப் பிள்ளையாக வளராமல் கொழும்புக் கலாச்சாரத்தில் வளர்ந்திருந்தது செல்லம்மாவுக்கு ஓர் மன நெருடலாய் இருந்தது.

"சீலை கட்டத் தெரியாட்டி என்ன? டென்மார்க்கிலை நெடுக சீலையே கட்டிக் கொண்டு திரியப்போகுதுகள். அங்கை போனால் ரவுசர் தானே போடப் போகுதுகள்." என தமையன் விடவில்லை.

செல்லம்மாவின் கவலை சீலை, ரவுசர் என்பதில் இருக்கவில்லை. மேலாக சுகந்தனுக்கு வாற பிள்ளை சீலையாய் அவனைச் சுற்றியிருக்குமா அல்லது ரவுசராய் தூக்கி எறியுமோ என்பதில் தான் இருந்தது.

கடைசியாக சுகந்தனிடமே கேட்டு செல்லம்மா கடிதம் போட சுகந்தன் எந்த ஆட்சேபணையும் இல்லை என பச்சைக்கொடி காட்ட, இங்கு இருவீட்டாரும் தட்டுகளை மாற்றிக் கொண்டார்கள்.

அடுத்தடுத்து எல்லாம் அவசர அவசரமாக நடைபெற ராஜி சுகந்தனிடம் பயணப்பட்டாள்.

அதற்குப்பின் அடுத்த மூன்று வருடங்களில் டென்மார்க்கில் நடந்தவைகள் அல்லது செல்லம்மா அறிந்தவைகள் எல்லாம் இடைக்கிடை பக்கங்கள் தொலைந்த நாவல்களை வாசிப்பது போல இருந்தன. சுகந்தனிடம் இருந்து கடிதங்களும் வருவது குறைய செல்லம்மாவுக்கு கவலைகள் அதிகரிக்கத் தொடங்கியது. கொழும்பு தமையனிடம் இடைக்கிடை விசாரிக்கும்போதெல்லாம், "மகளும் மருமகனும் சந்தோசமாய் இருக்கிறார்கள். . . போன கிழமையும் கதைச்சனான் என்ற பதில்கள்தான் வந்து கொண்டு இருந்தன.

செல்லம்மா அரசடி அம்மனைத்தான் எல்லாத்துக்கும் நம்பியிருந்தாள்.

ஆனால் டென்மார்க்கிலை இருந்து வந்த சண்டிலிப்பாய் ஆட்கள் சொன்ன தகவலைக் கேட்டதும் அந்த அம்மன் கூட தன்னை ஏமாற்றி விட்டதாக அரசடியில் இருந்து அழுது கொட்டினாள்.



படிப்பகம்

padippakam



விடயம் இவ்வளவுதான் - இரண்டு வருடத்துக்கு முன்பே ராஜி ஏற்கனவே திருமணமாகி விவாகரத்துப் பெற்றிருந்த ஓர் கொழும்பு ஆளுடன் ஓடிவிட்டாள் என்பதுதான். சுகந்தனும் மரியாதை மானத்துக்குப் பயந்து டென்மார்க்கில் ஓர் ஒதுக்குப்புறமான நகரத்துக்கு மாறி விட்டானாம்.

அதற்குப் பின் செல்லம்மா அழுது அழுது போட்ட கடிதங்களுக்கும் எந்த பதிலும் இல்லை. "அம்மா செய்து வைச்ச கலியாணம்", தன்னில் கோபமாய் இருக்கிறானோ எனப் பெற்ற வயிறு அடிக்கடி நொந்து கொள்ளும்.

ஆனால் சுகந்தனின் நல்வாழ்வுக்காக வேண்டும் செல்லம்மாவின் பிரார்த்தனையில் எந்தக் குறையும் இருக்கவில்லை. "இந்தக் கட்டை போறத்துக்கிடையில் எப்பிடியும் பிள்ளை என்னட்டை வருவான்" என்ற நம்பிக்கையிலேயே செல்லம்மாவின் காலம் ஓடிக்கொண்டிருந்தது.

தலை முடியும் நரைக்கத் தொடங்க, கண்களில் பூஞ்சணமும் படரத் தொடங்க கண் ஒப்பிரேசன் செய்து கண்ணாடி போட்டு ஒவ்வோர் நாள் காலையிலும் திடீரென ஒழுங்கை முகப்பில் என் மகன் வந்திட மாட்டானோ என்று ஏக்கத்துடன் அரசடி அம்மன் தொடக்கம் செல் லச்சன்னதி முருகன் வரை வைத்த கற்பூர நேர்த்திக்கடன்கள் வீண் போகவில்லை போலும்.

ஒரு நாள் சுகந்தனிடம் இருந்து கடிதம் வந்தது. "அம்மா, உன்னைப் பார்க்க வேண்டும் போலை இருக்கு. என்ரை 50வது பிறந்தநாளுக்கு எங்கடை கொம்பனி ஒரு மாத லீவும் ஒரு மாதச் சம்பளமும் தருகினம். கொழும்புக்கு வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என விரும்புகின்றேன்."

புகையிரதம் இப்போது மருதானைக்கு வந்து விட்டது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் கொழும்புக் கோட்டை. . . .அடுத்தது சுகந்தன் வந்து நிற்கச் சொன்ன ஹோட்டல் . . . . நாளைக் காலை . . . என்ரை பிள்ளை. . . என்ரை குஞ்சு . . .என்ரை ராசா. . . .



படிப்பகம்

padippakam



புகையிரதம் கோட்டை நிலையத்துள் புகுகின்றது.

ஏறும் பொழுது இருந்த அவசரத்தை இறங்கும் பொழுதும் மக்கள் காட்டிக் கொண்டு இருந்தார்கள்.

சாடையாக இருட்டுப்படத் தொடங்கி விட்டது.

வெளியில் ஆங்காங்கே ஆமியும் பொலிஸ்காரரும் நின்றார்களே தவிர மற்றும்படி கோட்டை தனது பழைய களையை முற்றதாக இழக்கவில்லை. ஆட்டோக்கள், டக்ஸிகள், மினி பஸ்கள், இ. போ. ச. பஸ்கள் அனைத்தும் டீசல்புகையை வாரி இறைத்துக்கொண்டு அவசரகதியில் இயங்கிக் கொண்டு இருந்தன.

நடராசனும் செல்லாச்சியும் சுகந்தன் கூறியிருந்த ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒரு குளிப்பு. . . . இரவுச்சாப்பாடு. . . பயணக் களைப்பு. . . . நடராசா தூங்கி விட்டான்.

ஆனால் செல்லம்மாக்கிழவிக்கோ. . . . ஒவ்வோர் நிமிடமும். . . . தத்தித் தத்தி தன் பிள்ளை 35 வருடங்களுக்குப் பின் கிட்ட வருமாப் போல் மீண்டும். . . . மீண்டும். . . . அலை அலையாய். . . . அவன் நினைவுகள். . . . கந்தசஷ்டி முடிந்து அடுத்த மாதமே அவன் வயிற்றில் ஜனித்தது. . . . அதைக் கேட்டு கதிர்காமர் குதித்தது தொடக்கம்.. . . . அவனை அழுதழுது நாட்டை விட்டு அனுப்பியது வரை. .. .. அலை அலையாய். . . . இப்ப அவனுக்கு தலையும் நரைத்திருக்கும். . . . .

"நித்திரை முழிச்சு நாளைக்கு வருத்தமாய் இருக்காதை"

சொன்னது நடசாரானா? சுகந்தனா?

செல்லம்மாக்கிழவி தூங்கி விட்டாள்.

*****************************************************************

ஆட்டோக்கள், மினி பஸ்கள், தேனீர்க்கடைகளின் ஆரவாரங்களுடன் கொழும்பு அதிகாலை நாலு மணிக்கு மெதுவாக முழித்துக்



படிப்பகம்

padippakam



கொண்டது. நடராசனும் முழித்துக் கொண்டான்

"இன்னும் அரை மணித்தியாலத்திலை தம்பி வந்து இறங்கி விடுவான். செக்கிங் அது இது என ஒரு மணித்தியாலம் போக. . . இஞ்சை வர ஒண்டரை மணித்தியாலம். . . . எப்பிடியும் ஏழரை எட்டுக்கு வந்திடுவன்" நடராசா மணிக்கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

நடராசனின் அசைவு செல்லம்மாக்கிழவியை எழுப்பியிருக்க வேண்டும்.

கிழக்குப் பக்கம் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டு எழும்பியபடி முகம் கழுவப் போனாள்.

"என்னம்மா தேத்தண்ணி வேண்டிக் கொண்டு வரட்டோ."

"என்ன விளையாடுறியோ. . . . என்ரை குஞ்சு வந்து குளிச்ச பிறகு அவனும் நீயும் நானும் உந்தப் பொன்னம்பலனேஸ்வரர் கோயிலுக்குப் போட்டு வந்த பிறகு தான் என்ரை வாயிலை பச்சைத் தண்ணி படும் கண்டியோ. . . .35 வருசமடா . . . அந்த அம்மனோடை வாதாடி இண்டைக்கு என்ரை பிள்ளை வாறான். . . . "

இனித் தாயாருடன் வாதாட முடியாது என்பது நடசாரசனுக்குத் தெரியும்.

செல்லம்மாக்கிழவி குளிச்சு தீட்சை வைத்து கும்பிட்டு, தெரிந்த தேவாரங்களை எல்லாம் முணுமுணுத்தபடி, சுகந்தன் திரும்பி டென்மார்க்குக்குப் போகும்போது அவனுக்குக் குடுத்துவிட தன்னுடன் எடுத்து வந்த புளுக்கொடியல், இராசவள்ளிக் கிழங்கு எல்லாத்தையும் திரும்பத் திரும்ப தடவி அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

நிலம் நன்கு வெளித்து விட்டது. றோட்டில் வாகன இரைச்சலும் கூடிவிட்டது.

"இன்னும் சரியா ஒரு மணித்தியாலத்திலை தம்பி வந்திடுவான்."

"உப்பிடி மனத்துக்கை கிடந்து தவிக்கிற நீ பிளேனடிக்கு



படிப்பகம்

padippakam



போய்க்கூட்டியாராதையன்."

"தம்பியன்தானே சொன்னவன் - விடியப்பிற நேரத்திலை ஏன் ஆமிக்காரன்கள் செக்கிங். . . அது. . இது. . . எண்டு. . . தானே ஹோட்டலுக்கு வாறன் எண்டு."

கை ரிமோட் கொன்றோலில் ரெக்ஸ் ரீ. வியில் விமானநிலையப் பக்கத்தை துழாவியது.

"அம்மா. . . . தம்பியின்ரை பிளேன் இண்டைக்கு அரை மணித்தியாலம் முந்தியே வந்திட்டுது."

உடன்பிறந்த இரத்தம் குதூகலித்தது.

"அது என்ரை அம்மாளாச்சியின்ரை செயல் கண்டியோ. . . . அப்ப அவன் இப்ப வந்துடுவான்."

செல்லம்மாச்சி ஹோட்டலின் யன்னலினூடு எட்டி வெளியில் பார்த்தாள்.

வாகன நெரிசல்களுக்கிடையில் மிக விரைவாக ஒரு வெள்ளை வாகனம் வந்து ஹோட்டல் வாசலில் நின்றது.

"டே. . . . இஞ்சை தம்பி வந்திட்டான் போலை கிடக்கு."

வானில் முன் சீற்றில் இருந்து இறங்கியவன் வானின் பக்கவாட்டுக் கதவைத் திறந்தான்.

அதிலிருந்து ஓர் உடல் சாய்ந்து வெளியே வந்து விழுந்தது.

அது சுகந்தன் தான்.

வாகனம் அடுத்த கணம் மறைந்து விட்டது.

செல்லம்மாவுக்கு ஏதோ புரிந்தமாதிரி இருந்தது.

அவளுக்கு அழுவதற்கு வாய் எழவில்லை.

●



படிப்பகம்

padippakam

# அந்திமத்தில் ஓர் ஆசை

அவசரமாகவே
இங்கு நான் வாழ்ந்து விட்டேன்
Mc. Donaldல் fast food சாப்பிட்டது போல. . .

ஆற அமர்ந்து சாப்பிட
அவகாசமே கிடைக்கவில்லை

*

வயது 23:
"நல்ல இடம்
பெட்டை கொழும்பிலை
லீவுக்கு வந்து நிற்குது"

வயது 24:
"சிங்கப்பூரிலை கல்யாணம் எண்டால்
எல்லோருக்கும் வசதி. . .
விசாப்பிரச்சனை இல்லை"

வயது 25:
"பிள்ளை பெறுகிறதை
தள்ளிப் போடக் கூடாது"

படிப்பகம்

padippakam



வயது 26:
"பிள்ளையை பிறைவேற் பள்ளிக்கூடத்திலை
சேர்க்க வேணுமப்பா"

வயது 27:
"இரண்டு கார் விடக்கூடிய
வீடு வேண்ட வேணுமப்பா"

வயது 28:
"உன் தங்கச்சிக்கும் வயதாகி விட்டது"
அம்மா எழுதியிருந்தா

வயது 29:
"உன் தம்பியை எப்படியும் உங்கு கூப்பிட்டு விடு"
அப்பா ரெலிபோனில் சொல்லியிருந்தார்

வயது 30:
"அடுத்த சீட்டு கட்டினால் தான் இரண்டையும் முடிக்கலாம்.
இரவு cleaning வேலை எடுக்க வேண்டும்"

வயது 31:
"காலைப் பேப்பர் போடும் பொழுது
கார் ஒன்று பின்னால் அடித்தது போல் ஞாபகம்"

*



படிப்பகம்

padippakam



Rigshospital...
15ம் மாடி. . . . 7ம் நம்பர் வாட் . .
கட்டிலில் நான். . . . சுற்றிவர கன பேர். . . .

கண்கள் செருகுகிறது
கமலாவின் விசும்பல் கேட்கிறது
குண்டடிபட்டுச் செத்துப் போன
என் முதல் காதலியின் முகம்
மங்கலாய் தெரிகிறது

சிவபுராணத்தை யாரோ
காதில் ஓதுகிறார்கள்
கடைக்குட்டியின் சின்னக் கைகள்
என் கடைவாயில் பாலை ஊற்றுகிறது.
"மத்தியானத்தை தாண்டாது"
யாரோ ஆரூடம் சொல்லுகிறார்கள்

"கணக்க நேரம்
Chapelலில் வைக்க முடியாது
கனக்க காசு கேட்பான்கள். . .
பின்னேர வேலைக்கும்
ஆட்கள் போக வேணும்
அவசர அவசரமாய் எடுக்க வேணும்"
காதினுள் இரைகிறார்கள்



படிப்பகம்

padippakam



"எல்லோரும் வெளியில் போங்கள்"
பெரிதாய்க் கத்துகின்றேன்
என் குரல் வெளியில் வருகுதில்லை

"நான் அமைதியாக கண் மூட வேண்டும்
அதன் பின் உள்ளே வாருங்கள்"
வாய் முணுமுணுக்கிறது.

நேர்ஸ் அமைதியாக வந்து
யன்னல்களைத் திறந்து விட்டு
என் தலைமாட்டில் மெழுகுதிரியை
ஏற்றி விட்டுச் செல்லுகின்றாள் போலும்...

மெல்லிய காற்று மெதுவாகத் தழுவுகிறது
ஆறுதலாய் கண் அயர்கின்றேன்
இன்று தான் மணிக்கூட்டில்
அலாரம் வைக்கவில்லை

காற்றில் மெழுகுதிரி
அணைந்து விட்டது போலும்!
திரி கருகி மணக்கிறது
அந்த மணம் எனக்கு பிடித்திருக்கிறது!!

●



படிப்பகம்

padippakam

# யாவும் கற்பனை அல்ல

அது நடந்திருக்கக்கூடாது.

அறிவு சொல்வதை மனம் எப்பொழுதும் கேட்பதில்லையே!

அதனால் தானோ என்னவோ. . .. அது நடந்து விட்டது.

ஆம்! அத்தார் செல்வியைக் கொடுத்துவிட்டார். . . . அத்தாரின் பலவீனத்துக்கு செல்வி துணைபோய்விட்டாள். . . . அல்லது அந்தக் கணம் செல்விக்கு அத்தாரின் பலவீனம் தேவைப்பட்டிருக்க வேண்டும்.

*

செல்வி வன்னிக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். வயதுக்கு வரும் பருவம் நெருங்க நெருங்க ஆமிக்காரரின் கண்களும் சாடையாக மேயத் தொடங்க பெற்றவர்களுக்கு அடிவயிற்றில் ஒரு பயம் தொற்றத் தொடங்கியது.

பெண் பிள்ளைகளை எங்கே கொண்டு ஓடுவது? சோதனைச் சாவடிகளில் ஏளனப் பேச்சும், சோதனை செய்யும் பொழுது தொடக்கூடாத இடங்களில் சாடையாக தொட்டுப் பார்ப்பதும். . . சற்று முரண்பிடித்தால் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைப்பதும். . . விடுதலையின் பின் காணாமல் போவதும். . . . இது ஒன்றும் புதிதல்ல.

வரும் முன்பு காப்பதற்கு செல்வியின் பெற்றோருக்கு ஒரு வழி தான் தெரிந்தது. அது டென்மார்க்கில் உள்ள மூத்த தமக்கையிடம் செல்வியை அனுப்புவதுதான்.

செல்வியின் அக்கா டென்மார்க்கில் பன்னிரண்டு வருடமாய்

படிப்பகம்

padippakam



வசிக்கின்றா. டென்மார்க்கில் ஏற்கனவே வசித்திருந்த தூரத்து உறவுப் பையன் கணேசனைப் பேசி வன்னிக் கிராமமே பெருமைப்படும் வகையில் பிரமாண்டமாய் திருமணம் செய்த பின்னர் குடும்ப இணைப்புச் சட்டத்தின் மூலம் டென்மார்க்கிற்கு வந்து சேர்ந்தவாதான் செல்வியின் அக்கா புவனா.

இந்தப் பன்னிரண்டு ஆண்டுத் தாம்பத்தியத்தில் அவளுக்கு பத்து வயதில் சுஜி என்ற ஓர் பெண் பிள்ளையும், நீண்ட நாட்களுக்குப் பிறகு உண்டாகியதில் இப்பொழுது வயிற்றில் நான்கு மாதத்தில் ஒரு ஆண் சிசுவும் வாரிசாகி வளர்ந்து கொண்டு இருந்தது.

ஒரு சனிக்கிழமை அதிகாலையின் தூக்கத்தைக் கலைத்தவாறு செல்வியின் அப்பா அம்மாவின் தொலைபேசி வந்தது. வவுனியாவுக்கு இருவரும் தொலைபேசி எடுப்பதற்காக அதிகாலையில் வந்து ஒரு ரெலிபோன் சென்ரரில் இருந்து கதைத்தார்கள்.

“அவளின்ரை வளர்த்தியைப் பார்க்கேலாது பிள்ளை. அவளை இஞ்சை வைச்சிருக்கிறது புத்தியில்லை கண்டியோ. . . ஒண்டில் ஆமிக்காரங்களிற்றை இருந்து காப்பாற்ற தினம் தினம் சாகவேணும். . . இல்லாட்டி அதுகளாக இயக்கத்துக்கு கியக்கத்துக்கு போனாலும் சாகும் வரை அந்தக் கவலை மாறாது. . . . ” குரல் கம்மியது.

“இப்ப ஏனம்மா கவலைப்படுகிறியள். அவளை எப்பிடியும் கூப்பிடத்தான் வேணும். ஏஜன்சிக்காரன்களையும் பெரிசா நம்ப ஏலாது. . . தாய்லாந்து எண்டும் ரஷ்யா எண்டும் கொண்டு போய் சீரழிச்சுப் போடுவாங்கள். எத்தினை கதையள் கேள்விப்படுகிறம். . . . .”

“அப்ப நீ வந்து கூட்டிக் கொண்டு போவன். . . .”

“நான் வந்து கூட்டிக் கொண்டு போறது நடக்காதம்மா. . . ஆனால் என்ரை பாஸ்போட்டிலை இவர் வந்து கூட்டிக் கொண்டு வரலாம். . . . இரவு வேலைக்குப் போனவர். கொஞ்ச நேரத்திலை வந்துவிடுவர். நித்திரை கொண்டு எழும்ப பின்னேரம் போலை கதைக்கிறன். . . நீங்கள் நாளைக்கு திரும்ப ரெலிபோன் எடுங்கோ.”

*



படிப்பகம்

padippakam



"இப்ப செல்வியை இஞ்சை கொண்டு வாறது மட்டும் பிரச்சனை யில்லை. . . கொண்டு வந்த பிறகு அசூல் கிடைக்க வேணும். அதுக்குபிறகு படிப்பிக்க வேணும். அதுக்குப் பிறகு ஒரு நல்லவன்ரை கையிலை குடுக்க வேணும் . . . மொத்தத்திலை ஒரு பிள்ளையை தத்து எடுக்கிற மாதிரி. ."

"அது மட்டுமில்லை, அங்கை இருந்து வாற பிள்ளை நாளைக்கு எந்த விதத்திலும் எங்கடை மரியாதையைக் குறைக்கிற மாதிரி நடக்கக் கூடாது."

"ஏனப்பா அப்பிடி எல்லாம் யோசிக்கிறியள். . . . நாங்கள் இல்லாத காலத்திலை பின்னடிக்கு எங்கடை பொம்பிளைப் பிள்ளைக்கு கூட ஒரு துணை தானே."

"சரியப்பா. . . . எப்பிடிக் கொண்டு வரப் போறம்?"

"உவர் சீட்டுக்கார கனகரத்தினம் தன்ரை மனுசியின்ரை பாஸ்போட்டோடையும் தன்ரை பிள்ளைகளோடையும் குடும்பமாய் போய் குடும்பமாய் திரும்பிற மாதிரி மனுசியின்ரை தங்கச்சியாரை கொண்டு வந்தவராம். போய் இறங்கேக்கை என்றி அடிக்கத்தான் ஆள் செற் பண்ணி கொஞ்சம் காசு செலவளிக்க வேணும்."

"அது சரி. . . காசுக்கு என்ன செய்யுறதாம்?"

"சீட்டை கழிச்சு எடுக்க வேண்டியது தான். வேறை என்ன செய்யுறது. நாளைக்கு செல்வி வந்திட்டால் அவளுக்கு வாற சோஷல் காசிலை இன்னொரு சீட்டைப் போட்டு எங்கடை காசை எடுக்கலாம்தானே."

"சரி. . . .தொடங்கீட்டீர். . . . . ஏதோ முடிப்பம்."

"என்னப்பா. . . உங்கடை சகோதரங்களுக்கு ஏதும் எண்டாலும் நான் முன்னுக்கு நிண்டு இதைத்தானே செய்வன்."

செல்வி டென்மார்க் வருவதற்கான பச்சை சிக்னல் விழுந்ததைத் தொடர்ந்து அனைத்தும் துரித கதியில் நடைபெறத் தொடங்கின.



படிப்பகம்

padippakam



மீண்டும் இலங்கைக்கும் டென்மார்க்கிற்கும் மாறி மாறி டெலிபோன் அழைப்புகள் தொடர்ந்தன. பாவித்த ரெலிபோன் காட்டுகளை அடுக்கி அடுக்கி சுஜி விளையாடிக் கொண்டிருந்தாள்.

*

தொடர்ந்து வந்த சம்மர் விடுமுறையில் கணேசனும் மகள் சுஜியுமாக வன்னிக்கு வந்து சேர்ந்தார்கள்.

இலங்கை என்பது தாம் பயணம் செய்த மற்றைய நாடுகள் போல இருக்காது- ஆமி நிற்கும் – இயக்கம் நிற்கும் – துவக்கு சத்தங்கள் கேட்கும் – கீபீர் விமானங்கள் பறக்கும் என்று சுஜிக்கு ஏற்கனவே கன கதைகள் சொல்லிக் கொடுத்ததால் சுஜியும் எல்லாவற்றையும் இயல்பாக எடுத்துக்கொண்டு பயணப்பட்டது கணேசனுக்கு மகிழ்ச்சி யைக் கொடுத்தது.

அக்கம் பக்கங்கள் வந்து கணேசனையும் சுஜியையும் பார்த்து குசலம் விசாரித்துக் கொண்டு போனார்கள். வந்தவர்களில் அதிகம் பேர் கணேசன் கொடுத்த 1000 ரூபாய் நோட்டுகளை அன்புடன் பெற்றுக் கொண்டார்கள்.

பெரும்பாலான நேரங்களில் சுஜியும் செல்வியும் விளையாடிக் கொண்டிருந்தாலும். . . இடைக்கிடை அத்தார் கணேசன் கொழும்பு ஏர்போட்டிலும் சரி, கொலண்ட்ரான்சிற்றிலும் சரி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று வகுப்பும் எடுத்துக் கொண்டிருந்தார்.

மீண்டும் டென்மார்க்குக்கு திரும்பி வர ஐந்து நாட்கள் இருந்தன. எல்லோரும் திருக்கேதீஸ்வரத்துப் போய் வந்த அன்று பின்னேரம் செல்வி வயிற்றைப் பொத்திக்கொண்டு வீட்டின் மூலையில் உட்கார்ந்து கொண்டாள்.

பெத்த வயிறு குளிர்ந்தது.

பெரிதாக இல்லாவிட்டாலும் அக்கம் பக்கத்துக்குச் சொல்லி மூன்றாம் நாளே சின்னதாக ஓர் சாமத்திய சடங்கு செய்வதற்கு ஆயத்தம் ஆகியது.



படிப்பகம்

padippakam



அக்கா இல்லாவிட்டாலும் அத்தாரும் மகளும் முன் நின்றது அனைவருக்கும் பெரிய மகிழ்ச்சி.

சின்னப் பந்தல் - சிறிய மணவறை - பட்டுச் சேலையில் சின்னச் செல்வி பெரிய செல்வியாய் - ஊரின் கண்ணூறு நானூறு எல்லாம் அன்று செல்வியைச் சுற்றித் தான்.

உடலில் ஏற்பட்ட மாற்றங்கள். . . . என்னதான் குண்டுகள் விழுந்தாலும் பதுங்கு குழியில் பதுங்கும் வாழ்க்கை என்றாலும் ஊரை விட்டு பிரியப் போகின்றோம் என்ற பதட்டங்கள் . . . . . புது மொழியாம். . . புதுக் கலாச்சாரமாம். . . அதில் நான் தேறுவேனா. . .சறுக்குவேனா. . . . என்ற பரிதவிப்பு. . . . அத்தனையுடனும் சேர்ந்து கட்டியிருந்த பட்டுச்சேலையுடனேயே அன்று இரவு தூங்கி விட்டாள்.

*

டென்மார்க்கில் சின்னப் பிள்ளைகளுக்கு அகதி அந்தஸ்து விரைவாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் 16 வயதுச் செல்வி 12 வயது செல்வியாக மாறி செஞ்சிலுவைச் சங்கத்தில் தஞ்சம் புகுந்தாள்.

அகதிப் பதிவுகள் - அறிவுரைகள் - பொலிஸ் விசாரணைகள் - டெனிஷ் மொழி அறிமுக வகுப்புகள் என்று புதிய புதிய அனுபவங்கள். தனக்கு யாருமே இல்லாமலே டென்மார்க்கிற்கு வந்தேன் எனப் பதிவு செய்திருந்தாலும் தினமும் இரவில் தமக்கையாரும், அத்தாரும், சுஜியும் தொலைபேசியில் கதைப்பது அவளுக்கு பெரிய பலமாக அமைந்தது.

இரண்டு கிழமைகளுக்குப் பின் தூரத்து உறவினர் என்ற பெயரில் அக்கா, அத்தார், சுஜியும் விஜயம் செய்திருந்தது அவளுக்கு பெரிய மகிழ்ச்சியாக இருந்தது.

அத்துடன் வெள்ளிக் கிழமை பின்னேரத்தில் இருந்து திங்கள் கிழமை காலைவரை தூரத்து உறவினர் என்ற முறையில் அக்கா குடும்பத்தில் தங்கிவருவதற்கும் செஞ்சிலுவைச் சங்கம்



படிப்பகம்

padippakam



அனுமதியளித்திருந்தது.

அதன்படி அதிகமாக அத்தாரே வந்து கூட்டிச் செல்வதும் கொண்டுவந்து விடுவதாயும் ஏற்பாடாகியிருந்தது. சில வேளைகளில் சுஜியும் சேர்ந்து வருவாள். அதிக தூரம் காரில் பயணம் செய்வது கர்ப்பவதியாக இருக்கும் தனக்கு அதிக களைப்பைத் தரும் என்ற காரணத்தால் தமக்கையார் அதிகமாக வீட்டில் இருந்து கிழமை நாட்களில் வீட்டுக்கு வரும் செல்விக்கு நல்ல சாப்பாடுகள் செய்வதிலேயே தனது நேரத்தைச் செலவிட்டாள்.

அத்தாருடனான இந்தக் கார் பயணம் செல்விக்கு நன்கு பிடித்திருந்தது. சொகுசுக் காரில் மேடு பள்ளமில்லா றோட்டில் பாட்டுக் கேட்டபடி அல்லது படம் பார்த்தபடி சில வேளைகளில் அத்தாருடன் வழியில் உள்ள 'மக்டொனாசில்' சாப்பிட்டு, பின் பக்கத்தில் இருந்த புல் வெளியில் காலாற கொஞ்சம் நடந்து பின் மீண்டும் காரில் ஏறி அக்கா வீடு வந்து சேர்வது எப்பொழுதும் ஓர் இனிய அனுபவமாகவே இருந்தது.

"மக்டொனாசில்" சாப்பிட்டு உடம்பைக் கெடுக்கிறாய் என அக்கா பேசுவா என்று அத்தார் எச்சரித்து இருந்ததால் அந்தச் செய்தி மட்டும் அக்காக்கு தணிக்கை செய்யப்பட்டிருந்தது.

மற்றும்படி செல்விக்கு எல்லாத்திலேயும் அத்தார் ஒரு தோன்றாத் துணையாகவே இருந்து வந்தார். செல்விக்கு அந்தப் பாதுகாப்பு மிகப் பிடித்திருந்தது.

அதேபோல் வீட்டிற்கு வந்திருக்கும் வேளைகளில் தன் எந்த வேலைகளுக்கும் செல்வி ஒரு உதவிக் கரம் கொடுப்பது அத்தாருக்கும் நன்கு பிடித்திருந்தது.

வீட்டில் அனைவரும் இருந்து சீட்டாட்டம் விளையாடும்பொழுது அக்காக்கும் சுஜிக்கும் எதிராக அத்தாரும் செல்வியும் இருந்து ஆளை ஆள் காலை வாருவது அனைவருக்கும் பிடித்திருந்தது. அடிபாடு கூட வரும்.



படிப்பகம்

padippakam



அக்காவே ஏசுவாள், "நீங்கள் தகப்பனும் மகளோ . . .இல்லை பிறண்ட்ஸோ" என்று.

"வீ ஆர் குட் பிரண்ட்ஸ்" என்று ஓர் ஆளின் கையில் மற்றவர் அடித்து சிரித்துக் கொள்ளுவார்கள்.

"நல்ல அத்தாரும் நல்ல மகளும்" என்று அக்கா சிரித்துக் கொள்வாள்.

அடுத்த மூன்று மாதம் மூன்று வினாடிகளாக ஓடியது.

செல்விக்கு அகதி அந்தஸ்து கிடைக்கவில்லை. அவளுக்கு அதைப்பற்றிய கவலையும் இருக்கவில்லை. வழமையான கிழமைக்கு ஒரு தடவையான அக்காவீட்டு விஜயத்திலும் மற்றும்படி செஞ்சிலுவைச் சங்கத்தில் டெனிஷ் வகுப்பிலும் அவள் பொழுது இனிதே போய்க் கொண்டு இருந்தது.

அடுத்த வெள்ளி அக்கா வீட்டிற்குப் போயிருந்தபொழுது அக்காவிற்கு இடுப்புவலி தொடங்கியிருந்தது. டாக்டர் சொல்லியிருந்த நாள் கணக்கும் சரியாக இருந்தது. எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஆஸ்பத்திரிக்குப் போனார்கள்.

ஏற்கனவே டாக்டர்கள் சொல்லியிருந்த குட்டித் தம்பியைப் பார்ப்பதற்கு எல்லோரும் ஆவலாய் இருந்தார்கள்.

இரவு பத்து மணி போல் சுகப்பிரசவமாகியபின் அத்தாரும், செல்வியும், சுஜியும் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தார்கள். சுஜி கண் அயரத் தொடங்கினாள்.

சன நடமாட்டம் குறைந்த இரவில் கார் மிதந்து கொண்டு இருந்தது.

"செல்வி. . . . மக்டொனால்ஸ்சிலை சாப்பிட்டுட்டு போவமா."

"ஊம்" கொட்டினாள் செல்வி.

கார் மக்டொனால்ஸ்சினுள் புகுந்து வெளியேறியது.

வீட்டை அடைந்தபொழுது சுஜி முழுமையாகத் தூங்கிவிட்டாள்.



படிப்பகம்

padippakam



காரினுள் இருந்த சுஜியை இருவருமாகவே தூக்கிக்கொண்டு வந்து கட்டிலில் கிடத்தினார்கள். அப்படியே கட்டில் கால் மாட்டில் இருந்துகொண்டு பிறந்த குழந்தை யார் மாதிரி இருந்தது. . . . அது. . . இது.. . . என ஏதோ சம்பந்தமில்லாததும் சம்மந்தமானது மான பல கதைகளைக் கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

நேரம் இரவு பன்னிரண்டை நெருங்கிக் கொண்டு இருந்தது.

எழுந்து போய் தங்கள் தங்கள் அறையினுள் தூங்கத் தோன்றவில்லை.

கதை, சிரிப்பு, கதை. . . . நேரம் போகப் போக கதை கொஞ்சம் குறைந்து கொண்டு போய்க்கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் அத்தாரின் கை செல்வியின் கையைத் தொட்டது. அவள் அதை விலத்தவில்லை.. . . அல்லது விலத்தத் தோன்றவில்லை. விலத்தாத கைகளை தன் கையினுள் அடக்கியபடி செல்வியை தன் அறையினுள் கூட்டிச் சென்றார் அத்தார்.

*

இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன.

ஆனால் அப்படி ஒரு இரவுச் சம்பவம் பின்பு எப்போதும் நடக்கவும் இல்லை.

செல்வியாக ஓர் இடைவெளியைக் கடைப்பிடிக்கத் தொடங்கி யிருந்தாள். அத்தாருடன் வெளியில் போனாலும் மக்டொனல்ஸ்சில் சாப்பிடுவதைத் தவிர்த்துக்கொண்டாள்.

இதனை அத்தாரும் சரி. . . . அக்காவும் சரி அவதானித்தாலும் அத்தார் பெரிதாக வெளிக்காட்டவில்லை. செல்விக்கு வயது ஏற பொறுப்பாகவும் மரியாதையாகவும் நடக்கத் தொடங்கியிருக்கிறாள் என்று அக்கா நினைத்து பெருமைப்படத் தொடங்கினாள்.

இதே இரண்டாண்டு காலத்தில் வேறு சில விடயங்களும் நடந்தன.



படிப்பகம்

padippakam



செல்விக்கு அகதி அந்தஸ்து கிடைத்து முற்று முழுதாகவே அக்கா வீட்டுக்குக் குடிவந்து விட்டாள். அந்த நகரத்தில் உள்ள மொழிப் பாடசாலைக்குப் போகத்தொடங்கினாள்.

அந்த நகரத்தில் இருந்த அனேகமான தமிழ்ப் பிள்ளைகளும் அந்த அல்லது அதற்குப் பக்கத்தில் உள்ள பாடசாலையில் படித்துப் கொண்டிருந்ததால் போகும்பொழுது வரும்பொழுது என்று ஒரு நண்புர்கள், நண்பிகள் கூட்டம் அவளுக்கு உருவானது.

அப்பிடி அறிமுகமானவன் தான் சுரேஸ். செல்வி வீட்டுக்குப் பக்கத்து வீடு. ஓகூஸ் யூனிவேர்சிட்டியில் இறுதி ஆண்டு. பஸ்களிலும் தமிழர் வீட்டு விழாக்களிலும் இரகசியமாய் ஆரம்பித்த உறவு நாட்கள். . . .போகப் போக சுற்றியுள்ள எல்லோருக்கும் தெரிய வந்தது.

அக்கா ஒரு நாள் தனியே கூட்டிப் போய் விசாரித்தாள். செல்வியும் தலையாட்டினாள். அத்தார் கொலை செய்து போடுவார் என மிரட்டிப் பார்த்தாள். செல்வி இளகுவதாக இல்லை.

சுரேஸ் ஆட்கள் சாதியிலை கொஞ்சம் இளக்கம் என்று சொல்லிப் பார்த்தாள். “சாதியிலை குறைவு எண்டால் ஏன் போய் வாறனீங்கள். அங்கை சாப்பிடுகிறனீங்கள்” என தமக்கையின் வாயை அடைத்து விட்டுப் போய்விட்டாள்.

நிலைமை மோசமாக முதல் மானம் மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமானால் இலண்டனில் தம் உறவினருக்கு செல்வியைக் கல் யாணம் செய்து கொடுக்க வேண்டும் என அக்கா அத்தாருடன் ரகசிய ஆலோசனை நடத்தியதை சுஜி மூலம் செல்வி அறிந்து கொண்டாள்.

விளைவு? அடுத்த நாள் செல்வி பாடசாலையால் திரும்பவில்லை. அந்த நகரத்தில் உள்ள அனைத்து தமிழ் வீடுகளிலும் தலைப்புச் செய்தி அது தான். ரெலிபோன்கள், எஸ்.எம்.எஸ்.கள் அனைத்திலும் செல்வி-சுரேஸ் செய்திதான். அன்று தமிழ் ரி.வீ.க்களுக்கும் தொடர் நாடகங்களுக்கும் ஓய்வு.

அனேகமானோர் துக்கம் விசாரிப்பது என்ற பெயரிலும் விடுப்பு



படிப்பகம்

padippakam



அறியும் பொருட்டும் புவனா வீட்டில் குழுமியிருந்தார்கள்.

"என்ன பாடுபட்டு ஊரிலை இருந்து கொண்டு வந்தம். இப்பிடி மரியாதையைக் கெடுத்துப் போட்டாள்" என செல்வியைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தாள் புவனா.

அத்தார் கணேசன் ஒரு மூலையில் மௌனமாக இருந்தார். "உங்கை பாருங்கோ. . . . தன்ரை பிள்ளையைப் போலை ஊரிலை இருந்து கொண்டு வந்து தன்ரை பிள்ளையளை விட நல்லாய் பார்த்தவர். இப்ப அவருக்கும் முகத்திலை கரியைப் பூசிப்போட்டாள்" என புவனா தொடர்ந்து கொட்டிக் கொண்டு இருந்தாள்.

அச்சமயம் ஊரிலிருந்து டெலிபோன் வந்தது. மறு முனையில் தாய். "அம்மா பார்த்தியளோ. . . . எங்களுக்கெல்லாம் முகத்திலை கரியைப் பூசிப்போட்டாள்."

"அவள் சின்னப் பிள்ளையடி. . . யாரோ ஏமாத்திப் போட்டாங்கள். உன்ரை பிள்ளை எண்டால் விட்டு விடுவியோ? இதைக் கேட்டது தொடக்கம் கொப்பர் தண்ணி வெண்ணி இல்லை. உன்னைக் கும்பிட்டுக் கேட்கிறன். மருமகனையாவது அனுப்பி போய்க் கூட்டிக் கொண்டு வரச்சொல்லு." தாயின் கதறலில் உள்ள நியாயம் புவனாவின் கோபத்தை கொஞ்சம் தணிச்சிருக்க வேண்டும்.

"அத்தார் அவளுக்கு அப்பா மாதிரி! அவர் போய்க்கேட்டால் எப்பிடியும் வந்து விடுவாள்" என ஊராரும் சொல்ல அடுத்த நாள் பள்ளிக்கூடத்திலை போய் செல்வியைச் சந்திப்பது என்று முடிவாயிற்று.

பள்ளிக்கூட கன்ரீனில் அத்தாரும் செல்வியும் எதிரெதிரே கொஞ்ச நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

"இப்ப நீ வீட்டுக்கு வா. . . பேந்து இரண்டு வீட்டாரும் கதைச்சு நல்ல நாளிலை உங்களுக்கு கலியாணம் செய்து தாறம். அதுக்குப் பிறகு நீங்கள் இரண்டு பேரும் எங்களோடையே இருக்கலாம்."

செல்வி அத்தாரை ஓர் தடவை நிமிர்ந்து பார்த்தாள்.



படிப்பகம்

padippakam



"அத்தார், சுஜி இண்டைக்கோ நாளைக்கோ வயதுக்கு வர இருக்கிறாள். நான் கட்டப் போற சுரேசும் ஓர் ஆம்பிள்ளை. ஒண்டாக இருக்க வெளிக்கிட்டு நாளைக்கு சுரேஸின்ரை கை சுஜியிலை பட்டுவிட்டால் யார் என்ன செய்ய முடியும்!"

எத்தனையோ வருடங்களுக்குப் பின்பு அத்தாரின் கன்னத்தில் செல்வி அறைந்தது போலிருந்தது.

அத்தார் கோபத்துடன் எழுந்து போய் விட்டார்.

*

"அந்த தங்கமான மனுஷன் போய்க் கேட்டும் அந்த சிறுக்கி மாட்டன் எண்டுட்டாளாம்" என ஊர் பேசிக் கொண்டது.

ஊருக்கென்ன?

பின்நேரத் தேத்தண்ணிக்கு கடித்துக்கொள்ள ஏதும் இருந்தால் போதும்!.

●



படிப்பகம்

padippakam

# யாவும் கற்பனை அல்ல

வி. ஜீவகுமாரன்

பாகம் : இரண்டு

"கருவிலிருந்து கல்லறை"

காலங்களும் கருத்தோட்டங்களும்

ஒவியம் :
விநோத் காமராஜ்

படிப்பகம்

padippakam

# உள்ளுறை

கரு - 192 * மொட்டு - 194 * ஜனனம் - 196 * சமுதாயச் சந்தையில் - 198 * இன்றைய பிறந்தநாள் கொண்டாட்டங்கள் - 202 * நான், எனது, எனக்கு - 204 * சுயம் - 208 * நர்ஸரி - 212 * அக்னிகாண்டம் - 216 * தினசரி 4 காட்சிகள் - 220 * காதல் - 224 * சதுரங்கம் - 228 * தேயும் வால்கள் - 232 * புலம்பெயர்வு - 236 * முதியோர் இல்லங்கள் - 244

படிப்பகம்

padippakam

## காலங்களும் கருத்தோட்டங்களும்!



"இந்த வாழ்க்கைக்காக நாம் எவ்வளவு போராடியிருப்பம். நாங்கள் லவ் பண்ணேக்கை எத்தினை பேர் பார்த்து சிரித்தவை. இப்ப நிறைஞ்சிருக்கிறம்."

"வேண்டாம். . . . கல்யாணத்துக்கு முதல் இது எல்லாம் வேண்டாம். எனக்கு பயமாய் இருக்கு. . . ப்ளீஸ். . ."

"நீ கட்டாமலே இருந்திருந்தால் அது வேறை. . . . ஆனால் கட்டின பிறகு. . . இப்பவும் அவனை நினைச்சுக் கொண்டு இராமல் நேர்மையாய் இரு."

"கலியாணமும் வேண்டாம் என்கிறியே. . நாங்கள் செத்த பிறகு தனியாகவோ நிக்கப் போறாய். ."

"கலியாணத்தை சொர்க்கமாக்கிறதும் நரகமாக்கிறதும் எங்கடை கையிலைதான் இருக்கு. அவருக்கு கால் இல்லாட்டியும் நாங்கள் சந்தோசமாய்தான் இருக்கிறம்."

படிப்பகம்

padippakam



# கரு

யாரோ இருவரின் பூரண இன்பத்தின் திளைப்பில். . .

அன்றில் ஒருவரின் வெற்றியிலும் மற்றையவரின் தோல்வியிலும். . . .

அன்றில் ஒருவரின் ஆக்ரோஷத்திலும் மற்றையவரின் அழுகையிலும். . . .

அன்றில் ஒருவரின் பலத்திலும் மற்றையவரின் பலவீனத்திலும். . .

அந்தக் கணப்பொழுதின் சதைகளின் துடிப்பில்!

காலகாலமாய் அழிந்து போய்க்கொண்டிருந்த அத்தனை ஜீவ அணுக்களிலும் அவையிரண்டும் சந்திக்க வேண்டும் என விதி நினைத்திருந்ததா?

ஆம்; கருக்கட்டி விட்டது!


●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 2



"வயித்திலை தொட்டுப் பாருங்கோ... எவ்வளவு அச்சாவாய் இருக்கு...
காதை வைச்சுக் கேளுங்கோ."

"ஐயையோ எனக்கு இப்பவே தாலியைக் கட்டுங்கோ...
இல்லாட்டி இதை அழிக்க ஏதும் மருந்து வேண்டித் தாங்கோ. பிளீஸ்..."

"எனக்கு இதாலை சந்தோஷமும் இல்லை.... துக்கமும் இல்லை...
இந்த தலைச் சுத்தும் சத்தியும் நின்டால் சரி...."

"என்னதான் சவுதியாலை காசு வந்தாலும் அவன்ரை முகத்தைப் பார்த்துக்
கொண்டிருக்கிற சந்தோஷம் வருமோ...."

"எங்களைப் பொறுத்த வரைக்கும் இந்தக் குழந்தை ஒரு சவால்."

படிப்பகம்

padippakam



# மொட்டு

வெளியுலக வேடிக்கைகள், வேதனைகள் புரியாமல் கருக்கட்டிய அந்த மொட்டு விரியத் தொடங்கி விட்டது.

வரவைப் பார்த்து வழியெல்லாம் எத்தனை மகிழ்ச்சி.

வழியிலேயே வாடிவிடக் கூடாதா என்ற சிலரது ஏக்கங்கள்.

கலைக்க முயன்றும் கான்சர் மாதிரிப் பெருகும் அதன் வளர்ச்சியை எண்ணித் துவளும் சில மனங்கள்.

ஆம்! பத்து மாத ஒட்டுண்ணி தாய் மரத்தை நன்கு உறிஞ்சத் தொடங்கி விட்டது.

●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 3



"சரியாய் உங்களைப் போலைத் தான் இருக்கு."

"இந்தக் குஞ்சின்ரை வாழ்க்கைதான் எங்கடை எதிர்காலம்...."

"இந்தப் பிள்ளை தான் இதுகள் இரண்டையும் சேர்த்து வைக்கும்."

"போரிலை போன கால்கள் திரும்பக் கிடைச்ச மாதிரிக் கிடக்குது!"

"எங்களைப் பொறுத்தவரைக்கும் இந்தக் குழந்தை ஒரு சவால்!"

படிப்பகம்

padippakam



# ஜனனம்

எந்த பம்பர்களோ. . . எந்தச் சுனாமியோ. . . எந்தப் புயலோ. . . .எதற்கும் அது பயப்பிடவும் இல்லை. . . காத்திருக்கவும் இல்லை. . .

கைகளைப் பொத்தி முடக்கி தன்னுள் தான் சுருண்ட நிலையில் அந்த மனிதப் பிண்டம் பூமியில் வந்து விழுந்தது.

1. புத்தம் புது கண்ணாடியில் தம்மையே தாம் பார்த்துத் தமக்குள் ரசித்தனர் சிலர்.
2. அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்த்து தம் வெறுப்புகளையும் வேதனைகளையும் மறந்து பழகிக் கொண்டனர் பலர்.
3. மனத்தளவில் கட்டமுடியாத பாலங்களை இந்தப் பாலகன் கட்டுவான் என மன அமைதி கொண்டனர் மற்றும் சிலர்.
4. தமக்கு இரண்டு கால்கள் கிடைத்துவிட்டன என தம்மையே மறந்தனர் சிலர்.
5. அந்தோ பரிதாபம்! பிஞ்சு பிடிக்க முதலே பூவை அழிக்க முற்பட்டதால் மரம் கூடக் கருகி விட்டது.

அப்பப்பா!. . . . . என்ன ஆரவாரம். . . . . .

ஆண் என கூரையைத் தட்டியவர் சிலர். . .

ஐயோ. . . . பெண் என அலறியவர் சிலர். . . .

கற்கண்டுகளும் கன்டோசுகளும் பிறப்பையே பாகுபடுத்தின.

தாய் மரம் இறக்கிய விழுதுகளை அழைக்க சில அட்சரங்களைச் சொன்னார்கள் சாத்திரிமார்கள்.

ஆம்!

எண் சாத்திரங்களை வைத்துக் கொண்டு பெயர் வரம் நடத்தினார்கள் பெரியோர்கள்.

●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 4



"சீக்கிலாம் ஹாதரம் விஷ்ணும் சிவர்ணம் சதுர்ப்புஜம்...
பிள்ளையையும் தாயையும் கொண்டு வாங்கோ."

"சரியான கள்ளன்....
அழுது அழுது பாலைக் குடிச்சுப் போட்டு பூனை போலை கிடக்கிறார்."

"முதல் முதல் கோவிலுக்கு கொண்டு போகேக்கை
முழுவியளத்துக்கு உதவாததுகள் வராமல் பார்த்துக் கொள்ளுங்கோ."

"அக்காவைக் கண்ணைத் திறந்து பாரடா குட்டி...
நீதான் அக்காக்கு சீதனம் குடுக்க வேணும்."

படிப்பகம்

padippakam



# சமுதாயச் சந்தையில்

நாமே முடுக்கிவிட்ட கடிகாரத்துக்கு நாமே பயந்து ஓடுவது போல

நாமே வரையறுத்துக் கொண்ட வழக்காறுகள் உதித்த அந்த மொட்டைச் சுற்றி மொய்த்துக் கொண்டன.

அது பாவம் என்ன செய்யும்?

பசியிலும் அழுதது!
பயத்திலும் அழுதது!
தான் முன் வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற – அது
கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமே அழுகை தான்!

அதன் சாத்வீகப் போராட்டத்திற்கு
பாசமுள்ள பெற்றோரின் பாராளுமன்றங்கள் தலை வணங்கின!
அதன் வெற்றியில் முலை சுவைத்தது. . .
கண்கள் நன்கு திறந்து கொண்டன. . . .

ஓர் உறவுப்படையே அதன் முன் அணிவகுத்து நின்றன!
ஆம்; பந்தங்கள் பாசங்கள் கூட அதனை நாளை
blackmail பண்ணலாம்



படிப்பகம்

padippakam



# கட்டம் 1 – துடக்கு கழிவு

துடக்கை கழிக்க வேண்டும் என்று ஓர் நாளைக் குறித்து சாதிப் பிரிவுகள் மூன்றையும் தொடக்கி வைத்தார்கள் எம் பெற்றோர்கள் – ஏன், முடுக்கியே விட்டார்கள்.

தலைமுடி எடுக்கும் பொழுது ஒரு கிளிக்!

தட்சணை கொடுக்கும் பொழுது ஒரு கிளிக்!

பந்திக்கு பட்டாடை விரிக்கும் பொழுது ஒரு கிளிக்!

படத்தைப் பிடித்துக் கொண்டது ஜசீக்கா கமரா மட்டுமில்லை. . .

அந்த ஜனனமும் தான்!



படிப்பகம்

padippakam



# கட்டம் 2 – கோயில்

சமயம் : அது ஓர் விருட்சம்
அதன் கிளைகளும் விழுதுகளும் ஆயிரமாயிரம்
ஆனால்
சமயவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும்
ஆளுக்கொரு கொப்பை வெட்டித் தாம் ஊன்ற முயன்றதால்
தாய் மரம் இன்று மொட்டையாகி விட்டது!
கூறு போடப்பட்ட அந்த சமுத்திரம்
இன்று உப்பளங்களாகி விட்டது.

கால காலமாக கண்களை மூடிக் கும்பிட்டதாலோ என்னவோ
கண்களைத் திறந்து பார்ப்பதற்கு அவகாசமே கிடைக்கவில்லை

என்ன செய்து விட்டோம்?
புரியாத வினாக்களுக்கு விடை தெரிய முன்னே
குழந்தையையும் அங்கே கொண்டு போய் விட்டோம்

5–, 2–, 1–, 50 சதம் என அதுவும் அர்ச்சனைத் துண்டுகளுடன் நிற்கிறது.

அரோகரா!

●



படிப்பகம்





# இன்றைய பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

வேண்டி உடுத்துக் கொண்ட இரவல் சேலை
வாங்கிப் போட்டுக் கொண்ட கிளிற் சங்கிலி

ஏன் என்று புரியாமல் எதிர்வீட்டுக்காரனைப் பார்த்து
எமக்கு நாமே பூசிக்கொண்ட மைப் பூச்சு

அன்ரனாக்களுக்கு ஆசைப்பட்டு அரேபியாக்கு போனது போல
ஐசிங் கேக் வகுப்புகள் ஆங்காங்கே முளைத்தன

இந்த பாழும் உலகில் ஓர் வருடம்
எதிர்நீச்சலடித்ததுக்கு கொண்டாட்டமா?
இல்லை
அடுத்த வருடத்துக்கு ஆரம்ப விசிலா. . .

padippakam



பிறந்து எதைச் சாதித்து விட்டோம் என
என்றைக்காவது சிந்திக்கிறோமா?
இல்லை. . .
பிறந்து இந்தப் பூமிக்கு பாரமாய் இருப்பதை
என்றைக்காவது நினைக்கிறோமா?

சுய சிந்தனைகள்
நலமடிக்கப்பட்டதால்
மயிலிறகில் எண்ணெய் தடவி
கொப்பியடிக்கக் கற்றுக் கொண்டோம்

வெள்ளைத் தோலைப் பார்த்து வேண்டாத ஆசை
கறுத்த தோலாய் இருந்திருந்தால் அழகாக இருந்திருக்கும்
இப்போ கறுத்த தோலில் சில வெள்ளைப் புள்ளிகள். . . .
அசிங்கமாயில்லை?

சரி! சந்தோஷத்தை தருகிறது என வைத்துக் கொள்வோம்
தமிழ். . . தமிழ் என்று உங்களுடன் ஒட்டிக் கொண்டு திரிகிறதே. . .

பொங்கல் ஒன்று செய்து பகிர
யாருக்குத் தான் துணிவு இருக்கிறது

கேசரியும் கேழ்வரகும் கொண்டு
விருந்து லவக்க எவர்க்குத்தான் மனமிருக்கிறது?

வெள்ளை வேட்டிக்குப் பின்னால் மறைவில் உண்ண வேண்டிய
பூதாக்கலத்து சோறுக்கு முதலே அவசரப்பட்டு றெயிஸ்ரேசன் அன்று
அனைவர் முன்னிலையிலும் கேக்கை வெட்டி உண்டு விட்டதால். . .
அது இங்கே பிள்ளையையும் தொற்றி விட்டது

ஆம்!

பரம்பரை இயல்புகள் கடத்தப்படுவது
பெற்றோரின் ஊடே தான்.


●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 6



"இது என்ர வீடு... அக்காக்கு தரமாட்டன்."

"நான் தான் முதல் முதலிலை சாப்பிடுவன்."

"சரியாப் பொறாமை உச்சம் பிறந்திருக்கு... நான் என்ட பிடுக்கு."

படிப்பகம்

padippakam



# நான், எனது, எனக்கு

நான் என்ற கால்களும்
எனது என்ற கைகளும்
முளைக்கத் தொடங்கின.

பேச்சு அதற்கு தண்ணீரானது!
பழக்க வழக்கங்கள் பசளையானது!

ஊன்றிய இடமெல்லாம் 'நான்' என நின்றது!
எட்டிய எல்லாம் 'எனது' என கங்கணம் கட்டியது!!

முடிவு?

அகற்றப்பட வேண்டிய 'நான்' – அதற்கு
அகந்தையைக் கொடுத்தது
எட்டத்தில் வைக்கப்பட வேண்டிய 'எனதும் எனக்கும்'
அதற்குள் எண்ணற்ற ஆசையை வளர்த்தது. . . .



படிப்பகம்

padippakam



ஆம்!

பாலகனுக்குள் இரு பாம்புகள்!
கண்ணனுக்குள் ஒரு கம்சன்!
கர்த்தருக்குள் ஒரு கரிய சாத்தான்!

அறியவில்லை பெற்றோர்கள்
"ஆகா. . . ஆசையைப் பார் ஆசையை" என
அள்ளிக் கொஞ்சினாள் அம்மா
"அடி மங்காமல் பிறந்திருக்கிறான்" என
ஆனந்தப்பட்டார் அப்பா

அந்த கொடிய பாம்பின் பல்லைப்
பிடுங்கி எறிய வேண்டியவர்களே
பல்லைப் பாதுகாக்கும்
பல் வைத்தியர்கள் ஆனார்கள்

வெடிக்கப் போகிறது 'பொம்' எனத் தெரியாமலே
எதிரி வந்தால் எறிவோம் என
பெட்டகத்தினுள் பூட்டி வைக்க முற்பட்டார்கள்



படிப்பகம்

padippakam



## என்ன நடந்தது?

கருவேரின் ஒவ்வோர் கலத்திலும்
நஞ்சு படரத் தொடங்கியது
நீலகண்டன் தோற்கடிக்கப்பட்டான்
அவனுக்கு கழுத்தில் மட்டுமே விடம்
இவனுக்கு கருவெல்லாம் விடம்
கலமெல்லாம் விடம்
காணுமிடமெல்லாம் விடம்

விடத்திலேயே விண்கட்டிப்
பறக்கிறது இந்தப் பட்டம்

'நா(ன்)'ணை இழுக்க இழுக்க
பட்டம் மேலும் மேலும் பறக்கிறது

பறக்கும் பட்டத்தின்
முடிவுதான் என்ன?

●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 7



"தகப்பன் மாதிரி அருமையான பிள்ளை"

"தாயைப் போலை பிள்ளை
நூலைப் போலை சீலை!"

"இந்தப் பிள்ளை மட்டும் குடும்பத்திலை இப்பிடி வந்திருக்கு
ஆரின்ரை சாக்கட்டும்.. வாயிலை சிக்கிறட்டும்."

"டெனிஷ்காரர் வாற பார்ட்டிக்கு எங்கடை ஆட்களிலை கொஞ்சம்
டீசன்ரான ஆட்களைத்தான் கூப்பிட வேணும். வந்தான்
வரத்தானுகளை கூப்பிடக் கூடாது!"

"இஞ்சை வெள்ளிக்கிழமை எல்லாம் பார்க்கேலாது...
கொஞ்ச வைனும் கோழி வறுவலும் எடுத்தால் தப்பில்லை!"

படிப்பகம்

padippakam



# சுயம்

எங்கள் பாரம்பரியத்தின்
பல்லாக்கை காவ வேண்டியவர்கள்
எம் சந்ததியினர் தான்

விரும்பிக் காவியவர்களை விட
தூக்கிச் சுமக்க விடப்பட்டவர்கள் அதிகமானதால்
வீரியமுள்ள காளைகள் எல்லாம்
தம் ஆண்மை இழந்தனர்
தம் சுயம் இழந்தனர்
செம்மறி மந்தையாயினர்

ஆங்காங்கே மின்னிய
சிந்தனைச் சுடர்களை எல்லாம்
சமுதாயச் சூறாவளி தூக்கி எறிந்தது
அன்றில் துரத்தியடித்தது.

யாருக்கு வேண்டும்
உலகம் உருண்டை என்பது
எம் தலைப்பாகைகள் இறங்காதவரை
தட்டையாகவே இருக்கட்டும்

4



படிப்பகம்

padippakam



விடிவெள்ளிகளை எல்லாம்
கிரகணப் பாம்புகள் கவ்விக் கொண்டதால்
அரக்கன் மன்னன் ஆனான்
அடிபணிவதில் இறுமாப்புண்டனர் மக்கள்

சுயத்தை விட்டு
சுய நலத்துடன் வாழ
தோல் கழற்றும் வித்தையைக்
கற்றுக் கொண்டனர்
முடிவு?

எம்மைப் புதைக்கவே
நாம் புதைகுழிகள் தோண்டினோம்
கல்லறைக்குள் பட்டு விரித்து
கண்ணயரக் கற்றுக் கொண்டோம்

400 ஆண்டுகால அடிமைச் சவுக்கடியில்
நாம் அடிமைகளாகவில்லை – நல்ல
அதிகாரிகள் ஆனோம்



படிப்பகம்

padippakam



கால்களில் விழுவது கற்கண்டானது
கால்களை வாருவது கௌரவமானது – நல்ல
கரெக்டர் சேர்ட்டிபிக்கற்றுகள் ஆனது.

மனிதம் செத்து விட்டது என்று
மணிரத்தினம் திரையில் சொல்லட்டும்
கையைத் தட்டி விட்டு வந்துவிடு
அதற்கு மேல் எதையும் யோசித்து விடாதே

ஓட்டு வீடும்
ஓடுவதற்கு காரும்
ஒய்யாரமாய் சாய சோபாவும் இருக்கும் பொழுது
சுயம் என்ன சுயம்!

நடுத்துண்டு தின்றால் தான்
நல்லாய் வாழலாம் என்று புறப்பட்டதாலோ என்னவோ
நல்ல பாம்பின் விஷம் எம் இரத்தத்தில் ஊறியது
இல்லை கண்டியது!

●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 8



"மோகன், எட்டாம் வாய்ப்பாட்டைச் சொல்லு."

"Jack and Jill went up the hill to fetch a pail of water"

"நாளைக்கு Jack and Jill தெரியாதவை எல்லாம் முழங்காலிலை நிற்கவேணும்."

"எப்படி ரீச்சர் மகள் படிக்கிறா... தகப்பனைப் போலை டொக்டராய் வருவாவோ?"

"Definitely"

படிப்பகம்

"ஒரு காட்டிலை நரி வாழ்ந்து வந்துச்சுதாம்"

"நரி என்டால் என்ன ரீச்சர்?"

"நரி... நரி... நாய் போலை இருக்கும்."

"அப்ப... நாய் போலை குலைக்குமோ...."

"இல்லையடா... ஊளையிடும்."

"ஊளையிடுறது என்டால் எப்பிடி ரீச்சர்?"

"ஏறடா சனியன் வாங்குக்கு மேலை... நெடுக கேள்வி கேட்டுக் கொண்டு... உங்களுக்கு படிப்பிக்க வந்த நேரம் ஆடு மாடு மேய்ச்சிருக்கலாம்."



படிப்பகம்

padippakam



# நர்ஸரி – பாலர் பாடசாலை

நர்ஸரி. . . .
இங்கு நடைபெறவேண்டியது
ஓர் சுகப் பிரசவமே தவிர
சத்திர சிகிச்சை அல்ல. . .

வெளிவந்த பாலகன்
பள்ளியை நோக்கி ஓட வேண்டும்
அவனின் மூளை வளரும் பருவம் அல்ல இது
மனம் வளரும் பருவமே. . ..

ஆனால் என்ன செய்தோம்!. . . .

வேலையில்லாத் திண்டாட்டத்தின் விழுதுகள்
வீட்டுத் தாழ்வாரங்களில் நேர்ஸரியானது. . .

இப்போ
நேர்ஸரிகளுக்கிடையே போட்டி
யார் கூடத் திணிப்பது எண்டு
கூடி விளையாட வேண்டிய பருவத்தில்
கூட்டிக் கழித்து அதன் மூளையைப் பிரித்து



படிப்பகம்

padippakam



அப்பப்பா. . .

குழந்தையோ திணறியது
அதனுடன் விடவில்லை.

ஜக்குடனும் ஜில்லுடனும் மேலே கொண்டு போய்
விழுத்தியடித்து முழங்காலை உடைத்து விட்டோம்.

ஆம்!

நேர்ஸரி அக்காமாரின் மோதலில்
நசுங்கியது என்னவோ எம் குழந்தைகள் தான்

இப்போ. . .

இது ஓர் நொண்டிக் குழந்தை
நொண்டி நொண்டி பள்ளிக்குச் செல்கிறது
அங்கே காத்திருக்கிறது ஓர் அக்னி காண்டம்

●



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 9



"உன்னை arts க்கே விடேலை.
ஒரு வருஷம் பிந்தினாலும் திரும்ப படிச்சு Science க்கே போ."

"மகள் இப்ப Advanced level முடிச்சிட்டு ICMA க்கு படிக்கிறா.
அதுதான் நான் வீட்டு வேலையேதும் செய்விக்கிறதில்லை."

"தரகர்! மகன் டொக்டர் கண்டியளோ!
25 இலட்சத்துக்கு ஒரு சதமும் குறையக் கூடாது."

"வாத்தியார்! உவனை உரிச்சென்டாலும்
பாஸ் பண்ணி வையுங்கோ."

"கைவேலை படிக்கிறானாம் கைவேலை.
உதைப்படிச்சு என்னடா தச்சு வேலையே செய்யப்போறாய்!"

படிப்பகம்

padippakam



# அக்கினிகாண்டம்

சீதையிடம் தோற்றது
சரஸ்வதியைப் பழிவாங்கி விட்டது
நடந்தது இலங்கையில் தான்!

இங்கு புடம் போடப்பட்டவர்களை விட
பொசுக்கப்பட்டவர்களே அதிகம்

இறந்து போன நிலவுடமையின் ஆவியொன்று
பள்ளிக்கூட வாசலில் நின்று
பற்றிக் கொள்ள ஆரம்பித்தது



படிப்பகம்

padippakam



உடையார்கள் இருந்த இடத்தில்
sinθ வும் cosθ வும் நின்று
ஆட்சி செலுத்தத் தலைப்பட்டன.

விஞ்ஞானப் பிரிவு
கலைப்பிரிவை சாதிப்பிரஷ்டம் செய்தது

பாராளுமன்ற பேக்கரி முதலாளிகளும்
பறக்கத் துடித்த பெற்றோரின் ஆசைகளும்
கிளித்தட்டு மறிக்கத் தொடங்கியதால்
காய்க்கை பழமானவர்கள் மாணவர்களே.

பள்ளிக்கூட வேலிகளுக்கு
கதியால் வெட்டு என்பதே இல்லை – காரணம்
மாணவரின் முதுகு அறியும்.
கைத்தாளம் போட்ட பெற்றோரின் மனதறியும்
நடந்தது என்ன?



படிப்பகம்

padippakam



தப்பித்தது இரண்டொன்று. . .

மற்றவை எல்லாம்
அரங்கேற்றத்திற்கு நாள் குறித்து விட்டு
கைகளில் வயலினை எடுத்துக் கொண்டன
கால்களில் சலங்கையைக் கட்டிக் கொண்டன

அட்வான்ஸ் லெவலில் அடிசறுக்கியவர்கள் எல்லாம்
ICMA படிக்க வெளிக்கிட்டதால்
பைல்களுக்கு தட்டுப்பாடு வந்தது என்னவோ
பூபாலசிங்கம் புக் டிப்போக்குதான்.

முடிவு?


கொலரை உயர்த்தப் புறப்பட்டு
கழுத்தையே வெட்டிக் கொண்டோம்!
மற்றவனை அழுத்த உயர்த்திய கால்கள் எல்லாம்
மீண்டும் மண்ணை மிதிக்க முடியாது அகதியானோம்!



படிப்பகம்

padippakam

# காலங்களும் கருத்தோட்டங்களும் 10



" முதல் நாள் முதல் ஷோ... அடிமைப் பெண் தான்"

"தம்பிக்கு எப்பிடி தலைமுடி வெட்டுறது?"
"கமலஹாசன் போலை வெட்டு"

"சிவபெருமானின் மனைவியின் பெயர் என்ன?"
"சாவித்திரி"

படிப்பகம்

padippakam



# திசைகாட்டி 4 காட்சிகள்

இளைப்பாற இருந்த மரத்தின் வேர்களே
இரத்தம் குடித்த கதை!

நடந்ததும் நம் நாட்டில் தான்!
நடாத்தியவர்களும் நாங்கள் தான்!!

அஃதில்லையெனில். . . .

மூன்று மணிநேரப் படத்துக்காக
முட்டாசுக் கடைச்சந்தி வரை
முழங்கால் நோக நின்றதேன்?

மூன்றெழுத்து நாயகன்
முதலமைச்சரானது எப்படி?

ஆம்!
வெளிச்சத்துக்குப் பயந்து இருட்டினுள் ஒளிந்தோம்
நிஜங்களைத் தொலைத்து விட்டு நிழல்களை ஆராதித்தோம்

அங்கு. . . .
எங்கும் வக்கிரங்கள் நியாயப்படுத்தப்பட்டன!
அக்கிரமங்கள் அடித்து நொறுக்கப்பட்டன!!



படிப்பகம்

padippakam



இருட்டு வீரராக நாமே மாறி
இருபது பேரை வெட்டி விழுத்த. . .

ஆயிரம் தாமரை மொட்டுக்களிடையே
காதலிக்க. . . . கட்டியணைக்க. . .
கற்பழிக்க. . .வேறு எங்கு இடம் கிடைக்கும்

நடந்தது என்ன?

சுயத்தைத் தேடி சுகத்தை இழந்தோம்
அரிதாரங்கள் எங்களிலும் படியத் தொடங்கியது
துடைத்தெறிய கைகளும் எழவில்லை
துயில் கொள்ளவும் நல்ல போர்வைகள் ஆனது

அஃதில்லையெனில். . .
படையப்பா சேலைகளும்
சந்திரமுகிச் சலங்கைகளும்
வந்த முதன்நாளே விற்றுத் தீர்ந்திருக்குமா?

காக்க காக்க கைவளையல்களும்
கண்ணாமூச்சி ஏனடா காது வளையல்களுக்கும்
ஏன் இந்தக் கிராக்கி?
இருட்டிய காட்டினுள் அக்கினிக் குஞ்சுகள் என
சில எழத்தான் செய்தன

ஆனால் –

புதிதாய் வேதம் எழுதியவனுக்குக் கூட
ஆராதிக்க எம். ஜி. ஆர். புஷ்பமே தேவைப்பட்டது!
புதுப்புது அர்த்தம் படைக்கப் புறப்பட்டோருக்குக்கூட



படிப்பகம்

padippakam



எதிரிநீச்சல் அடிக்க தெம்பிருக்கவில்லை!!

"திரைச் சுருள்களை எல்லாம்
ஓர் சின்னத் தீக்குச்சிக்கு
தின்னக் கொடுப்போம்" என
கவிதை பாடிய வைரமான மணிகள் எல்லாம்
சிலுக்கின் ஒட்டியாணத்திற்கு
கண்ணாடிக் கற்களாய் பதிந்தன.

திட்டமிட்ட திருவிளையாடல்களுக்கு ஓர் கலைப்பூச்சு!
நடாத்தியவனோ வசந்த மாளிகைகளில்
நம்பியவனோ எச்சில் இரவுகளில்!!!

எந்த ஞானப்பறவையும் வழிகாட்டத் தவறிவிட்டதால்
அனைத்துமே திசைமாறிய பறவைகள் ஆயின. . .

முடிவு?

அலைகளும் ஓயவில்லை
கைகளும் இணையவில்லை
பிறந்த மண்ணும் சிவந்த மண்ணாகியது

தேவை!
இன்னோர் பூம்புகார்

அதுவரை. . .
அனைத்துக்குமே அஞ்சலி!

●



படிப்பகம்

## காலங்களும் கருத்தோட்டங்களும் II



*"I Love you"*

*"பிள்ளை வளர்ப்பை பார்த்தியளே."*

*"வளவுக்கை வரப்படாது. கொலைதான் விழும்."*

padippakam



# காதல்

எந்தக் கேடயங்களும் இந்த அம்புகளிடம் இருந்து தப்ப முடியாது.
எந்தக் கவச வாகனமும் இந்தக் கண்ணி வெடிகளில் இருந்து
தப்ப முடியாது.

வயதுக் கோளாறு என்பது
வயதுபோனவர்களின் வாதம்!
வயதுக்கு வந்துவிட்டோம் என்பது
எதிர்க்கட்சியின் பிரதிவாதம்!!

சட்டமன்ற வாக்களிப்பில்
வென்றது எம் ஆளும் கட்சிதான்!!
அதுதான் எம் அறுபதுகளின் கட்சி

அவசரப்பட்டு வாந்தி
எடுத்த எவரையும்
சபையில் கலந்து கொள்ள
சட்டமன்றம் அனுமதிக்கவில்லை

காதலுக்கு சாட்சிக் கையெழுத்துப் போட
பாங் பலன்சும், உறுதியின் நீள அகலமும்
எம் அப்பு (காத்து) மார்களால்
பரீசீலிக்கப்பட்டது



படிப்பகம்

padippakam



முப்பாட்டன் வழிச் செம்புகளில்
எவர் எவர் வாய்கள் பட்டது என
கொய்யக் சேலைகளினால்
துலக்கிப் பார்க்கப்பட்டது

செவ்வாயின் தோஷத்தையும்
சனியின் பார்வையையும்
சரி பார்த்துக் கொண்டார்
சண்டிலிப்பாய் சாத்திரியார்

வேலையிருந்தாலும்
வெட்டுக் கொத்து பென்ஷன் பற்றிக்
கொழும்புக் கச்சேரிவரை
பைல்கள் தட்டிப் பார்க்கப்பட்டன.

அனைத்தும் கூடியவர்களுக்கு
அறுகரிசி போடப்பட்டது
மற்றவர்களுக்கோ
வாய்க்கரிசி போடக்கூட
அனுமதி மறுக்கப்பட்டது.

எந்தச் சங்காரத்தாலும்
எம் சமூக அமைப்பின்
ஓர் சல்லிவேரைக் கூட
அசைக்க முடியவில்லை

இதனால்
அப்பா அம்மாக்களால்
கவுண்டர் சையின் பண்ணிய பின்பே
காதல் பைல்களை மாற்றிக் கொண்டன
எம் குழந்தைகள்



படிப்பகம்

padippakam



இக் கந்தோரில் தம் தரத்தை
உயர்த்திக் கொண்டவை
இரண்டு மணங்கள் அல்ல!
இரண்டு குடும்பங்களே!!

பெற்றோர் சொற்கேட்டு
நல்ல பிள்ளைப் பட்டமெடுத்த
இராமபிரான்களும் கண்ணகிகளும்
எம்மிடையே மலிந்ததாலோ என்னவோ. . .

பொலிடோல்களின் விலையேறவும்
சலூன்களின் வருமானம் குறையவும்
காரணமாகின!

கூடவே
கண்ணீர் வடிக்கும் காதல்ஜோடிகளைத் தேற்ற
எம் இலக்கியங்கள் கைக்குட்டையுடன் நின்றன!
தேவதாசும் பார்வதியும்
எப்படியோ தியேட்டர்களில் இருந்து தப்பி
எம் காதலர்களுடன் கைகுலுக்கிக் கொண்டார்கள்

முடிவு?

காதலர்கள்
முகமூடி போட்டுக் கொண்டு
முத்தமிட்டுக் கொண்டார்கள்!

கம்பி வேலிகளுக்கு
அப்பால் நின்று
கைகுலுக்கிக் கொண்டார்கள்!


●



படிப்பகம்

padippakam

காலங்களும் கருத்தோட்டங்களும் 12



படிப்பகம்

padippakam



# சதுரங்கம்

நானூறு ஆண்டுகால அடிமைத் தழும்பு
நாற்பது ஆண்டுகளுக்குள் எப்படி மறையும் – அதனிடையே
கைகளில் இருந்த விலங்கினைக் கழற்றி
கால்களில் அல்லவா போட்டுக்கொண்டோம்

இருப்புக்களை காப்பாற்ற வேண்டி – அவ்வப்போது
பொறுப்புகளை வோட்டுகளிடமும் வேட்டுகளிடமும்
கொடுத்ததாலோ என்னவோ
இருக்கைகள் பதுங்கு குழிகள் ஆயின.

யாருக்காக இந்த குருக்ஷேத்திரம்?
எவர்க்காக இந்தப் புதிய கீதைகள்?
யார் தலையில் யார் சூழ்காச்சி
எப்பேய்க்கு எவர் கலிங்கத்துப் பரணி பாடுவார்?

ஆமோதிப்பதற்கு அதிக கைகள் இருந்தால்
எவையுமே சட்டங்கள் ஆகலாம்!
எவர்க்கும் எவரும் வீர வணக்கம் செலுத்தலாம்! அன்றில்
எவையுமே தெரியாதது போல மௌனிக்கலாம்!



படிப்பகம்

padippakam



கறுத்த கோட்டு அரசியலும்
சிவப்புக் கோட்டு சித்தாந்தங்களும்
மக்களுக்குப் புரியாது போனதாலோ என்னவோ
மக்கள் இல்லாத மக்கள் போராட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது

ஆனால் நடந்தது என்ன?

A-Z வரிசையில் எண்ணிடலங்கா மீட்பர்கள்
தெருத்தெருவாய்ப் பிண்டங்கள்
போர்க்காலப் பிரகடனங்கள்
நாளையும் ஓர் மீட்பர் அவதாரம் எடுக்கலாம்
அவரையும் துதிபாட எம்வாய்கள் அசைக்கப்படலாம்

வெற்றி பெற்றவனுக்குப் பின்னால்
வெண்சாமரம் வீசி வெண்பாக்கள்
பாடிய எம் துப்புக் கெட்ட கவிகள்
இங்கு துப்பாக்கிகளுக்கும் துதிபாடின.

இவை தான் நாளைய
13ம் திருமுறைகள்
சரித்திரத்தின் கல்வெட்டுகள்

ஆளுக்கொரு பிள்ளையை தத்தெடுத்து
அழகு பார்க்க அதன் கைகளில்
துப்பாக்கிகளையல்லவா கொடுத்தோம்.



படிப்பகம்

padippakam



உன் கொள்ளிக் கட்டையால்
உன் தலையைச் சொறிந்து கொண்டது போதும்!

நாளைய விடியல்களிலாவது. . . .

வெள்ளைப்புறாவை வானத்தில் பறக்கவிடும்
வல்லூறுகளின் ஆட்சி மாற்றப்பட வேண்டும்
சமாதானத்தையும் சதிநடவடிக்கைகளையும் - ஒன்றாய்
நகர்த்தும் சதுரங்கப் பலகைகள் சங்காரம் செய்யப்பட வேண்டும்.

மனித நேயம் மீட்கப்பட வேண்டும்
மந்திகள் கொப்பிழக்க வேண்டும்
உன் தொப்பூழ் கொடியில் இருந்து விழும்
அடுத்த ஜீவன் ஆவது ஓர் சுதந்திரப் பூமியில் விழவேண்டும்
அஃதின்றி
உன் பன்னீர்க் குடத்தை இன்று உடைத்து விடு

இவையாவும் கண் கெட்ட பின்பான சூரிய நமஸ்காரங்கள் தான்!
ஆனால்
குருடனின் தடியும் ஒருநாள் குறிபார்த்து அடிக்கும்!


●



படிப்பகம்

padippakam





படிப்பகம்

padippakam



# தேயும் வால்கள்

சேற்றிலும் மிதிக்கலாம்
சேதிகள் வெளிப்பரவாதவரை

மனித நேயங்கள் மறக்கப்படலாம்
moneyயின் தேசம் வேண்டு மெனில்!!!

இவையனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட
சமுதாய நெறிகள்!

ஆம்!
உண்மையே. . . .

தியானத்தில் இருந்த கலாச்சாரத்தின் காதுகளை
இயந்திர ஆலையின் சப்தங்கள் செவிடாக்க முயன்ற பொழுது
ஆலமரங்கள் எல்லாம்
நாணல்களாய் வளைந்தன



படிப்பகம்

padippakam



முதுகில் சுமைகளை ஏந்திக் கொண்டு
மார்பில் மதங்களைத் தாங்க முற்பட்டதால்

மனிதன் வளைந்தான். . .
வளைந்தவன் முறியாதிருக்க
வளைத்து விட்டோம் - வழி வழி வந்த
பாதைகளை எல்லாம்

நதிமூலம் ரிஷிமூலம் பார்க்காமல்
எந்த தண்ணீராலும் ஆண்டவனுக்கு
அபிஷேகம் செய்யலாம் என்ற பொழுது. . .
சுரண்டல்கள். . .
வயிற்றிலடிப்புகள். . .
கடத்தல்கள் . . . . . பதுக்கல்கள். . .
அனைத்தும் நியாயப் படுத்தப்பட்டன
அன்றே தப்பு என ஓங்கி அறை விட்டிருந்தால்
இன்று . . . வேர் விட்டுவிட்டது என அலறத் தேவையில்லை.

எங்கள் தவறுகளின் விதைப்புகளை
நாங்கள் தான் அறுவடை செய்ய வேண்டும்.

ஆனால்

அதுக்கெல்லாம் அவகாசம் இருக்கவில்லை
சந்தர்ப்பத்தை மட்டும் தவறவிடவும் இல்லை.



படிப்பகம்

padippakam



எல்லைக் கோட்டின் கதவுகளை எல்லாம்
ஆங்காங்கே மெதுவாய் எமக்காய் திறந்தது போல – இப்போ
எல்லா எல்லைகளையும் கண்ணை மூடிக்கொண்டு
தாண்டிச் செல்ல தலைப்பட்டோம்.

கலாச்சாரத்தை வால்களாக்கி
சந்தர்ப்பங்களை கை கால்களாக்கி
எட்டும் வரை தாண்டினோம்!
தாண்டிக் கொண்டேயிருக்கின்றோம்.. . .

வாலும் எம்முடன் இழுபடுகிறது
தேய்ந்து கொண்டு இழுபடுகிறது
பாதாங்கமாய் அற்றுப் போகிறது

இப்போ. . . .
தாவிய கொப்பும் நிலையில்லை
தாய் மரமும் எம்மிடம் இல்லை

இனியும் திரும்பிப் பார்க்காவிடில்
நன்றிக்கும் பாசத்துக்கும்
அகராதியில்
அர்த்தம் தேடும் நாள்
வெகு தொலைவில் இல்லை. . .


●



படிப்பகம்

padippakam

காலங்களும் கருத்தோட்டங்களும் 14



படிப்பகம்

padippakam



# புலம் பெயர்வு – பாகம் I

பறவைகளிடம் கற்றது . . .
விக்கிரமாதித்தன் கதைகளில் கேட்டது . . .
ரீகல் தியேட்டர் வெண்திரையரங்குளில் பார்த்தது . . .

எந்தக் கருடனின்
நிழல்கள் எங்கள் மீது பட்டதோ
எந்த முனிவன்
எம்மினத்துக்கு போட்ட சாபமோ?

புலம் பெயர்ந்தோம். . .
ஐந்து கண்டங்களுக்கும் புலம் பெயர்ந்தோம். . . .

வானத்தில் பறந்து சென்றோம்
அந்நிய தேசங்களுக்கு. . . .

அலைகளில் மிதந்து போனோம்
அண்டைநாடுகளுக்கு. . .

கரைதெரிய முதல்
கடலுள் பாய்ந்தவை எத்தனை. . .
பனிமலைக் காடுகளுள்
காணாமல் போனவை எத்தனை. . . .



படிப்பகம்

padippakam



ஆங்காங்கே வல்லூறுகளுக்கும்
திமிங்கிலங்களுக்கும் இரையானோம். . .
எல்லைகளைத் தாண்டும் போது
எமன் கைகளில் எத்தனை ?
மிரட்டல்கள் எத்தனை?
ஏஜன்றகள் கையில் எத்தனை?
நடுவழியில் வைத்து பேசப்பட்ட
பேரங்கள் எத்தனை?
கதறக் கதற நடந்த கற்பழிப்புகள் எத்தனை?

எங்கள் உயிர் வாழ்தலுக்கும்
எங்கள் இருப்புகளைக் காப்பாற்றிக் கொள்ளவும்
வழியெல்லாம் அல்லவா நேர்முகப் பரீட்சைகள். . .. .
ஓர் வழியாக வந்து சேர்ந்தோம்
அகதி முகாம்களுக்கு. . . .

கல்தோன்றா மண்தோன்றா காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த இனம்
கையில் தட்டுகளுடன் வரிசை வரிசையாக. . . .

மண்டபத்தில் கால்வயிற்றுக் கஞ்சி
மற்றைய நாடுகளில் சாப்பாட்டுக்கு மேல் அப்பிளும் ஆரஞ்சும்.

எந்தக் கருடனின்
நிழல்கள் எங்கள் மீது பட்டதோ
எந்த முனிவன்
எம்மினத்துக்கு போட்ட சாபமோ?



படிப்பகம்

padippakam



# புலம் பெயர்வு – பாகம் 2

அகதித் தஞ்சம் தந்த நாடுகளில்
அனைத்துமே புதிதானது. . . .

கைகளை உள்ளிழுத்த ஆமைகளாக
அடக்கியே வாசித்தோம் அனைத்துச் சங்கீதங்களையும். . . .

பனிக்காலத்தில் கீழ் உறங்கும்
பல வர்ண ரியூலிப்பின் பூக்களின் கிழங்கானோம். .

நாம் வந்த நாடுகள் ஒன்றும்
இருபோகம் செய்யும் விளை நிலங்கள் அல்ல. .
பனிப்பாறைகள். . .
இங்கு வேர் விட முதலே வித்துக் கருகி விடும்.
இலைகள் துளிர்க்க முதலே இனத்துவேசம் அழித்து விடும்.

ஆனாலும் தலையெடுத்தோம்
பனிகரைய முதலே தலைதூக்கும்
வின்ரர்கென் செடிகளாக தலையெடுத்தோம். . .
தவழ்ந்தோம். . . . நடந்தோம். . . ஓடினோம். . . . . .

எந்தத் துறையை இங்கு நாம் விட்டு வைத்தோம்!
எந்த பல்கலைக்கழகத்தில் எம் பிள்ளைகள் கால் வைக்கவில்லை!



படிப்பகம்

padippakam



அடுத்தொரு தரப்படுத்தல் ஐரோப்பாவில் என்றால்
அது எம் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தான். ... .

எல்லாம் நிறைந்து வர
எங்கோ ஓர் பிழை நடந்துவிட்டது

ஆம்!
ஆடி விடுமுறைக்கு
அடிக்கடி ஊருக்குப் போனதாலோ என்னவோ
அங்கு விட்டுவந்த எச்சங்களையும் இங்கு கொண்டு வந்து விட்டோம்

சாதிகள் வந்தது. . .
இயக்கங்கள் வந்தது. . . .
பிரிவினைகள் வந்தது. . . .
மீண்டும் ஓர் யாழ்ப்பாணம் வந்தது. . . . .

ஆனால் என்ன?

இங்கு கத்தியெடுத்து வெட்டுவதில்லை. . . .
கைகுலுக்கிக் கொண்டே கால்களை வாருவோம். . . .



படிப்பகம்

padippakam



# புலம் பெயர்வு – பாகம் 3

இங்கு நாங்கள் மட்டும் அகதிகள் ஆகவில்லை!
எம் கடவுளர்களும் தான்!

புதிய நாட்டுக் கலாச்சாரப்பூச்சை
எமக்கு மட்டும் பூசிக் கொள்ளவில்லை
எம் கலாச்சாரங்களுக்கும் தான் பூசிவிட்டோம்!

அஃதில்லையெனில். . . .

டிசம்பர் 31. . . .
நேரம் 24.00 மணி. . . .
வானத்தில் மத்தாப்பூக்களும்
வீதியெங்கும் பட்டாசுகளும் வெடித்துக்கொண்டிருக்க
புதுப்பாத்திரத்தில் இங்கு நாம் பொங்கிக் கொண்டல்லவா
இருக்கின்றோம்!

வாக்கிய பஞ்சாங்கமும்
திருக்கணித பஞ்சாங்கமும்
ஆளுக்கால் அடிபட்டுக் கொண்டிருக்க
நசுங்கிப் போனது சித்திரை வருசம் தான்.



படிப்பகம்

padippakam



அதனால்தானோ என்னவோ. . .
ஆளுக்கால் சித்திரை வருடத்தில்
கை வைத்து விட்டார்கள். . . .
மண்டபத்தில் உள்ளோருக்கு
தைப்பொங்கல் புதுவருசமாகலாம்
மற்றைய நாட்டுத் தமிழருக்கு
ஜனவரி 1ல் புதுவருசம் ஜனனிக்கலாம்!

நம் கோவில் தேர்களின் சக்கரங்கள்
இங்கு சனி, ஞாயிறுகளில்தான் உருளும்
அன்று தானே நமக்கும் லீவு
அய்யர்மாருக்கும் லீவு. . .
அர்ச்சனை சீட்டுக்களும் விற்றுத் தீரும். . .

அட்டமி நவமி என்பதெல்லாம் இங்கு இல்லை
ஐயர் சொன்னால் எல்லாமே நல்லநாள் தான்

வெளிநாடு வந்தால்
வெள்ளிக்கிழமை எல்லாம் பார்க்க ஏலாது



படிப்பகம்

padippakam



தேவாரம் திருவாசகம் எதுவுமே
எம்பிள்ளைகளுக்கு வேண்டாம்
அரங்கேற்றத்துக்கு மட்டும் அவர் மூலையில்
காலைத்தூக்கிக் கொண்டு நின்றால் போதும்

அமெரிக்க டொலர்களுக்கும்
ஐரோப்பா யூரோக்களுக்கும்
கட்டிக்காத்த எல்லாவற்றையுமல்லவா விற்றுவிட்டோம்

எந்த அப்பர்சுவாமிகள்
எப்போ உழவாரத்துடன் வந்து
எங்கள் களைகளை களைவது?

இங்கு பூக்களை விட
களைகள் அல்லவா அதிகமாய் போய்விட்டது

பாவங்கள் கடவுள்கள். . . .
நெற்றியில் மட்டும் இங்கு சைவம் வாழ்கிறது!

●



படிப்பகம்

padippakam





படிப்பகம்

padippakam



# முதியோர் இல்லங்கள்

இது இலையுதிர் காலம் –
இனி ஒரு வசந்தம் வந்து
இங்கு இலைகள் தழைக்கப்போவதில்லை
வின்ரர் வர மரமே பட்டுப் போகும்

இது கடைசி ஸ்டேசன்
நினைவுகள் மட்டுமே திரும்பி ஓடுமே தவிர
வண்டி இனி ஓடப் போவதில்லை. . . .
இன்னும் கொஞ்ச நேரத்தில்
பிளாட்பாரத்தில் இருந்து வண்டி அப்புறப்படுத்தப்படும்.

Arrival தேதி தெரிந்த எமக்கு
Departure நேரம் தெரியவில்லை – அதுதான்
இந்த waiting listல் காத்திருப்பு. . . .
இதொன்றும் எம் விருப்பத்துக்கு
reconfirm செய்யும் return ticketகள் இல்லை.

ஓடிய கால்களும்
ஓடிய வாழ்வும்
ஓய்வுக்கு வந்திருக்கிறது. . . . . .
காத்திருப்பு! காத்திருப்பு!! காத்திருப்பு!!!



படிப்பகம்

padippakam



அழகிய முகங்களில்
ஆங்காங்கே காலத்தின் கோடுகள்
ஆம்
கரிக்கோடுகள். . . . .

யன்னல்களினூடு எட்டிப் பார்க்குங்கள்
எங்கேயொரு சொந்தங்கள் தூரத்தில் தெரிகிறதா என்று!
பின்னறையில் போட்ட செப்பு பாத்திரங்கள்
யாருக்கு நேரம் இருக்கிறது துலக்கி துலக்கி வைக்க. . . .

வருசப்பிறப்பு. . . பிறந்த நாள்கள். . . .
எங்கேயாவது ஓர் தலை தெரியும்
கையில் பூக்களுடன். . . .
அவையும் வாடிப்போகும்
அடுத்த அடுத்த தினங்களில். . . .

அஃதில்லையெனில்
தாதிகள் தான் தத்துப்பிள்ளைகள். . . .

பழுத்த மரத்துக்கு கல்லெறிவது போல
இங்கு நோய்கள். . . . பிணிகள். . . . .
மருந்து டப்பாக்கள். . . . .
வர்ண வர்ண நிறத்தில் குளிசைகள். . . .

எங்கோ செய்த புண்ணியங்கள்
புலம் பெயர்ந்த அகதிகளுக்கு!

அஃதில்லையெனில்
சீலையுடன் போய்
படுக்கைப்புண் வந்து. . . புழுத்துப் போய். . . .



படிப்பகம்

padippakam



ஆம், வெளிநாடுகளில்
விசா கொஞ்சம் எக்ஸ்ரென்சன் செய்யப்படுகிறது.

அதுவரை
பின்நோக்கிய பயணங்கள் தான். . . .
கணக்கெடுப்புகள் தான். . . .

சிலது இனிக்கும்
சிலது கசக்கும்
சிலது கவலைப்பட வைக்கும்
சிலது மன்னிப்புகளுக்காக ஏங்கும். . . .

But too late. . . .

அந்திமத்தில் இரைமீட்டிய
ஆடுகளாய். . . . மாடுகளாய். . . . .
அம்புலன்ஸ் ஓர் நாள் வரும். . . . .
அது வரை பொறுத்திருங்கள். . . .

நாளைய நாள்
உங்களுடையதாகலாம்!

உலகம்!
அது உலகளாவிய மானுடம் பற்றி அதிகம்
அலட்டிக் கொண்டு வாழ்கிறது. . . . (?)

●



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

இவரது கதைகள் – கவிதைகளில் பக்கச்சார்மையின்றி பிரச்சனைகளுக்கான வேர்களைச் சாடும் நேர்மை தென்படுகிறது. இவரது படைப்புகள். பாரம்பரிய விழுமியங்களை விமர்சிப்பதாயும். புலம் பெயர்ந்த நாட்டில் நிகழ்கால வாழ்க்கைப் பாதையை அலசுகின்றனவாகவும் அமைந்திருக்கின்றன.

– திருமதி ரேணுகா தனஸ்கந்தா. அவுஸ்திரேலியா

டென்மார்க்கில் எமது கால்களைப் பதித்துக்கொள்ள ஆரம்பித்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமாகியவர்களில் ஜீவா ஒருவர்தான் இலக்கியம் சம்பந்தமான சங்கதிகளைப் பகிர்ந்துகொள்ளவும். புலம்பெயர் வாழ்வின் பிரச்சனைகளையிட்டு யதார்த்தமாக. கனதியாகக் கலந்துரையாடக் கிடைத்தார். இந்தக் கால்நூற்றாண்டுக் காலத்தில் அவர் பல துறைகளிலும் அடைந்துள்ள வளர்ச்சியும். வெற்றியும் இங்கே வாழ் இளஞ்சந்ததியினர்க்கு ஒரு முன்னுதாரணம்.

– நிலக்கிளி அ. பாலமனோகரன். டென்மார்க்

‘காலங்களும் கருத்தோட்டங்களும்’ சம்பவக் கோர்வைகளாக ஒரு புதிய பரிமாணத்தை எட்டுகின்றன. ஆயினும் அவ்வப்போது சமூகம் மீதான அவரது விமர்சனம் எள்ளலாக வெளிப்படும் அதே வேளை தத்துவ வீச்சுக்களான வசனங்களாகவும் வாழ்க்கைப் பிரகடனங்களாகவும் வந்து விழுகின்றன.

– கந்தையா ஸ்ரீகணேசன். இலங்கை

ஜீவாவின் ‘யாவும் கற்பனை அல்ல’ என்ற இந்நூலிலே உரைநடை இலக்கியத்தில் இடையிட்டு செய்யுள் வருகிறது. உரைநடை செய்யுளுள் புகுதல் ஆகுமாயின். உரைநடையில் செய்யுள் புகுதல் இயல்பென அவர் கருதுகிறார் போலும். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மத்தியில் மலர்ந்து வரும் புதிய இலக்கியப் படைப்பாற்றலின் வகைதொகைக்கு ‘யாவும் கற்பனை அல்ல’ என்கிற இந்நூலும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

–எஸ்.பொ. அவுஸ்திரேலியா

மித்ர
வெளியீடு

படிப்பகம்